சங்கத் தமிழ்

I

டாக்டர் ச. அகத்தியலிங்கம்

சங்கத்தமிழ்

1

மொழியியல் நோக்கில் சங்க இலக்கியங்கள்

டாக்டர் ச. அகத்தியலிங்கம்
M.A., Ph.D (Kerala)., Ph.D (Indiana, U.S.A)
இயக்குநர், மொழியியல் உயர் ஆய்வு மையம்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

அனைத்திந்தியத் தமிழ் மொழியியற் கழகம்
அண்ணாமலைநகர்

நூலின் பெயர்	:	சங்கத்தமிழ் - I
ஆசிரியர்	:	சண்முகம்பிள்ளை அகத்தியலிங்கம்
பதிப்பகம்	:	அனைத்திந்தியத் தமிழ் மொழியியற் கழகம், அண்ணாமலைநகர்
மொழி	:	தமிழ்
பதிப்பு	:	முதற்பதிப்பு
பதிப்பு ஆண்டு	:	1983
நூலின் அளவு	:	21 × 14செ,மீ
அச்சமைப்பு	:	10 புள்ளி
பக்கங்கள்	:	268 + xvii
விலை	:	ரூ 24-00
அச்சகம்	:	தில்லை பிரிண்டர்ஸ், சிதம்பரம்

நூல் கிடைக்கும் இடங்கள்

1. அனைத்திந்தியத் தமிழ் மொழியியற் கழகம்
   அண்ணாமலைநகர் 608002
2. பாரி நிலையம்
   59, பிராட்வே, சென்னை 600 001
3. மீனாட்சி புத்தக நிலையம்
   60, மேலக் கோபுரத் தெரு, மதுரை 625 001
4. மணிவாசகர் நூலகம்
   மேலசன்னதி, சிதம்பரம் 608 001

முன்னுரை

சங்கத்தமிழ் என்னும் வரிசை நூல்களில் இது முதல் நூல். பண்டைத்தமிழின் அமைப்பு (Structure of Old Tamil) பற்றி மொழியியல் கண்ணோட்டத்தில் ஆராய்வதே இவ்வரிசை நூல் களின் நோக்கம். குகைக் கல்வெட்டுக்கள், தொல்காப்பியம், சங்க இலக்கியங்கள் என்று கருதப்படும் பதிற்றுப்பத்து, ஐங்குறுநூறு. அகநானூறு, நற்றிணை, நல்ல குறுந்தொகை, புறநானூறு, பத்துப்பாட்டு, பரிபாடல், கலித்தொகை ஆகிய நூல்களிலும் சங்கம் மருவிய நூல்கள் எனக் கருதப்படும் திருக்குறள், சிலப்பதி காரம், மணிமேகலை ஆகியவற்றிலும் காணப்படும் தமிழே பண்டைத்தமிழ் எனப்படுவது. இந்நூல்களில் காணப்படும் தமிழ் மொழியின் அமைப்பை அறிவியல் அடிப்படையில், இன்றைய மொழியியல் கண்ணோட்டத்தில் அலசி ஆராய்ந்து நிற்பவையே இவ்வரிசை நூல்கள்.

மனிதனை மனிதனாக்குவது மொழி. நினைப்பிற்கும் எட்டாத நெடுங்காலத்திலிருந்தே அவனோடு பின்னிப் பிணைந்து வாழ்ந்து வளர்ந்து வருவது மொழி. இத்தகைய மொழிகள் இரண்டாயிரத் துக்கும் அதிகமாகக் காணப்படுகின்றன என்பது மொழியியல் அறிஞர்கள் வரையறை.

அறிஞன் சாக்கிரட்டீஸ் பேசியது கிரேக்கம். அனைத்துலகை யும் ஆளக் கங்கணம் கட்டிய வீரனாம் சீசர் பேசியது லத்தீன் புரட்சிக் கனல் கொண்டு புடம்போட்டு நின்ற ரூசோ பேசியதும் எழுதியதும் பிரஞ்சு. கவிஞன் ஷேக்ஸ்பியரைப் பெற்றெடுத்த மொழி ஆங்கிலம். கவிஞன் காளிதாசனையும் அறிஞன் பாணினி யையும் பெற்றுத்தந்து பெருமை கொண்டது சமஸ்கிருதம். சங்கத் தமிழையும் சாகா வரம்பெற்ற தொல்காப்பியத்தையும் தந்து நிற்பது நம் அன்னைத் தமிழ்மொழி. காலத்தால் அழியாத

கவிதைக் கருவூலங்களையும் காப்பியச் செல்வங்களையும் அள்ளி அள்ளிக் கொடுத்து அன்றும் இன்றும் வாழ்ந்து வளர்ந்து வருவது நம் கன்னித் தமிழ் மொழி.

இத்தகைய இலக்கிய வளமும் இலக்கண வரம்பும் கொண்டு பழைமைக்குப் பழைமையாய், புதுமைக்குப் புதுமையாய் விளங்கும் இம்மொழிக்குக் கால அடிப்படையில் வரன்முறையான ஒரு இலக்கணம் இல்லையே என்ற ஏக்கம் என்றோ என் மனதில் தோன்றியது. ஆங்கில மொழியைப் போன்று, ஏன் இன்னும் எத்தனையோ மேனாட்டு மொழிகளுக்கு இருப்பது போன்று ஒரு இலக்கணம் பண்டைத் தமிழ் மொழிக்கு இல்லையே என்ற எண்ணத்தில் பிறந்தவையே இவ்வரிசை நூல்கள். பழந்தமிழ் என்றும் இடைக்காலத் தமிழ், தற்காலத் தமிழ் என்றும் பேசும் நிலையில் அவற்றின் விரிவான விளக்கங்கள் என்னென்ன என்று திட்டவட்டமாக, தெளிவாக ஒரு விளக்கம் தேவை என்ற ஆசையில் பூத்த நூல்களே இவை.

தமிழின் காலப்பகுதியை மூன்றாக்கி முதல் பகுதியில் (பண்டைத்தமிழ்) முன்னர்க் குறிப்பிட்ட நூல்களைக் கொண்டு, அவற்றின் மொழிப் பண்புகளை உள்ளத்தில் நிறுத்திப் பல்வேறு அறிஞர்களின் எண்ணங்களை அறிவியல் கண்ணோட்டத்தில் அலசி ஆராய்ந்து பழந்தமிழ் நூல்களை வரிசைப்படுத்துவதே இவ் வரிசை நூல்களில் முதல் நூலாகிய இந்நூலின் நோக்கம்.

இந்நூல் ஆறு இயல்களைக் கொண்டது. முதல் இயல் இலக்கியங்களின் கால நிர்ணயம் பற்றிப் பொதுவாகப் பேசுவது. இலக்கியங்களின் கால நிர்ணயத்தில் புதிய சொற்கள், பலவேறு புதிய இலக்கணக்கூறுகள், வடிவங்களின் வரவு எண்ணிக்கை போன்ற இன்னோரன்னவை எந்த, எந்த இடத்தினைப் பெறுகின்றன என்பதைச் சுட்டிக் காட்டிச் செல்லும்.

இரண்டாம் இயல் உலக மொழிகளோடு தமிழ் மொழியை வரலாற்றுநோக்கில் ஒப்புமைப்படுத்தி நிற்பது. கிரேக்கம், லத்தீன், எகிப்தியமொழி, ஆரமைக், அக்கேடியன், சுமேரியன், வடமொழி, ஆங்கிலம், பிரஞ்சு, ரஷ்யன் போன்ற மொழிகளோடு ஒப்புமைப்

படுத்தி நிற்பதோடு தமிழ் ஓர் உலகமொழியாகக் கருதப்பட வேண்டிய மொழி என்றும், இதன்கண் காணப்படும் இலக்கிய, இலக்கணப் பாரம்பரியங்கள் பிறமொழிகளில் காணப்படும் இலக்கிய, இலக்கணங்களுக்கு எந்த விதத்திலும் சளைத்ததல்ல என்றும் காரண காரியங்களோடு சுட்டிக்காட்டி நிற்பது. மேலும் இதில் பண்டைத்தமிழுக்கும் இடைக்காலத்தமிழுக்கும் இடையே உள்ள மொழியியல் வேறுபாடுகளும் சுட்டிக் காட்டப்படுகின்றன.

இதனை அடுத்து வருவது தொல் பழந்தமிழ் பற்றியது. குகைக் கல்வெட்டுக்களிலும், தொல்காப்பியத்திலும் காணப்படும் தமிழே தொல் பழந்தமிழ் எனப்படுவது. இந்நிலையில் அவை பற்றிக் கூறப்படுவதுடன் தொல்காப்பியத்திற்கும் சங்க இலக்கியங்களுக்கும் இடையே உள்ள ஒருசில வேற்றுமைகளையும் ஆராய்ந்து நிற்பது இப்பகுதி.

நான்காவது இயல் முன்பழந்தமிழ் பற்றியது. பதிற்றுப்பத்துக் ஐங்குறுநூறு, அகநானூறு, நற்றிணை, குறுந்தொகை, புறநானூறு, பத்துப்பாட்டு ஆகிய நூல்களே முன்பழந்தமிழ் நூல்கள் எனக் கருதப்படுவன. இந்நூல்கள் பற்றியும், இந்நூல்களின் வரிசைமுறை பற்றியும் பரக்க ஆராய்கிறது இப்பகுதி. சங்க நூல்களில், அதிலும் குறிப்பாக எட்டுத்தொகை நூல்களில் பதிற்றுப் பத்தே முதல் முதலாகத்தொகுக்கப்பட்டது என்றும், அதனை அடுத்தே ஐங்குறுநூறு தொகுக்கப்பட்டது என்றும், அவற்றிற்குப் பின்னர்தான் அகநானூறு, நற்றிணை, குறுந்தொகை, புறநானூறு ஆகிய நூல்கள் இவ்வரிசையில் தொகுக்கப்பட்டன என்றும் சுட்டிக் காட்டிச் செல்கிறது இப்பகுதி. மேலும் எட்டுத்தொகை நூல்களுக்கும் பத்துப்பாட்டிற்கும் இடையே உள்ள காலம் பற்றியும் இது ஆராய்கிறது. பதிற்றுப்பத்தில் ஐந்தாவது பத்திற்குப் பின்னரே பத்துப்பாட்டுப் பாடல்கள் பாடப்பட்டன என்று முடிவுகட்டுவது இப்பகுதியாகும்.

பின்பழந்தமிழ் என்ற தலைப்பில் ஐந்தாவது இயல் பின்பழந்தமிழ் நூல்கள் என்று கருதப்படும் பரிபாடல், கலித்தொகை, திருக்குறள், சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய நூல்கள்

பற்றியும் பரிபாடல். கலித்தொகை ஆகியவற்றின் தொகுப்பு பற்றியும், பின்பழந்தமிழ் நூல்களின் மொழிநிலை பற்றியும் பரக்க ஆராய்வது, வையாபுரிப்பிள்ளை, வ சுப.மாணிக்கம் போன்ற அறிஞர் பெருமக்களின் கருத்துக்களையும் ஆங்காங்கே தந்து அவை பொருந்துமா என்பதையும் வினவி இந்நூல்களை வரிசைப் படுத்துதல் காணலாம்.

இறுதி இயல் முன்பழந்தமிழ்க் கூறுகளையும், பின்பழந்தமிழ்க் கூறுகளையும் தந்து நிற்பது. எண்பது பக்கங்களுக்கு மேல் செல்லும் இப்பகுதி முன்பழந்தமிழ் நூல்களுக்கும் பின்பழந்தமிழ் நூல்களுக்கும் இடையே உள்ள பலவேறு வேறுபாடுகளைத் தந்து பழந்தமிழை முன்பழந்தமிழ் என்றும் பின்பழந்தமிழ் என்றும் பிரிவுபடுத்தலாம் எனச் சுட்டிக்காட்டி நிற்பது.

இத்தகைய பலவேறு செய்திகளைத் தன்னகத்தே கொண்டுள்ள இந்நூலையடுத்து இரண்டாவது வரிசைநூலும் மூன்றாவது வரிசை நூலும் வெளிவந்துள்ளன.

இரண்டாவது பகுதி (சங்கத்தமிழ் II) பண்டைத் தமிழ் நூல்களில் காணப்படும் தன்மை, முன்னிலை விகுதிகளைப் பற்றிப் பரக்க ஆராய்ந்து நிற்பது. இருநூற்று எண்பதுக்கும் அதிகமான பக்கங்களைக் கொண்ட இப்பகுதியில் தன்மை முன்னிலை விகுதிகள், அவற்றில் காணப்படும் உயர்வு ஒருமைப் பண்புகள், இவை பற்றித் தொன்மை இலக்கணமாம் தொல்காப்பியம் கூறும் விதிமுறைகள், அவற்றிற்கும் பண்டைத்தமிழ் இலக்கியங்களில் காணப்படும் இலக்கணக் கூறுகளுக்கும் இடையேயுள்ள ஒற்றுமை, வேற்றுமைகள், பலவேறு அறிஞர்கள் அவ்வப்போது கூறியுள்ள ஆராய்ச்சி விளக்கங்கள் போன்ற இன்னோரன்ன செய்திகள் தற்கால மொழியியல் கண்ணோட்டத்தில் ஆராயப்படுகின்றன.

இதனையடுத்து மூன்றாவது பகுதியும் (சங்கத்தமிழ் III) வெளிவந்துள்ளது. இந்நூல் பண்டைத் தமிழ் இலக்கியங்களில் காணப்படும் படர்க்கை விகுதிகள் பற்றிப் பரக்கப் பேசும் முழுமுதல் நூலாகும். தமிழில் காணப்படும் இடம், திணை, எண்,

பால் பகுப்புக்களின் அடிப்படை, அவை பற்றிய இலக்கணிகளின் எண்ணங்கள், உயர்வு ஒருமையின் பண்புகள், பண்டைத் தமிழ் மொழியில் காணப்படும் உயர்வு ஒருமையின் உண்மைகள் போன்ற வற்றோடு ஆண், பெண், பலர்பால் விகுதிகள். அஃறிணை ஒருமை, பன்மை விகுதிகள் ஆகியவற்றை விளக்கமாக மொழி யியல் அடிப்படையில் ஆராய்வது.

இத்தகைய வரிசை நூல்களை அறிவியல் அடிப்படையில் ஆக்குவது மிக எளிதான காரியம் அன்று. தனி ஒரு மனிதனால் முடியாத ஒன்று ஆகும். தொல்காப்பியம், சங்க இலக்கியங்கள் போன்றவற்றை அறிந்து ஆராய்ந்த அறிஞர்களின் எண்ணங் களும், முடிவுகளும் எத்தனையோ வழிகளில் எனக்குத் துணை நிற்பதைக் காணுகிறேன். டாக்டர் பட்டத்திற்காக உருவாக்கப் பட்ட விளக்க இலக்கணங்களும், அவற்றோடு உருவாக்கப்பட்ட சொல்லடைவுகளும் பக்கத்துணையாக அமைந்துள்ளன. அறிஞர் கள் ஆங்காங்கே எழுதிய கால ஆராய்ச்சிகளும், மொழியியல் நுட்பங்களும் துணைநிற்கின்றன. இந்நிலையில் அவர்களுக்கெல் லாம் என் நன்றியை உரித்தாக்கி அவர்களின் ஆராய்ச்சிக்குத் தலைவணங்கி நிற்பதில் பெருமையும், பெருமகிழ்ச்சியும் அடை கிறேன்.

இவர்களைப் போன்றே இந்நூல் உருவாவதற்கு உழைத்த வர்கள் பலர். என் உடனுறை ஆசிரியர்கள், என் மாணவர்கள் போன்றவர்களின் உழைப்பு இந்நூல்களின் உருவாக்கத்திற்கு அடிப்படையாகும். இவர்கள் பெயரை எல்லாம் தனித்தனியாகத் தரின் அதுவே ஒரு பெரும் பட்டியலாக மாறிவிடும்.

எனினும் சிலர் குறிப்பிடத்தக்கவர்கள். டாக்டர் செ. வை. சண்முகம், டாக்டர் ந. குமாரசாமி ராஜா, டாக்டர் க. பாலசுப்பிர மணியன், டாக்டர் சீ. ஜெயபால், டாக்டர் எஸ். ஜீன் லாரன்ஸ், டாக்டர், செல்வி எம். சுசீலா போன்றவர்களின் உழைப்பும் உறு துணையும் குறிப்பிடத்தக்கவை. இவர்களுக்கு என் நன்றியும் கடப்பாடும் உரியன.

இவர்களைப் போன்றே என் ஆய்வுமாணவர்கள் பலரும்

அயராது உழைத்தனர். அவர்களுள் டி. ரங்கநாதன், எம். ஜெய குமார் ஆகியோரைப் பற்றி நான் குறிப்பிட்டாக வேண்டும். இரவு பகல் என்று பாராது அச்சுக்கூடம் சென்று எவ்வித சோர்வுமின்றி அச்சுப்பிரதிகளைத் திருத்தி உதவினர். இவர்களைப் போன்றே பிற மாணவர்களும். இவர்களுக்கும் என் நன்றி. இந்நூலினை நன்கு அச்சிட்டுத் தந்த ஸ்ரீ தில்லை அச்சகத்தாருக்கும் என் நன்றி.

இந்நூலின்கண் காணப்படும் ஒருசில பகுதிகள் ''மொழியியல்'' இதழில் கட்டுரைகளாக வெளிவந்தவை. அவற்றை இந்நூல் களில் இணைத்துக் கொள்ள அனுமதி தந்த அனைத்திந்தியத் தமிழ் மொழியியல் கழகத்துக்கு என் நன்றி என்றும் உரியது.

அண்ணாமலைப் பல்கலைக்கழகம் என் வாழ்வை வளமாக்கிய ஒரு பெரும் கலைக்கோயில். சிந்தனையை மட்டுமின்றி செய லாற்றும் திறனையும் செப்பனிட்டு நிற்பது. என் வாழ்வின் ஏற்றத்திற்கு வேரும் விதையுமாக இருப்பது. மாணவனாக மட்டுமின்றி ஒரு பேராசிரியனாகவும் என்னை அரவணைத்து என் ஆக்கத்திற்கு அடிகோலியது. இத்தகைய ஒரு பெரும் கலைக் கோயிலில் நாளும் வலம் வருவதை யான் பெற்ற பேறுகளில் ஒரு பெரும் பேறாகக் கருதுகிறேன். இத்தகைய கலைக்கோயிலுக்கு என் நன்றியைக் காணிக்கையாக்கி நிற்பதில் பேருவகையும் பெரு மகிழ்ச்சியும் அடைகிறேன்.

புத்தம் புதிய கலைகளுக்கும் ஆய்வு எண்ணங்களுக்கும் ஆராய்ச்சி உணர்வுகளுக்கும் தமிழகத்தில் என்றுமே நல்லதொரு வாழ்வும் வரவேற்பும் உண்டு என்பதற்கு என் அனுபவமே சான்றாகும். என்னால் எழுதப்பட்ட அத்தனை நூல்களுக்கும் தமிழகம் தந்த ஆதரவும் ஆசியும் மறக்கமுடியாதவை. இந்நிலை யில் இவ்வரிசை நூல்களுக்கும் உங்கள் அன்பும் ஆதரவும் என்றும் உண்டு என்ற நம்பிக்கையில் இவற்றை உங்கள் முன் சமர்ப்பிப் பதில் பெருமை அடைகிறேன்.

சொற் சுருக்க அடைவு

அகம்	அகநானூறு
அப்.தே	அப்பர் தேவாரம்
எழுத்து	எழுத்ததிகாரம்
ஐங்	ஐங்குறுநூறு
கம்ப	கம்பராமாயணம்
கலி	கலித்தொகை
குறள்	திருக்குறள்
குறு	குறுந்தொகை
சிலம்பு	சிலப்பதிகாரம்
சுந்.தே	சுந்தரர் தேவாரம்
சூத்	சூத்திரம்
சொல்	சொல்லதிகாரம்
தொல்	தொல்காப்பியம்
நற்	நற்றிணை
நா.தி.பி	நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம்
பத்து	பத்துப்பாட்டு
பதி	பதிற்றுப்பத்து
பரி	பரிபாடல்
புறம்	புறநானூறு
பெரிய	பெரிய புராணம்
பெருங்	பெருங்கதை
பொருள்	பொருளதிகாரம்
மணி	மணிமேகலை
வில்லி	வில்லிபாரதம்

உள்ளுறை

முன்னுரை

சொற் சுருக்க அடைவு

உள்ளுறை

1. தோற்றுவாய் 1–13

1.1	நூல் அறிமுகம்	1
1.2	இலக்கியங்களின் கால நிர்ணயம்	2
1.2.1	சொல்லாட்சியும் கால நிர்ணயமும்	3
1.2.1.1	புதிய சொற்கள்	4
1.2.1.2	பலவேறு புதிய கூறுகள்	5
1.2.1.3	புதிய கூறுகளின் தோற்றமும் வளர்ச்சியும்	6
1.2.1.4	புதிய கூறுகளின் தொடர்ச்சி	7
1.2.1.5	தற்செயல் விடுப்பு	8
1.2.1.6	பழைய சொற்களும் பிந்திய நூல்களும்	9
1.2.1.7	வடிவங்களின் வரவு எண்ணிக்கை	10
1.2.1.8	பழைய கூறுகள் வழக்கறுதல்	12

2. தமிழ்மொழி – ஓர் வரலாற்று நோக்கு 14-52

2.1	தமிழ்மொழி	14
2.2	தமிழ்மொழி ஒரு திராவிட மொழி	16
2.3	தமிழ் மொழியும் பிற உலக மொழிகளும்	16
2.4	தமிழும் பிற பழைய மொழிகளும்	20
2.4.1	கிரீக்	20
2.4.2	எகிப்திய மொழி	21
2.4.3	ஆரமைக்	22
2.4.4	அக்கேடியன்	23

2.4.5	சுமேரியன்	23
2.4.6	சீனமொழி	23
2.4.7	லத்தீன்	24
2.4.8	வடமொழி	24
2.4.9	தமிழ்மொழியின் இடம்	25
2.5	தமிழ் ஓர் உலகமொழி	27
2.6	இலக்கிய, இலக்கணப் பாரம்பரியம்	28
2.7	தமிழ்மொழியின் காலப்பகுப்பு	29
2.7.1	பண்டைத் தமிழ்	29
2.7.2	இடைக்காலத்தமிழ்	30
2.7.2.1	பண்டைத்தமிழ்க் கூறுகளும் இடைக் காலத் தமிழ்க் கூறுகளும்	31
2.7.3	தற்காலத் தமிழ்	51

3. தொல் பழந்தமிழ் 53-61

3.1	பண்டைத் தமிழ்க் காலம்	53
3.1.1	தொல் பழந்தமிழ்க் காலம்	53
3.1.1.1	குகைத்தமிழ்க் காலம்	53
3.1.1.2	தொல்காப்பியம்	55
3.1.2	பழந்தமிழ்	56
3.2	தொல்காப்பியமும் பழந்தமிழ்க் கூறுகளும்	56

4. முன் பழந்தமிழ் 62-104

4.1	முன்பழந்தமிழும் பின்பழந்தமிழும்	62
4.2	முன்பழந்தமிழ் நூல்கள்	65
4.2.1	பதிற்றுப்பத்து	65
4.2.2	ஐங்குறுநூறு	69
4.2.3	அகநானூறு	71
4.2.4	நற்றிணை	73
4.2.5	குறுந்தொகை	74
4.2.6	புறநானூறு	76

4·2.7	பத்துப்பாட்டு	78
4.3	முன்பழந்தமிழ் நூல்களின் தொகுப்பு வரிசைமுறை	81
4.3.1	எட்டுத்தொகை (முன் பழந்தமிழ்த் தொகை நூல்கள்)	81
4.3.1.1	நற்றிணையும் குறுந்தொகையும்	83
4.3.1.2	நற்றிணையும் அகநானூறும்	85
4.3.1.3	அகமும் ஐங்குறுநூறும்	87
4.3.1.4	பதிற்றுப்பத்து	92
4.3.1.5	புறநானூறு	96
4.3.1.6	தொகுப்பு வரிசைமுறை	97
4.3.2	பத்துப்பாட்டு	98
4.3.2.1	வையாபுரிப்பிள்ளை வரிசைமுறை	98
4.3.2.2	பத்துப்பாட்டும் எட்டுத்தொகையும்	99
4.3.2.3	பத்துப்பாட்டு வரிசைமுறை	103
4.4	முடிபு	103

5. பின் பழந்தமிழ் 105-176

5.1	பின்பழந்தமிழ் நூல்கள்	105
5.1.1	பரிபாடல்	106
5.1.2	கலித்தொகை	107
5.1.3	திருக்குறள்	108
5.1.4	சிலப்பதிகாரம்	110
5.1.5	மணிமேகலை	111
5.2	பின்பழந்தமிழ் நூல்களின் வரிசைமுறை	113
5.2.1	பரிபாடல்	113
5.2.1.1	தொகுப்புக் காலம்	113
5.2.1.2	மொழிநிலை	114
5.2.1.3	மொழிநிலையும் முன்பழந்தமிழ் நூல்களும்	116

5.2.1.4	முந்திய, பிந்திய பாடல்களின் தொகுப்பே	117
5.2.2	கலித்தொகை	118
5.2.2.1	கலித்தொகையின் ஆக்கமும் தொகுப்பும்	118
5.2.2.2	கலித்தொகையின் ஆசிரியர் ஒருவரே	118
5.2.2.3	மொழிநிலை	119
5.2.2.3.1	நிபந்தனை எச்சம்	120
5.2.2.3.2	இரட்டைப் பன்மைச் சொற்கள்	121
5.2.2.3.3	''செய்யாத'' வாய்பாட்டுப் பெயரெச்சம்	122
5.2.2.3.4	''செய்யாமல்'' வாய்பாட்டு வினையெச்சம்	123
5.2.2.3.5	தொழிற்பெயர்	123
5.2.2.3.6	வினையாலணையும் பெயர்கள்	125
5.2.2.3.7	ஏவல்வினைகள்	129
5.2.2.3.8	–ஆர் சிறப்புவிகுதி	131
5.2.2.3.9	அல்லால் என்ற சொல்லாட்சி	132
5.2.2.3.10	எழுந்தாற்போல் என்ற தொடர்	132
5.2.3	திருக்குறள்	133
5.2.3 1	காலம்	133
5.2.3.2	மொழிநிலை	134
5.2.3.2.1	வையாபுரிப்பிள்ளை தரும் சான்றுகள்	134
5.2.3.2.2	மேற்கூறிய மொழிக்கூறுகளின் தன்மை	135
5.2.3.2.3	மேலும் சிலகூறுகள்	137
5.2.3.2.3.1	செய்யாத வாய்பாட்டுப் பெயரெச்சம்	137
5.2.3.2.3.2	–கள் உயர்திணைப் பன்மை விகுதி	137
5.2.3.2.3.3	பொருட்டு என்னும் உருபு	138
5.2.3.2.3.4	வினையாலணையும் பெயர்கள்	138
5.2.3.2.3.5	சில முன்பழந்தமிழ்க் கூறுகளின் மறைவு	139
5.2.3.3	கலித்தொகையும் திருக்குறளும்	140
5.2.4	சிலப்பதிகாரம்	140
5.2.4.1	சங்கம் மருவிய நூல்	140
5.2.4.2	மொழிநிலை	141
5.2.4.2.1	வையாபுரிப்பிள்ளை தரும் சான்றுகள்	141

5.2.4.2.2 வ. சுப. மாணிக்கம் தரும் சான்றுகள் 141
5.2.4.2.3 மேற்கண்ட மொழிக்கூறுகளின் தன்மை 146
5.2.4.2.3.1 பழைய கூறுகள் 146
5.2.4.2.3.2 வரவு எண்ணிக்கை கூடிய கூறுகள் 150
5.2.4.2.3.3 புதிய கூறுகள் 153
5.2.5 மணிமேகலை 155
5.2.5.1 காலம் 155
5.2.5.2 மொழிநிலை 155
5.2.5.2.1 வையாபுரிப்பிள்ளை தரும் சான்றுகள் 155
5.2.5.2.2 சோ. ந. கந்தசாமி தரும் சான்றுகள் 156
5.2.5.2.3 வ. சுப. மாணிக்கம் தரும் மொழிநிலைக் கூறுகள் 166
5.2.5.2.4 இன்னும் சில கூறுகள் 168
5.2.5.2.5 மேற்கூறிய மொழிக்கூறுகளின் தன்மை 168
5.2.5.2.5.1 பழந்தமிழ்க் கூறுகள் 168
5.2.5.2.5.2 வரவு எண்ணிக்கையில் கூடி வரும் கூறுகள் 170
5.2.5.2.6 சிலப்பதிகார, மணிமேகலைக் கூறுகள் 173
5.2.5.2.7 மணிமேகலைக் கூறுகள் 175
5.3 பின்பழந்தமிழ் இலக்கியங்களின் வரிசை முறை 175

6. முன்பழந்தமிழ்க் கூறுகளும் பின்பழந்தமிழ்க் கூறுகளும் 177-246

6.1 முன்பழந்தமிழ் நூல்களும் பின்பழந்தமிழ் நூல்களும்
6.2 ஒலியன் இயல் 178
6.2.1 சைகாரச் சொற்கள் 178
6.2.2 யகர மெய் கெடல் 179
6.2.3 யோகாரச் சொற்கள் 179
6.2.4 யாகாரம் எகரம் ஆதல் 179
6.2.5 நெடில் குறிலாதல் 180
6.3 சொல்லியல் 180
6.3.1 பெயர்ச்சொல் 180

6.3.1.1	நான்	180
6.3.1.2	நின்-உன்	181
6.3.1.3	நும்-உம்	182
6.3.1.4	-கள் பன்மை விகுதி	182
6.3.1.4.1	அஃறிணைப் பன்மை	182
6.3.1.4.2	இரட்டைப்பன்மை	184
6.3.1.4.3	பதிலிடுபெயர்களில் இரட்டைப் பன்மை	185
6.3.1.4.4	உயர்திணைப் பன்மை	186
6.3.1.4.5	வினையில் இரட்டைப் பன்மை	187
6.3.1.5	உயர்வு ஒருமைப் பெயர்கள்	188
6. .1.6	காரர் என்ற விகுதி	191
6.3.2	வினைச்சொல்	191
6.3.2.1	ஏவல் வினை	191
6.3.2.2	குறை எச்சம்	196
6.3.2.3	எதிர்மறை	198
6.3.2.3.1	இறந்தகால எதிர்மறை	198
6 3.2.4	வினையெச்சம்	200
6.3.2.4.1	செய்யூஉ வாய்பாட்டு வினையெச்சம்	200
6.3.2.4.2	செய்யாமல் வாய்பாட்டு வினையெச்சம்	200
6.3.2.5	நிபந்தனை எச்சம்	201
6.3.2.5.1	செயில் வாய்பாட்டு எச்சம்	201
6.3.2.5.2	-ஆல் ஈற்று எச்சம்	202
6.3.2.5.3	-ஏல் ஈற்று எச்சம்	203
6.3.2.6	னகர இறந்தகால இடைநிலை	204
6.3.2.7	ககர ஒற்று	206
6.3.2.8	பெயரெச்சம்	206
6.3.2.8.1	''செய்யாத'' வாய்பாட்டுப் பெயரெச்சம்	207
6.3.2.8.2	நிகழ்காலப் பெயரெச்சம்	208
6.3.2.9	வினையாலணையும் பெயர்கள்	208
6.3.2.9.1	செய்யாதார் போன்றவை	209
6.3.2.9.2	–அல்– இடைநிலை கொண்டவை	209
6.3.2.10	தொழிற்பெயர்	210

6.3.2.11	உண்டு என்னும் குறிப்பு வினைமுற்று	212
6.3.2.12	செயவென் எச்சத்துடன் துணைவினைகள்	214
6.3.2.13	விகுதிகள்	215
6.3.2.13.1	தன்மை ஒருமை விகுதிகள்	216
6.3.2.13.2	தன்மைப் பன்மை	220
6.3.2.13.3	முன்னிலை ஒருமை	223
6.3.2.13.4	முன்னிலைப் பன்மை	225
6.3.2.13.5	ஆண்பால்	226
6.3.2.13.6	பெண்பால்	229
6.3.2.13.7	பலர்பால்	231
6.3.2.14	இடைச்சொல்	235
6.3.2.14.1	இப்போது என்ற சொல்	235
6.3.2.14.2	அந்த, இந்த ஆகிய சுட்டுச்சொற்கள்	235
6.3.2.14.3	அப்படி, இப்படி, எப்படி ஆகிய சொற்கள்	235
6.3.2.14.4	எகர வினாச்சொற்கள்	236
6.3.2.14.5	நெடில் குறிலாதல்	238
6.3.2.14.6	'பொருட்டு' என்னும் உருபு	239
6.3.2.14.7	அல்லால் என்ற வடிவம்	239
6.3.2.14.8	தன்மை, முன்னிலைப் பதிலிடுபெயர்களுடன் 'தன்' அசைச்சொல்	240
6.3.2.15	செய்தாற்போல் என்னும் சொல்லாட்சி	240
6.3.2.16	பெயரெச்சம் + பின்னர்	241
6.3.2.17	கண்டதன் பின்னர் போன்ற சொல்லாட்சி	241
6.3.2.18	காரண வினையாக்கம்	241
6.4	தனி நூல்களின் கூறுகளா?	242
6.5	முடிவுரை	245
	பயன்படுத்திய இலக்கிய, இலக்கண நூல்கள்	247
	உதவிய நூல்களும் கட்டுரைகளும்	249
	பொருளடைவு	253

1
தோற்றுவாய்

1.1 நூல் அறிமுகம்

நீண்ட ஒரு வரலாற்றையும் நெடிய ஒரு பாரம்பரியத்தையும் கொண்ட மொழிகளில் தமிழ் மொழியும் ஒன்று. கிறிஸ்து பிறப்பதற்குச் சில நூற்றாண்டுகளுக்கு முன்னரே தனக்கெனத் தனி வாழ்வையும் வரலாற்றையும் கொண்டு விளங்கும் மொழி தமிழ் மொழி.

இதன் நீண்ட வரலாற்றையும் பலவேறு பகுதிகளாகப் பிரித்து அவற்றின் பண்புகளை மொழியியல் அடிப்படையில் ஆராயலாம். இதன் வரலாற்றினைப் பண்டைக்காலத்தமிழ், இடைக்காலத் தமிழ், தற்காலத்தமிழ் எனப் பகுத்துப் பலர் ஆய்வர். இந்நிலையில் தமிழ் இலக்கியங்கள் என்று தோன்றிற்றோ அன்றுமுதல் தேவாரத் திருப்பதிகங்கள் தோன்றிய காலம் எனக் கருதப்படும் கி. பி. ஆறாவது நூற்றாண்டு வரையுள்ள காலப் பகுதியில் காணப்படும் தண்டமிழ் நூல்களின் மொழி நிலையை ஆராய்வதே 'சங்கத் தமிழ்' என்னும் வரிசைநூல்.

உலக மொழிகள் அனைத்துமே தமக்கெனத் தனித்தனி அமைப்பினைக் கொண்டு விளங்குவன. இதற்குத் தமிழ் மொழியும் விதிவிலக்கன்று.

பண்டைத் தமிழ் மொழியின்கண் பலவேறு இலக்கணக் கூறுகளைக் (grammatical categories) காணலாம். இதுபோன்றே பெயர்ச்சொல், வினைச்சொல், இடைச்சொல் ஆகிய சொல்வகைகளையும் (parts of speech) காண்கிறோம். உரிச்சொல் என்ற வகையைத் தமிழ் இலக்கணிகள் உருவாக்கியுள்ளனர். எனினும் இச்சொல்வகை வேண்டுமா என்பது வினாவுக்குரிய ஒன்று. இந்

நிலையில் மூவகைச் சொற்களிலும் உள்ள பலவேறு இலக்கணக் கூறுகளைக் கண்டு ஆராய்வது நம் கடமையாகும். பெயர்ச் சொற்களில் காணப்படும் இலக்கணக் கூறுகளைவிட வினைச் சொற்களில் காணப்படும் இலக்கணக் கூறுகள் அதிகமாக உள்ளன. இதனால்தான் முதன் முதலில் வினைச்சொல்லின் இலக்கணக் கூறுகள் ஆராயப்படுகின்றன. அதிலும் வினை முற்றில் இறுதி யாகக் காணப்படும் பால் காட்டும் விகுதிகள் முதன் முதலாக எடுத்துக் கொள்ளப்படுகின்றன.

பண்டைத் தமிழ் மொழியின் அமைப்பை விளக்குவதே இவ் வரிசை நூலின் முதல் நோக்கமாயினும் இதோடு ஒட்டிய பலவேறு செய்திகளும் ஆங்காங்கே ஆராயப்படும்.

தமிழ் மொழி வரலாற்றில் பலவேறு மொழிக் கூறுகளின் பங்கும் ஆங்காங்கே சுட்டிக்காட்டப்படும். பண்டைத் தமிழ் நூல் களில் காணப்படும் மொழிநிலை பற்றிப் பேசும்போது அந்நூல்களின் வரிசைக் காலமும் இந்நூலின்கண் ஆராயப்படுகின்றது. இந் நிலையில்தான் தொல்காப்பியம், சங்கநூல்கள் ஆகியவற்றின் கால வரிசையும் இப்பகுதியில் இடம்பெறக் காணலாம்.

சங்க நூல்களின் மொழிநிலைபற்றி ஆராய்ந்தபோது பல வேறு எண்ணங்கள் அலைமோதிய நிலையில் அவற்றையும் இங்குத் தருவதில் தவறெதுவும் இல்லை எனக் கருதுகிறேன். தமிழ் இலக்கிய வரலாற்றில் கால ஆராய்ச்சி மிக முக்கியமான இடத்தை வகித்து வருவதை நாம் அறிவோம். பண்டை இலக்கியங்களில் கால ஆராய்ச்சிக்குப் பலவேறு செய்திகள் உதவுகின்றன. அவற் றையும் இங்குக் குறிப்பிடுவதில் தவறில்லை.

1.2 இலக்கியங்களின் கால நிர்ணயம்

பலவேறு பண்டை நூல்கள் தம்மிடையே உள்ள காலத்தை நிர்ணயம் செய்வதற்குச் சில பல உண்மைகள் துணைபுரியும். ஒரு நூலில் காணப்படும் கருத்துக்களை மற்றொரு நூல் கூறுவதுடன் அதன் ஆசிரியரையோ அல்லது நூலையோ குறிப்பிட்டுக் கூறும் போது நிச்சயமாக எடுத்தாளப்பட்ட நூல் காலத்தால் முந்தியது என்றும் எடுத்தாளுகின்ற நூல் பிந்தியது எனவும் முடிவு கட்ட முடியும்.

எடுத்துக்காட்டாகத் திருக்குறளில் காணப்படும் பலவேறு கருத்துக்களைச் சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய இரு நூல்களிலும் காணலாம். மட்டுமன்றித் திருக்குறள் கருத்தினைச் சிலப்பதிகாரம்

தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுவாளை

எனவும் 23 - வெண்பா - 1, மணிமேகலை

தெய்வந் தொழாஅள் கொழுநற் தொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் பெருமழைஎன்ற அப்
பொய்யில் புலவன் பொருளுரை தேறாய் (22, 59-61)

எனவும் கூறுவதிலிருந்து திருக்குறள் சிலம்பு, மணிமேகலை ஆகியவற்றிற்கு முந்தியது என முடிவு கட்டுவர் அறிஞர்கள்.

இதைப்போன்றே வேறு பல செய்திகளும் கால ஆராய்ச்சிக்குத் துணைநிற்கும். பிறநாட்டு அறிஞர்களின் குறிப்புக்கள், அவர்களைப் பற்றிய செய்திகள், சில வரலாற்று உண்மைகள், சமுதாயப் பழக்கவழக்கங்களின் குறிப்புக்கள், காலக்கணிப்புக்கள் போன்றவை கால ஆராய்ச்சிக்குத் துணை நிற்பனவாகும். இவற்றைத் தமிழ் இலக்கிய வரலாற்று அறிஞர்கள் நன்குப் பயன்படுத்தியுள்ளனர்.

1.2.1 சொல்லாட்சியும் கால நிர்ணயமும்

கால ஆராய்ச்சிக்கு உதவும் இத்தகைய உண்மைகள் இன்னும் பல உள்ளன. அவற்றுள் சொல்லாட்சியும் ஒன்று. சொற்களை அடிப்படையாக வைத்து நூல்களின் காலத்தை நிர்ணயிப்பது பண்டைக்காலம் முதலே பழக்கத்திலிருந்து வரும் ஒரு முறையாகும். மொழியியல் உண்மைகளை அடிப்படையாகக் கொண்டு சங்க இலக்கியங்களையும் பிற இலக்கியங்களையும் பலவேறு அறிஞர்கள் ஆராய்ந்துள்ளனர். இம்முறையை அடிப்படையாகக் கொண்டே இந்நூலில் பலவேறு செய்திகள் ஆராயப்படுகின்றன. முன் பத்திகளில் குறிப்பிட்ட செய்திகள் இந்நூலில் பயன்படுத்தப்படவில்லை. ஒரு நூலில் காணப்படாத பிந்திய சொற்களை மற்றொரு நூல் கையாண்டிருக்குமாயினும் அந்நூலை மற்றைய நூலுக்குப் பிந்தியது எனக்கூறமுடியும். இவற்றையும் இரண்டு பிரிவாகப் பிரிக்கலாம். (1) புதிய சாதாரணச் சொற்கள் (2) புதிய இலக்கண வடிவங்கள். சாதாரணச் சொற்களை வைத்துக் கால நிர்ணயம்

செய்வதை விட புதிய இலக்கண வடிவங்களை வைத்து நிர்ணயம் செய்வது இன்னும் வலுவுடையதாக அமையும்.

எடுத்துக்காட்டாகச் சங்ககால இலக்கியங்கள் பலவற்றில் இரட்டைப் பன்மைச்சொற்கள் காணப்படாமல் இருக்க, கலித் தொகை, பரிபாடல் ஆகிய இரு நூல்களிலும் இரட்டைப்பன்மையும் மற்றும் பலவேறு புதிய இலக்கண வடிவங்களும் காணப்படுகின்ற நிலையில் அவை பிற இலக்கியங்களுக்குப் பிந்தியன என்று கூறுவர். புதிய சொற்கள், புதிய இலக்கண வடிவங்கள் என்று குறிப்பிடும் போது இவற்றின் பொருளை முந்தைய நூல்கள் எவ்வாறு காட்டியுள்ளன என்று ஒப்புமைப்படுத்திக் காணுவதே நன்மை பயக்கும். இதுபற்றிப் பின்னர் விரிவாகக் காணலாம்.

1.2.1.1 புதிய சொற்கள்

பொதுவாகப் பழமையான சொற்கள் காலத்தால் முந்திய நூல்களில் வருவதும், புதிய சொற்கள் காலத்தால் பிந்தியநூல் களில் வருவதும் இயற்கை. தன்மை ஒருமையைக் குறிக்கும் யான் நான் என்ற இரண்டு பதிலிடுபெயர்களிலும் யான் முந்தியது என்பதும், நான் பின்னர் உருவானது என்பதும் மொழியியலார் கண்ட உண்மையாகும். யான் மூலத்திராவிட மொழியிலேயே காணப்படுவது. இந்நிலையைச் சங்ககால இலக்கியங்களில் நன்குக் காணலாம். சங்ககால இலக்கியங்களில் முன்பழந்தமிழ் இலக்கியங் களில் யான் மட்டுமே காணப்பட, பின்பழந்தமிழ் இலக்கியங் களாகிய பரிபாடல், மணிமேகலை, சிலப்பதிகாரம் ஆகியவற்றில் மட்டுமே நான் காணப்படுகிறது. அதுவும், பதின்மூன்று இடங் களில் மட்டுமே வந்துள்ளது.

இதைப் போன்றே இரட்டைப் பன்மைப் பெயர்களும் கலித் தொகை, திருக்குறள், சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய நூல் களில் மட்டுமே வந்துள்ளன.

இரட்டைப் பன்மைப்பதிலிடு பெயர்கள் எனக் கருதப்படும் யாங்கள், தங்கள், நுங்கள், எங்கள் போன்ற சொற்களும் இந்நூல்களிலேயே காணப்படுகின்றன. அது மட்டுமின்றி, உயர்திணைப் பன்மை சொற்களிலும், - கள் பன்மை காட்டும் விகுதியாகப் பயன்படுகிறது. இத்தகைய பலவேறு புதிய புதிய

சொல்லாட்சியினைக் காணும்போது நிச்சயமாக அந்நூல்கள் காலத்தால் பிந்தியன என ஐயம் திரிபின்றி நிர்ணயிக்கலாம் எனினும், ஓரிரு புதிய சொற்களின் ஆட்சி மட்டுமே ஒரு நூலின் காலத்தை நிர்ணயித்துவிட முடியாது.

1.2.1.2 பலவேறு புதிய கூறுகள்

ஓரிரு புதிய கூறுகள் ஒரு நூலில் வருவதால் மட்டும் அந்நூல் பிந்தியது என்று கூறுதல் முடியாது. எடுத்துக்காட்டாக முன்னிலைப் பன்மைப் பதிலிடுபெயர்களாக வரும் நும், உம் ஆகிய இரு வடிவங் களில் உம் பிந்தியது. தொல்காப்பியம், குறுந்தொகை, ஐங்குறு நூறு போன்ற நூல்களில் இது (உம்) காணப்படுவதில்லை. ஆனால் புறநானூற்றில் ஓரிடத்தில் இது வந்துள்ளது. இதை வைத்துக்கொண்டு புறநானூறு பின்பழந்தமிழ் நூல் என்று கூறி விட முடியாது. இதைப்போன்றே உன் என்பதும் மிகப் பிந்தியது. சிலம்பு, மணிமேகலை ஆகிய இரு பின்பழந்தமிழ் நூல்களில் மட்டு மன்றி அகநானூற்றிலும் ஓரிடத்தில் இது காணப்படுகிறது. இதனால் அகநானூறும் பின் பழந்தமிழ் நூல் என்று யாரும் கருதுவதில்லை. ஆனால் ஒரு நூலில் பலவேறு புதிய கூறுகள் காணப்படுமாயின் அதனைக் காலத்தால் பிந்தியது என்று கருதலாம்.

கலித்தொகை முன்பழந்தமிழ் நூல்களில் காணப்படாத எத்தனையோ புதிய புதிய கூறுகளைக் கொண்டுள்ளது. பல வேறு புதிய கூறுகளைக் கொண்டுள்ள காரணத்தால்தான் இதனைச் சங்க இலக்கியங்களில் மிகப் பிந்தியது எனக் கருதுகின்றனர். இதே நிலையைத்தான் பரிபாடலிலும் காண்கிறோம். பரிபாடலில் காணப் படும் புதிய கூறுகள் மட்டுமன்றி இன்னும் வேறு சில புதிய வடிவங்களும் கலித்தொகையில் காணப்படுகின்றன. இதனால் தான் இவை பிந்தியன எனப்படுகின்றன. எனவேஓரிரு புதிய கூறுகள் மட்டும் காலத்தை நிர்ணயிக்கப்பயன்படாது என்றும் புதிய கூறுகளின் திரட்சியே ஐயமின்றிக் காலத்தை நிர்ண யிக்க உதவும் எனவும் கருதலாம். பொதுவாக ஓரிரு கூறுகள் மட்டும் தனியொரு கிளைமொழியைத் தோற்றுவிப்பதில்லை. பலவேறு புதிய கூறுகள் கிளைமொழியாக்கத்திற்கு வித்திடுவது

போன்று பல புதிய கூறுகளின் கூட்டமே கால நிர்ணயத்திற்கு உதவுகின்றது.

1.2.1.3 புதிய கூறுகளின் தோற்றமும் வளர்ச்சியும்

பல காரணங்களால் புதிய கூறுகள் தோன்றலாம். அவ்வாறு தோன்றும் கூறுகள் நாளடைவில் பரகிப் பெருகி வளருவதையும் காணலாம். குறிப்பிட்ட ஒரு இலக்கணக் கூறில் மட்டும் தோன்றுகின்ற புதுமை அதனோடு தொடர்புடைய பிற இலக்கணக் கூறுகளிலும் பரந்துவிடக் காணலாம்.

-கள் விகுதி அஃறிணைப்பன்மை காட்டும் விகுதியாகவே தொல்காப்பியத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதுவும் வரவேண்டும் என்ற நியதி இல்லை. இத்தகைய -கள் பின்னர் உயர்வு சிறப்பிலிருந்து பன்மையைப் பிரித்தறிதற் பொருட்டு இரட்டைப் பன்மை விகுதியாக வரத்தலைப்பட்டது. பின்னர் இது பெயர்ச் சொற்களில் மட்டுமன்றி பதிலிடு பெயர்களிலும் வரத்தொடங்கியது. அதனையடுத்து உயர்திணைப் பன்மை விகுதியாகவும் வந்தமை காணலாம். இத்தகைய இரட்டைப்பன்மைச் சொல் ஏவல் வினையிலும் படிப்படியாக வந்துள்ளது. சிலப்பதிகாரத்தில் காணப்படும் ''நண்ணுமின்கள்'' (சிலம்பு 16 - வெண்பா - 1) என்ற சொல் இப்பண்பைக் காட்டும். எனவே ஒரு இடத்தில் தொடங்கிய புதிய கூறு பின்னர், தொடர்புகொண்ட பல வேறு இடங்களிலும் பரவி வருதல் காணலாம்.

முன்பழந்தமிழ் நூல்களில் காணப்படும் வினையாலணையும் பெயர்களும் இதற்கு எடுத்துக்காட்டாக உள்ளன. -அவ்- இடைநிலை கொண்ட வினையாலணையும் பெயர்கள் முன்பழந்தமிழ் நூல்களில் மூன்று இடங்களைத்தவிர (புறம் 2, நற். 1) பன்மையில் மட்டுமே காணப்படப் பின்பழந்தமிழ் நூல்களில் ஒருமையிலும் வருதல் இப்பண்பைக் காட்டும். முதன் முதலில் அஃறிணைப் பன்மையில் தோன்றிய இவ்வகை வினையாலணையும் பெயர்கள் பின்னர் உயர்திணைப் பன்மையிலும் அதன் பின்னர்ப் படிப்படியாக ஆண்பால், பெண்பால் ஆகியவற்றிலும் வந்திருத்தல் கண்கூடு, இன்றைய தமிழில் இவ்வடிவங்களே வினையாலணையும் பெயர்

களாக உள்ளன. வந்தார், வந்தான், வந்தாள் போன்ற வடிவங்கள் இன்று வினையாலணையும் பெயர்களாக இல்லை.

-அவ்- இடைநிலை கொண்ட ஆண்பால் ஒருமைவினையாலணையும் பெயர்களாகப் புறநானூற்றில் ஒன்றும் நற்றிணையில் ஒன்றும் காணப்பட, பரிபாடல் (5) கலித்தொகை (40) திருக்குறள் (34) சிலம்பு (3) மணிமேகலை (2) ஆகியவற்றில் அதிகமாக உள்ளன. இதே பண்பை-அள் விகுதியிலும் காணலாம். புறநானூற்றில் ஒரே ஒரு இடத்திலும் கலித்தொகை (28) பரிபாடல் (5) குறள் (4) சிலம்பு (1) மணி (1) ஆகிய நூல்களிலும் காணப்படுகின்றன.

1.2.1.4 புதிய கூறுகளின் தொடர்ச்சி

புதிதாக உண்டாகும் கூறுகள் ஒரு நூலில் காணப்படும்போது அடுத்து உண்டாகும் நூலிலும் அல்லது அதன்பின்னர்த் தோன்றும் நூல்களிலும் காணப்பட வேண்டும் என்ற அவசியம் இல்லை. புதிய கூறுகள் நிலைபெறுவதற்குச் சில காலம் வேண்டியிருக்கும். தோற்றத்திற்கும் நிலைபேற்றிற்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் உண்டாகும் எல்லா நூல்களிலும் குறிப்பிட்ட புதிய வடிவம் இடம் பெறுதல் கட்டாயமன்று. நிலைபேற்றிற்குப் பின்னர்தான் அது எல்லா நூல்களிலும் காணப்படுமேயன்றி அதன் முன்னால் பழைய வடிவங்களே பெரும்பான்மையாக வரும். சிறுபான்மையாகப் புதிய வடிவம் இடம் பெறலாம்.

முன்னர்க் குறிப்பிட்டது போன்று உன், முன்பழந்தமிழ் நூலாகிய அகநானூற்றில் காணப்படுகின்றது. ஆனால் பின் பழந்தமிழ் நூல்கள் எல்லாவற்றிலும் காணப்படுவதில்லை. சிலம்பு, மணிமேகலை ஆகிய நூல்களில் காணப்படுகின்றதேயன்றி பரி, கலி, குறள் ஆகிய நூல்களில் காணப்படுவதில்லை. இதே நிலையைத்தான் உம் என்ற சொல்லிலும் காண்கிறோம். உம் புறநானூற்றிலும், நற்றிணையிலும், அகநானூற்றிலும் காணப்பட குறளில் காணப்படவில்லை. இத்தகைய எடுத்துக் காட்டுக்கள் புதிய கூறுகள் நிலைபேறு பெறுவது வரையிலும் தொடர்ச்சியாக எல்லா நூல்களிலும் காணப்படவேண்டும் என்பது கட்டாயமில்லை என்பதைக் காட்டும்.

1.2.1. 5 தற்செயல்விடுப்பு

புதிய கூறு எது என்று நிர்ணயிப்பதிலும் கருத்துச் செலுத்த வேண்டும். ஏனெனில் முந்திய இலக்கியங்களில் காணப்படாமல், ஆனால் பிந்திய இலக்கியங்களில் மட்டும் காணப்படும் எல்லாக் கூறுகளும் புதிய கூறுகளாக எண்ணப்படவேண்டிய கட்டாயம் இல்லை. ஏதாவது ஒரு பொருளைக் குறிக்கும் சொல் ஒரு இலக்கியத்தில் காணப்படும்போது பிற இலக்கியங்களில் காணப்படாத ஒரே காரணத்தால் அதனைப் பிந்தியது எனக் கூறுதல் கடினம். அப்பொருள் பற்றிக் கூற வேண்டிய அவசியம் இல்லாத நிலையில் பல இலக்கியங்கள் அச்சொல்லைப் பயன் படுத்தாமல் இருந்திருக்கலாம். இதனைத் "தற்செயல்விடுப்பு" (accidental gap) எனக் குறிப்பிடுவர்.

இப்பண்பைப் பொதுவாகப் புதிய சாதாரணச் சொற்களிடையே நன்குக் காணமுடியும். அத்தி என்ற சொல் அகநானூற்றில் மட்டுமே காணப்படுகிறது. வேறு எந்த இலக்கியங்களிலும் காணப்படவில்லை. இதனால் அகம் பிந்தியது என்று கருதமுடியாது. அத்தி என்ற சொல் காட்டும் பொருளைப் பற்றிக் கூறவேண்டிய நிலை வேறு நூல்களில் இல்லாமையால் இச்சொல் அந்நூல்களில் காணப்படவில்லையே தவிர இதன் வரவு அகநானூற்றின்காலத்தை நிர்ணயிக்காது.

பரந்த இலக்கியப் பரப்பைக் கொண்ட மொழிகளில் பொதுவாக எல்லா இலக்கணக் கூறுகளும் முந்திய இலக்கியங்களில் வந்துவிடும். இதனால் இலக்கணக் கூறுகளின் தற்செயல்விடுப்பைக் காணமுடிவதில்லை. எனவே முற்கால நூல்களில் காணப்படாது பிற்கால நூல்களில் காணப்படும் பல இலக்கணக் கூறுகள் நிச்சயமாகக் கால நிர்ணயத்திற்கு உதவி செய்கின்றன. 'அவளைக்-கண்டாற்போன்று உள்ளது' போன்ற ஆட்சி இன்றையத் தமிழில் உள்ளது. சங்ககால இலக்கியங்களை நோக்கின் குறுந்தொகை, அகம், நற்றிணை போன்ற நூல்களில்

இரும்பு திரித்தன்ன = இரும்பை முறுக்கி
விட்டாற்போல, அகம் 4-3

புள்ளெழுந்தாங்கு = புள் எழுந்து சென்றாற்போல
அகம் 113-25

போன்ற ஆட்சியைக் காண்கிறோம். இக்கருத்தில் கலித்தொகையில்
துறக்கம் வேட்டெழுத்தாற்போல் கலி 118-3
என ஓரிடத்தில் வந்துள்ளது. வேறுபல இடங்களில்
மலர்ந்தன்ன கலி 13-3
நீர்க்கு விட்டாங்கு = நீருக்கு விட்டாற்போல் கலி 56-32
போன்ற சொல்லாட்சிகள் காணப்படுவதும் இங்கு உணரத்தக்கது. இந்நிலையில் 'எழுந்தாற்போல்' என்பது பிந்திய வடிவம் என்பதும் இதனால் கலித்தொகை பிந்திய நூல் என்பதும் உணரற்பாலன.

இவ்வாறு பழைய ஆட்சியுடன் ஒப்பிட்டு நோக்கும்படியாக உள்ள புதிய ஆட்சிகள்தான் கால நிர்ணயத்திற்கு மிகவும் உதவுகின்றன.

இதுபோலவே எதிர்மறையாக, உண்மையான பழைய கூறுகள் அனைத்தும் பழைய இலக்கியங்களில் காணப்படும் என்று கூறமுடியாது.

1.3.6 பழைய சொற்களும் பிந்திய நூல்களும்

பொதுவாகப் பழைமையான சொற்கள் அனைத்தும் பழைய இலக்கியங்களில் காணப்படும் எனக்கூறமுடியாது. நீ என்பதின் பன்மைச் சொல்லாகப் பழந்தமிழ் இலக்கியங்களில் நீயிர், நீர் ஆகிய சொற்கள் காணப்படுகின்றன. ஆனால் மொழியியல் அறிஞர்கள் நீம் என்ற சொல்லே பழமையானது எனக்கருதுவர். நும், நுங்கள் போன்ற சொற்களின் ஆக்கம் இக்கருத்துக்கு வலுவூட்டும். ஆனால் இச்சொல் சங்க இலக்கியங்களிலோ அல்லது பிற பழந்தமிழ் இலக்கியங்களிலோ காணப்படவில்லை. ஆனால் சிந்தாமணியில் மட்டும் வந்துள்ளது. சிந்தாமணி கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டைச் சார்ந்தது என்பதை நாம் அறிவோம். எனவே பழமையான ஒரு சொல், குறிப்பிட்ட ஒரு இலக்கியத்தில் மட்டும் காணப்படுவதால் அந்நூலின் பழமையை நிர்ணயிக்க முடியாது. பழைய இலக்கியங்கள், பழைய வடிவங்களைக் கொண்டிருப்பது இயற்கை. புதிய வடிவங்களைக் கொண்டிருக்க முடியாது. நீம் மிகப் பழங்காலத்திலேயே பேச்சு வழக்கில்

இருந்திருக்கவேண்டும் என்றும் சிந்தாமணி காலத்தில்தான் அது இலக்கியத்தில் இடம் பெற்றது என்றும், எனினும் தொடர்ச்சி யாக அது வாழவில்லை என்றும் கருதலாம். நீம், நீயிர் ஆகிய வடிவங்களில் நீயிர் இலக்கியத்தில் ஏறிவிட்டது என்றும், நீம் அப்பண்பைப் பெறவில்லை என்றும் முடிவு கட்டலாம். நீயிர் என்பதன் திரிபாகிய 'நீர்' புதிதாகத் தோன்றியிருந்தாலும், சங்க காலத்திலேயே இலக்கியத்தில் புகுந்து விட்ட நிலையைக் காண்கிறோம்.

ஒரு நூலின் காலத்தை நிர்ணயிக்கும்போது, பழமையானச் சொற்களை மட்டும் வைத்துக்கொண்டு நிர்ணயம் செய்ய முடியாது. புதிய நூல்களிலும் பழைமையானச் சில வடிவங்களை ஆசிரியர்கள் சில காரணங்களுக்காக எடுத்தாள்வது உண்டு. பழமை போற்றல், செய்யுள் ஓசை காத்தல் போன்றவை இதற்குக் காரணமாக இருக்கலாம். எடுத்துக்காட்டாகப் பாரதியார் பாடல் களில் அம் விகுதியைக் காணமுடிகிறது. அம் விகுதி பழந்தமிழ்க் கூறுகளில் ஒன்றாகும். இதை வைத்துக்கொண்டு பாரதி பாடல்களின் காலத்தை மிகப் பழமையான காலம் எனக் கருதுதல் கூடாது. ஒரு சிலப் பழமைக்கூறுகளையே பிந்திய நூல்களில் நாம் காணமுடியுமே தவிர, எல்லாப் பழம்பண்புகளையும் காணுதல் காணமுடியாத ஒன்று, மட்டுமின்றிப் பலப்பல புதிய வடிவங்களும் சொற்களும், கருத்துக்களும் பளிச்சென்று தெரிய வரும். எனவே, இவற்றை வைத்துக்கொண்டு ஒரு நூலைப் பிற்காலத்தில் தோன்றியது எனக் கூறிவிடுதல் முடியும். முன்னர்க் குறிப்பிட்டபடி பின் பழந்தமிழ் நூல்கள் என்று கருதப்படும் நூல்களில் பழைய கூறுகள் பலவற்றைக் காணினும், புதிய புதிய கூறுகளையும் கொண்டிருக்கும் நிலையில்தான் அவற்றைப் பின்பழந்தமிழ் நூல்கள் என்று குறிப்பிடுகிறோம்.

புதிய கூறுகளின் வரவு எண்ணிக்கை புதியகூறின் வளர்ச்சியையும் பழையகூறின் வீழ்ச்சியையும் - அழிவையும் தெளிவாகப் புலப்படுத்தும்.

1.3.7 வடிவங்களின் வரவு எண்ணிக்கை

நூல்களின் காலத்தை நிர்ணயிக்கும் போது புதிய கூறுகளின்

வரவு எண்ணிக்கையும் (frequency) மிகப் பயன்படுவது உண்டு. எடுத்துக்காட்டாகச் செய்யாமல் என்னும் வாய்பாட்டு வினையெச்ச விகுதி குறிஞ்சிப்பாட்டு, பரிபாடல், கலித்தொகை, திருக்குறள், சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய நூல்களில் எல்லாம் காணக்கிடக்கிறது. குறிஞ்சிப்பாட்டில் ஒரே ஒரு இடத்தில்தான் இது வருகிறது. இதை வைத்துக்கொண்டு குறிஞ்சிப்பாட்டும் பின்பழந்தமிழ் நூல் எனக் கூறிவிடுதல் பொருந்தாது. குறிஞ்சிப் பாட்டுக் காலத்திலேயே பேச்சு வழக்கில் இருந்த - மல் விகுதி இலக்கியத்தில் ஏறிவிட்டபோதிலும், பரிபாடல், கலித்தொகைக்குப் பின்னர்தான் இலக்கிய ஆட்சியைப் பிடிக்க முனைந்துள்ளது எனக் கருதலாம்.

முன்பழந்தமிழ் நூல்களில் ஏன், என் ஆகிய இரு விகுதிகளைக் காண்கிறோம். பின்பழந்தமிழ் நூல்களிலும் இவ்விரு விகுதிகளும் காணப்பட்டாலும் என் விகுதி மிகக் குறைந்து காணப்படுகிறது. குறுந்தொகை, அகநானூறு போன்ற இலக்கியங்களில் மிக அதிகமாகக் காணப்பட, கலித்தொகை போன்ற நூல்களில் ஏன், என் விகுதிகளிடையே உள்ள விகிதாசாரம் மாறிக்காணப்படு கிறது.

	ஏன்	என்
பதி	3	8
ஐங்	13	18
அகம்	37	38
நற்	61	17
குறு	32	28
புறம்	59	36
பத்து	4	2
பரி	8	0
கலி	193	26
குறள்	43	0
சிலம்பு	99	4
மணி	144	1

பின்பழந்தமிழ் நூல்களுள் பரிபாடல், குறள் ஆகியவற்றில் என் காணப்படவில்லை. மணிமேகலையில் 144 : 1 என்ற

விகிதத்தில் உள்ளது. இந்நிலை வரவு எண்ணிக்கை கால் நிர்ணயத்திற்குப் பயன்படுமாற்றை நன்குக் காணலாம். இந் நிலையைப் பிற விகுதிகளிலும் காணமுடியும். (கு, அல் முதலியன).

ஓரிரு கூறுகளின் வரவு எண்ணிக்கையினை வைத்து மட்டும் காலத்தன்மையை நிர்ணயம் செய்ய முடியாது. எல்லாக் கூறுகளையும் பொதுப்பட நோக்கப் பெரும்பான்மைக் கூறுகளின் வரவு எண்ணிக்கை உதவியாக இருக்கும். பொதுவாகப் புதிய கூறுகள் காலம் செல்லச்செல்லப் பெருகிவரும் என எண்ணலாம்.

1.3.8 பழைய கூறுகள் வழக்கறுதல்

புதிய கூறுகளின் தோற்றமும் வரவு எண்ணிக்கையும் எவ்வாறு கால நிர்ணயத்திற்குப், பயன்படுகின்றதோ அதே போன்று பழைய கூறுகளின் அழிவும் வரவு எண்ணிக்கை குறைவும் பயன்படும். சங்க காலத்தில் காணப்பட்ட எத்தனையோ சொற்களையும் இலக்கணக் கூறுகளையும் இன்றைய தமிழ் மொழியில் நாம் காணுவதில்லை. இதைப் போன்றே இடைக்காலத் தமிழிலும் காணமுடிவதில்லை. இடைக்காலத் தமிழின் சில கூறுகள் இன்றையத் தமிழில் காணப்படுவதில்லை. எனவே பழைய கூறுகளின் அழிவும் எண்ணிக்கை குறைவும் கூட நூல்களில் காலத்தைக் காட்டும் அளவுகோல்களாக உள்ளன.

வந்திசின், கண்டிசின் போன்ற இசின் ஈற்றுச் சொற்கள் முன்பழந்தமிழ் நூல்களில் மட்டுமே காணப்படுகின்றன. இதைப் போன்றே இகும் ஈற்றுச் சொற்களும் மேலும்-மார் ஈற்று வினையெச்சம் போன்ற சில கூறுகளும் முன்பழந்தமிழ்க் கூறுகளாகவே உள்ளன.

	–இசின்	-கும்	–மார்	–எம்
பதி	8	6	3	-
ஐங்	1	9	-	8
அகம்	6	3	24	3
நற்	9	1	6	1
குறு	5	-	6	3

புறம்	9	2	10	8
பத்து	1	-	14	-
பரி	-	-	2	2
கலி	-	-2	9	-
குறள்	-	-	-	-
சிலம்பு	-	-1	1	-
மணி	-	-	-	-

இத்தகைய மேலே கண்ட பலவேறு உண்மைகளை உள்ளத்தில் கொண்டுதான் சங்க இலக்கியங்களின் வரிசை முறை இங்கு ஆராயப்படுகின்றது. சங்க இலக்கியங்களின், அதிலும் எட்டுத்தொகையின் வரிசை முறை சாமினாதையர், வையாபுரிப் பிள்ளை ஆகியோர் கொண்ட முறைக்கு மாறாகவுள்ளமை சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

பண்டைத் தமிழ் நூல்கள்

பண்டைத் தமிழ் நூல்கள் தமிழனுக்கு ஏன் உலகிற்கே கிடைத்த வரப்பிரசாதங்கள். இவையனைத்தும் ஒரே நாளில் தோன்றியவை அல்ல. எத்தனையோ நூற்றாண்டுகளாக வளர்ந்து வந்த பேரிலக்கிய, இலக்கணப் பாரம்பரியத்தின் வடிகால்களாக வந்து நிற்பவை. பண்டைத் தமிழனின் கலை, கலாச்சாரம், நாகரீகம் வாழ்க்கை முறை, தத்துவச்சிந்தனைகள் போன்ற இன்னோரன்ன பல நாகரீகக் கூறுகளை நன்குப் படம் பிடித்துக் காட்டும் காலக் கண்ணாடிகளாக விளங்குபவை.

மட்டுமன்றித் தமிழ் மொழியின் அமைப்பையும் இலக்கணக் கூறுகளையும் இன்னோரன்ன பிறவற்றையும் அறுதியிடுவதற்குத் துணை நிற்பன. இந்நிலையிலும் இவ்விலக்கியங்கள் மொழியியல் ஆராய்ச்சிக்கு வேரும் விதையுமாக நின்று நிலவுகின்றன.

2

தமிழ் மொழி ஓர் வரலாற்று நோக்கு

2.1 தமிழ் மொழி

"கல்தோன்றி மண் தோன்றாக் காலத்திற்கு முன் தோன்றிய முதுமொழி தமிழ் மொழி" என்ற வரிகள் நம் காதுகளிலே ஒலித்து நெஞ்சிலே நிலைத்து நீங்காது நிற்பன. இவ்வரிகளுக்கு ஏற்பவே தமிழ் மொழி பழைமையும் தொன்மையும் கொண்டு பன்னெடுங்காலமாக மாறாஇளமையுடனும் மங்காபொலிவுடனும் வாழ்ந்து வளர்ந்து வரும் மொழியாக உள்ளது. இம்மொழியின் தோற்றமும் பிறப்பும் ஆராய்ச்சிக்கு அப்பாற்பட்டதாகவே உள்ளன. இன்றைய உலக மொழியாக விளங்கும் ஆங்கிலத்தின் தோற்றத்தைப் பற்றி அறிய முடிகிறது. அதன் பிறப்பு பற்றி ஆராயமுடிகிறது. ஆனால் அதே நேரத்தில் தமிழ் மொழியின் தோற்றத்தினையும் பிறப்பினையும் பற்றி ஆராய்ச்சி மனம் கொண்டவர்களாலும் கூட அறியமுடிவது இல்லை. தமிழ் இலக்கியத் தோற்றம் பற்றி வேண்டுமானால் கூறலாம். சங்க இலக்கியங்கள் கி. பி. முதல் நூற்றாண்டையொட்டித் தோன்றியன என்றோ அல்லது கி. மு. முதல் நூற்றாண்டை-ஒட்டித் தோன்றியன என்றோ குறிப்பிட்டுவிட்டு ஓரளவு அமைதி பெறலாம். தொல்காப்பியம் தோன்றியது கி. மு. மூன்றாம் நூற்றாண்டு என்றோ அல்லது கி. மு. ஐந்தாம் நூற்றாண்டு என்றோ கூறலாம். ஆனால் தொல்காப்பியம் போன்றதொரு சிறந்த இலக்கண நூல் உருவாகுவதற்கு முன்னால் தமிழ் இலக்கிய மொழி எத்தனை அளவிற்கு வளர்ந்திருக்க வேண்டும் என்பது பற்றியோ அம்மொழி எப்போது உருவாயிற்று என்பது பற்றியோ கூற முடிவதில்லை. இலக்கியம் கண்டு இலக்கணம் இயம்புதலே இயற்கை, இந்நிலையை வைத்து நோக்கின் தமிழ் மொழி தொல்காப்பிய காலத்திற்கும் முன்னால் பரந்து பண்பட்டு மலர்ந்து வாழ்ந்திருக்க வேண்டும் என்பது ஒருதலை. வற்றாத இலக்கியங்கள் ஆயிரக் கணக்காக இருந்திராவிடினும் சிறந்த இலக்கியங்கள் ஒரு சில வற்றையாவது கண்டு மகிழ்ந்திருக்க வேண்டும் இம்மொழி. வள

மார் இலக்கியங்கள் வாய்மொழி இலக்கியங்களாகவாவது வாழ்ந்து இருக்க வேண்டும். அத்தகைய இலக்கியங்களையும் பலவேறு வகைகளாகப் பிரித்து அதற்குரிய திறனாய்வுகளையும் கொண்டிருத்தல் வேண்டும். இவ்விலக்கியத் திறனாய்வாளர்கள் உலகத் திறனாய்வாளர்களாக வாழ்ந்திருக்காவிட்டாலும் தமிழ் மொழி பேசும் இடங்களிலாவது அங்கீகரிக்கப்பட்ட ஆராய்ச்சியாளர்களாக இருந்திருத்தல் வேண்டும். எனவேதான் தொல்காப்பியரால் செய்யுளியல் போன்ற இயல்களை உருவாக்கிக் கவிதைகளுக்கும் பிற இலக்கிய வகைகளுக்கும் இலக்கணம் கற்பிக்க முடிந்தது எனக் கருதலாம்.

இது போன்றே சிறந்த இலக்கணக் கொள்கைகளையும் பண்டைத் தமிழகம் கண்டிருத்தல் வேண்டும். இதனால்தான் தொல்காப்பியரால் தொல்காப்பியத்தை உருவாக்க முடிந்தது. பாலையில் முல்லையையும் பருமணல் காட்டில் படர்ந்து வளரும் ஆலையும் காணமுடியாது.

தொல்காப்பியம் உலகப் பெரும் இலக்கணங்களில் ஒன்று என்பது பிற மொழிகளில் எழுந்துள்ள இலக்கணங்களை ஆராய்கின்ற எவரும் கூறுவர்.

தொல்காப்பியத்தின்கண் எத்தனையோ சிறந்த இலக்கணக் கருத்துக்களை வெளிப்படையாகக் காணமுடியும். இன்னும் பல்வேறு கருத்துக்களை இலைமறை காயாகக் கண்டு மகிழலாம். மறைந்து கிடக்கும் பல்வேறு கருத்துக்கள் நம் இலக்கண அறிவு வளர்ச்சிக்கு ஏற்பத் தெளிவாகும். எத்தனையோ கருத்துக்களும் இலக்கணக் கொள்கைகளும் இன்றைய மொழியியல் கருத்துக்களோடு ஒத்திருக்கக் கண்டு இறும்பூது எய்தலாம். மொழியியல் அறிவோடு இன்று தமிழ் மொழியில் நாம் காணும் உண்மைகள் பலவற்றைத் தொல்காப்பியர் அன்றே குறிப்பிட்டிருக்கக் காண்கிறோம். இதனால் தான் இது வற்றாத வளமாகக் கற்போரின் கருவூலமாக விளங்குகிறது. இத்தகைய ஒரு பெருநூலை அன்றே தமிழ்மொழி கண்டிருக்க வேண்டுமாயின் என்றோ ஒருவளர்ச்சியையும் வனப்பையும் கொண்டு திகழ்ந்திருத்தல் வேண்டும் என எண்ணலாம். இதனால்தான் தமிழ் மொழியின் பழமையைப் பற்றி அல்லது பிறப்பினைக் கூறவந்த

அமரகவி பாரதியாரும் ஆராய்ச்சிக்கு அப்பால் நின்று ஒரு கவிஞனின் பாணியில் கவித்துவ நிலையில்

" ஆதிசிவன் பெற்றுவிட்டான்-என்னை
ஆரியமைந்தன் அகத்தியன் என்றோர்
வேதியன் கண்டு மகிழ்ந்தே - நிறை
மேவும் இலக்கணஞ்செய்து கொடுத்தான்"

எனக் கூறி நின்றார்.

2.2 தமிழ் மொழி ஒரு திராவிட மொழி

இத்தகையதொரு பழைமையும் தொன்மையும் கொண்ட தமிழ் மொழி ஒரு திராவிட மொழியாகும். எனவே தமிழ் மொழியின் பெருமையனைத்தும் திராவிட மொழிகளின் பெருமையாகும். திராவிட மொழிகளில் பல திருந்தாதன. சில திருந்தியவை. அவற்றுள் சில சிறந்த இலக்கிய மொழிகள், எத்தனையோ நூற்றாண்டுகளாகப் பல்வேறு இலக்கியங்களையும் இலக்கணங்களையும் கண்டு சாகாவரம் பெற்றுத் தன்னிறைவு எய்தி நிற்பவை, அரசியல், அறிவியல், கவிதை, காப்பியம் போன்ற எத்துறையிலும் எழுதுவதற்குரிய வன்மை கொண்டவை.

2.3 தமிழ் மொழியும் பிற உலக மொழிகளும்

இன்றைய உலக மொழிகளின் வாழ்வையும் வளர்ச்சியையும் சில திராவிட மொழிகளின் வாழ்வுடனும் வளர்ச்சியுடனும் ஒப்பிட்டு நோக்கில் இம்மொழியின் சீரும் சிறப்பும் தெரியவரும். ஆங்கில மொழியின் முதல் எழுத்துச் சான்று கி. பி. ஏழாம் நூற்றாண்டைச் சார்ந்தது. இந்நூற்றாண்டைச் சார்ந்ததாகக் காணப்படும் பட்டயம் ஒன்று லத்தீனில் எழுதப்பட்டது என்பதும் அம்மொழியினிடையே காணப்படும் சில இடப்பெயர்களும் மக்கட் பெயர்களுமே ஆங்கில மொழியில் உள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கவையாகும். ஆனால், தமிழின் முதல் எழுத்துச் சான்று கி. மு. மூன்றாம் நூற்றாண்டை ஒட்டிய காலப் பகுதியில் எழுதப்பட்ட தொல்காப்பியமாகும்.

இன்று சிறந்து விளங்கும் பல மேனாட்டு மொழிகள் காலத்தால் மிகப் பிந்தியன. அறிவியல் மொழியாகக் கருதப்படும் ஜெர்மன் மொழியின் முதல் எழுத்துச்சான்று கி. பி. எட்டாம் நூற்றாண்டைச்

சார்ந்தது. ஜெர்மன் மொழி இந்நூற்றாண்டு முதல்தான் நாட்டு மொழியாகக் கருதப்பட்டு சில உடன்படிக்கைகளிலும் பத்திரங் களிலும் புக ஆரம்பித்தது. ஆங்கில மொழியைப் போலவே சில மக்கட்பெயர்களும் இடப்பெயர்களுமே முதல் முதலில் இடம் பெற்றன. இவையன்றி லத்தீன் நூல்களில் உள்ள வரிகளின் மேலோ அல்லது பக்கங்களிலோ சொற்களின் பொருள்களைக் குறிக்கும் பொருட்டு எழுதி வைத்துள்ள சில ஜெர்மன் சொற்களுமே இந் நூற்றாண்டினவையாக உள்ளன.

சார்லமன் காலம் (742-814) முதற்கொண்டுதான் தொடர்ச்சி யாக எழுதப்பட்ட ஜெர்மன் எழுத்துக்கள் கிடைக்கின்றன. இவையும் பெரும்பாலும் சமயத்தொடர்பு கொண்ட மொழி பெயர்ப்புக்களாக கவும் கவிதைகளாகவும் சில நாடோடிப் பாடல்களின் தொகுதி களாகவுமே உள்ளன. இவையனைத்தும் ஒரே நிலைமொழியில் இல்லாமல் பல்வேறு கிளைமொழிகளில் இருப்பதைக் காண் கிறோம்.

இன்று அறிவியல் மொழியாக விளங்கும் ஜெர்மன் கி. பி. பதினான்காம் நூற்றாண்டு வரையிலும் தனக்கென ஒரு நிலை மொழியைக் கொண்டிருக்கவில்லை என்பதும் இந்நூற்றாண்டில் வாழ்ந்த மார்ட்டின் லூதரால்தான் (1483-1546) இம்மொழிக்கு நிலைமொழி ஏற்பட்டது என்பதும் இங்குக் குறிப்பிடத்தக்கன. ஆனால், தமிழ் மொழியோ தொல்காப்பியக் கால முதலே நிலை மொழி ஒன்றைக்கொண்டு விளங்கியது என்பதும் இலக்கிய வழக்கு, பேச்சு வழக்கு எனப் பிரிந்து நின்று வளர்ந்துள்ளது என்பதும் கண்கூடு.

நாகரிக மொழியாகக் கருதப்படும் பிரெஞ்சு மொழியின் நிலை யும் ஜெர்மன் மொழியின் நிலையினையொத்தே காணப்படுகிறது. கி. பி. பதினெட்டு, பத்தொன்பதாம் நூற்றாண்டுகளில் உலக மொழியாகக் கருதப்பட்ட இது மிகப் பிந்திய வரலாற்றைக் கொண் டது. லத்தீன் மொழியிலிருந்து பிறந்த இம்மொழியின் முதல் இலக்கியச் சான்று கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டைச் சார்ந்தது. கி. பி. எண்ணூற்று நாற்பத்திரண்டில் எழுதப்பட்ட ஸ்டிராஸ்பர்க் (Strasburg Oath) சூளுரையே இது. இவ்வாண்டில் பிப்ரவரி திங்

கள் பதினான்காம் நாளன்று சார்லசும் லூயிசும் லோதயருக்கு எதிராக ஒன்றுசேர்ந்து இணைந்தபோது படைகளும் அரசர்களும் எடுத்துக்கொள்வதற்காக எழுதப்பட்ட சூளுரையே இப்பெயரால் அழைக்கப்பெறுகிறது.

இதனையடுத்து எழுந்தது பிக்கார்டு கிளைமொழியில் எழுதப்பட்டிருக்கும் இருபது வரிகளைக் கொண்ட கவிதையொன்றாகும். இதுவும் கி. பி. ஒன்பதாவது நூற்றாண்டைச் சார்ந்ததே.

ஆனால், தமிழ் மொழியோ இந்நூற்றாண்டில் எத்தனையோ கவிஞர்களையும் காப்பியங்களையும் கண்ட நிலையில் வரலாறு படைத்து நின்றது. வள்ளுவனையும் இளங்கோவையும் ஈன்று விட்ட நிலையில் இறும்பூது எய்தி நின்றது. ''மாசில் வீணையும் மாலை மதியமும்'' என்றெல்லாம் பாடிய தேவாரத் திருப்பாசுர ஆசிரியர்களையும் திருத்தக்கதேவரையும் கண்டு வாழ்ந்த பெருமை கொண்டிருந்தது.

இன்று ஆங்கிலத்தோடு ஓரளவு ஒப்பவைத்து எண்ணப்படுவது இரஷிய மொழியாகும். அறிவியல் போன்ற துறைகளுக்கு உரிய ஆக்க மொழியாக இது வளர்ந்து நிற்றல் காணலாம். இம்மொழியின் வரலாறும் பிற ஐரோப்பிய மொழிகளைப் போன்றே காணப்படுகிறது. இரஷியன், கிழக்கு சிலாவிய மொழிகளில் ஒன்று என்பதும் இவற்றில் கிடைக்கும் பழமையான எழுத்துச்சான்று கி. பி. பத்தாவது நூற்றாண்டைச் சார்ந்தது என்பதும் வரலாறு காட்டும் செய்திகள். இவ்வெழுத்துச் சான்று பழைய இரஷ்யன் மொழியில் எழுதப்பட்டதாகும். பழைய இரஷியன் எனக் குறிக்கப்படுவது இரஷியன், உக்ரேனியன், பைலோ இரஷியன் என மூன்று மொழிகளாகப் பிரிவதற்கு முன்னால் இருந்த பொது மொழியாகும். இப்பிரிவிற்குப் பின்னர் கி. பி. பதினொன்றாம் நூற்றாண்டையொட்டி ஒரு சில கையெழுத்துப் பிரதிகள் தோன்றின. அப்போது எழுதப்பட்ட வேதாகமே (1056-1057) இரஷிய மொழியில் காணப்படும் பழமையான எழுத்துச் சான்று. இது ஒரு மொழி பெயர்ப்பு நூல். இவ்வாறு வளர்ந்த இரஷியன், புஷ்கின் (1799 - 1837) காலத்திலே தான் சிறந்ததொரு இலக்கிய நடையைப் பெற்றது.

இந்நிலையில்தான் பிற ஐரோப்பிய மொழிகளும் உள்ளன. ரொமான்ஸ் மொழிகள் என வாழும் இன்றைய மொழிகள் பல கி. பி. பத்து அல்லது பதினோராம் நூற்றாண்டுகளில்தான் எழுத்து வடிவம் பெற்றன. ஸ்பானிஷ் மொழியின் முதல் எழுத்து உருவமாகக் கருதப்படுவது கி. பி. ஒன்பதாவது நூற்றாண்டைச் சார்ந்த ஒரு வழிபாட்டு உரையாகும். இதுபோன்றே போர்ச்சுக்கீஸ் மொழியும் கி. பி. பன்னிரண்டாம் நூற்றாண்டில்தான் தன்னுடைய முதல் எழுத்துருவத்தைக் கண்டது. இதே நிலைதான் காட்டலன் மொழிக்கும். ஆர்க்கானியாவில் கண்டெடுக்கப்பட்ட ஆறு துதிப் பாடல்களே இதன் முதல் எழுத்துச் சான்று. கி. பி. பன்னிரண்டாம் நூற்றாண்டில் எழுதப்பட்டிருக்கலாமெனக் கருதப்படுகின்ற இத் துதிப் பாடல்கள் காட்டரோனியாவின் தலைநகரான பார்சிலோனாவிலுள்ள நூலகத்தில் இன்றும் உள்ளன.

" இசைக்கு இத்தாலியன் " எனக் கருதப்படும் இன்றைய இத்தாலிய மொழியும் லத்தீனிலிருந்து உருவானதுதான். ரோமானியாவில் வழங்கிய லத்தீன் பேச்சு மொழியிலிருந்து பிறந்த இம் மொழி கி. பி. பத்தாவது நூற்றாண்டில்தான் எழுத்து வடிவில் இருக்கக் காண்கிறோம். இம்மொழியில் காணக்கிடக்கும் முதல் எழுத்துச்சான்று 'வெரொனிஸ் புதிர்'(Veronese riddle) என்பர் சிலர். இன்னும் சிலரோ பின்னர் (960-963) நடைபெற்ற வழக்கு ஒன்றில் சாட்சியமளித்த சாட்சி ஒருவனின் பேச்சே அது என்பர். எவ்வாறாயினும் கி. பி. பத்தாவது நூற்றாண்டில்தான் இம்மொழி எழுத்துருவத்தினைக் காணமுடிந்தது.

இவற்றையெல்லாம் எண்ணிப் பார்க்கின் தமிழ் மொழியின் பழமையும் தொன்மையும் நன்கு விளங்கும். எத்தனையோ மேனாட்டு மொழிகள் பிறக்காத நேரத்திலும் கூட தனக்கென ஒரு தனிப்பெரும் வாழ்வையும் வரலாற்றையும் கொண்டிருந்தது. கால வெள்ளத்தால் கரைப்பதற்குக் கூட முடியாத இலக்கியச் செல்வங்களையும் இலக்கண அரண்களையும் கொண்டிருந்தது!. வாழையடி வாழையாக வாழ்ந்த பெருமையினையும் வரலாற்றுச் சிறப்பினையும் கொண்டுள்ளது தமிழ் என்பதை எண்ணும்போது இதன் பெருமையும் சிறப்பும் நம் உள்ளத்திலே நடனமாடக் காண்கிறோம்.

2. 4 தமிழும் பிற பழைய மொழிகளும்

இத்தகைய பெருமையும் பீடும் கொண்ட மொழிகள் சிலவற்றை உலக அரங்கில் காணமுடியும். பழமையும் தொன்மையும் கொண்ட பல மொழிகள் உலகில் வாழ்ந்து வளர்ந்திருக்கக் காணலாம்.

இவற்றுள் அறிஞர் சாக்ரட்டீஸ் பேசிய கிரேக்கமும், அனைத்து உலகமும் ஆளக் கங்கணம் கட்டிய வீரனாம் சீசர் பேசிய லத்தீனும், கவிஞன் காளிதாசனையும் இலக்கண அறிஞன் பாணினியையும் பெற்றெடுத்த சமஸ்கிருதமும், கன்பூசியஸைக் கண்டெடுத்த சீனமும் குறிப்பிடத்தக்கவை. இவற்றைப் போன்றே நைல் நதிப் பெருக்கில் இறுமாந்து வாழ்ந்த எகிப்திய மொழியும், நபிநாயகத்தைக் கண்ட அராபியும், வேதாகமத்தைத் தந்த ஹீப்ருவும் நம் நெஞ்சிலிருந்து நீங்காத மொழிகளாகும். அராபிய பெனின்சுலா பகுதிகளிலே எத்தனையோ நூற்றாண்டுகள் வாழ்ந்து இறுதியில் வீழ்ந்த ஆரமைக்கும் இன்றைய சிரியா பகுதியில் சீரும் சிறப்பும் பெருவழக்கும் பெற்று வாழ்ந்த பினீசிய மொழியும், மெசபடோமியப் பள்ளத்தாக்கில் பல நூற்றாண்டுகள் வாழ்ந்து உலக மொழியாகத் திகழ்ந்து நின்ற அக்கேடியனும், சிறந்ததொரு நாகரிகத்தைத் தன்னகத்தே சுமந்து வாழ்ந்து மறைந்த சுமேரிய மொழியும் பழமையாகவும் பழமையின் சின்னங்களாகவும் பல பண்டைய நாகரிகங்களின் பிரதிபலிப்பாகவும் உள்ளன.

2. 4. 1 கிரீக்

அறிஞன் சாக்ரட்டிஸைப் பெற்றெடுத்தது கிரேக்கம் தான்! அவனை மட்டுமன்றி எத்தனையோ அறிஞர்களையும் கவிஞர்களையும் பெற்றெடுத்த பெருமை இதற்குண்டு. இன்றைய மேல் பநாட்டு மொழிகளிலே இம்மொழிக்குத் தனியொரு இடமுண்டு. ழமையான இலக்கியங்களையும் தொல்லபயரை புத்தகத்தினையும் கொண்டுள்ள இம்மொழியும், இம்மொழி மக்களும் செய்துள்ள பணிகள் மகத்தானவை. அலக்சாண்டர் காலத்திலேயே உலக மொழியாக அங்கீகரிக்கப்பட்டுக் கிரீஸ், ஆசியாமைனர், எகிப்து போன்ற பல இடங்களிலும் வழக்கிலிருந்து பெருமை பெற்றது இம்மொழி. இன்றைய ஆங்கிலமும் அன்றைய லத்தீனும்

இதிலிருந்து கடனாகப் பெற்ற சொற்கள் பல; நாகரிக எண்ணங்கள் பலப்பல; இந்நிலையில் உலக அரங்கில் சிறந்ததொரு இடத்தைப் பெற்று நிற்பதில் வியப்பில்லை.

2.4.2 எகிப்திய மொழி

எனினும் எகிப்திய மொழியைப் பற்றிய அறிவு வந்தபோது கிரேக்கத்தின் பழமையும் தொன்மையும் குன்றத் தொடங்கின. கி. மு. ஐயாயிரம் ஆண்டுகட்கு முன்பே நைல் நதிக் கரையில் தோன்றி வளர்ந்து நாகரிகத்தின் சின்னமாக விளங்கியது எகிப்திய மொழி. மிகப் பழமையான நாகரிகங்களில் எகிப்திய நாகரிகம் தலைசிறந்த தென்பர். மேனாட்டு நாகரிகங்களில் தலைசிறந்ததாகக் கருதப்படும் கிரேக்க நாகரிகமும் இதைக் கண்டு வியந்து நின்றது என்பர். ஆயிரக்கணக்கான கல்வெட்டுக்களையும் பாப்பிரஸ் ஏடுகளையும் நிலைநிறுத்தி நின்ற பெருமையுடையது இம்மொழி. எகிப்து முதல் சிரியாவரை பரந்து வாழ்ந்தது மட்டுமன்றிப் பிரமிட் கோபுரங்களிலும் எழுதப்பட்டுள்ள பெருமையும் கொண்டது. எனினும் கிரேக்கர்களின் வரவால் வாடிய இம்மொழி கி. பி. பதினாறாவது நூற்றாண்டு வரை வாழ்ந்து மறைந்து, பேச்சுவழக்கற்று இறந்த நிலையையே காண்கிறோம். லத்தீன் மொழியைப் போன்று சில கோயில்களில் இன்றும் வழங்கினும் இறந்த மொழியாகவே கருதப் படுகிறது.

ஆனால், அராபிய மொழியோ இன்றும் வீறுகொண்டு வாழக் காண்கிறோம். பழமைக்குப் பழமையாய் புதுமைக்குப் புதுமையாய் உள்ளது இம்மொழி. கி. மு. எட்டாவது நூற்றாண்டு முதலே இம்மொழியில் கல்வெட்டுக்கள் பலவற்றைக் காண முடியும். நபிநாயகத்தின் காலத்திற்கு முன்பே வேர்விட்டு வளர்ந்திருந்த இம்மொழி இஸ்லாம் மதம் எங்கெங்கு பரந்ததோ அங்கெல்லாம் பரந்து வளர்ந்து பல செமிட்டிக் மொழிகளிடையே காலூன்றி ஏராளமான இலக்கியங்களைத் தோற்றுவித்து உலக மொழிகளில் முக்கியமான ஒன்றாக விளங்குகிறது.

இதே நிலையில்தான் ஹீப்ரு மொழியும் உள்ளது. கானனைட் மொழிகளில் இன்றும் வழக்கிலிருந்து வருகிற மொழி இம்மொழி. கி. மு. பதின்மூன்றாவது நூற்றாண்டிலிருந்தே பல இலக்கியங்கள்

இம்மொழியில் தோன்றியுள்ளமை காணலாம். நாலாயிரம் வருடங்களாக வாழ்ந்த இம்மொழி கி. பி. இரண்டாவது நூற்றாண்டிலேயே வழக்கிழந்து வெறும் எழுத்துமொழியாகிவிட்ட போதிலும் இன்றைய இஸ்ரேல் நாட்டினரால் வாழும் மொழியாகிவிட்ட நிலையைக் காணலாம்.

2.4.3 ஆரமைக்

அராபிய பெனின்சுலாவில் வாழந்த ஆரமைக் இன்று நலிந்து அழிவுறக் காண்கிறோம். கி. மு. இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னமேயே வழக்கிலிருந்த இம்மொழியில் கி. மு. ஒன்பதாவது நூற்றாண்டு முதலே கல்வெட்டுக்கள் தோன்றின. கி. மு. எட்டாவது நூற்றாண்டு முதல் கி. பி. ஐந்நூறு வரை சமீப கிழக்கு நாடுகளில் முக்கியமான மொழியாக இருந்தது. பாரசீகப் பேரரசு காலத்தில் நைல் தீரம் முதல் சிந்து நதியின் எல்லை வரையிலும் வழங்கப்பட்டது. ஆசியா மைனர், குருடிஸ்தான், யூரல் மலைச் சாரல், ஆப்கானிஸ்தானம், எகிப்து, சிரியா முதலிய இடங்களில் எல்லாம் ஏறு நடையிட்டுப் பரந்து வாழ்ந்தது. ஆனால், அராபிய மொழியால் பாதிக்கப்பட்ட இம்மொழி படிப்படியாக நலிவுற்ற நிலையில் சில கிளை மொழிகளின் வடிவில் துருக்கி போன்ற இடங்களில் கரந்துறையக் காண்கிறோம்.

அலெக்சாண்டரால் அழிவுற்ற நாடுகள் பல என்பதை உலகம் நன்கு அறியும். ஆனால், அவர் படையெடுப்பால் அழிந்த மொழிகளும் உள்ளன என்பதை ஒரு சிலரே அறிவர். இத்தகைய மொழிகளில் பினீசிய மொழியும் ஒ று. தற்போதைய சிரியா, லெபனான் ஆகிய நாடுகளில் மேற்குக் கடற்கரையைச் சார்ந்த நீண்ட நிலப் பகுதியே பண்டைய பினீசிய நாடு. டயர், சிலோர் போன்ற நகர இராச்சியங்களைக் கொண்டு விளங்கிய இப்பகுதியில் வாழ்ந்த மொழியே பினீசிய மொழி. இம்மொழியில் காணப்படும் பித்ளாஸ் அரசர்களின் கல்வெட்டுக்கள் கி. மு. பதின்மூன்று, பதினான்காம் நூற்றாண்டுகளைச் சார்ந்தவை. பினிசியாவில மட்டுமன்றி எகிப்து, சைப்பிரஸ் போன்ற இடங்களில் எல்லாம் பரந்துவாழ்ந்த மொழி இது. முன்னர்க் குறிப்பிட்டதுபோல அலெக்சாண்டரின் படையெடுப்பால் அழிந்துவிட்ட நிலை.

2. 4. 4 அக்கேடியன்

பழமையான மொழிகளில் அக்கேடியனும் ஒன்றாகும். கி. மு. மூவாயிரத்திற்கு முன்பே வழக்கிலிருந்து கி. மு. முதல் நூற்றாண்டில் வழக்கிழந்த மொழி இது. அசிரியன் என்றும் பாபிலோனியன் என்றும் அழைக்கப்பட்ட இது மொசபடோமியா பள்ளத்தாக்கில் வாழ்ந்த செமிட்டிக் பேரரசின் மொழியாகத் திகழ்ந்தது. பாபிலோனிய வீழ்ச்சிக்குப் பின்னரும் வாழ்ந்த பெருமை கொண்டது. ஆனால் இறுதியில் வற்றாத வளஞ்செறிந்த இலக்கியங்களை நிலை நிறுத்தி ஆரமைக் மொழிகளால் நலிவுற்று அழிந்தது. நினவக். அசூர், பாபிலோனியா போன்ற இடங்களில் கண்டெடுக்கப்பட்ட புதைபொருள் அகழ்வினால் இம்மொழியின் பெருமை தெரிய வந்தது ஆயிரக்கணக்கான கல்வெட்டுக்களையும் பஃலாயிரக்கணக்கான களிமண் தட்டுக்களையும் நூற்றுக்கணக்கான சுவர்களில் எழுதி வைத்த செய்திகளையும் பெருமை கூறும் சான்றுகளாக நிலை நிறுத்தி நலிந்து மறைந்தது.

2.4.5 சுமேரியன்

இதே நிலையில்தான் சுமேரிய மொழியினையும் காணுகிறோம். சிறந்த நாகரிகத்தையும் பரந்த பண்பாட்டையும் கொண்டிருந்தவர்கள் இம்மொழியினர். நாலாயிரம் ஆண்டுகளுக்கு முன்னமேயே வியக்கத்தக்க வளர்ச்சியைக் கண்டிருந்த மொழி இம்மொழி. தமிழோடு கலந்து உறவாடியது என்றும் அதோடு இனத் தொடர்புடையது என்றும் கூறுவர் சிலர். களிமண் தட்டுக்களிலேயே பரந்த இலக்கியங்களைக் கொண்டுள்ளது. மத்திய ஆசியாவில் சிறந்த நாகரிகத்தை நிலைநிறுத்திய இம்மொழி இன்று வழக்கற்ற நிலையைக் காணுகிறோம்.

2.4.6 சீனமொழி

சீன மொழியும் பழமையின் சின்னமாகவே உள்ளது. தொன்மைக்குத் தொன்மையாய் விளங்கும் இம்மொழி எத்தனையோ நூற்றாண்டைய வரலாறு கொண்டது. கி. மு. நாலாயிரத்திற்கு முன்னமேயே வழக்கிலிருந்த இம்மொழி இன்றும் (எழுத்துருவில்) வாழக் காணுகிறோம். எழுத்துருவில் ஒன்றாகயிருப்பினும் பேச்சு வழக்கில் பல்வேறு கிளைமொழிகளாகப் பிரிந்துள்ளமை காணலாம்.

சிறந்த இலக்கியங்களைக் கொண்டுள்ள இம்மொழி ஆசிய நாட்டு மொழிகளில் முக்கிய மொழியாக விளங்குகிறது. எழுத்து மொழி ஒன்று; பேச்சுமொழிகள் பல; என்ற நிலையிலேயே இன்று வாழ்கிறது. பேச்சு மொழிக்கும், எழுத்துமொழிக்குமிடையே அகன்றதொரு இடைவெளி கொண்டு காணப்படுகிறது. பீகிங்கில் வாழும் சீனருடைய மொழியும், கேண்டன் பகுதியில் வாழும் இன்னொரு சீனருடைய மொழியும் மாறுபாடுகள் பலவற்றைக் கொண்டு காணப்படுகின்றன. ஒருவர் பேசுவதை இன்னொருவர் புரிந்துகொள்ள முடியாது என்றும் எனவே இவற்றை இரு வேறு மொழிகளாகக் கருதவேண்டும் எனவும் மொழியியல் அறிஞர்கள் கூறுவர்.

2.4.7 லத்தீன்

பழமையான மொழிகளில் லத்தீன் மொழியும் ஒன்று. சீசரைத் தோற்றுவித்ததும் அம்மொழியேயாகும். கிறிஸ்து பிறப்பதற்குப் பல நூற்றாண்டுகட்கு முன்னமேயே பிறந்து வளர்ந்தது இம்மொழி. சின்னஞ்சிறு நாடாக விளங்கிய ரோமில் பிறந்த இம்மொழி ரோமப் பேரரசின் காலத்தில் ஐரோப்பா, ஆசியா மைனர் போன்ற இடங்களில் எல்லாம் பரந்து வளர்ந்ததோடு மட்டுமன்றிப் பிரஞ்சு, ஸ்பானிஷ், இத்தாலியன், போர்ச்சுக்கீஸ் போன்ற பலவேறு மொழிகளைத் தோற்றுவித்து நின்றமை குறிப்பிடத்தக்கதாகும். எனினும் கால வெள்ளத்தில் கரைந்து இன்று பேச்சு வழக்கற்று ஒரு சில கோயில்களில் மட்டும் வழங்குகின்ற நிலையிலேயே உள்ளது. கி. மு. ஆறாவது நூற்றாண்டிலேயே கல்வெட்டினைத் தோற்றுவித்து பழமைக்குப்பழமையாய் நின்ற இம்மொழி இன்று வழக்கில் இல்லை. சீசரின் வெற்றியில் சிறகடித்துப் பறந்த இம்மொழி இன்று செத்துவிட்ட மொழியாகவே இருக்கக் காணுகிறோம்.

2.4.8 வடமொழி

இதே நிலையில்தான் இந்திய நாட்டில் வடமொழியும் உள்ளது. வேதங்களையும் உபநிஷத்துக்களையும் கொண்டு வாழ்ந்த சமஸ்கிருதம் இன்று வழக்கில் இல்லை. கிறிஸ்து பிறப்பதற்குப் பல நூற்றாண்டுகட்கு முன்னமேயே இலக்கியங்களையும் இலக்கணங்களையும் கொண்டு வாழ்ந்து பின்னர் இந்திய நாட்டிலேயே பல மொழிகளைத் தோற்றுவித்து அவற்றோடு வாழ்ந்த சிறப்பும்

இதற்கு உண்டு. இன்றைய இலக்கண உலகில் சிறந்த இடத்தைப் பெற்றிருக்கும் பாணினியைத் தந்தது இம்மொழி. இலக்கிய பரம்பரையில் காளிதாசனையும் பகபூதியையும் பாணினியையும் தந்தசிறப்புடையது. இம்மொழியில் தோன்றிய கீதையும், வால்மீகமும் இந்திய நாட்டில் மட்டுமன்றி மேனாடுகளிலும் கீழைநாடுகளிலும் பரந்த நிலைகொண்டு வாழ்கின்றன. எனினும் இன்றைய நிலையில் இதைப் பேச்சு மொழியெனக் கூறுவது கடினமாகவே உள்ளது. எத்தனையோ பாரம்பரியங்களைக் கண்ட இம்மொழி இன்று பாமர மக்களின் வாய் மொழியாக இல்லை.

கவிதையையும் காப்பியத்தையும் கண்டு செம்மாந்து நின்ற இம்மொழி இன்று கோயில் மொழியாகவும் ஆராய்ச்சி மொழியாகவும் இருக்கிறதேயன்றி நாட்டுப்புற மக்களிடமோ அல்லது நாகரிகமற்ற மக்களிடமோ காணமுடியாத நிலையிலேயே உள்ளது.

2.4. 9 தமிழ் மொழியின் இடம்

ஆனால் தமிழ் மொழி தனித்த பெருமைகொண்டு இன்றும் வழங்கக் காணுகிறோம். பழமைக்குப் பழமையாய் புதுமைக்குப் புதுமையாய் விளங்கும் இம்மொழி உலக அரங்கிலேயே தனியொரு நிலையை எய்தி நிற்கிறது என்பது நன்கு விளங்கும். கிருஸ்து பிறப்பதற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னமேயே இலக்கண வரம்பு கொண்டு வாழ்ந்த இம்மொழி இன்றும் வாழக் காணலாம். எகிப்தியன், சுமேரியன், பினீசியன் போன்றவை வரலாற்றுக் காலத்திற்கு முன்னமேயே ஒரு வரலாற்றைப் பெற்றிருப்பினும் இன்று வாழாதவை. அவை யெல்லாம் இன்று ஆராய்ச்சி மொழியாகவும் கண்காட்சி மொழியாகவும் வரலாற்று மொழியாகவும் உள்ளனவேயன்றி உயிர் உள்ள மொழியாக இல்லை. அவற்றைப் பேசிய மக்கள் மாற்று மொழியினரின் ஆதிக்கத்தில் அடிபட்டுப் பிற மொழிகளைப் பேசும் நிலையிலேயே உள்ளனர். இவைகளெல்லாம் அன்றைய வரலாற்றிலும் இன்றைய வரலாற்றிலும் பங்குகொண்டு ஒரு பாரம்பரியத்தைச் சமைத்து வாழக் காணுகிறோம். இதனால் தான் பாரதியும்

''கன்னிப் பருவத்தின் அந்நாள் -- என்றன்

காதில் விழுந்த திசைமொழி யெல்லாம்
என்னென்ன வோபெயருண்டு -- பின்னர்
யாவும் அழிவுற் றிறந்தன கண்டீர்''

என இறுமாந்து பாடி நின்றார்.

தமிழ் மொழியின் வரலாற்றை நோக்கின் இன்னொரு உண்மையும் பளிச்சிடக் காணலாம். எத்தனையோ நூற்றாண்டுகட்கு முன்னர் இது வாழ்ந்திருப்பினும் இன்றும் அதிக மாற்றமின்றி வாழும் நிலையிலுள்ளது. சங்ககால இலக்கியங்களில் காணப்படும் தமிழ் மொழிக்கும் கி. பி. ஆறாவது நூற்றாண்டில் தோன்றிய பக்திப் பாடல்களின் தமிழ் மொழிக்குமிடையே பல வேற்றுமைகள் உண்டு. இதுபோன்றே கி. பி. பத்தாவது நூற்றாண்டுத் தமிழ் மொழிக்கும் இருபதாவது நூற்றாண்டைய தமிழுக்கும் வேறுபாடுகள் உண்டு. நாட்டுப்புறத்துத் தமிழுக்கும் நகரப்புறத்துப் பேச்சுக்கும் இடையே வேற்றுமைகள் பல இருக்கலாம். ஐயர் பேச்சுக்கும் ஐயங்கார் பேச்சுக்குமிடையே கூட வேற்றுமைகள் இருக்கும். இது போன்று ஒரு அறிஞனின் பேச்சும் ஒரு ஆதிவாசியின் பேச்சும் தம்முள் மாறுபட்டிருக்கலாம். சாமானியர்களின் பேச்சில் சில கொச்சை இருக்கலாம்; பல கோளாறுகளும் இருக்கலாம். ஆனால், இவ்வேறு பாடுகளெல்லாம் பிற மொழிகளிடையே காணும் வேறுபாட்டை நோக்கின் குறைந்த அளவிலேயே உள்ளன எனக் கருத இடமுண்டு. எடுத்துக் காட்டாக, ஆங்கில மொழியை நோக்கின் இவ்வுண்மை நன்குத் தெரியும். பழைய ஆங்கிலத்தைச் சரியாக உச்சரிக்கக் கூடமுடியாத நிலையில் பல ஆங்கில மாணவர்கள் இருப்பதைக் காணலாம். அதற்கெனத் தனிப்பயிற்சியும் அயரா முயற்சியும் இல்லையென்றால் அது மாறுபட்ட மொழியாகவே தோன்றும். இதே நிலையைத்தான் சீனம் போன்ற மொழிகளிலும் காண முடியும். முன்னர்க் குறிப்பிட்டது போன்று சீன மொழி எழுத்து மொழியில் ஒன்றாக உள்ளதேயன்றி பேச்சு மொழியில் மாறுபட்ட பல மொழிகளாகவே உள்ளது. ஆனால், தமிழ் மொழியின் வரலாறு ஏனோ இந்த நிலையை உருவாக்கவில்லை. மாறுபாடுகள் சிலவற்றைக் கொண்டு காணப்படினும் தமிழ் மொழி மாறுபட்ட பல மொழிகளாக மாறிவிடவில்லை. எனவேதான் இம்மொழியினைப் பற்றி பேசும் அறிஞர்கள் அன்றும் இன்றும் கன்னியாகவே வாழும் மொழி தமிழ் என்று குறிப்பிடுவர். இதனை உள்ளத்திற்

கொண்டு நான் மனோன்மணீய சுந்தரனார்

"சீரிளமைத் திறம் வியந்து செயல் மறந்து வாழ்த்துதுமே"
எனப் பாடிச் சென்றார்.

இதுகாறும் கூறியவற்றால் தமிழ்மொழி பன்னெடுங்காலத்திற்கு முன்பே தனக்கென ஒரு பாரம்பரியத்தைத் தோற்றுவித்து வாழ்ந்தது என்பதும் எனினும் சில மொழிகளைப்போல வளர்ந்து வீழ்ந்துவிடாத ஒரு வீறு கொண்ட மொழியென்பதும் விளங்கும். பழமையைக் கண்டது எனினும் பாபிலோனிய மொழியைப் போலவோ அல்லது பண்டைய எகிப்திய மொழியைப் போலவோ அழிந்துவிடவில்லை. ஆக்கம் பல கண்டு இன்னும் வாழக் காண்கிறோம். லத்தீனைப் போன்றோ அல்லது சமஸ்கிருதத்தைப் போன்றோ வாழ்வில் நலிந்து கோயில்களிலும் குகைகளிலும் கரந்துறையவில்லை. அறிஞர்களின் ஆராய்ச்சியில் மட்டுமன்றிப் பாமர மக்களின் மத்தியிலும் வாழக் காணுகிறோம். வாழும் மொழி-யாகவும், வளரும் மொழியாகவும், வரலாற்று மொழியாகவும் இருக்கக் காண்கிறோம். ஆங்கிலம், பிரெஞ்சு போன்ற பழமை நூல் லாத நிலையில் இல்லை இம்மொழி. எத்தனையோ நூற்றாண்டு வாழ்வும் வரலாறும் கொண்டு விளங்குகிறது. நாகரீக மொழிகளாகக் கருதப்படும் ஆங்கிலமும், பிரெஞ்சும் பிறப்பதற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே வளர்ந்து நின்ற சிறப்பையும் கொண்டுள்ளது.

2.5 தமிழ் ஓர் உலக மொழி

இத்தகைய பழமையும் பெருமையும் கொண்ட தமிழ் உலக மொழிகளில் ஒன்றாகக் கருதப்படத்தக்கதாகும். இந்தியத் துணைக் கண்டத்தில் மட்டுமன்றி இலங்கை, மலேசியா, சிங்கப்பூர் ஆகிய கீழை நாடுகளிலும், மால்தீவ், தென்னாப்பிரிக்கா ஆகிய மேல் நாடுகளிலும் பேசப்படுகின்ற நிலையில் இதனையும் ஒரு உலக மொழியாகக் கருதலாம் என அறிஞர்கள் பலர் கருதுகின்றனர். பல நாடுகளில் பரந்து பேசப்படும் இம்மொழி உயர்தனிச் செம்மொழியாகவும் விளங்கும் நிலையில் இதனை ஓர் உலக மொழியாகக் கருதலாம்.

2. 6 இலக்கிய, இலக்கணப் பாரம்பரியம்

தமிழ் சிறந்ததொரு இலக்கியப் பாரம்பரியத்தைக் கொண்டது. கி. மு. மூன்றாவது நூற்றாண்டிற்கு முன்பே தனக்கென் எழுத்துச் சான்றைக் கொண்டுள்ளது இது. இக்காலப் பகுதியில் தோன்றியதாகக் கருதப்படும் தொல்காப்பியத்திற்குப் பின்னர் வாழையடி வாழையாக ஒரு இலக்கிய வரலாற்றைக் கொண்டு விளங்குவது. இந்நிலையில் தமிழ் மொழியில் ஏற்பட்ட மாற்றங்களையும் வேறுபாடுகளையும் வரன்முறையாக வரலாற்று அடிப்படையில் ஆராய்வதற்கு நல்லதொரு வாய்ப்பு இருப்பதைக் காணலாம்.

இலக்கியப் பாரம்பரியத்தைப் போலவே இடையீடு இல்லாத இலக்கணப் பாரம்பரியமும் தமிழுக்கு உண்டு. தொல்காப்பியம், வீரசோழியம், நேமிநாதம், நன்னூல், இலக்கண விளக்கம், பிரயோக விவேகம் போன்ற பல்வேறு மரபு இலக்கண நூல்கள் தமிழ் மொழியில் வாழையடி வாழையாகத் தோன்றியுள்ளன. இவற்றைப் போன்றே ரேனியஸ், கிரால், போப், பெஸ்கி, ஆர்டன் போன்ற மேனாட்டு அறிஞர்களாலும் பல வேறு தமிழ் அறிஞர்களாலும் புதிய புதிய இலக்கண நூல்களும் பல எழுந்துள்ளன. இவர்கள் அனைவரும் ஒரு சிறந்த இலக்கணப் பாரம்பரியத்தை அமைத்துத் தந்துள்ளனர். இந்நிலையிலும் தமிழ் மொழியில் காணப்பட்ட மாற்றங்களை நாம் நன்கு அறுதியிட முடியும். இவ்வாசிரியர்கள் குறித்துச் சென்ற இலக்கண விளக்கங்களிலிருந்து பலவேறு உண்மைகளை நாம் நன்கு புரிந்து கொள்ளலாம். இதைப்போன்றே இவ்விலக்கண நூல்களுக்கு உரைகண்ட இளம்பூரணர், சேனாவரையர், நச்சினார்க்கினியர், தெய்வச்சிலையார் போன்ற பலவேறு உரையாசிரியர்களும் தங்கள் நுண்மாணுழைபுலத்தினால் ஆங்காங்கே குறித்துச் சென்ற இலக்கண விளக்கங்களும் எடுத்துக் காட்டுக்களும் தமிழ் மொழியின் வரலாற்றை அறுதியிடவும் இதன்கண் காணப்படும் பலவேறு இலக்கணக் கூறுகளின் வரலாற்றையும் வாழ்வையும் அறிந்திடவும் இவற்றின்கண் காணப்படும் மாற்றங்களைத் தெரிந்திடவும் பயன் படுகின்றன.

இன்றைய தமிழ் மொழியின் பலவேறு கிளை மொழிகளுக்கும், பண்டை நூல்கள் பலவற்றிற்கும் இன்றைய மொழியியலாளர் வகுத்துள்ள இலக்கணங்களும், முன்னர்த் தோன்றியுள்ள இலக்-

ணங்களுக்கு அவர்கள் மொழியியல் அடிப்படையில் தந்துள்ள விளக்கங்களும் ஆய்வு உரைகளும் தமிழ்மொழி ஆராய்ச்சிக்கு உதவுவதாக உள்ளன.

2.7 தமிழ் மொழியின் காலப் பகுப்பு

இவற்றையெல்லாம் அடிப்படையாக வைத்துத் தமிழ்மொழியைப் பண்டைத்தமிழ்(Ancient Tamil) இடைக்காலத்தமிழ் (Middle Tamil) தற்காலத்தமிழ் (Modern Tamil) என மூன்று பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். இவற்றின் சில பல பண்புகளைக் கருத்தில் கொண்டு இவற்றை முறையே "சங்கத்தமிழ்", "தெய்வத்தமிழ்" "வளரும் தமிழ்" என அழைப்பது மிகப் பொருத்தமாகும்.

2.7.1 பண்டைத்தமிழ்

மிகப்பழைய காலத்தில் காணப்பட்ட தமிழையே பண்டைத் தமிழ் என்கிறோம். தமிழில் என்று எழுத்துச் சான்றுகள் தொடங்கிற்றோ அன்று முதல் தேவாரத் திருப்பதிகங்கள் தோன்றிய காலம் எனக் கருதப்படும் கி. பி. ஆறாவது நூற்றாண்டு வரை உள்ள தமிழே பண்டைத் தமிழ். தொல்காப்பியம் முதல் நூல் ஆயினும் அதற்கு முன்னர்ச் சில குகைகளில் வெட்டப்பட்ட கல் வெட்டுக்களே முதல் எழுத்துச் சான்றுகளாகக் கருதப்படுகின்றன. இவை கி. மு. மூன்று அழிலது நான்காம் நூற்றாண்டைச் சார்ந்தவை என்பது சிலர் (Mahadevan, 1969) எண்ணம். இக்கல் வெட்டுக்கள் பிராமி எழுத்துக்களில் எழுதப்பட்டவை. இதுவரையிலும் எழுபத்தாறு கல்வெட்டுக்கள் கண்டுபிடிக்கப் பட்டிருக்கின்றன. இக்கல்வெட்டுக்களில் காணப்படும் தமிழ் மொழியும் தமிழ் மொழி வரலாற்றுக்கு மிகமிக உதவுவது.

எனவே இக்கல்வெட்டுக்களின் காலம் முதல் கி. பி. ஆறாவது நூற்றாண்டு வரையிலும் உள்ள காலப் பகுதியைப் "பண்டைத் தமிழ்க் காலம்" என்றும் அக்காலத் தமிழைப் "பண்டைத் தமிழ்" என்றும் கூறலாம்.

இக்காலப் பகுதியில் காணப்படும் தமிழ் மொழிக்கெனத் தனிப்பட்ட பண்புகள் பல உள்ளன. இக்காலப் பகுதியில்தான் பிராமி கல்வெட்டுக்கள், தொல்காப்பியம், சங்க இலக்கியங்கள் என்று

கருதப்படும் எட்டுத்தொகை, பத்துப்பாட்டு ஆகிய நூல்கள், சங்கம் மருவிய காலம் என்று கருதப்படும் காலத்தில் உண்டான திருக்குறள், சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய நூல்கள் தோன்றின. இந்நூல்களில் காணப்படும் மொழி நிலைக்கும் பின்னர்த் தோன்றிய நூல்களில் காணப்படும் மொழி நிலைக்குமிடையே வேற்றுமைகள் பலவற்றைக் காணலாம். இம்மொழிநிலை பற்றியும் இந்நூல்கள் பற்றியும் பின்னர்க் காண்போம்.

பண்டைத் தமிழையும் "தொல் பழந்தமிழ்" (குகைக் கல்வெட்டு, தொல்காப்பியம்) "பழந்தமிழ்" என இரண்டாகப் பிரிக்கலாம். பழந்தமிழையும் "முன் பழந்தமிழ்", "பின் பழந்தமிழ்" என மீண்டும் பிரிக்க முடியும். இதுபற்றியும் பின்னர்க் காண்போம்.

2.7.2 இடைக்காலத் தமிழ்

கி. பி. ஆறாம் நூற்றாண்டு முதல் கி. பி. பதினேழாம் நூற்றாண்டு வரையிலும் உள்ள காலப்பகுதியில் உள்ள தமிழ்மொழியே இடைக்காலத் தமிழ் என அழைக்கப்படுவது. கி. பி. ஆறாம் நூற்றாண்டை ஒட்டித் தோன்றிய காரைக்காலம்மையார் புராணம், தேவாரம், கம்ப இராமாயணம், வில்லிபாரதம் போன்ற நூல்களில் காணப்படும் மொழிநிலைக்கும் பண்டைத்தமிழ் மொழிநிலைக்குமிடையே வேறுபாடுகள் பல உண்டு. இதனால்தான் இதனை இடைக்காலத் தமிழ் என்கிறோம். இந்நிலையை வினைகளில் காணப்படும் பால்காட்டும் விகுதிகளிலேயே நன்குக் காண முடியும். பக்தி இலக்கியங்கள் என்று கருதப்படும் தேவாரத் திருவாசகங்களும், நாலாயிரத் திவ்விய பிரபந்தமும், சிந்தாமணி, கம்ப இராமாயணம் போன்ற காலம் கடந்து வாழும் காப்பிய நூல்களும், இன்னோரன்ன பிறவும் தமிழ்மொழியின் பொற்கால இலக்கியங்களாகக் கருதப்படுகின்றன. ஆயிரக்கணக்கான பாடல்களைத் தன்னகத்தே கொண்ட நூல்கள் பலப்பல. இத்தகைய நூல்கள் தெய்வ மணம் கமழ்ந்து பக்திச் சுவை நனி சொட்டச் சொட்ட எழுந்தவையாகும். இதனால்தான் இக்காலத் தமிழை "தெய்வத் தமிழ்" என்கிறோம்.

சங்க கால இலக்கியங்கள் சமயச் சார்பற்ற நூல்கள். வீரயுகம் என்றழைக்கப்படும் காலத்தையொட்டிய நூல்களாகக் கருதப்பட்

வேண்டியவை. ஆனால் இடைக்காலத்தில் வளமான, ஏராளமான நூல்கள் தோன்றின. கம்ப இராமாயணம், சிந்தாமணி, வில்லி பாரதம் போன்ற பெரும்பெரும் காப்பியங்கள் தோன்றிய காலம். தமிழ் இலக்கிய வரலாற்றில் மிக ஏராளமான இலக்கியங்கள் தோன்றிய காலமும் இதுவே. தமிழ் வளர்ச்சி உச்சக் கட்டத்தில் இருந்த காலம் இதுவேயாகும்.

2.7.2.1 பண்டைத் தமிழ்க் கூறுகளும் இடைக்காலத் தமிழ்க் கூறுகளும்

பண்டைத் தமிழுக்கும் இடைக்காலத் தமிழுக்கும் இடையே வேறுபாடுகள் பலவற்றைக் காண முடியும். இடைக்காலத் தமிழின் பண்பாகக் கருதப்படும் முக்கியமான பல கூறுகள் பண்டைத் தமிழில் அதிலும் குறிப்பாகப் பின் பழந்தமிழ்க் காலத்தில் சிறிது சிறிதாகத் தோன்றி இடைக்காலத் தமிழில் வளர்ந்து பெருகிவிட்டன.பலவற்றைக் காணலாம். எந்த மொழியின் கால ஆராய்ச்சியிலும் இத்தகைய நிலையை சர்வ சாதாரணமாகக் காணலாம். புதிய புதிய கூறுகளை மட்டுமன்றி முன் காலத்தில் அங்கொன்றும் இங்கொன்றுமாகக் காணப்படும் பல கூறுகளே பிற்காலத்தில் பல்கிப் பெருகி வளர்ந்து இரு காலங்களுக்கிடையே நல்ல வேறுபாடுகளைத் தோற்றுவிக்கின்றன. தொடர்ச்சியாக வளர்ந்துவரும் மொழிகள் இந்நிலையையே கொண்டிருக்கும். புதிய கூறுகள் தோன்றுவதிலும், பழைய கூறுகள் அழிவதிலும் கூட இப்பண்பைக் காணலாம். அழிந்து வரும் பழைய கூறுகளைப் பிற்காலத்தில் ஒருசில இடங்களில் காண முடியும். இந்நிலையைத்தான் தமிழ் மொழியிலும் காணுகிறோம். மாறுகின்ற காலப்பகுதியில் புதிய கூறுகளும் பழைய கூறுகளும் ஒருசேர நிற்பது இயற்கையே.

பண்டைத் தமிழ்க் கூறுகளைப் பற்றிப் பல வேறு அறிஞர்கள். ஆங்காங்கே குறிப்பிட்டுச் சென்றுள்ளனர். எல். வி. இராமஸ்வாமி ஐயர், வையாபுரிப் பிள்ளை, டாக்டர்கள் மீனாட்சிசுந்தரன், கமில்செவலபில், செ.வை. சண்முகம், சுப. மாணிக்கம்,சோ. ந.கந்தசாமி, நடராஜன், சாரங்கபாணி, க. பாலசுப்பிரமணியம் போன்ற பலர் இது பற்றிக் குறிப்பிட்டுள்ளனர். இவர்களுள் சிலர் குறிப்பிட்ட நூல்களின் சிறப்புப் பண்புகள் எனச் சில கூறுகளைக் குறித்துச்

சென்றுள்ளனர். இவர்கள் கூறிச் சென்ற சில செய்திகளும் வேறு சில புதிய கூறுகளும் இங்குத் தரப்படுகின்றன.

இடைக்காலத் தமிழின் பண்பாகக் கருதப்படும் பல கூறுகள் பின் பழந்தமிழ்க் காலத்தில் தோன்றியவையாகும். பின்பழந்தமிழ் நூல்கள் எனக் கருதப்படும் பரிபாடல், கலித்தொகை, குறள், சிலம்பு, மணிமேகலை ஆகிய நூல்களில் இக்கூறுகள் அருகிக் காணப் படுகின்றன. இவை பற்றிப் பின்னர் 'முன்பழந்தமிழ்க் கூறு களும் பின்பழந்தமிழ்க் கூறுகளும்' என்ற தலைப்பில் இவ் விரண்டு காலநிலைகளையும் மனதில் நிறுத்தி ஆராயப்படுகின்றது. எனினும் இங்குப் பண்டைத் தமிழ், இடைக்காலத் தமிழ்க் கூறுகள் என்ற நிலையில் சுருக்கமாகத் தரப்படுகின்றன. இன்னும் சில கூறுகளோ இடைக்காலத்திலேயே தோன்றி வளர்ந்த நிலையைக் காணுகிறோம்.

(1) பண்டைத் தமிழில் நகரமும், னகரமும் வெவ்வேறு ஒலியன் களாக இருந்தமை (சண்முகம், 1971) காணலாம். ஆனால் இடைக் காலத் தமிழிலோ இவ்விரு ஒலியன்களும் இணைந்துவிட்ட நிலையைக் காணுகிறோம். தொல் திராவிட மொழியில் இவை இரண்டும் வெவ்வேறு ஒலியன்கள் என்பதும், இவ்வேறுபாடே முன் பழந்தமிழில் இருந்தது என்பதும் இதனால்தான் தமிழுக்கு எழுத்துக் கற்பித்தவர்கள் இருவேறு எழுத்துக்களை உருவாக்கி யிருக்கிறார்கள் என்பதும், மலையாள மொழியில் இன்றும் இவை வெவ்வேறு ஒலியன்களாக உள்ளன என்பதும் இங்கு நினைவு கூரத்தக்கன.

(2) தொல்காப்பியர் சகரம் அ, ஐ, ஔ என்ற மூன்று உயிர் களுடன் இணைந்து மொழிக்கு முதலில் வராது எனக் கூறினும் (சூத்.62) பண்டைத் தமிழ் நூல்களில் இச்சொற்கள் மிக அருகி வந்துள்ளன. ஆனால் இடைக்காலத் தமிழிலோ மிக அதிகமாக இச்சொற்கள் உள்ளன. சைகாரத்தை முதலாகக் கொண்ட சொற்கள் பின்பழந்தமிழ் நூல்களில் மட்டுமே காணப்படுகின்றன. சௌகாரச் சொற்களோ இடைக்காலத் தமிழ் நூல்கள் சிலவற்றில் (வில்லி பாரதம்) மட்டுமே காணப்படுகின்றன.

சந்தம் பதி 87. 2

சடை	நற்	141. 4
சகடம்	குறு	165. 8
சையம்	பரி	11. 14
சைதனியவான்	மணி	29. 176
சைமினி	மணி	27. 6
சைவம்	மணி	27. 87
சௌபால	வில்லி	2 2: 258-2, 9. 18: 98-2
சௌபாலர்	வில்லி	1. 3:5- 1, 7. 14: 19 3-3
சௌபாலன்	வில்லி	4. 3: 50-1, 5. 4:178-4 9. 18: 19-2, 9. 18: 107-4

(3) இதைப்போன்றே ஞகர மெய்ச்சொற்களும் பண்டைத் தமிழ் நூல்களில் மிக அருகியே காணப்படுகின்றன. இவற்றில் யவனர், யமன், யவனத் தச்சர், யூகம், யூகி, யூபம், யோகம், யோசனை போன்ற ஒரு சில சொற்கள் மட்டுமே வந்திருக்க இடைக்காலத் தமிழிலோ இவை தவிர யோகி, யோகு, யோனி, யுகம், யுத்தம், யுதிட்டிரன், யோதனம் போன்ற பலவேறு சொற்கள் வந்துள்ளமை காண்க.

தொல்காப்பியச் (64) சூத்திரத்திற்கு எதிராக ஞமலி, ஞரல், ஞமண் ஞிணம் ஆகிய நான்கு சொற்கள் பழந்தமிழில் வர இடைக்காலத் தமிழிலோ இவைதவிர ஞின்ற, ஞீலி, போன்ற சொற்கள் கூடுதலாக வருகின்றன. மேலும், ஆ, எ, ஒ இவற்றுடன் ஞகர ஒற்று சேர்ந்த சொற்கள் மிகக் குறைவாகவே பண்டைத்தமிழில் இருக்க இடைக்காலத் தமிழ் நூல்களில் ஞானம், ஞாயம் ஆகிய வடமொழிச் சொற்களும் பெருவாரியாக வந்து புகுந்துள்ளமை நினைவுகூரத் தக்கது.

யகரத்தோடு ஆகாரம் வரும்போது மொழிக்கு முதலில் யகரம். கெடுவது பண்டைத்தமிழ் நூல்களில் அருகியே காணப்படுகிறது எடுத்துக்காட்டாக பரிபாடலில் யாறு என்ற சொல் பதினான்கு இடங்களில் வர ஆறு (11. 50) என்ற சொல்லோ ஒரே ஒரு இடத்தில் தான் வந்துள்ளது.இதைப்போன்றே யாமை என்ற சொல் பண்டைத் தமிழ் நூல்களில் பதினைந்து இடங்களில் வந்திருக்க ஆமை என்ற சொல் ஐந்து இடங்களில் மட்டுமே வந்துள்ளது. ஆனால் நாலாயிரத் திவ்வியபிரபந்தத்திலோ ஆமை என்ற சொல் இருபத்

திரண்டு இடங்களில் வர யாமை என்ற சொல் வராமலே உள்ளது. 4) முன் பழந்தமிழ் நூல்களில் -கள் விகுதி மிக அருகியே காணப் படுகிறது. அதுவும் அஃறிணைச் சொற்களில் மட்டுமே உள்ளது. ஆனால் பின்பழந்தமிழ் நூல்களிலோ ஒருசில சொற்களில் உயர் திணையுடன் வருவதும், இரட்டைப் பன்மைச் சொற்களாகப் பல வருவதும் உணரத்தக்கது. ஆனால் இடைக்காலத் தமிழிலோ இது பெருவரவிற்றாக வந்து நிற்பது இவ்விரு காலப்பகுதிகளுக்கு மிடையே உள்ள வேறுபாட்டினை நன்குக் காட்டுவதாக உள்ளது. மேலும் விகுதிகளிலும் இப்பண்பு காணப்படுகிறது. வில்லிபாரதத் தில் -கள் விகுதி ஆயிரத்து அறுநூற்று அறுபது இடங்களில் வந்துள்ளது. உயர்திணைப் பெயர்ச் சொற்களில் மட்டுமன்றிப் பதிலிடு பெயர்களிலும் இப்பண்பு ஒருஅளவில் பரவி நின்றமை காணலாம். எடுத்துக்காட்டாக அமரர் என்ற சொல பண்டைத் தமிழ்நூல்களில் பன்மை குறித்து ஒருசில இடங்களில் நிற்க அமரர்கள் என்ற இரட்டைப்பன்மைச் சொல்திவ்வியப் பிரபந்தத் தில் இருபத்தைந்து இடங்களில் வந்திருப்பது இப்பண்பினைக் காட்டும். இதைப்போன்றே தேவர்கள், அடிகள்ப் போன்றே சொற் களும் ஏராளமாகக் காணக்கிடக்கின்றன.

பதிலிடுபெயர்களிலும் இப்பண்பினைக் காணலாம். யாங்கள், நாங்கள், எங்கள், நங்கள் போன்ற தன்மைப் பன்மைப்பதிலிடு பெயர்களும், நீங்கள், நீர்கள், நுங்கள் உங்கள் போன்ற முன்னிலைப் பதிலிடு பெயர்களும், தங்கள், தாங்கள், அவர்கள், இவர்கள் யாவர்களும் போன்ற பதிலிடு பெயர்களும் புதிய கூறுகளாகக் கருதத்தக்கன.

யாங்கள்	பெரிய 2813-4
	வில்லி 8. 17: 15-1
நாங்கள்	நா. தி. பி 477-7
	பெரிய 2660-2
	வில்லி 2. 2: 279-1
எங்கள்	அப். தே 140-3
	நா. தி. பி 3-2
	பெரிய 2376-2
	வில்லி 2. 2: 215-

நங்கள்	அப். தே 847-4
	நா. தி. பி 974-4
	பெரிய 2415-2
நீங்கள்	அப். தே 405-1
	நா. தி. பி 381-3
	பெரிய 2457-4
	வில்லி 2. 2: 38-1
நீர்கள்	அப். தே 419-1
	நா. தி. பி 2543-1
	வில்லி 1. 7: 10-3
நுங்கள்	நா. தி. பி 1885-4
	பெரிய 695-4
	வில்லி 1. 2: 117-4
உங்கள்	அப். தே 566-2
	நா. தி. பி 389-1
	பெரிய 2032-2
	வில்லி 2. 2: 132-3
தங்கள்	நா. தி. பி 71-2
	பெரிய 2110-1
	வில்லி 2. 1: 82-1
தாங்கள்	நா. தி. பி 1052-3
	பெரிய 2377-4
	வில்லி 2.2: 66-2
அவர்கள்	அப். தே 355-3
	நா. தி. பி 914-4
	பெரிய 1995-3
	வில்லி 2. 1: 119-2
இவர்கள்	அப். தே 360-2
	நா. தி. பி 1409-1
	பெரிய 2344-1
	வில்லி 1.4 : 3-2
யாவர்களும்	பெரிய 1075-4

5) பண்டைத்தமிழ் நூல்களில் -பி, -வி (காண்பி, செய்வி) ஆகிய

வற்றுடன் இகர அளபெடையும் காரணவினை காட்டும் உருபாக உள்ளது.

இரீஇ	இருக்கச்செய்து	புறம் 150-8
போர்ப்பித்து	மூடச்செய்து	புறம் 286-5
அறிவித்து	அறியச்செய்து	கலி 136-15

போன்ற உதாரணங்கள் இப்பண்பினைக் காட்டும். ஆனால் இடைக்காலத்தமிழிலோ இகர அளபெடை வழக்கிழந்ததோடு செய், வை, பண்ணு ஆகிய புதிய துணைவினைகளும் காரண வினை காட்டுவனவாக வந்துள்ளன.

வாழச்செய்தாய்	நா. தி. பி 470-4
செல்ல வைத்தனள்	நா. தி. பி 2709-4
ஓலமிடவென்னைப் பண்ணி	நா. தி. பி 2871-2

இவை தவிர காண், கொள் ஆகியவையும் இடைக்காலத் தமிழ் நூல்களில் காரணவினை காட்டுவனவாக உள்ளன. எனினும் இவை இன்று வழக்கிழந்துவிட்டன.

உண்ணக் கண்டான்	நா. தி. பி 1542. 4
உய்யக் கொண்டான்	நா. தி. பி 216-3

(6) நிபந்தனை எச்சங்களிலும் இவ்விரு காலப் பகுதிகளுக்கு மிடையே வேறுபாட்டினைக் காண முடியும். முன்பழந்தமிழ் நூல களில் -இன், -இல (அருகி) ஆகியவை நிபந்தனை எச்ச உருபாக இருக்கப் பின்பழந்தமிழ் நூல்களில் இவை தவிர -ஆல், -ஏல், -ஏன் ஆகியவையும் வருதல் காணலாம். இத்தகைய புதிய மாற்றங்கள் இடைக்காலத் தமிழ் நூல்களில் பல்கிப் பெருகி இருப்பதைக் காண முடியும். இவை மட்டுமன்றி எதிர்மறையில் 'விடு' என்ற ஒட்டு வினையும் பயன்படுதல் உண்டு.

-ஆல், -இல், -ஏல் ஆகியவை பின்பழந்தமிழ் நூல்களில் மட்டு மின்றிப் ஐங்குறுநூறு, புறம் ஆகிய நூல்களில் ஒவ்வொரு இடத்தில் வந்துள்ளது. ஆனால் இடைக்காலத் தமிழில் அதிகமாக வந்துள்ளது.

எண்ணுதியேல்	அப். தே 2395-1
அறிதியேல்	நா. தி. பி 57-3

மகிழ்வரேனும்	நா. தி. பி 1793-3
உருகுவித்தால்	அப். தே 3016-2
தொழுதால்	நா. தி. பி 2144-2
விடில்	அப். தே 72-3
கருதில்	நா. தி. பி 553-4
விடாவிடில்	நா. தி. பி 2423-4
உறங்காவிடில்	நா. தி. பி 59-3

போன்ற சொற்களும் இடைக்காலத்தமிழில் காணப்படுகின்றன.

(7) ஏவல்வினையிலும் பண்டைத்தமிழுக்கும் இடைக்காலத் தமிழுக்கும் இடையே வேறுபாடுகள் பல உண்டு. இவ்வேறுபாடு உடன்பாட்டிலும், எதிர்மறையிலும் உள்ளன.

(அ) பண்டைத் தமிழில், வம்மே, வம்மதி, வம்மோ, வந்திசின் ஆகிய வாய்பாடுகளில் காணப்படும் ஏவல் வினைகள் இடைக் காலத் தமிழில் வழக்கிழந்துவிட்டன. பண்டைத் தமிழில் வினையடிச் சொல்லுடன் முன்னிலை ஒருமை விகுதியாகிய -ஆய் என்பதை இணைத்து உடன்பாட்டிலும் எதிர்மறையிலும் ஏவல்வினைகளை உருவாக்குதல் உண்டு. இவற்றுள் உடன்பாட்டு வினை முன்பழந் தமிழிலும் (நினையாய், குறு 343-1), எதிர்மறை பின்பழந்தமிழ் நூல்களிலும் (நோவாய், கலி 75-12) பொதுவாகக் காணக்கிடக் கின்றன (அகத்தியலிங்கம், 1979: 77). ஆனால் இடைக்காலத் தமிழ் நூல்களிலோ எதிர்கால இடைநிலைகளுடன் -ஆய் விகுதியை இணைத்து ஏவல்வினைகள் உருவாக்கியிருப்பதையும் காணலாம். இந்நிலையைப் பின்பழந்தமிழ் நூல்களிலும் ஓரிரு இடங்களில் காணமுடியும் (சிலம்பு, 20-29).

வருவாய்	பெரிய 3740-1
கேளாய்	வில்லி 3 2: 11-4
கூறுவாய்	வில்லி 10. 18: 233-4
காணாய்	பெருங் 1. 33-165
தருவாய்	அப். தே 918-4
வாராய்	பெரிய 3740-3

(ஆ) பண்டைத் தமிழ் நூல்களில் -இர் இறப்பில்கால இடை நிலைகளுடன் (காண்டிர், புறம் 287-14) வருவது உண்டு. இதைப்

போன்றே -ஈர் வினையடிகளுடன் இணைந்து (கொளீர், அகம் 390-9) ஏவல்வினை காட்டும். ஆனால் இடைக்காலத் தமிழிலோ -ஈர் எதிர்கால இடைநிலைகளுடனும் இணைந்து ஏவல்வினையாக வருவதைக் காணமுடியும்.

பேசுதிர்	பெரிய 2655-1
அஞ்சலிர்	வில்லி 3. 1: 28-4
சொல்லீர்	அப். தே 412-2
பேசீர்	நா. தி. பி 1868-3
நம்புவீர்	அப். தே 1768-1
இருப்பீர்	பெரிய 3906-4

(இ) மட்டுமின்றி -ஈர்கள் என்ற இரட்டைப்பன்மை விகுதியும் வருதல் காணலாம்.

உரையீர்கள் சொல்லுங்கள் நா. தி. பி 3039-1

(ஈ) 'செய்யும்' என்னும் வாய்பாட்டு ஏவல்வினைச் சொற்கள் பண்டைத் தமிழ் நூல்களில் மிகமிக அருகியே காணப்படுகிறது (பரி 14-9, சிலம்பு 7.28-2, 16-200, மணி 16-77). ஆனால் இடைக்காலத் தமிழிலோ கூடுதலாக வந்து தற்காலத் தமிழில் நிலைபெற்று விட்டதைக் காணலாம்.

காணும்	அப். தே 1452-4
பாரும்	பெரிய 1365- 2
அருந்தும்	வில்லி 1. 5: 65-2

(உ) இத்துடன், 'உங்கள்' என்ற இரட்டைப்பன்மை விகுதியும் வரக் காணலாம்.

உருக்குங்கள் நா. தி. பி 2625-4

(ஊ) -மின்கள் என்ற இரட்டைப்பன்மை விகுதியும் அதிகமாகக் காணப்படுகிறது.

உணர்மின்கள்	அப். தே 251-1
கேண்மின்கள்	நா. தி. பி 1795-2
தொகுமின்கள்	பெரிய 2082-4
வம்மின்கள்	வில்லி 7. 12: 87-3

(ஏ) எதிர்மறை ஏவல்வினையிலும் வேறுபாடுகள் உள்ளன. 'செய்யாதே' வாய்பாட்டு ஏவல்வினை இடைக்காலத் தமிழில் காணப்படுகிறது.

தகர்த்தாதே நா. தி. பி 554-3
செய்யாதே நா. தி. பி 185-2

(ஏ) இதைப்போன்றே 'செய்யேல்' வாய்பாட்டு ஏவல்வினையும் மிக அதிகமாக உள்ளது.

அஞ்சேல் அப். தே 1571-2
அஞ்சேல் சுந். தே 979-4
மாற்றேல் நா. தி. பி 3744-1
போகேல் பெரிய 418-3
அஞ்சேல் வில்லி 1. 7: 82-1

பண்டைத்தமிழில் -அல்- எதிர்மறை உருபுக்குப் பின்னர் -மின் வர இடைக்காலத்தமிழில் -ஏல்- உருபுக்குப் பின்னரும் -மின் வருதல் காணத்தக்கது.

அலையேன்மின் அப். தே 2358-4
புகேன்மின் நா. தி. பி 446-2

(ஐ) 'செய்யாதீர்' வாய்பாட்டு ஏவல் வினையும் வில்லிபாரதத்தில் வரக் காணலாம்.

கழறாதீர் வில்லி 7 .13: 242-4

(8) (அ) வினையெச்ச உருபுகளிலும் இவ்விரு காலங்களுக்கிடையே வேறுபாடுகள் பல உண்டு. வினையெச்ச வாய்பாடுகளைக் குறிக்க வந்த தொல்காப்பியர் பிறவற்றோடு செய்யூஉ, செய்பு (713) என்ற இரு வாய்பாடுகளையும் குறித்துச் செல்லுவார். பண்டைத்தமிழ் நூல்களில் இவ்வாய்பாட்டுச் சொற்கள் திருக்குறள் ஒழிந்த எல்லா நூல்களிலும் காணக்கிடக்கின்றன. ஆனால் இடைக்காலத் தமிழிலோ இவை அருகியே வந்துள்ளது. இதே நிலையைத்தான் தற்காலத் தமிழிலும் காணுகிறோம். தேவாரம், நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம், வில்லி பாரதம், பெரிய புராணம் ஆகிய நூல்கள் அனைத்தையும் நோக்கின் செய்யூஉ

வாய்பாட்டு வினையெச்சம் மூன்று இடங்களில் மட்டுமே வந்து உள்ளது. 'செய்பு' வாய்பாட்டு வினையெச்சமோ ஒரு சில நூல்களில் காணப்படினும் பண்டைத் தமிழ் நூல்களில் போன்று பெருவரவிற்றாக இல்லை.

(ஆ) எதிர்மறை வினையெச்சங்களிலும் இவ்விரு காலங்களுக்கிடையே வேறுபாட்டினைக் காணலாம். –மல் விகுதி கொண்ட எதிர்மறை வினையெச்சம் பின்பழந்தமிழ் நூல்களில் அருகி காணப்பட இடைக்காலத் தமிழ் நூல்கள் அனைத்திலும் மிகுதியாகக் காணப்படுவது இங்குக் குறிப்பிடத்தக்கது. இதைப் போன்றே 'செய்யாமே' என்ற வாய்பாட்டு வினையெச்சமும் இடைக்காலத் தமிழ் நூல்களிலேயே காணப்படுகிறது.

அறியாமல்	பெருங் 4. 14–70
நடுங்காமல்	அப். தே 2452–3
ஒழியாமல்	நா. தி. பி 468–1
அடையாமல்	பெரிய 2289–3
அறியாமல்	கம்ப 6.2035–4
ஆடாமல்	வில்லி 1.8:6–1
அறியாமே	நா. தி. பி 79–2
காணாமே	பெரிய 1326–3

(9) 'செயவென்' வாய்பாட்டு வினையெச்சத்திலும் இவ்விரு காலங்களுக்கிடையே வேறுபாடுகள் காணப்படுகின்றன. பண்டைத் தமிழில் –அ, –இய, –இயர், –மார் ஆகிய நான்கு உருபுகள் உள்ளன. ஆனால் இடைக்காலத் தமிழிலோ –இயர், –மார் ஆகிய இரு உருபுகளும் வழக்கற்றுவிட –இய அருகி உள்ள நிலையைக் காணுகிறோம். மேலும் –வான், –பான் ஆகிய இரு புதிய உருபுகள் தோன்றியுள்ளமையும் இங்கு நினைவுகூரத்தக்கது. இவை பழந்தமிழ் நூல்களிலும் ஒரு சில இடங்களில் (6) காணப்படினும் இடைக்கால நூல்கள் அனைத்திலும் கூடுதலாக உள்ளன. இதனால்தான் நன்னூலாரும் –வான், –பான், –பாக்கு ஆகிய புதிய உருபுகளைத் தம்முடைய நூலில் குறிப்பிட்டுச் செல்லுவார். இவற்றுள் –பாக்கு எந்த நூலிலும் காணப்படுவதில்லை.

மேலும், 'செய' என்னும் வாய்பாட்டு வினையெச்சத்தில் –வல்வினைகளோடு அகர உருபு வரும்போது முன்பழந்தமிழில் ப்ப்– இடையில் வர இடைக்காலத் தமிழிலோ ககர ஒற்று மிகுதி

யாக வருதல் (கொடுக்க) இவற்றிடையே உள்ள வேற்றுமையைக் காட்டும். எடுத்துக்காட்டாகக் குறுந்தொகையில் முப்பத்தைந்து இடங்களில் -ப்ப்- வர, ஒரே ஒரு இடத்தில் மட்டுமே -க்க்- வருகிறது. ஆனால் அப்பர் தேவாரத்திலோ இந்நிலை மாறியிருக்கக் காண லாம். ஐம்பத்துமூன்று இடங்களில் -க்க்- காணப்பட இருபத் தெட்டு இடங்களில் மாத்திரமே -ப்ப்- வந்துள்ளது.

(10) பெயரெச்சத்திலும் வேற்றுமை உள்ளது. இறந்தகால இடைநிலையாக உள்ள -இன்- எடுத்துவரும் வினைஅடிகள் பெயரெச்சமாக வரும்போது இகரத்தையே (ஆடிய, ஓடிய போன்று) எடுத்துவருதல் மிகப்பெருவாரியாகப் பண்டைத் தமிழில் உள்ளது. பண்டைத் தமிழ் நூல்களில் ஆறு இடங்களிலேயே -இன்- வரக் காணுகிறோம். ஆனால் இடைக்காலத் தமிழில் இவை சற்றுக் கூடுதலாக உள்ளது. குறுந்தொகையில் நூற்றிரண்டு இடங்களில் இகரம் வர ஒரே ஒரு இடத்தில் மட்டுமே -இன்- (நீடின, குறு 309-3) வரக் காணுகிறோம். ஆனால் அப்பர் தேவாரத்திலோ நானூற்று முப்பத்தாறு இடங்களில் -இ- வர இருபத்து நான்கு இடங் களில் -இன்- வந்துள்ளது. ஆனால் இன்றையத் தமிழிலோ -ன்- முழுக்க முழுக்க ஆட்சிபெற்றுவிட்டதைக் காண்கிறோம்.

(11) 'செய்யாத' என்னும் வாய்பாட்டுப் பெயரெச்சம் முன்பழந் தமிழ் நூல்களில் மிக அருகியே காணப்படுகிறது. பின்பழந்தமிழ் நூல்களில் சிறிது கூடுதலாக வந்து இடைக்காலத் தமிழில் நிலை பெற்றுவிட்டமை இங்குக் குறிப்பிடத்தக்கது. இவ்வாய்பாட்டுப் பெயரெச்சம் புறநானூறு ஒழிந்த வேறு எந்த முன்பழந்தமிழ் நூல்களிலும் காணப்படுவதில்லை. ஆனால் பின்பழந்தமிழ் நூல் களிலும், எல்லா இடைக்காலத் தமிழ் நூல்களிலும் காணப்படுகிறது

(12) (அ) வினைச்சொற்கள் காலம் காட்டுவதிலும் இவ்விரு காலப் பகுதிகளுக்கிடையே வேறுபாடுகளைக் காணலாம். பழந்தமிழில் அதிலும் குறிப்பாகப் பின்பழந்தமிழ் நூல்களில் ஒரு சில இடங் களில் நிகழ்காலம் காட்டும் இடைநிலைகள் காணப்பட்டபோதிலும் பண்டைத் தமிழில் இறந்தகாலம், இறப்பில் காலம் என இரு காலங்களே உள்ளன எனக் கருதலாம். ஆனால் இடைக்காலத் தமிழிலோ இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் என மூன்று

கால வேறுபாடுகள் வளர்ச்சி பெற்றுவிட்டன. இடைக்கால நூல்கள் அனைத்திலுமே மூன்று கால இடைநிலைகளையும் காண முடியும். பண்டைத் தமிழில் நிகழ்காலம் காட்டும் –கின்று– நற்றிணையிலும், அகநானூற்றிலும் மூன்று, மூன்று இடங்களிலும், பரிபாடல், சிலம்பு, மணிமேகலை ஆகிய நூல்களில் ஒரு சில இடங்களிலும் மட்டுமே காணப்பட, இடைக்காலத் தமிழ் நூல்கள் அனைத்திலுமே வரக் காணுகிறோம். மேலும் இது முற்றுக்களிலும், எச்சங்களிலும், எல்லாப் பால் பகுப்புகளிலும் வந்துள்ளமை காணலாம். அப்பர்தேவாரத்தில் மட்டுமே நூற்று அறுபது இடங்களுக்கு மேலாக இது உள்ளது.

விளம்புகின்றமை	வில்லி 5.5: 13–4
உருக்குகின்ற	நா. தி. பி 2601–4
ஆடுகின்றேன்	அப். தே 769–4
உருகுகின்றேன்	நா. தி. பி 2565–4
போகின்றோம்	பெரிய 3483–4

-கிறு– மணிமேகலையில் ஒரு இடத்திலும், கம்பராமாயணத்தில் இரு இடங்களிலும் மட்டுமே வந்துள்ளது. பிற நூல்களில் காணப்படுவதில்லை.

சாதிக்கிற	மணி 29-299
பார்க்கிறேன்	கம்ப 2.1185-4
உதிக்கிறான்	கம்ப 6.2152-4

(ஆ) இரு கால நூல்களிலும் இறந்தகால இடைநிலையாகிய –இன்– காணப்பட்ட போதிலும் ஒரு சில வினைகளைப் பொறுத்த மட்டில் சில வேறுபாட்டினைக் காணமுடியும். சொல், ஆ, போ போன்ற வினைகளில் இடைக்காலத் தமிழில் னகர ஒற்றே இறந்த காலம் காட்டுவதாக உள்ளது. பண்டைத் தமிழிலும் இத்தகைய ஓரிரு இடங்கள் இருந்தபோதிலும் இடைக்காலத் தமிழில் இந்நிலை பெருவாரியாக இருக்கக் காணுகிறோம்.

ஆன	பெரிய 18–3
போனேன்	அப். தே 259-4
போனால்	நா. தி. பி 277–4
போனாள்	நா. தி. பி 2070–4

சொன்னால் வில்லி 4.4:124–3

(13) பண்டைத் தமிழ் நூல்களில் இறப்பில் காலச் சொற்கள் பல வற்றில் குகரம் இடையில் வந்து நிற்றல் காணலாம்.

செல்குவை

கொடுக்குவென்
தருகுவேம்

போன்ற சொற்கள் பண்டைத் தமிழ் நூல்களில் காணப்படு கின்றன. பல வல்வினைச் சொற்கள் பகரத்தை ஏற்றுக் காலத்தைக் காட்டவேண்டியிருக்க இக்குகரத்தின் வரவினால் மெல்வினைச் சொற்களைப் போல வகரத்தை ஏற்றுவருதல் காணத்தக்கது. இந்நிலையைப் பழந்தமிழ் நூல்கள் அனைத்திலும் காணலாம். ஆனால் இடைக்காலத் தமிழிலோ மிக அருகியே இந்நிலை காணப் படுகிறது. குகரத்தின் வரவு எண்ணிக்கை கீழே உள்ளது.

பதி	10	அப். தே	–
ஐங்	29	நா. தி. பி	1
அகம்	45	பெரிய	5
நற்	21	வில்லி	28
குறு	11		
புறம்	48		
பத்து	32		
பரி	2		
கலி	32		
குறள்	4		
சிலம்பு	27		
மணி	37		

(14) பண்டைத்தமிழில் ககர ஒற்று இறப்பில்காலம் காட்டுதல் உண்டு. இது தன்மைப் பன்மை காட்டும் –அம் விகுதியோடு இணைந்து நின்று காலம் காட்டுதல் பழந்தமிழ் நூல்கள் அனைத் திலும் காணப்படும் ஒரு பண்பாகும்.

காண்கம் ஐங் 199–3

செல்கம்	அகம் 325-13
ஏத்துகம்	புறம் 160-30

போன்ற எடுத்துக்காட்டுக்கள் இப்பண்பினைக் காட்டும். ஆனால் இடைக்காலத்தமிழ் நூல்களிலோ –அம் விகுதியோடு ககர ஒற்று வருதல் அதிகமாக இல்லை. ஆனால் நேர்மாறாகத் தன்மை ஒருமையில் –ஏன் விகுதியுடன் இணைந்து வருதல் காணத் தக்கது. இப் பண்பினைப் பின்பழந்தமிழ் நூல்களிலும் காணலாம். எனினும் இடைக்காலத்தமிழ் நூல்களிலேயே அதிகமாக உள்ளது'. இவற்றைப் போன்றே ஒரு சில இடங்களில் (5) –ஓம் விகுதியும் இரு இடங்களில் –ஏம் விகுதியும் வந்துள்ளன.

ஏத்துகேன்	அப் 3020-4
செய்கேன்	நா.தி.பி 731-4
உரைக்கேன்	நா.தி.பி 286-2
இயம்புகேன்	பெரிய 47-4
உழல்கேன்	கம்ப 5.327-4
கூறுகேன்	வில்லி 1,4:5-4
செய்கேம்	கம்ப 6.297-4
உரைக்கோம்	நா. தி. பி 1858-4

(15) 'செய்யாம்' வாய்பாட்டு உடன்பாட்டு வினைமுற்றுக்கள் பல பழந்தமிழ் நூல்களில் காணப்பட இடைக்காலத்தமிழில் வழக்கிழந்துவிட்டமை காணலாம்.

செல்லாம்	பதி 57-6
காணாம்	அகம் 110-19

(16) பண்டைத்தமிழில் பொதுவாக வினைமுற்றுக்களுக்குப் பின்னர் இறந்தகாலத்தில் எதிர்மறையைக் குறிக்க வேண்டின் வினைமுற்றுக்களுடன் அல் என்னும் குறிப்பு வினையை இணைத்துக் கூறுதல் மரபாக உள்ளது.

மருண்டனென் அல்லேன்	பதி 74-23
தொழுதனம் அல்லம்	புறம் 60-6

போன்ற ஆட்சியினைப் பரக்கக் காணலாம். இதுபோன்றே இறப்

பில் காலத்திலும் 'வருந்தேம்' போன்ற எதிர்மறைச் சொற்கள் காணப்படினும்,

வருந்துவம் அல்லம் அகம் 183- 15

போன்ற ஆட்சியும் காணப்படுகிறது. ஆனால் இடைக்காலத்தில் இந்நிலை அருகி காணப்படுவதுடன் 'வந்திலை' போன்ற சொல் ஆட்சி பெருகி உள்ளது.

அறிந்திலேன்	அப்.தே 1971-2
அறிந்திலை	அப். தே 1522-2
அறிந்திலன்	அப்.தே 1069-2
உடுத்திலர்	அப்.தே 2009-2
அணைத்திலள்	நா.தி.பி 3846-13
அழிந்தில	நா.தி.பி 273-2

பதி	—
ஐங்	—
அகம்	—
நற்	1
குறு	1
புறம்	1
பத்து	—
பரி	2
கலி	1
குறள்	1
சிலம்பு	6
மணி	13
பெருங்	9
அப்.தே	57
நா.தி.பி	67
பெரிய	46

இத்தகைய ஆட்சி பண்டைத் தமிழ்நூல்களிலும் ஒரு சில இடங்களில் அருகியே வந்துள்ளது.

நினைத்திலை	நற் 297-5
மெலிந்திலள்	குறு 182-7

போர்ப்பித்திலது புறம் 286–5

17 முன்னர்க் குறிப்பிட்டது போல ''செய்யாத'' வாய்ப்பாட்டுப் பெயரெச்சங்கள் இடைக்காலத்தமிழில் அதிகமாகக் காணப்படுகின் றன. இந்நிலையில் எதிர்மறை உருபாகிய -ஆ- குறைந்துவர -ஆத்- பெருகிவரக் காணுகிறோம்.

உணராத	வில்லி 3. 5: 6–3
தெரியாத	பெரிய 447-2
அணியாத	அப். தே. 3018–1
ஏத்தாத	நா. தி. பி. 3514–3

(18) வினையடிகளுடன் –அல்– ஆகியவற்றை இணைத்து எதிர்மறைச் சொற்களை உருவாக்குதல் பழந்தமிழ்க்காலத்தின் ஒரு பண்பாகும். இந்நிலை இடைக்காலத்தமிழில் காணப்படுவ தில்லை.

மறவலேன்	புறம் 195–32
அமையலென்	புறம் 164–10
சூழலென்	குறு 300–8
அஞ்சலம்	புறம் 397–25

போன்ற சொற்கள் இடைக்காலத்தமிழில் அதிகமாக இல்லை.

(19) பால் காட்டும் விகுதிகளிலும் இவ்விரு காலப் பகுதிகளுக் கிடையே வேறுபாடுகள் பலவற்றைக் காணமுடியும். தன்மை ஒருமை விகுதியாகிய –என் பண்டைத்தமிழ் நூல்களில், அதிலும் குறிப்பாக முன்பழந்தமிழ் நூல்களில் அதிகமாக வர இடைக்காலத் தமிழில் (பெருங்கதை, கம்பராமாயணம் நீங்கலாக) ஓரிரு இடங் களில் (வில்லி 3) மட்டுமே காணப்படுகிறது

வந்தனென்	வில்லி 4. 1: 12–4
தணிந்தென்	வில்லி 3. 598–3

(20) –அன் விகுதி பண்டைத் தமிழில் இறப்பில் காலத்தில் குறைவாக வர இடைக்காலத் தமிழில் கூடுதலாக வரக் காணு கிறோம்.

அரற்றுவன்	அப். தே. 1986–1
இசைவிப்பன்	பெரிய 1297–3

ஆள்வன்	கம்ப 6. 2733–2
அகற்றுவன்	வில்லி 7. 14. 216–4

(21) தன்மை ஒருமை காட்டும் –அல் விகுதி இடைக்காலத் தமிழில் அருகியே காணப்படுகிறது. அப்பர் தேவாரம் நாலாயிரத் திவ்விய பிரபந்தம் பெரிய புராணம் ஆகிய நூல்களில் இது காணப் படுவதில்லை.

அடுவல்	கம்ப 6–2437–2
கவர்ந்திடுவல்	வில்லி 7–13. 238–1
ஈவல்	பெருங் 3–23–43
காப்பல்	வில்லி 7–13. 252–4

22) முன்பழந்தமிழ் நூல்களில் –இசின் வாய்பாட்டுச் சொற் கள் தன்மை ஒருமையில் வர, பின்பழந்தமிழ் நூல்களிலேயே வழக் கற்றுவிட்டமை காணலாம்.

கேட்டிசின்	புறம் 150–24
அறிந்திசின்	குறு 247–4
வந்திசின்	பதி 16–9

(23) தன்மைப்பன்மை காட்டும் –எம் விகுதியும் இடைக்காலத் தமிழில் ஒரு சில நூல்களில் (பெருங்கதை, கம்பராமாயணம்) ஓரிரு இடங்களிலேயே காணப்படுகிறது.

ஆயினெம்	பெருங் 3. 15–17
உண்டனெம்	கம்ப 2. 667–4

பண்டைத்தமிழ் நூல்களில் –ஓம் அருகிக் காணப்பட இடைக்கால நூல்கள் அனைத்திலும் வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இன்று இதுவே ஆட்சிபெற்றுள்ளது.

காண்கின்றோம்	கம்ப 1. 1137–1
இழந்தோம்	வில்லி 8- 17. 262-2
இருக்கின்றோம்	பெரிய 3700-2
விடோம்	பெருங் 3. 27–202
அறிந்தோம்	நா. தி. பி. 531–3
கேட்டோம்	பெரிய 186–4

(24) முன்னிலை ஒருமை காட்டும் -ஆய் விகுதி பண்டைத் தமிழ் நூல்களில், குறிப்பாக முன்பழந்தமிழ் நூல்களில் எதிர் மறையில் அதிகமாக வர, பின்பழந்தமிழ் நூல்களிலும் இடைக் காலத் தமிழ் நூல்களிலும் எல்லா இடங்களிலும் வருதல் குறிப் பிடத்தக்கது.

சொன்னாய்	அப். தே. 2406-3
இருக்கின்றாய்	நா. தி. பி. 737-4
கேளாய்	பெரிய 3599-2
ஆரூராய்	அப். தே. 2500-3

(25) சென்றோய், செய்யாதோய் போன்ற சொற்கள் பண்டைத் தமிழ் நூல்களில் வினைமுற்றாகவும், வினையாலணையும் பெயராக வும் வர இடைக்காலத்தமிழில் வினைமுற்றாக வருவதில்லை.

முடித்தோய்	செய்தாய் புறம் 211-10
அறியாதோய்	அறிந்தாயில்லை குறு 120-4
தீர்த்தோய்	தீர்த்துஉதவியோயே பெருங் 1. 53-43
உணர்ந்தோய்	அறிந்தவனே கம்ப 1. 674-3
கொல்லுதல் புரிந்தோய்	கொன்றவனே வில்லி 3.7:16-4

(26) -ஆய் விகுதியைப் போன்றே ஆண்பால் காட்டும் -ஆன் விகுதியும் பண்டைத்தமிழ் நூல்களில் எதிர்மறையில் அதிகமாக வர, பின்பழந்தமிழிலும் இடைக்காலத்தமிழிலும் பிற இடங்களில் அதிகமாக வந்துள்ளது.

வைத்தான்	அப்.தே 449-3
காப்பான்	நா.தி.பி 3481-3
செய்கின்றான்	பெரிய 391-4
தோன்றான்	நா.தி.பி 2563-3
வல்லான்	அப்.தே 32-1

(27) -ஓய் விகுதியைப்போன்றே -ஓன் விகுதியும் பண்டைத்தமிழ் நூல்களில் வினைமுற்றாகவும் வினையாலணையும் பெயராகவும் வர இடைக்காலத்தமிழ் நூல்களில் வினையாலணையும் பெயர் களில் மட்டுமே, அதிலும் அருகியே வந்துள்ளது.

ஈத்தோன்	கொடுத்தான்	புறம் 376–16
வந்தோன்	வந்தனன்	நற் 114-6
எடுத்தோன்	எடுத்தவன்	அப்.தே 2936–3
ஏகுவோன்	செல்வோன்	பெரிய 11-62–2
அமைந்தோன்	பொருந்தியவன்	கம்ப 3.264-3
உரைப்போன்	சொல்லிவருகின்றவன்	வில்லி 4.4:139–1

(28) பெண்பால் ஒருமை காட்டும் -ஆள் விகுதி முன்பழந்தமிழ் நூல்களில் எதிர்மறையில் அதிகமாக வர,பின் பழந்தமிழ் நூல்களி லும் இடைக்காலத்தமிழ் நூல்களிலும் எல்லா இடங்களிலும் வரக் காணலாம்.

அகன்றாள்	அப்.தே 2343-3
பாடுவாள்	நா.தி.பி 1318-4
என்கின்றாள்	பெரிய 1438-2
ஒவ்வாள்	வில்லி 1.5.77-1

(29) – ஓய், -ஓன், விகுதிகளைப் போன்றே ஓள் விகுதியும் பழந் தமிழ்க் காலப்பகுதியில் வினைமுற்றாகவும் வினையாலணையும் பெயராகவும் காணப்பட, அப்பர்தேவாரம், பெரியபுராணம், கம்ப ராமாயணம், வில்லிபாரதம் ஆகிய நூல்களில் இது காணப்படுவ தில்லை. நாலாயிரத் திவ்வியபிரபந்தம், பெருங்கதை ஆகியவற்றில் வினையாலணையும் பெயராகவே வருகிறது

இறைஞ்சியோள்	வணங்கினள்	அகம் 86–29
வேட்டோள்	விரும்பியிருந்தாள்	ஐங் 1-3
ஈன்றோன்	ஈன்றவள்	நா. தி. பி 3685-1
மிக்கோள்	மிக்கவள்	பெருங் 5. 1-48

(30) உயர்திணைப் பன்மை காட்டும் -ஆர் விகுதி முன்பழந் தமிழ் நூல்களில் எதிர்மறையில்அதிகமாக வர, பின்பழந்தமிழ் நூல்களிலும் இடைக்காலத்தமிழ் நூல்களிலும் எல்லாச் சூழ்நிலைகளிலும் வருகின்றது.

பிறந்தார்	அப்.தே 698–4
படுகின்றார்	நா.தி.பி 883–4
அஞ்சுவார்	பெரிய 2063–4

நிற்கின்றார்	வில்லி 9,18:16-2
தாரார்	நா.தி.பி 483-2

(31) -ஓன், -ஓள் ஆகிய விகுதிகளைப் போன்றே -ஓர் விகுதியும் பழந்தமிழ் நூல்களில் வினைமுற்றாகவும் வினையாலணையும் பெயராகவும் வந்துள்ளது. இடைக்காலத் தமிழ் நூல்களில் இது வினைமுற்றாக வ்ருவதில்லை.

இருந்தோர்	இருந்தார்	புறம் 219-4
நுகர்வோர்	நுகராநிற்பர்	பரி 10-23
அடைந்தோர்	அடைந்தவர்	அப்.தே 2755-3
இறந்தோர்	இறந்தவர்	நா.தி.பி 1182-2
அடைந்தோர்	அடைந்தோர்	பெரிய 1330-3
அளித்தோர்	கொடுத்தவர்கள்	வில்லி 6.5:4-1

(32) உயர்திணைப் பன்மை காட்டும் பகர விகுதி இடைக்காலத் தமிழில் வழக்கிழந்து விட்டது. பழந்தமிழ் நூல்களில் பத்துப்பாட்டு சிலம்பு ஆகியவற்றில் மட்டுமே இது காணப்படாதிருக்க இடைக் காலத்தமிழிலோ அப்பர் தேவாரம், நாலாயிரத்திவ்வியப் பிரபந்தம், பெரிய புராணம் போன்ற பல நூல்களில் இது காணப்படுவ தில்லை.

நுகர்ப	புறம் 287-12
ஊர்ப	குறு 17-1
தருப	பதி 59-12

(33) பெயர்ச்சொற்களில் இரட்டைப்பன்மைச் சொற்கள் இடைக் காலத்தமிழ் நூல்களில் வருவது போன்றே இரட்டைப்பன்மை விகுதி களும் வினைச்சொற்களில் காணப்படுகின்றன. மிக அதிகமாக இவற் றைக் காணமுடியாவிடினும் பல இடங்களில் இவை வந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். -ஈர்கள், அர்கள், -ஓர்கள் -ஆர்கள் ஆகிய நான்கு விகுதிகள் காணப்படுகின்றன. இவற்றுள் -ஈர்கள் மிகக் குறைவாகவும், -அர்கள் சற்றுக் கூடுதலாகவும், -ஆர்கள், -ஓர்கள் ஆகியவை மிகக் கூடுதலாகவும் வரக்காணலாம்.

கழிக்கின்றீர்கள்	அப்.தே 412-1

கரப்பர்கள்	அப்.தே 983–1
நின்றனர்கள்	கம்ப 3. 161–2
வளர்ப்பர்கள்	பெரிய 1830–4
பாடினர்கள்	வில்லி 2.1:109–4
அறிந்தார்கள்	அப்.தே 1867–4
சேர்ந்தார்கள்	பெரிய 619-4
பெற்றார்கள்	வில்லி 3.1:121–4
உணர்ந்தோர்கள்	அப்.தே 1463–4
கண்டோர்கள்	வில்லி 2.1: 8.2

குறிப்புவினைச் சொற்களில் இரட்டைப்பன்மைச்சொற்கள் அதிகமாக வந்துள்ளது. இடைக்கால நூல்கள் அனைத்திலும் இவை காணப்படுவது இங்குக் குறிப்பிடத்தக்கது.

விண்ணோர்கள்	அப்.தே 902–2
உடையோர்கள்	பெருங் 5.7.64
அறிவோர்கள்	கம்ப 3.40.3
அறவோர்கள்	பெரிய 17 24–1

இன்னும் எத்தனையோ வேறுபாடுகளை இவ்விரு காலத் தமிழிடையே காணமுடியும். துணைவினை, எதிர்மறை, கூட்டு வினைகள், வடமொழிச்சொற்கள் போன்ற பலவேறு பகுதிகளில் புதிய புதிய கூறுகள் பலவற்றைக் காணலாம். இவ்விரு காலப்பகுதி நூல்கள் அனைத்தையும் நன்கு ஆராயின் இன்னும் பல வேறுபாடு களை வெளிக்கொணரலாம்.

2.7. 3 தற்காலத் தமிழ்

கி.பி. பதினேழாம் நூற்றாண்டு முதல் இன்றுவரையுள்ள காலப்பகுதியையே தற்காலம் என்றும், இக்காலத்தமிழையே தற்காலத்தமிழ் என்றும் அழைக்கிறோம். பொதுவாக ஐரோப்பியர்களின் வருகைக்குப் பின்னர்த் தமிழ்மொழி வரலாற்றில் பெரியதொரு மாற்றம் ஏற்பட்டது எனக் கருதலாம். இலக்கிய வரலாற்றில் மட்டுமன்றி மொழி வரலாற்றிலும் இதனை நன்குக் காண முடியும். ஐரோப்பிய மொழிகளில், அதிலும் குறிப்பாக ஆங்கில மொழியின் செல்வாக்கை நன்கு உணரலாம். சிறுகதை, புதினம்,

குறுநாவல், பத்திரிகைகள், உரைநடை போன்ற பலவேறு துறைகளில் தமிழ் வீறுகொண்ட ஒரு எழுச்சியுடன் வளர்ந்த நிலையில் தமிழ் மொழியும் நவீன மொழியாக வாழத் தலைப்பட்டது. அறிவியல் சமூக அறிவியல் போன்ற பலதுறைகள் வளர வளரத் தமிழும் பலவேறு மாற்றங்களைக் கண்டது எனக் கூறலாம். புதிய புதிய கலைச் சொற்கள், புதிய வாக்கிய அமைப்புகள், புதிய சில இலக்கணக் கூறுகள் போன்ற பல நிலைகளில் தமிழில் மாற்றங்கள் பல ஏற்பட்டன. புதிய புதிய சொல்லாக்கம், துணைவினை போன்றவற்றில் காணப்பட்ட மாற்றம் போன்றின்னோரன்ன பல வேறுபாடுகளை, நன்குக் காணமுடியும். இதனால் தான் இக்காலப் பகுதியைத் தனியொரு காலப் பகுதியாகக் கருதுகிறோம். ''வளரும் தமிழ்'' என அழைப்பதும் இதனாலேயே.

3
தொல் பழந்தமிழ்

3.1 பண்டைத் தமிழ்க் காலம்

தொடக்க காலம் முதல் கி. பி. ஆறாவது நூற்றாண்டுக் காலம் வரையுள்ள காலப்பகுதியே பண்டைத்தமிழ்க் காலப்பகுதி எனக் கண்டோம். இக்காலப்பகுதியில் தான் தொல்காப்பியம் உருவாயிற்று என்றும், அதன் முன்னர் பல கல்வெட்டுக்கள் உண்டாயிருந்தன என்றும் கண்டோம். இக்காலப்பகுதியையும் தொல் பழந்தமிழ்க் காலம், பழந்தமிழ்க் காலம் என்று இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

3.1,1 தொல் பழந்தமிழ்க்காலம்

பிராமிக் கல்வெட்டுக்கள் (குகைத் தமிழ்), தொல்காப்பியம் ஆகியவை தோன்றிய காலப் பகுதியையே தொல் பழந்தமிழ்க் காலம் என்கிறோம். மிகத் தொடக்கக் காலம் முதல் கி. மு. முதல் நூற்றாண்டு வரை உள்ள காலப்பகுதியே இது.

3.1.1.1 குகைத் தமிழ்க்காலம்

இக்காலப் பகுதியில் எழுதப்பட்டவை எனக் கருதப்படும் கல்வெட்டுக்கள் பல தமிழ்நாட்டின் தென்பகுதிகள் பலவற்றிலிருந்து கண்டெடுக்கப்பட்டுள்ளன. குகைப்பகுதிகளில் கண்டெடுக்கப் பட்டமையால் இவற்றைக் குகைக் கல்வெட்டுக்கள் (cave inscrip-tions) எனவும், பிராமி லிபியில் எழுதப்பட்டிருக்கின்ற நிலையில் பிராமிக் கல்வெட்டுக்கள் (Brahmi inscriptions) எனவும் கூறுவர். மதுரைக்குப் பக்கத்தில் உள்ள கீழ வளவு, திருநெல்வேலிப் பக்கம் உள்ள மறுகால்தலை போன்ற இருபத்தொரு இடங்களில் இருந்து கிடைத்த எழுபத்தாறுக்கும் அதிகமான கல்வெட்டுக்கள் உள்ளன.

இவற்றை முதன் முதலில் ஆராய்ந்து கூறிய அறிஞர் கே. வி. சுப்பிரமணிய ஐயர் ஆவார். இக்கல்வெட்டுக்களில் காணப்படும் மொழியையே பிராமிக் கல்வெட்டுத் தமிழ் அல்லது குகைத்தமிழ் எனக் கூறுகிறோம். இவரைப் பின்பற்றிப் பலர்

இவை பற்றி ஆராய்ந்துள்ளனர். பாண்டிய நாட்டில் பரந்து காணப்படும் இக் குகைக் கல்வெட்டுக்களில் காணப்படும் எழுத்து முறையைத் தமிழ்ப் பிராமி எழுத்து முறை என்றும், இது பிராமி எழுத்து முறையிலிருந்து உருவானது என்றும் அறிஞர்கள் கருது கின்றனர். தமிழ் ஒலிக்கேற்பப் பிராமி எழுத்துமுறை சில மாற்றங் களுடன் வழங்கப்பட்டிருக்கின்றது. கி. மு. மூன்றாம் நூற்றாண் டைச் சார்ந்தனவாக இக் கல்வெட்டுக்கள் இருக்கலாம் என்பது அறிஞர்களின் (மீனாட்சிசுந்தரன், 1977:54) முடிபு.

இதன்கண் காணப்படும் பெயர்ச்சொற்களில் சில, பிராகிருதச் சொற்களாக இருத்தலின் இக்கல்வெட்டும் பிராகிருத மொழியாக இருக்கலாம் என எண்ணினர். ஆனால் வேறு பல பெயர்ச்சொற் களும், வினைச்சொற்களும், பிறவும் இது தமிழ்மொழி என்பதை வெள்ளிடைமலை போல் தெரிவிக்கின்றன.

இதன் மொழிநிலை பற்றி மீனாட்சிசுந்தரன், ஐராவதம் மகாதேவன் (1968) போன்றவர்கள் நன்கு ஆராய்ந்துள்ளனர்.

இதன்கண் காணப்படும் வினைமுற்றுச் சொற்கள் படர்க்கை யிடத்தனவாக உள்ளன (ஐராவதம் மகாதேவன், 1968:91).

கொடுப்பித்தோன்
கொடியவன்
கொடுப்போர்

போன்றவை வினைமுற்றாக மட்டுமன்றி வினையாலணையும் பெயராகவும் உள்ளன.

இக் கல்வெட்டு மொழியே மிகப்பழங்கால எழுத்து வடிவின தாக உள்ளது. தொல்காப்பியர் காலத்துக்கு முன்னரே இது தோன்றியிருந்த நிலையில் இதனை பண்டைத்தமிழ்க் காலத்தின் முந்திய பகுதியினதாகக் கருதலாம்.

இவ் வரிசை நூல்களில் பலவேறு இலக்கணக்கூறுகள் ஆராயப் படும்போது இக்கல்வெட்டுக்களில் காணப்படும் கூறுகளும் சுட்டிக் காட்டப்படும். மகாதேவன், மீனாட்சிசுந்தரன் ஆகியோர் கண்–

டாய்ந்தவற்றை அடிப்படையாகக் கொண்டே இக்கூறுகள் எடுத்துக் காட்டப்படுகின்றன.

3.1.1.2 தொல்காப்பியம்

தமிழில் காணப்படும் மிகப் பழமையான நூல் தொல்காப்பியம். இது ஒரு இலக்கணநூல் என்பதும் இதுவே திராவிடமொழிகளில் மிகப் பழமையான நூல் என்பதும் இங்குக் குறிப்பிடத்தகுந்த செய்தி. இது ஒரு இலக்கணநூல் என்ற நிலையில் இதற்கு முன்னர் எத்தனையோ இலக்கியங்கள் இருந்திருக்கவேண்டும் என்பதும், இந்நிலையில்தான் இது போன்ற இலக்கண நூல்கள் தோன்றியிருக்க முடியும் என்பதும் ஒருதலை. விரிவான ஒரு இலக்கியப் பாரம்பரியம் இருந்தாலன்றி இத்தகைய இலக்கண நூல்கள் தோன்ற முடியாது என்பது பலர் அறிந்த செய்தியாகும். எனவேதான் தொல்காப்பியம் எழுந்ததாகக் கருதப்படும் கி. மு. மூன்று அல்லது இரண்டாம் நூற்றாண்டிற்கு முன்பே தமிழ் இலக்கியநூல்கள் பலவற்றையும், இலக்கணநூல்கள் சிலவற்றை யேனும் கொண்டிருத்தல் வேண்டும் என எண்ணலாம். தொல் காப்பியம் பல இடங்களில் 'வழக்கு', 'செய்யுள்' எனக் கூறியிருப் பது முன்னர் இருந்த இலக்கியப் பரப்பினையும் 'என்மனார்' 'என்மனார் புலவர்', 'என்ப', 'மொழிப' போன்ற தொடர்கள் முன்னால் இருந்த இலக்கணப்படிப்பையும் காட்டுவனவாக உள்ளன. இதனால்தான் பாயிரம் எழுதிய பனம்பாரனாரும்

''வழக்குஞ் செய்யுளும் ஆயிரு முதலின்
எழுத்துஞ் சொல்லும் பொருளும் நாடி
செந்தமிழ் இயற்கை சிவணிய நிலத்தொடு
முந்து நூல் கண்டு முறைப்பட எண்ணி''

என்றெல்லாம் கூறாநிற்பார்.

தொல்காப்பியம் எழுத்து, சொல், பொருள் என்ற மூன்று அதி காரங்களில் ஐந்திலக்கணங்களைக் கொண்டுள்ளது. எழுத்து, சொல், யாப்பு, அணி என்ற இலக்கணங்களைப் பிறமொழி இலக் கணங்களிலும் காணமுடியும். ஆனால் பொருள் இலக்கணம் காண முடியாத ஒன்று. ஒரு மொழியைப் பற்றி நன்கு அறிய வேண்டின் அம்மொழி பேசும் மக்களின் வாழ்வியல் பற்றியும் அறிந்திருத்தல்

வேண்டும் என்ற நிலையில்தான் பொருளிலக்கணம் பேசப்படுகின்றது என எண்ணலாம்.

இது பற்றிப் பேசும் ம.பொ. சிவஞானம் அவர்கள் (1979:8) ''தமிழராகிய நாம் நமது தாய் மொழியிலே தொல்காப்பிய நூலைப் பெற்றதற்காக இறுமாப்புக் கொள்ளலாம்; இதயம் பூரிக்கலாம். அதிலும், எழுத்ததிகாரத்தையும் சொல்லதிகாரத்தையும் பெற்றதோடன்றி, உலக மொழி எதற்கும் இல்லாத பொருள் இலக்கணத்தையும் பெற்றோமே, அது நமக்கே உரிய தனிப் பெருமையாகும்'' என்பது இங்கு நினைவுகூரத்தக்கது.

இந்நூலில் காணப்படும் மொழிநிலை பற்றி ஆங்காங்கே குறிப்பிடப்படும். ஒவ்வொரு இலக்கணக் கூறு பற்றியும் ஆராயப் புகும் போது இந்நூலில் காணப்படும் அக்கூறுகள் பற்றிக் குறிப்பிடப்படும். பாலசுப்பிரமணியம் எழுதிய ஆய்வேட்டின் (Balasubramanian, 1981) அடிப்படையிலேயே தொல்காப்பியக் கூறுகள் பேசப்படும்.

3.1.2 பழந்தமிழ்

தொல்காப்பியத்திற்குப் பின்னரே சங்க நூல்கள் தோன்றின என எண்ணப்படுகின்றது. சங்கம் மருவிய நூல்களாகக் கருதப்படும் திருக்குறள், சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய நூல்களும் பின்னர்த் தோன்றியவைகளே. இந்நூல்களே பழந்தமிழ் நூல்களாகவும் இந்நூல்கள் தோன்றிய காலப்பகுதியே பழந்தமிழ் காலப் பகுதி என்றும் (கி.மு. முதல் நூற்றாண்டு முதல் கி. பி. ஆறாவது நூற்றாண்டுவரை) எண்ணப்படுகின்றன.

3.2 தொல்காப்பியமும் பழந்தமிழ்க் கூறுகளும்

தொல்காப்பியத்திற்கும், மேலே குறிப்பிட்ட பழந்தமிழ் நூல்களுக்குமிடையில் வேறுபாடுகள் பலவற்றைக் காணமுடியும். இவற்றைப் பற்றிப் பலர் (சண்முகம், 1971 நடராஜன் 1977) ஆராய்ந்துள்ளனர். அவர்கள் கூறியவற்றுள் முக்கியமான சில வேறுபாடுகள் இங்குக் குறிப்பிடப்படுவதுடன் ஒரு சில புதிய வேறுபாடுகளும் இங்குத் தரப்படுகின்றன.

(1) ''ஆவோடு அல்லது யகரம் முதலாது'' என்பது தொல்காப்பியம். ஆனால் யகர, யூகாரச் சொற்கள் சில பழந்தமிழ் நூல்களில் காணக்கிடக்கின்றன.

யவனர்	பதி 2–8 (பதிகம்)
	அகம் 149-9
	புறம் 56–18
	பத்து 4–316, 5–61, 7–101
	சிலம்பு 5-10, 14-67, 28-141, 29-26–1
யமர்	புறம் 352-16
யமன்	பரி 11-8
யவனத்தச்சர்	மணி 19-108
யூகம்	பத்து 1–302
	கலி 43-12
யூகி	மணி 15-64
யூப நெடுந் தூண்	புறம் 224-8
யூபம்	பதி 67-10
	புறம் 15-21
	பத்து 6-27
யோகம்	மணி 3–100
யோசனை	சிலம்பு 25-15
	மணி 6-211, 9–2

(2) இதைப் போன்றே ஞகர ஒற்றுப் பற்றிப் பேசும் தொல்காப்பியம்

ஆ எ ஒ
என்னும் மூவுயிர் ஞகாரத்துரிய (சூத். 64)

எனக் குறிப்பிடும். ஆனால்

ஞமலி	அகம் 122-9, 140-9, 388-14
	நற் 285-5
	குறு 179-2
	புறம் 74-3
	பத்து 4–112, 132, 299, 8-131, 9-140 10–42

ஞமன்	புறம் 6-9 பரி,3-21, 5-61
ஞரல	பதி 30-6
	பத்து 1-120
ஞிணம்	புறம் 177-14
ஞிமிறு	பதி 12-12, 50-18
	அகம் 59-9, 78-3, 102-10
	புறம் 93-12
	பத்து 6-684
	கலி 127-3
	சிலம்பு 25-20
ஞாற்றுவர்	சிலம்பு 25-162

ஆகிய சொற்கள் பழந்தமிழ் நூல்களில் வருதல் காணத்தக்கது.

(3) சகர ஒற்றும் அ, ஐ, ஔ என்னும் மூன்று உயிர்களுடன் வருதல் இல்லை என்பது தொல்காப்பியம். ஆனால் சகரச் சொற்கள் முன்பழந்தமிழ், பின்பழந்தமிழ் நூல்களிலும், சைகாரச் சொற்கள் பின்பழந்தமிழ் நூல்களிலும் காணக்கிடக்கின்றன.

(4) -கள் விகுதி பற்றிப் பேசும் தொல்காப்பியர்

"கள்ளொடு சிவணும் அவ்வியற்பெயரே" (சூத். 654)

எனக் கூறுவார். இதன்படி அஃறிணைப் பெயர்ச்சொற்கள் பெரும்பான்மையும் ஒருமையும் பன்மையும் காட்டும் என்றும், சில இடங்களில் -கள் ஏற்கும் என்றும் கொள்ளலாம். ஆனால் சங்க இலக்கியங்களில் பரிபாடல், கலித்தொகை, சங்க மருவிய இலக்கியங்களில் சிலம்பு, மணிமேகலை ஆகிய நூல்களில் –கள் விகுதி அதிகமாக வருவதுடன் உயர்திணைப்பன்மை விகுதியாகவும் வருகிறது. இதுவே பிற்காலத்தில் பல்கிப் பெருகி நின்றது.

(5) வினையில் -மார் விகுதி பற்றிப் பேசும் தொல்காப்பியர் பெயரில் இது பற்றிப் பேசவில்லை. ஆனால் பழந்தமிழ் இலக்கியங்களில் –மார் விகுதி ஏழு இடங்களில் பெயரில் வருவது குறிப்பிடத்தக்கது.

தோழிமார்	அகம் 48-5
தன்னைமார்	புறம் 342-15

(6) பதிலிடு பெயர்களிலும் தொல்காப்பியத்திற்கும், சங்க இலக்கியங்களுக்கும், அதிலும் குறிப்பாகப் பின்பழந்தமிழ் நூல்களுக்கும் இடையில் பலவேறு வேற்றுமைகளைக் காணலாம்.

(அ) தொல்காப்பியம் தன்மை ஒருமைப் பதிலிடுபெயராக யான் ஒன்றை மட்டுமே குறிப்பிட்டிருக்கப் பரிபாடலில் நான் என்ற பதிலிடுபெயர் வருவது காணத்தக்கது.

(ஆ) தொல்காப்பியம் நின், நும் என்பவற்றைக் குறிப்பிட்டிருக்க உன் அகநானூறு, சிலம்பு, மணிமேகலை ஆகிய நூல்களிலும் உம் அகநானூறு, நற்றிணை, புறநானூறு, பரிபாடல், கலித்தொகை, மணிமேகலை ஆகிய நூல்களிலும் வருதல் காணத்தக்கது.

(இ) இதைப்போன்றே தொல்காப்பியம் நீயிர் என்ற முன்னிலைப்பன்மைப் பதிலிடு பெயர் மட்டும் குறிப்பிட சங்க இலக்கியங்களில் நீர் என்ற சொல்லும் வரக் காண்கிறோம். அதிலும் நீர் என்ற சொல் சங்க இலக்கியங்களில் பதினாறு இடங்களில் வர, நீயிர் என்பதோ ஒன்பது இடங்களில் மட்டுமே வந்துள்ளது.

(ஈ) மேலும் இரட்டைப்பன்மைச் சொற்களான யாங்கள் (சிலம்பு 25-62, 11-161, மணி 16-82) எங்கள் (கலி 22. 20 மணி 25-53) நுங்கள் (சிலம்பு பதி ا) தங்கள் (சிலம்பு 23-175 உரைபெறு கட்டுரை 2-1, மணி 28-64) ஆகியவை வருதலும் உணரத்தக்கது.

(7) இவற்றைப் போன்றே எங்கணும், எங்கும், எங்ஙனம், எங்கு, எவள், எப்படி, அப்படி, எவ்வணம் போன்ற இலக்கணச் சொற்கள் பழந்தமிழ் நூல்களில் காணப்படுதலும், தொல்காப்பியத்தில் காணப்படாமையும் இவற்றிடையே உள்ள வேற்றுமையைக் காட்டும்.

(8) தொல்காப்பியம் எல்லாம் என்ற சொல் அஃறிணை எனக் கூறியிருக்க சங்க இலக்கியத்தில் உயர்திணையில் வரக்காண்கிறோம்.

தன்மைப்பன்மையில் புறநானூற்றில் (32-5)

.... எல்லாம்
பாடுகம் வம்மினோ பரிசின் மாக்கள்''

என வருவது இப்பண்பைக் காட்டும். வேறு எந்த இடத்திலும் எல்லாம் தனியாக வருவதில்லை. ஆனால் உரையாசிரியர்கள்

எல்லாம் வந்தேம்
எல்லாம் வந்தீர்

போன்ற உதாரணங்களைத் தருவதுடன்

கண்டனிர் எல்லாம்

போன்றவற்றையும் தருகின்றனர்.

'எல்லாம்' பற்றிக் கூறும் தொல்காப்பியர் இது இருதிணைக்கும் வரும் என்று கூறுவதுடன்

''தன்னுள் உறுத்த பன்மைக் கல்லது
உயர்திணை மருங்கின் ஆக்கம் இல்லை'' (சூத்.672)

என்பார். தன்மைப் பன்மையிலேயே இது வரும் என்பது இதன் பொருள். உரையாசிரியர்கள், ''ஆக்கமில்லை எனவே சிறுபான்மை வரப்பெறும்'' என்பர். ஆனால் சங்க இலக்கியத்தில் அஃறிணை யிலேயே அதிகம் வருகின்றது. உயர்திணையில் வரும் போது படர்க்கையிலேயே பெரும்பான்மையும் வந்துள்ளது. அதுவும்

கண்டனிர் எல்லாம்	கலி 140–1
ஊடினீர் எல்லாம்	சிலம்பு 8– வெ 2–1
எல்லா நாம்	சிலம்பு 17-28–5

ஆகிய இடங்களைத்தவிர எஞ்சியுள்ள இடங்கள் அனைத்தும் படர்க் கையிலேயே உள்ளன.

பாணர் எல்லாம்	குறு 127–5
புலவர் எல்லாம்	புறம் 42-21

போன்ற உதாரணங்கள் இப்பண்பைக் காட்டும். இதுபற்றிக் கூறும் நச்சினார்க்கினியர் கண்டனிர் எல்லாம், ஊடினீர் எல்லாம் ஆகிய உதாரணங்களைத் தந்து நிற்பதுடன் ''எனவே சிறுபான் -மை முன்னிலைப் பன்மைக்கும் படர்க்கைப் பன்மைக்கும் வரு மாறாயிற்று''எனக் கூறுவார் (நச்.சொல்.189). ஆனால் முன்னர்க் குறிப்பிட்டபடி பழந்தமிழ் இலக்கியங்களில் படர்க்கையிலேயே அதிகமாக வந்துள்ளது.

(8) இவற்றைப் போன்றே வினை அடிப்படையிலான இலக் கணக்கூறுகளிலும் தொல்காப்பியத்திற்கும் பழந்தமிழ் நூல்களுக் கும் இடையில் வேறுபாட்டைக் காணமுடியும்.

(9) தன்மை ஒருமை விகுதி -அன் பற்றித் தொல்காப்பியம் கூறாதிருக்க இவ்விகுதி பத்துப்பாட்டு, பரிபாடல் தவிர எல்லாப் பழந்தமிழ் நூல்களிலும் காணப்படுகிறது.

(10) இதைப் போன்றே கு, டு, து, று வாய்பாட்டுத் தன்மை ஒருமை விகுதிகளைத் தொல்காப்பியம் கூறியிருக்கப் பழந்தமிழ் நூல்களில் டு, து, று வாய்பாட்டு விகுதிகள் வருவதில்லை.

(11) செய்யாத என்னும் வாய்பாட்டுப் பெயரெச்சம் பழந்தமிழ் நூல்களில் காணப்படுவதும், தொல்காப்பியத்தில் இது காணப் படாமையும் இவற்றிடையே உள்ள வேறுபாட்டைக் காட்டும்.

இன்னும் நுணுகி ஆராயின் எத்தனையோ வேறுபாடுகளைப் பலவேறு இலக்கணக் கூறுகளில் காணமுடியும். அத்தனை விரி வாக ஆராயும் நிலை இந்நூலில் இல்லை. இந்நூலின் நோக்கமும் அதுவன்று. இது பற்றிய விளக்கமான நிலையை வேறு சில நூல் களில் (Natarajan, 1977, Balasubramanian, 1981) காணலாம்

4
முன்பழந் தமிழ்

4.1 முன்பழந்தமிழும் பின்பழந்தமிழும்

பழந்தமிழையும் முன்பழந்தமிழ், பின்பழந்தமிழ் என இரண்டாகப் பிரிக்கலாம் என்பது முன்னரே கூறப்பட்டது. (2.7.1) தொல்காப்பியத்திற்குப் பின்னர் தோன்றிய பழந்தமிழ் நூல்களில் பதிற்றுப்பத்து, ஐங்குறுநூறு, அகநானூறு, நற்றிணை, குறுந்தொகை, புறநானூறு,பத்துப்பாட்டு ஆகிய நூல்களுக்கும் பரிபாடல், கலித்தொகை, திருக்குறள், சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய நூல்களுக்குமிடையே மொழி நிலையில் பலவேறு வேறுபாடுகளைக் காணலாம். குறள், சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய நூல்கள் சங்க காலத்தை அடுத்துத் தோன்றின என்றும் கருதப்படுகிறது. அதனால்தான் அவை சங்கம் மருவிய நூல்கள் என்றும், அக்காலம் சங்கம் மருவிய காலம் என்றும் அறிஞர்களால் அழைக்கப்படுகின்றன. இதைப்போன்றே எட்டுத்தொகையைச் சார்ந்த பரிபாடலும், கலித்தொகையும் பிற சங்க நூல்களினின்றும் மாறுபட்டு நிற்பதையும் அறிஞர்கள் பலர் ஆங்காங்கே குறிப்பிட்டுச் சென்றுள்ளனர். சங்ககால நூல்களின் மொழிநிலை பற்றி அதிலும் குறிப்பாகவினைச்சொற்களைப் பற்றி ஆராய்ந்த எல்.வி. இராமஸ்வாமி ஐயர் சங்கநூல்களில் புறம், அகம், நற்றிணை, பதிற்றுப்பத்து, ஐங்குறுநூறு ஆகிய நூல்கள் முந்தியவை என்றும் கலித்தொகை, பரிபாடல் ஆகியவை பிந்தியவை என்றும் (1938:749) கூறிச் செல்வார். மேலும் திருக்குறள், சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகியவையும் பிந்தியன என்பது அவர் எண்ணம்.

இதே கருத்தினைத்தான் வையாபுரிப்பிள்ளையும் கொண்டுள்ளார். பலவேறு காரணங்களைக் காட்டி பரிபாடலும், கலித்தொகையும் (1954 : 37-39) பிற சங்க இலக்கியங்களுக்குப் பிந்தியன என்பார். சங்க காலத்தை இரண்டாகப் பிரித்து இவை பிற்சங்க காலத்தில் தோன்றியன என்பார். இவ்வாறு இரு சங்கங்கள் எனக் குறிப்பிடுவதை ஒத்துக் கொள்ளுவது முடியாத ஒன்றாகும். இதை

போன்றே இவர் காட்டும் காரணங்களில் சிலவும் (–அல் ஈறு, அல் லால் போன்ற சொற்களின் ஆட்சி போன்றவை) பிற சங்க நூல் களிலும் காணப்படுமாயினும் கலித்தொகையும், பரிபாடலும் பிந் தியவை எனக் கருதலாம்.

தெ.பொ. மீனாட்சிசுந்தரனும் இதே கருத்தையே கொண்டுள் ளார். பழம் இலக்கியங்களைப் பாகுபாடு செய்யும்போது (1965: 118)

1. பத்துப்பாட்டு, அகநானூறு, புறநானூறு, பதிற்றுப் பத்து, குறுந்தொகை, நற்றிணை, ஐங்குறுநூறு
2. திருக்குறள்
3. பரிபாடல், கலித்தொகை
4. சிலப்பதிகாரம்
5. மணிமேகலை

எனப் பகுத்து நிற்பார்.

கமில் செவலபில் பழந்தமிழ்க்காலத்தை முன்பழந்தமிழ்க்காலம் (Early Old Tamil) பின்பழந்தமிழ்க் காலம் (Late Old Tamil) எனப் பிரித்து நிற்பார் (1968:54-72). இதுபோன்றே பின்னர் தமிழ் இலக்கியங்கள் பற்றிக் குறிப்பிடும்போதும் சங்க இலக்கியங்களில் பரிபாடலும், கலித்தொகையும் பிந்தியன என்று கூறுவார். (1974:47)

சண்முகமும் தன்னுடைய 'சங்க இலக்கிய மொழி அமைப்பு' (1971a:31) என்ற கட்டுரையில் பரிபாடல், கலித்தொகை ஆகிய நூல்கள் சங்கநூல்களாயினும் சில புதுமைகளைக் கொண்டுள்ளன எனக் கூறுவார். மேலும், இவற்றில் சில குறள், சிலம்பு, மணி மேகலை ஆகியவற்றிலும் காணக்கிடக்கின்றன என்பார். சைகார முதன்மொழிச் சொற்கள் (சையம்), யகரத்தின் பின் வரும் தகரம் சகரமாக மாறுதல் (ஆய்த்தி ▷ ஆய்ச்சி) (கலி!06–31, கலி208–9 சிலம்பு,15–206), நான் என்னும் தன்மைப் பதிலிடு பெயர் ஆட்சி, இரட்டைப் பன்மைச் சொற்களின் தோற்றம் (அரசர்கள் கலி 25-3) போன்றவை, எனக்கு என்பது எற்கு (கலி. 82–69, பரி. 20-81) எனவும், நினக்கு என்பது நிற்கு (மணிமேகலை 10–13) எனவும்

மாறுதல், நிகழ்கால இடைநிலைகளான –கின்று–, –கிறு– ஆகியவற்றின் வரவு (சேர்கின்ற பரி 22–35), கூறும் என்ற சொல்லாட்சி (ஏழ்காறும், ஏழ்வரை, பரி 11–120)– ஏல் ஈற்று நிபந்தனைச் சொல் ஆட்சி ஆகியவற்றைத் தருவார். இன்னும் சிலவற்றைப் பரிபாடல், கலித்தொகை ஆகிய நூல்களின் சிறப்புப் பண்பாகவும் தருதல் காணலாம்.

மேலும் இவர் இன்னொரு கட்டுரையில் (1971b) சில சொற்களின் அடிப்படையில் பழந்தமிழை முன்பழந்தமிழ் (Early old Tamil), இடைக்காலப்பழந்தமிழ் (Middle old Tamil), பின்பழந்தமிழ் (Late old Tamil) எனப் பிரித்து நிற்பார்.

மு. அருணாசலம் (1981:34) பிற சங்க இலக்கியங்களுக்குப் பின்னரே பரிபாடலும், கலித்தொகையும் உண்டாயின என்பார்.

பரிபாடல், சிலப்பதிகாரம் ஆகிய நூல்களின் மொழி நிலை பற்றி ஆராய்ந்த பலரும் இந்நூல்கள் பிந்திய கூறுகள் பலவற்றைக் கொண்டுள்ளன எனக் கூறுவர். பேராசியர் வ.சுப. மாணிக்கம் (1976, 1979) டாக்டர் கந்தசாமி (1978), டாக்டர் சாரங்கபாணி (1977) போன்றவர்களும் தங்கள் தங்கள் நூல்களிலும், கட்டுரைகளிலும் இதுபற்றி விளக்கமாக எழுதியுள்ளனர். இன்னும் பலரும் இது பற்றி ஆங்காங்கே குறிப்பிட்டுச் சென்றுள்ளனர்.

திருக்குறள் பற்றிக் கருத்து வேறுபாடு நிலவுவதைக் காண்கிறோம். சங்க இலக்கியங்களுக்கு இது முந்தியதா, அன்றிப் பிந்தியதா என்ற வினா அறிஞர்களிடையே பன்னெடுங்காலமாக இருந்து வருவதை நாம் நன்கு அறிவோம். சிலர் முந்தியது என்றும், இன்னும் சிலர் பிந்தியது என்றும் கருதுகின்றனர்.

திருக்குறள் மிக மிகப் பிந்தியது என்பது பேராசிரியர் வையாபுரிப்பிள்ளையின் எண்ணம். ஆனால் அவர் காட்டும் பல இலக்கணக் கூறுகள் வேறுபல நூல்களிலும் காணப்படுவதால் நிச்சயமாக அத்தனை அளவுக்குக் (கி.பி. ஆறாம் நூற்றாண்டு) குறள் பிந்தியது அல்ல என்று முடிவு கட்டலாம். (1952:77) எனினும் சங்க இலக்கியங்களுக்கு முந்தியதா என்பது விவாதத்திற்குரியதே. முந்தியது எனப் பலவேறு காரணங்களைக் காட்டி

இராசமாணிக்கம்பிள்ளை வாதாடுவார். (1963:117–123)

டாக்டர் அருணாசலம் (1968) போன்றவர்கள் பிந்தியது என்பர். டாக்டர் இலட்சுமணசாமி (1979) "அறம் பாடிற்றே ஆயிழை கணவ" என்பதில் வரும் அறம் என்பது திருக்குறள் அன்று என்றும், வேறு ஏதோ ஒரு அற நூலைக் குறிப்பது என்றும் குறிப்பிட்டுச் செல்லுவார். முன்னர்க் குறிப்பிட்டது போன்று எல். வி. இராமஸ்வாமிஐயர் திருக்குறளைச் சங்க இலக்கியங்களி லேயே இணைக்கமாட்டார். தெ.பொ. மீனாட்சிசுந்தரன் இது சங்க இலக்கியத்திற்குப் பிற்பட்டது (1965:118) எனத் திட்ட வட்டமாகக் குறிப்பிடுவார். திருக்குறளின் மொழி நிலையை நோக்க சங்க இலக்கியங்களுக்கு இது பிந்தியது என்றும், எனவே இதைப் பின்பழந்தமிழ் நூல்களில் ஒன்றாகக் கருதலாம் என்பதும் நிச்சயமாக விளங்கும். பழந்தமிழ் இலக்கியங்களில் காணப்படும் வினைமுற்று விகுதிகளின் போக்கே இப்பண்பை நன்குக் காட்டும்

இந்நிலையில் பழந்தமிழ்க் காலத்தையும் முன்பழந்தமிழ்க் காலம் (Early Old Tamil, EOT) என்றும், பின்பழந்தமிழ்க்காலம் (Late Old Tamil, LOT) என்றும் பிரிக்கலாம். இதுபோன்றே பழந்தமிழ் நூல்களையும் முன்பழந்தமிழ் நூல்கள் என்றும், பின் பழந்தமிழ் நூல்கள் என்றும் பகுக்கலாம்.

4.2. முன்பழந்தமிழ் நூல்கள்

4.2.1 பதிற்றுப்பத்து

பத்துச் சேர அரசர்களைப் பற்றி பத்துப் புலவர்கள் பத்துப் பத்துப் பாடல்களால் பாடிய பாடல்களின் தொகுப்பே பதிற்றுப் பத்து. இதில் காணப்படும் ஒவ்வொரு பத்தும் ஒவ்வொரு சேர அரசனைப் பற்றிப் பாடப்பட்டதாகும். இதனால்தான் இது பதிற்றுப்பத்து என்னும் பெயர் கொண்டது. இவற்றுள் முதல் பத்தும், இறுதிப் பத்தும் கிடைக்கவில்லை.

இந்நூல் முதன்முதலில் கி.பி.ஆயிரத்து தொள்ளாயிரத்து நான்–கில் சாமிநாதையரால் வெளியிடப்பட்டது. பத்துப்பாட்டும், எட்டுத் தொகையும் எவையெவை என்று தெரியாத காலத்தில் இந்நூல் இவருக்குக் கிடைத்ததென்றும், முதன் முதலில் திருவாடுதுறை மடத்திலிருந்து கிடைத்த ஏட்டுப் பிரதிகளிலேயே இதனைக் கண் ணுற்றார் என்றும் இவர் இந்நூலின் மூன்றாம் பதிப்பின்

முகவுரையில் கூறுவார். பதிற்றுப்பத்தில் ஆறு கையெழுத்துப் பிரதிகள் இவருக்குக் கிடைத்தனவென்றும், இவற்றுள் இரண்டில் மட்டுமே குறிப்புரை இருந்ததென்றும் இவர் குறிப்பிட்டுச் செல்லு வார்.

இதற்குப் பின்னர் கி.பி. ஆயிரத்து தொள்ளாயிரத்து இருபதில் இரண்டாவது பதிப்பும், ஆயிரத்து தொள்ளாயிரத்து நாற்பத் தொன்றில் மூன்றாவது பதிப்பும், பின்னர் பலவேறு மறுபதிப்புகளும் வெளியாகியுள்ளன. ஆயிரத்து தொள்ளாயிரத்து ஐம்பதில் சைவ சித்தாந்தக் கழகம், ஔவை. சு. துரைசாமிப் பிள்ளையால் எழுதப் பட்ட உரையுடன் இந்நூலை வெளியிட்டது. இதை அடுத்து பல மறுபதிப்புக்கள் கழகத்தாரால் வெளியிடப்பட்டுள்ளன.

இந்நூலின்கண் உதியஞ்சேரலின் வழிவந்த இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன், பல்யானை செல்கெழுகுட்டுவன், களங்காய்க் கண்ணி நார்முடிச்சேரல், கடல்பிறக்கோட்டிய செங்குட்டுவன், ஆடு கோட்பாட்டுச் சேரலாதன் ஆகியோரை முறையே குமட்டூர்க் கண்ணனார், பாலைக்கௌதமனார், காப்பியாற்றுக் காப்பியனார், பரணர், காக்கைப்பாடினியார் நச்செள்ளையார் ஆகியோரும், அந்துவஞ்சேரலிரும்பொறை வழிவந்த செல்வக்கடுங்கோ வாழி யாதன், தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை, இளஞ்சேரல் இரும்பொறை ஆகியோரை முறையே கபிலர், அரிசில் கிழார், பெருங்குன்றூர்கிழார் ஆகியோரும் பாடியுள்ளனர்.

இவர்களுள் இரண்டாவது பத்தையும் நான்காவது பத்தையும் பாடிய குமட்டூர்க்கண்ணனார், காப்பியாற்றுக் காப்பியனார் ஆகிய இருவரும் பதிற்றுப்பத்தில் மட்டுமே பாடியுள்ளனர். ஆனால் மூன் றாம் பத்தைப் பாடிய பாலைக்கௌதமனார் பதிற்றுப்பத்தில் மட்டு மின்றிப் புறநானூற்றிலும் ஒரு செய்யுள் (366) பாடியுள்ளார். ஐந்தாவது பத்தைப் பாடிய பரணர் பதிற்றுப்பத்தில் மட்டுமன்றி அகநானூறு (34), குறுந்தொகை (16), நற்றிணை (12), புற நானூறு (13) ஆகியவற்றிலும் பாடியுள்ளார். ஆறாம் பத்தைப் பாடிய காக்கைப்பாடினியார் நச்செள்ளையார் குறுந்தொகையிலும் (210), புறநானூற்றிலும் (278) ஒவ்வொரு செய்யுள் பாடியுள்

ளார். ஏழாம் பத்து பாடிய கபிலரோ பதிற்றுப்பத்திலும் அக நானூறு (18) ஐங்குறுநூறு (100) குறுந்தொகை (29) நற்றிணை (20), புறநானூறு (28) ஆகிய நூல்களிலும் கலித்தொகையிலும் (குறிஞ்சிக்கலியை) பாடியுள்ளதாகக் கூறுவர். குறிஞ்சிக் கலி இவர் பாடியதா என்பதில் கருத்து வேற்றுமையுண்டு. சதாசிவம் (1974) தன்னுடைய ஆய்வுரையில் பலவேறு செய்திகளை எடுத்துக்காட்டி இவ்விரு கபிலரும் வேறுவேறு என்பார். எட்டாம் பத்தைப் பாடிய அரிசில் கிழாரும் குறுந்தொகையில் ஒரு செய்யுளும் (193) புறநானூற்றில் ஏழு செய்யுள்களும் பாடியுள்ளார். ஒன்பதாவது பத்தைப் பாடிய பெருங்குன்றூர்கிழார் குறுந்தொகையில் ஒரு செய்யுளும் (338), அகத்தில் ஒரு செய்யுளும் (8), நற்றிணையில் நான்கு செய்யுள்களும், புறநானூற்றில் ஐந்து செய்யுள்களும் பாடியுள்ளமை இங்குக் குறிப்பிடத்தக்கது.

பதிற்றுப்பத்து பாடிய எட்டுப் புலவர்களில் ஆறு புலவர்கள் ஐங்குறுநூறு, அகநானூறு, நற்றிணை, குறுந்தொகை, புறநானூறு போன்ற பல சங்க நூல்களிலும் பாடியுள்ளமை குறிப்பிடத்தக்க தாகும். கடைசிப் பத்தாக இப்போது நமக்குக் கிடைக்கும் ஒன்பதாவது பத்தைப் பாடியபெருங்குன்றூர்கிழார் கூட குறுந்தொகை, நற்றிணை, புறநானூறு ஆகியவற்றில் பாடியிருப்பது பதிற்றுப் பத்தின் காலத்தை நிர்ணயிப்பதற்கு உதவும்.

பதிற்றுப்பத்தின் காலம் பற்றி ஆராயும் வையாபுரிப்பிள்ளை (1952:75-76) இது குறுந்தொகை, ஐங்குறுநூறு, அகநானூறு, நற்றிணை ஆகியவற்றிற்குப் பிற்பட்டது எனக் கூறுவார். ஆனால் ஒன்பதாவது பத்தைப் பாடிய பெருங்குன்றூர்கிழாரே குறுந்தொகை, நற்றிணை ஆகியவற்றில் பாடியிருப்பது பிள்ளையின் கருத்தை வலியுறுத்துவதாக இல்லை. இவரைப் போன்றே பரணர், காக்கைப் பாடினியார் நச்செள்ளையார், கபிலர், அரிசில் கிழார் ஆகியோரும் குறுந்தொகை, அகநானூறு, ஐங்குறுநூறு, நற்றிணை, புறநானூறு ஆகியவற்றில் பாடியிருப்பதும் இங்குக் கவனிக்கத்தக்கது. மேலும் நான்காம் பத்து பாடிய காப்பியாற்றுக் காப்பியனாருடைய மகனே காப்பியன்சேந்தனார் என அறிஞர்கள் (பதிற்றுப் பத்து, ம.ப.1968:36) கருதுவர். இவர் பாடியதாக நற்றிணையில்

ஒரு பாடல்(246) காணப்படுகிறது. மட்டுமன்றிக் களங்காய் ண்ணியோடு மாறுபட்ட நன்னன், நெடுமிடல் அஞ்சி ஆகியோரைக் கற்றி கல்லாடனார் (அகம் 209), பாலை பாடிய பெருங்கடுங்கோ பநற் 391) போன்ற புலவர்கள் பாடியுள்ளனர்.

மேலும் பரணர் கடல் பிறக்கோட்டிய செங்குட்டுவனைப் பாடும்போது நேரில் கண்டு பெரிதும் உவந்து, இப்பத்தினைப் பாடியுள்ளார் என ஔவை சு. துரைசாமிப்பிள்ளை குறிப்பிடுவார் (பதிற்றுப்பத்து, மறுபதிப்பு 1968: 17). ''இனியா ருளரோநின். முன்னுமில்லை'' (பதி 45-18) எனவும் ''தொலையாக் கற்பநின் னிலை கண்டிகுமே'' (பதி 43-31) எனவும் பரணர் கூறுவது இங்குக் கவனிக்கத்தக்கது.

அடுத்து, ஆடுகோட்பாட்டுச் சேரலாதனைப் பாடிய காக்கைப் பாடினியார் நச்செள்ளையார் ஆடுகோட்பாட்டுச் சேரலாதனோடு உடன் உறைந்திருந்தவர் என்பதும், அவனைச் ''சுடர் நுதன் மடநோக்கின் வாணகை யிலங்கெயிற் றமிழ்துபொதிதுவர்வா யசைநடை விறலியர் பாடல் சான்று நீடினை யுறைதலின் .... உள்ளுவர் கொல்லோநின் னுணரா தோரே'' (பதி 51-19) என அறிவுறுத்துவதும் இங்கு உணரத்தக்கது. எனவே ஆடுகோட் பாட்டுச்சேரலாதன் காலத்திலேயே காக்கைப்பாடினியார் வாழ்ந் தவர் என்பது நன்கு விளங்கும். இவரும் குறுந்தொகையில் பாடி யிருப்பது இங்கு நினைவுகூரத்தக்து.

இவரைப் போன்றே கபிலரும் பதிற்றுப்பத்துத் தவிர வேறு பல நூல்களிலும் பாடியுள்ளார். இவர் செல்வக்கடுங்கோ வாழி யாதனை அடைந்து ''மலர்ந்த மார்பின் மாவண் பாரி முழவுமண் புலர விரவல ரினைய வாராச் சேட்புலம் படர்ந்தோ னளிக்கென இரக்கு வாரே னெஞ்சிக் கூறேன்'' (பதி 61–8) எனக் கூறுதலின் இவர் செல்வக்கடுங்கோ வாழியாதன் காலத்தவர் என்பது பெறப் படும். இவரும் குறுந்தொகை, நற்றிணை போன்ற நூல்களில் பாடியுள்ளமை இங்கு நினைவுகூரத்தக்கது. இதே நிலையைத்தான் அரிசில்கிழாரிடமும் காணுகிறோம். இவரும் இரும்பொறைக் காலத்திலேயே வாழ்ந்தவர். இவரும் குறுந்தொகை, புறநானூறு ஆகியவற்றில் பாடியுள்ளார். இந்நிலையில் பதிற்றுப்பத்தின் காலநிலை ஓரளவுக்குத் தெளிவாகும்.

குறுந்தொகையில் காணப்படும் எல்லாப் பாடல்களுக்கும் பதிற்றுப்பத்து முந்தியது எனக் கூற முடியாது. எனினும் பல பாடல்களோடு ஒத்த காலத்தது என்றும், ஒருசில பாடல்களுக் கேனும் முந்தியது என்றும் கூறலாம்.

ஒன்பதாவது பத்தைப் பாடிய பெருங்குன்றூர்கிழார் குறுந் தொகையில் ஒன்றும் (338), அகத்தில் ஒன்றும் (8), நற்றிணை யில் நான்கும் (5, 112, 119, 347), புறத்தில் ஐந்தும் (147, 210) 211, 266, 318) பாடியுள்ளார். இந்நிலையில் ஒன்பதும் பத்தும், குறுந்தொகை போன்ற நூல்களில் காணப்படும் மேல் காட்டப் பட்ட பாக்களும் சமகாலத்தவை. இந்நிலையில் பதிற்றுப்பத்து குறுந்தொகைக்குப் பிந்தியது எனக் கூறமுடியாது.

பத்தாம் பத்து யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரலிரும் பொறையைப் பற்றியது என அறிஞர்கள் கருதுவர். ஐங்குறு நூற்றைத் தொகுத்தவன் இவனே. இப்பத்து இவனைப் பற்றியது. ஆயின் நிச்சயமாகப் பதிற்றுப்பத்து பாடப்பட்ட காலத்தை மிகப் பின்னுக்குக் கொண்டு போக முடியாது. பாடப்பட்ட காலம் வேறு; தொகுக்கப்பட்ட காலம் வேறு. இந்நிலையில் பதிற்றுப்பத்து சங்க இலக்கியங்களில் வையாபுரிப்பிள்ளை கருதுவது போல மிகப் பிந்தியதன்று.

தொகுப்புக் காலம் பற்றிப் பின்னர்க் (4.3.1.4) காண்போம்.

4.2.2 ஐங்குறுநூறு

மருதம், நெய்தல், குறிஞ்சி, பாலை, முல்லை ஆகிய ஐந்து அகத்திணைகள் பற்றி ஐந்து புலவர்களால் பாடப்பட்ட ஐந்நூறு பாடல்களின் தொகுப்பே ஐங்குறுநூறு எனப்படுவது.

மூன்றடிச் சிற்றெல்லையைக் கொண்டமையின் இது ஐங்குறு நூறு எனப்பட்டது. ஆறடிப் பேரெல்லையை உடையது. ஐந்நூறு குறுகிய பாடல்களைக் கொண்டமையின் இது இப்பெயர்த்தது.

இதன் முதல் பதிப்பு ஆயிரத்துத் தொள்ளாயிரத்து மூன்றாம் ஆண்டு ஐயர் அவர்களால் வெளிவந்தது. இரண்டாவது பதிப்பு ஆயிரத்துத் தொள்ளாயிரத்து இருபதிலும், மூன்றாவது பதிப்பு

ஆயிரத்துத் தொள்ளாயிரத்து நாற்பத்துநான்கிலும் வந்தன. ஆயிரத்துத் தொள்ளாயிரத்து முப்பத்தெட்டில் ஔவை. சு. துரைசாமி அவர்களால் வெளியிடப்பட்ட மற்றொரு பதிப்பும் வந்தது. இதன் பின்னர் பலவேறு பதிப்புக்கள் வெளிவந்துள்ளன.

சேரமான் யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரல்இரும்பொறையின் வேண்டுகோளுக்கிணங்க கூடலூர்கிழார் என்ற பெருமகனார் ஓரம்போகியார், அம்மூவனார், கபிலர்,ஓதலாந்தையார், பேயனார் ஆகிய ஐந்து புலவர்கள் பாடிய பாடல்களைத் தொகுத்ததால் ஏற்பட்ட நூலே இதுவாகும். இதனைத் தொகுத்தோனும் தொகுப்பித்தோனும் சேரநாட்டினர். இதுதவிர பாடிய புலவர்கள் ஐவரில் மூவர் (அம்மூவனார், ஓதலாந்தையார், பேயனார்) சேரநாட்டினரே என்பதும், ''மலை நாட்டரசர்களைப் பாடி, மலைநாட்டிற் பெரும்பாலும் வதிந்து,மலைவளம் பாடுதலிற் புகழ்பெற்ற கபிலர்'' (ஐங்குறுநூறு, மறுபதிப்பு 1957: VIII) என ஐயர் கூறுவதும் இங்கு நினைவுகூரத்தக்கன. சேரநாட்டுப் புலவர்கள் பெரும்பாலும் பாடியபாடல்களைச் சேர நாட்டரசன் தொகுப்பிக்க எண்ணியது பொருத்தமே.

மருதம் பாடிய ஓரம்போகியார் நற்றிணை (2), குறுந்தொகை (5), அகம் (2), புறம் (1) முதலிய நூல்களிலும் பாடியுள்ளார். இவற்றுள் எட்டுப்பாடல்கள் மருதப்பாடல்கள்.

நெய்தல் பாடிய அம்மூவனார் சேரநாட்டினர் என்பர். இவர் மலையமான் திருமுடிக்காரி என்ற வள்ளலால் ஆதரிக்கப்பெற்றவர். இவர் ஐங்குறுநூற்றில் மட்டுமின்றி நற்றிணை (10), குறுந்தொகை (11), அகம் (6) ஆகிய நூல்களிலும் பாடியுள்ளமை குறிப்பிடத்தக்கது. இவற்றுள்ளும் பெரும்பாலான பாடல்கள் நெய்தல் திணையைப் பற்றியவையே.

குறிஞ்சி பாடிய கபிலரோ சங்க இலக்கியங்கள் அனைத்திலும் பாடியுள்ளார் என்பதும், செல்வக்கடுங்கோ வாழியாதன், நள்ளி, மலையமான் திருமுடிக்காரி, விச்சிக்கோ, வேள்பாரி, வையாவிக் கோப்பெரும்பேகன், மலையன் ஆகிய புரவலர்களைப் பாடியுள்ளார் என்பதும் இங்குக் குறிப்பிடத்தக்கன. இவரை நக்கீரர் அகம் 78)

பெருங்குன்றூர்கிழார் (பதி 85) பொருந்தில் இளங்கீரனார் (புறம் 53) நப்பசலையார் (புறம் 126) ஆகியோர் பாடியுள்ளனர்.

பாலைபாடிய ஓதலாந்தையார் குட்டநாட்டைச் சார்ந்தவர் என்றும்,குறுந்தொகையில் மூன்று பாடல்களை பாடியவர் என்றும் கூறுவர்.

முல்லை பாடிய பேயனாரும் சேரநாட்டினரே. இவரும் குறுந் தொகையில் நான்கு பாடல்கள் பாடியுள்ளார்.

ஐங்குறுநூறு பாடிய அனைத்துப் புலவர்களும் குறுந்தொகை யில் பாடியுள்ளமையால் குறுந்தொகைக்குப் பின்னர் இதனைக் கொண்டு வருதல் கடினம். இதைப்போன்றே மூன்று புலவர்கள் நற்றிணை, அகம் ஆகியவற்றிலும் பாடியுள்ளனர். இதனைத் தொகுத்தவன் யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரலிரும்பொறை என் பது பற்றிக் குறிப்பிட்டோம். இவன் பாண்டியன் தலையாலங் கானத்துச்செருவென்ற நெடுஞ்செழியனால் கட்டப்பட்டவன் என் பதும், சோழன் இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளியோடு போர் செய்தவன் எள்பதும் இங்கு நினைவுகூரத்தக்கன. இவன் அக நானூற்றைத் தொகுப்பித்த உக்கிரப்பெருவழுதியின் சம காலத் தவன்.

சேரலிரும்பொறை பதிற்றுப்பத்து தொகுக்கப்பட்டபோது ஜீவதசையில் இருந்தான் என வையாபுரிப்பிள்ளை கருதுவார். (1952: 76). எனவே ஐங்குறுநூறும், பதிற்றுப்பத்தும் சற்று முன் னரோ அல்லது பின்னரோ இவன் காலத்தில் தொகுக்கப்பட்டது எனக் கருதலாம். எனினும் பதிற்றுப்பத்து சற்று முன்னர் தொகுக்கப்பட்டிருக்கலாம் என்று எண்ணுவதில் தவறில்லை. இது பற்றி இன்னும் ஆராய்தல் வேண்டும்.

4. 2. 3 அகநானூறு

இயற்றியவர் பெயர் தெரியாத மூன்று பாடல்களைத் தவிர்த்து எண்பத்தொரு புலவர் பெருமக்களால் இயற்றப்பட்ட நானூறு அகப் பொருள் பற்றிய பாடல்களின் தொகுப்பே அகநானூறு என்னும் தொகைநூல். இது பதின்மூன்றடிச் சிற்றெல்லையும், முப்பத்

தோரடிப் பேரெல்லையும் கொண்டது. இதனால் இதனை நெடுந் தொகை என்பர். இத்தகைய பேரெல்லையைக் கொண்டு நிற்பதால் இதுவே ஐங்குறுநூறு, குறுந்தொகை, நற்றிணை ஆகியவற்றிற்குப் பின்னர் தொகுக்கப்பட்டது என பலர் (ஐயர், வையாபுரிப் பிள்ளை, இராசமாணிக்கம் பிள்ளை போன்றவர்கள்) கருதுகின்றனர். இது பொருந்தாது என்பது பின்னர் விளக்கப்படும். இது களிற்றியானை நிரை (120 செய்யுள்கள்), மணிமிடைபவளம் (180 செய்யுள்கள்), நித்திலக் கோவை (100 செய்யுள்கள்) என மூன்று பகுதிகளைக் கொண்டது. இந் நூலின் முதல் பதிப்பு மு. இராகவையங்காரால் ஆயிரத்துத் தொள்ளாயிரத்து இருபதில் வெளி வந்தது. அதன் பின்னர் ஆயிரத்துத் தொள்ளாயிரத்து இருபத்து மூன்றிலும், ஆயிரத்துத் தொள்ளாயிரத்து முப்பத்தைந்திலும் இரு பதிப்புக்கள் வெளி வந்தன. இவற்றையடுத்தும் பலவேறு பதிப்புக்கள் வந்துள்ளன.

இந் நூலை மதுரை உப்பூரிகுடிகிழார்மகனார் உருத்திரசன்மர் என்னும் பெருமகனாரைக் கொண்டு கானப்பேரெயில் கடந்த உக்கிரப்பெருவழுதி என்னும் பாண்டிய மன்னன் தொகுப்பித்தான் எனக் கருதுவர். இவன் இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளியின் நண்பன். இப்பெருநற்கிள்ளி ஐங்குறுநூற்றைத் தொகுப்பித்த சேரமான் யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரலிரும்பொறையோடு போரிட்டவன் எனவும், மாந்தரஞ்சேரலிரும்பொறை தலையாலங் கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனால் கட்டப்பட்டவன் எனவும் கருதுவர். எனவே இவர்கள் நால்வரும் சமகாலத்தவர் என்பது நன்கு விளங்கும்.

பதிற்றுப்பத்து, ஐங்குறுநூறு ஆகியவற்றில் பாடிய புலவர்களில் சிலர் அகநானூற்றிலும் பாடியுள்ளனர். பதிற்றுப்பத்தில் பாடிய கபிலரும், பரணரும் முறையே பதினெட்டு பாடல்களையும், முப்பத்துநான்கு பாடல்களையும் இந் நூலின்கண் பாடியுள்ளனர். இவர்களைப் போலவே ஐங்குறுநூற்றில் பாடிய அம்மூவனார் (6), ஓரம்போகியார் (2), பேயனார் (1) ஆகிய புலவர்களும் இந்நூலின் கண் பாடியுள்ளமை குறிப்பிடத்தக்கது. அகநானூற்றைத் தொகுப்பித்த உக்கிரப்பெருவழுதியின் பாடலும் (26) இந்நூலில் காணப்படுவதோடு நற்றிணையிலும் (98) இவன் பாடியுள்ளமை இங்கு

நினைவு கூரத்தக்கது. இவனும் சேரமான் மாவெண்கோவும் இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளியும் நண்பர்கள் (புறம், பாடல் 367). சேரமான் மாவெண்கோ ''சேரமான்களுட் காலத்தாற் பிற்பட்டவனாகக் கருதப்படுகிறான்'' (புறம், பாடல் 367) இவர்களைத் தவிர அகநானூற்றில் வேறு பல புலவர்களின் செய்யுள்களும் காணப்படுகின்றன. இப் புலவர்களில் சிலர் காலத்தால் இவர்களுக்கு முந்தியவர்களாகவும், இன்னும் சிலர் பிந்தியவர்களாகவும் இருக்கலாம்.

அகநானூற்றில் எழுபத்தெட்டாவது பாடலில் கபிலர் குறிக்கப்படுகிறார். இப் பாடலைப் பாடிய நக்கீரனாரும் இதன்கண் பாடியிருப்பதால் கபிலருக்குப் பிந்திய புலவர்கள் அகநானூற்றில் பாடியுள்ளமை விளங்கும்.

4.2.4 நற்றிணை

ஆசிரியர் பெயர் தெரியாத ஐம்பத்தாறு பாடல்களைத் தவிர்த்து நூற்று எண்பத்தேழு புலவர் பெருமக்களால் பாடப்பட்ட நானூறு அகத்துறைப் பாடல்களின் தொகுப்பே நற்றிணை என்னும் நூல். இது ஒன்பதடிச் சிறுமையும் பன்னிரண்டு அடிப் பெருமையும் கொண்டது. இந் நூலின் முதல் பதிப்பு ஆயிரத்தி தொள்ளாயிரத்துப் பதிநான்கில் பின்னத்தூர் அ. நாராயணசாமி பெயரால் வெளியிடப்பட்டது. அதைத் தொடர்ந்து சைவ சித்தாந்த நூற் பதிப்புக் கழகம் முறையே ஆயிரத்துத் தொள்ளாயிரத்து ஐம்பத்திரண்டிலும், ஆயிரத்து தொள்ளாயிரத்து ஐம்பத்தாறிலும் இரு பதிப்புக்களை வெளியிட்டது. இதன் பின்னர்ப் பல வேறு பதிப்புக்கள் வெளிவந்துள்ளன.

நற்றிணையைத் தொகுப்பித்தவன் பன்னாடுதந்த பாண்டியன் மாறன் வழுதி. தொகுத்தவர் பெயர் தெரியவில்லை. பன்னாடு தந்த பாண்டியன் மாறன் வழுதியும் குறுந்தொகையில் இருநூற்று எழுபதாவது செய்யுளைப் பாடிய பன்னாடு தந்தானும் ஒருவரே எனக் கருதப்படுகிறது. இப் பாண்டியன் மாறன் வழுதியே நற்றிணையில் இரண்டு செய்யுள்களைப் (97, 301) பாடியுள்ளான். இவனே இதனையும் தொகுப்பித்தவன் ஆதலால் இவனுடைய

காலத்திலும் அதற்கு முன்னரும் பாடப்பட்ட செய்யுள்கள் மட்டுமே நற்றிணையில் இடம் பெற்றிருக்கவேண்டும். இவனால் பாடப்பட்ட செய்யுள் குறுந்தொகையில் காணப்படுவது குறுந்தொகையின் தொகுப்புக் காலத்தைக் காட்டுவதாக உள்ளது.

பதிற்றுப்பத்து, ஐங்குறுநூறு, அகநானூறு ஆகிய நூல்களில் பாடியுள்ள பல புலவர்கள் நற்றிணையில் பாடியுள்ளனர். எடுத்துக்காட்டாகப் பதிற்றுப்பத்தில் பாடியுள்ள கபிலர் (20), பரணர் (12) பெருங்குன்றூர்கிழார் (4), ஐங்குறுநூற்றில் பாடியுள்ள அம்மூவனார் (10), ஓரம் போகியார் (2) ஆகியோரும் அகநானூற்றில் பாடியுள்ள ஒரு சில புலவர்களும் நற்றிணையில் பாடியுள்ளனர். இதனால் இவ்விலக்கியங்கள் தோன்றிய காலத்திலேயே நற்றிணைப் பாடல்கள் பல தோன்றின என்பது விளங்கும். இதனால் நற்றிணைக் கால மேல் எல்லை இந்நூல்களின் காலத்தோடு ஒப்ப வைத்து எண்ணத்தக்கது என்பதும், கீழ் எல்லை இந்நூலைத் தொகுத்தவனும் இந்நூலில் இரு செய்யுள்கள் பாடியவனும் ஆகிய பன்னாடு தந்த பாண்டியன் வழுதியின் காலம் என்பதும் குறிப்பிடத்தக்கன.

மேலும், இந் நூலின்கண் பலவேறு அரசர்களும், சிற்றரசர்களும் பாடப்படுகின்றனர். பதிற்றுப்பத்தில் முதல் பத்தின் பாட்டுடைத்தலைவனாகக் கருதப்படுகிற உதியஞ்சேரலாதன், நான்காம் பத்தின் பாட்டுடைத் தலைவனான களங்காய்க்கண்ணி நார்முடிச் சேரலாதனால் வெல்லப்பட்ட நன்னன், எட்டாம் பத்தின் தலைவனான சேரமான் தகடூர் எறிந்த பெருஞ்சேரலிரும்பொறையுடன் போரிட்டுத் தோற்ற அதியமான் நெடுமான் அஞ்சி, தகடூர் எறிந்த பெருஞ்சேரலிரும்பொறையின் கருத்திற்கிணங்க கொல்லிமலைத் தலைவனான வல்வில் ஓரியுடன் போரிட்ட மலையமான் திருமுடிக்காரி, அவனிடம் தோற்ற ஓரி, தலையாலங்கானத்துச்செருவென்ற நெடுஞ்செழியன் போன்ற அரசர்கள் இந்நூலில் பாடப்படுகின்றனர்.

4. 2. 5 குறுந்தொகை

இருநூற்றாறு புலவர்களால் பாடப்பட்ட நானூற்றொரு அகப்பாடல்களைக் கொண்ட தொகுதியே குறுந்தொகை. சில பாடல்

களை இயற்றியவர் பெயர் தெரியவில்லை. இதன் சிற்றெல்லை நான்கு அடி; பேரெல்லை எட்டு அடி. இதன்கண் இரு (307 391.) பாக்கள் ஒன்பது அடிகளை உடையனவாகக் காணப்படுகின்றன. எனினும் இதன் பேரெல்லையாக எட்டு அடியைக் கொள்வதே பொருந்தும் எனத் தோன்றுகிறது. குறுந்தொகை என்ற சொல்லே இதன் சிற்றெல்லையைக் காட்டுவதாக அமைந்துள்ளது.

முன்னர்க் குறிப்பிட்டபடி, குறுந்தொகை பாடிய புலவர்களுள் பலர் பிற சங்க இலக்கியங்களிலும் பாடியுள்ளனர். பதிற்றுப்பத்து, நற்றிணை, ஐங்குறுநூறு, அகநானூறு ஆகிய நூல்களில் பாடியுள்ள புலவர்களும் குறுந்தொகையில் பாடியிருத்தலின், இதுவும் அந்நூல்களைப் போன்ற பழமையைக் கொண்டுள்ளது.

பதிற்றுப்பத்தில் பாடிய கபிலர், பரணர், காக்கைப்பாடினியார் நச்செள்ளையார், பெருங்குன்றூர்கிழார் ஆகிய புலவர்கள் குறுந்தொகையில் பாடியுள்ளனர். இதைப் போன்றே ஐங்குறுநூற்றில் பாடிய அம்மூவனார், ஓதலாந்தையார், ஓரம்போகியார், பேயனார், கபிலர் ஆகிய ஐவரும் இதன்கண் பல பாடல்களைப் பாடியுள்ளனர். இதைப்போன்றே அகநானூற்றிலும், நற்றிணையிலும் பாடியுள்ள பல புலவர்களின் பாடல்களும் இந்நூலின்கண் காணப்படுகின்றன.

இந் நூலின் காலத்தைப் பற்றி ஆராய்ந்த உ. வே. சாமிநாதையர் அவர்கள் சங்க இலக்கியங்களுள் இதுவே முதன்முதலில் தொகுக்கப்பட்டது எனக் கூறுவார். குறுந்தொகையில் பாடிய காரணத்தால் சிறப்புப்பெயர் பெற்ற காக்கைப்பாடினியார் நச்செள்ளையார், கயமனார், கள்ளிலாத்திரையனார், ஓரேருழவர் போன்ற புலவர்களின் பெயர்களைக் காட்டி இப் புலவர்களின் பெயர்கள் பிற நூல்களிலும் இதே சிறப்புப் பெயருடன் குறிக்கப் படுவதால் குறுந்தொகையே முதன்முதலில் தொகுக்கப்பட்டது எனக் காரணம் காட்டுவார். இது பற்றிக் குறிப்பிடும் ஐயர் ''குறுந்தொகையில் உள்ள சொற்றொடர் காரணமாக பெயர் பெற்ற புலவர்கள் அப்பெயராலேயே பிற நூல்களில் வழங்கப் பெறுவது போல அந் நூல்களில் உள்ள செய்யுள் பகுதி காரணமாகப் பெயர்பெற்றாரது பெயர் ஒன்றேனும் குறுந்தொகையில் வரவில்லை'' என்பார் (குறுந்தொகை, மறுபதிப்பு 1962:7).

இவ்வாறு ஐயர் காட்டும் காரணம் பொருந்துவதாக இல்லை என்பதைப் பின்னர்க் காட்டியுள்னேன்.

மேலும் அடி· எண்ணிக்கையில் ''அகப்பாட்டுக்களைத் தொகுத்து அடி அளவில் மூன்று பிரிவாக்கிக் குறைந்த அளவை உடைய குறுந்தொகையை முதலில் செப்பம் செய்தார்கள் என்று கூறுவது ஒரு வகையில் இயைபுடையதாகவே தோன்றுகின்றது'' என்றும் குறிப்பிடுவார் (ibid.) குறைந்த அளவை உடைய குறுந் தொகையை முதலில் செப்பம் செய்தார்கள் என்று கூறுவதுபோல மிகுந்த அளவை உடைய அகநானூற்றை முதலில் செப்பம் செய் தார்கள் என்றும் கொள்ளலாம். இது ஒன்றையே காரணமாகக் காட்டி குறுந்தொகைதான் முதன்முதலில் தொகுக்கப்பட்டது என்று கருதுவது பொருந்தாது. இதனைப் பின்னர் விளக்கியுள்ளேன்.

சீவகசிந்தாமணியை ஆராய்ந்து வந்தபோது உ. வே. சாமி நாதையர் குறுந்தொகையைப் பற்றி அறிய முடிந்தது என்றும் பின்னர்த் திருவாடுதுறை புத்தகசாலையிலிருந்து கிடைத்த ஏடு ஒன்றில், எட்டுத்தொகையில், கலித்தொகை, பரிபாடல் ஆகிய இரண்டும் ஒழிய ஏனைய நூல்கள் அனைத்தும் எழுதப்பெற்றி ருந்தன என்றும் கூறுவார். பின்னர்ப் பலவேறு இடங்களில் கிடைத்த ஏடுகளின் உதவி கொண்டு குறுந்தொகையை முதன்முதலில் ஆயிரத்துத் தொள்ளாயிரத்து முப்பத்து ஏழில் பதிப்பித்தார். இதன் பின்னர், இரண்டாவது பதிப்பு ஆயிரத்துத் தொள்ளாயிரத்து நாற்பத்து ஏழிலும் மூன்றாவது பதிப்பு ஆயிரத்துத் தொள்ளாயிரத்து ஐம்பத்து ஐந்திலும் வெளிவந்தன. இவற்றையடுத்துப் பல பதிப்புக் கள் வந்துள்ளன.

குறுந்தொகையைத் தொகுத்தவர் பூரிக்கோ என்று தெரிய வரினும் தொகுப்பித்தவர் யாரென அறியக்கூடவில்லை. பூரிக் கோவும், அகநானூற்றைத் தொகுத்த மதுரை உப்பூரிகுடி கிழார் மகனார் உருத்திரசன்மரும் குடிப்பெயரினால் தொடர்புடையவர் கள் என வையாபுரிப்பிள்ளை கருதுவார். எனவே இவ்விரு நூல் களும் மதுரையில் தொகுக்கப்பட்டன என எண்ணுவார் அவர்.

4. 2. 6 புறநானூறு

பலவேறு காலத்தையும், இடத்தையும், குலத்தையும் சேர்ந்த

நூற்றைம்பத்தேழு புலவர் பெருமக்களால் (பதினாறு பாடல்கள் ஆசிரியர் பெயர் தெரியாதவை) பாடப்பட்ட நானூறு புறப்பொருள் பற்றிய பாடல்களின் தொகுதியே புறநானூறு என்னும் பெருநூல் நான்கடி முதல் நாற்பதடி வரையுள்ள அகவற்பாக்களால் ஆனது. பெரும்பாலான பாக்கள் பண்டைத் தமிழ் அரசர்களின் புகழ் பற்றிக் கூறுவனவாகவே அமைந்துள்ளன. இந் நிலையில் பண்டைத் தமிழ் உலகின் புறச் செய்திகளைப் பற்றி அறிவதற்குரிய ஒரு கருவூல மாக இது விளங்குகிறது.

சீவகசிந்தாமணியைப் பற்றி ஆராய்ந்த பொழுது இந்நூல்பற்றி அறிய முடிந்ததென்றும், எனவே இந்நூல் ஆயிரத்து எண்ணூற்று தொன்னூற்று நான்காம் ஆண்டு முதல் பதிப்பாக வெளிவந்தது என்றும் உ. வே. சாமிநாதையர் கூறுவார். பின்னர் இரண்டாவது பதிப்பும் (1923), மூன்றாவது பதிப்பும் (1935) வெளிவந்தன. பின்னர்ப் பல வேறு பதிப்புகள் வெளியாகியுள்ளன.

இந் நூல் பற்றிக் குறிப்பிடும்போது "காலஞ்சென்ற ஜி. யூ. போப் துரையவர்களுக்கு தமிழில் அன்பு உண்டாவதற்கு முக்கிய காரணமாக இருந்தவற்றுள் இப் புறநானூறும் ஒன்றாகும்" என ஐயர் குறிப்பிடுவார். மேலும் "இவ்வொரு நூல் இத்துணை ஆராய்ச்சிகளுக்கு இடம் கொடுப்பதையும் இதனை வெளியிடும் படி நேர்ந்த திருவருட்டிறத்தையும் எண்ணும்போது தமிழ்ப்பணி யை இடையூறின்றிச் செய்து வருங்கால் இடையிடையே பலவகை யால் தோன்றும் துன்பங்களை மறந்துவிடற்குரிய பெரிய ஆறுதல் உண்டாகின்றது" (புறநானூறு, மறுபதிப்பு 1956: 14) என்று கூறுவது இங்குக் குறிப்பிடத்தக்கது.

இதனைத் தொகுத்தவர் பெயரோ, தொகுப்பித்தவர் பெயரோ தெரியவில்லை.

பிற தொகை நூல்களாகிய பதிற்றுப்பத்து, ஐங்குறுநூறு, அகநானூறு, நற்றிணை, குறுதொகை ஆகியவற்றில் பாடியுள்ள பல புலவர்கள் புறநானூற்றில் பாடியுள்ளனர். பதிற்றுப்பத்தில் மூன்றாம் பத்தைப் பாடிய பாலைக்கௌதமனார் புறத்தில் முன்னூற்று அறுபத்தாறாவது செய்யுளைப் பாடியுள்ளார். ஐந்தாம்

பத்தைப் பாடிய பரணர் அகம், நற்றிணை, குறுந்தொகை ஆகிய வற்றில் மட்டுமின்றிப் புறநானூற்றிலும் பதின்மூன்று செய்யுட்களை யும், ஆறாம் பத்தைப் பாடிய காக்கைப்பாடினியார் நச்செள்ளை யார் குறுந்தொகையிலும் (210), புறநானூற்றிலும் (278) ஒவ்வொரு செய்யுளையும் பாடியுள்ளனர். இதைப் போன்றே கபிலர் பாடல் களும், பரிபாடல் தவிர எல்லாத் தொகை நூல்களிலும் காணப்படு கின்றன. பதிற்றுப்பத்தில் எட்டாம் பத்தைப் பாடிய அரிசில் கிழாரும், ஒன்பதாம் பத்தைப் பாடிய பெருங்குன்றூர்கிழாரும் புறத்தில் பாடியுள்ளமை இங்குக் குறிப்பிடத்தக்கது. எனவே பதிற்றுப்பத்து பாடப்பட்ட காலத்தில் புறநானூற்றுப் பாடல்கள் பல தோன்றிவிட்டன.

இதைப்போன்றே ஐங்குறுநூறு பாடிய புலவர்களின் பாடல் களும் புறநானூற்றில் உள்ளன. ஓரம்போகியார், முன்னர்க் குறிப் பிட்டது போன்று கபிலர் ஆகிய இருவரின் பாடல்களும் புற நானூற்றில் உள்ளன. அகநானூறு, நற்றிணை, குறுந்தொகை ஆகியவற்றில் பாடியுள்ள புலவர்களின் பாடல்களும் புறத்தில் உள்ளன.

பொதுவாகப் புறநானூற்றின் கீழ் எல்லையை நிர்ணயிப்பதில் சிக்கல்கள் உள்ளன. இதனைத் தொகுத்தவர், தொகுப்பித்தவர் பெயர் தெரியாத நிலையில் இதன் கீழ் எல்லையை நிர்ணயிப்பது கடினமாக உள்ளது. எனினும் புறத்தில் கூடலூர் கிழார் யானைக் கட்சேய் மாந்தரஞ்சேரலிரும்பொறையைப் பாடும் பாடலிலிருந்து மாந்தரஞ்சேரலிரும்பொறை காலத்திற்குப் பின்னரும் புற நானூற்றுப் பாடல்கள் தொடர்ந்தன என்று தெரியவருகிறது. யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரலிரும்பொறையுடன் போரிட்ட தலையாலங்கானத்துச்செருவென்ற நெடுஞ்செழியனும் இதன் கண் பாடியுள்ளான்.

4.2.7 பத்துப்பாட்டு

"முருகு பொருநாறு பாணிரண்டு முல்லை
பெருகு வளமதுரைக் காஞ்சி—மருவினிய
கோலநெடு நல்வாடை கோல் குறிஞ்சி பட்டினப்
பாலை கடாத்தொடும் பத்து"

என்ற பாடல் பத்துப்பாட்டு எவை என்பதை நன்கு விளக்கும். இது எட்டுத்தொகை நூல்களைப் போலல்லாமல் நீண்ட பாடல் களைக் கொண்டுள்ள தொகுப்பாகும். பொருநராற்றுப்படை இரு நூற்று நாற்பத்தெட்டு அடிகளையும், பெரும்பாணாற்றுப்படை ஐந்நூறு அடிகளையும், பட்டினப்பாலை முன்னூற்றொரு அடி களையும், மலைபடுகடாம் ஐந்நூற்று எண்பத்துமூன்று அடிகளை யும், குறிஞ்சிப்பாட்டு இருநூற்று அறுபத்தொரு அடிகளையும் மதுரைக்காஞ்சி எழுநூற்று எண்பத்திரண்டு அடிகளையும், நெடு நல்வாடை நூற்று எண்பத்தெட்டு அடிகளையும், முல்லைப்பாட்டு நூற்றுமூன்று அடிகளையும், சிறுபாணாற்றுப்படை இருநூற்று அறுபத்தொன்பது அடிகளையும், திருமுருகாற்றுப்படை முன் னூற்றுப் பதினேழு அடிகளையும் கொண்டவை.

சீவகசிந்தாமணியைப் பதிப்பித்து வரும்போது சில பாடல் களின் மேற்கோள்களைக் கண்டு இவற்றைப் பற்றி ஆராய்ந்து வந்த உ.வே. சாமிநாதையர் இறுதியாகப் பத்துப்பாட்டினை ஆயிரத்து எண்ணூற்று எண்பத்தொன்பதில் முதல் முதலாகப் பதிப்பித்து வெளியிட்டார். இதன் பின்னர் ஆயிரத்துத் தொள்ளா யிரத்துப் பதினெட்டில் இதன் இரண்டாவது பதிப்பும் வெளிவந்தது மூன்றாவது பதிப்பு ஆயிரத்துத் தொள்ளாயிரத்து முப்பத்தொன் றில் வெளியிடப்பட்டது. இவற்றைப் பின்பற்றிப் பலவேறு பதிப் புக்கள் வெளிவந்துள்ளன.

இவற்றைப் பாடிய புலவர்களின் பெயர்களும் பாட்டுடைத்தலை வர்களின் பெயர்களும் ஒவ்வொரு பாட்டின் இறுதியிலும் உள்ளமை யால் இவர்களைப் பற்றி நன்கு தெரிந்துகொள்ள முடிகிறது. பத்துப்பாட்டிற்கு உரைவகுத்த நச்சினார்க்கினியர் எழுதிய ஒவ் வொரு பாட்டின் இறுதியிலும் காணப்படும் வரிகளே இது பற்றி அறிய உதவுகிறது எனக் கருதலாம். எடுத்துக்காட்டாக பொரு நராற்றுப்படை உரையின் இறுதியில்" சோழன் கரிகாற் பெருவளத் தானை முடத்தாமக்கண்ணியார் பாடிய பொருநராற்றுப்படைக்கு மதுரை ஆசிரியர் பாரத்துவாசி நச்சினார்க்கினியர் செய்த உரை முற்றிற்று." என்ற வாக்கியத்தின் அடிப்படையில் பாடியவர் முடத் தாமக்கண்ணியார் என்பதும், பாடப்பட்டவன் சோழன் கரிகாற் பெருவளத்தான் என்பதும் விளங்கும்.

இது போன்றே பெரும்பாணாற்றுப்படையைப் பாடியவர் கடியலூர் உருத்திரங்கண்ணனார் என்பதும் பாடப்பட்டவன் தொண்டைமான் இளந்திரையன் என்பதும், பட்டினப்பாலையைப் பாடியவர் பெரும்பாணாற்றுப்படையைப் பாடிய கடியலூர் உருத்திரங்கண்ணனாரே என்பதும், பாடப்பட்டவன் சோழன் கரிகாற்பெருவளத்தான் என்பதும் அறியற்பாலன. மலைபடுகடாம், குறிஞ்சிப்பாட்டு, மதுரைக்காஞ்சி, நெடுநல்வாடை,முல்லைப்பாட்டு, சிறுபாணாற்றுப்படை ஆகியவற்றைப் பாடியவர்கள் முறையே இரணிய முட்டத்துப் பெருங்குன்றூர்ப் பெருங்கௌசிகனார், கபிலர், மாங்குடி மருதனார், நக்கீரர், காவிரிப்பூம்பட்டினத்துப் பொன் வாணிகனார் மகனார் நப்பூதனார், இடைக்கழிநாட்டு நல்லூர் நத்தத்தனார் ஆகியோர் என்பதும் இங்குக் குறிப்பிடத்தக்கது.

இவற்றுள் மதுரைக்காஞ்சி, நெடுநல்வாடை ஆகியவற்றின் பாட்டுடைத்தலைவன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ் செழியன் என்பதும், மலைபடுகடாத்தின் பாட்டுடைத்தலைவன் பல்குன்றக் கோட்டத்துச் செங்கண் மாத்துவேள் நன்னன்சேய் நன்னன் என்பதும், சிறுபாணாற்றுப்படையின் தலைவன் ஓய்மா நாட்டு நல்லியக்கோடன் என்பதும் நாம் அறிந்த செய்திகளே.

திருமுருகாற்றுப்படையையும், நெடுநல்வாடையையும் பாடியவர் ஒருவரா அல்லது இருவரா என்பது விவாதத்திற்கு உரிய தாகும். பேராசிரியர்கள் வையாபுரிப் பிள்ளை, இராசமாணிக்கம் போன்றவர்கள் இவர்கள் வெவ்வேறு எனக் கருதுகின்றனர். இவ் எண்ணமே பொருத்தம் எனத் தோன்றுகிறது.

இப்பாடல்களைத் தொகுத்தோர் பெயரும், தொகுப்பித்தோர் பெயரும் தெரியவில்லை. எனினும் சங்ககாலத்திலேயே தொகுக்கப் பட்டுவிட்டது என்பது உ.வே. சாமிநாதையரின் எண்ணம்.

இப்பாடல்கள் பாடப்பட்ட காலம் தொகுப்பு பற்றிப் பின்னர்க் காணலாம்.

4. 3 முன் பழந்தமிழ்ந் நூல்களின் தொகுப்பு வரிசைமுறை

4. 3. 1 எட்டுத்தொகை (முன் பழந்தமிழ்த் தொகை நூல்கள்)

எட்டுத்தொகை, பத்துப்பாட்டு ஆகியவை சங்க நூல்கள் எனக் கருதப்படுகின்றன. இவற்றில் எட்டுத்தொகையின்கண் இரண்டாயிரத்து முன்னூற்று எண்பத்து ஒரு பாடல்களும் பத்துப்பாட்டில் பத்துப் பாடல்களும் காணப்படுகின்றன. இவற்றைப் பாடிய புலவர்களின் எண்ணிக்கை நானூற்று எழுபத்து மூன்று. இவர்கள் அனைவரும் ஒரே காலத்தவரோ அன்றி ஒரே சமயத்தினரோ அல்லது ஒரே பகுதியினரோ அல்லர். இதுபற்றிப் பேசும் உ. வே. சாமிநாதையர் புறநானூற்றைப் பற்றிக் கூறும்போது "இந்நூல் செய்யுட்களால் பாடப்பட்டவர்கள் ஒரு காலத்தாரல்லர்; ஒரு குலத்தாரல்லர்; ஒரு சாதியாரல்லர்; ஓரிடத்தாருமல்லர். பாடியவர்களும் இத்தன்மையரே, இவர்களில் அந்தணர் சிலர்; அரசர் பலர்; வணிகர் பலர்; வேளாளர் பலர்; பெண்பாலரும் உளர்." எனக் கூறுவார் (புறநானூறு, மறுபதிப்பு 1956: 9). இது பிற நூல்களுக்கும் பொருந்தும். எனவே இப்புலவர் பெருமக்கள் பலவேறு காலத்தவர் என்பதும், பலவேறு பகுதியினர் என்பதும் இங்கு நினைவு கூரற்பாலன

எனினும் இவர்கள் அனைவரும் நானூறு அல்லது ஐநூறு ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலப் பகுதியில் வாழ்ந்தவர்கள் எனக் கருத இடமுண்டு. பதிற்றுப்பத்து அரசர்களின் காலப்பகுதி ஏறத்தாழ இருநூற்று ஐம்பது வருடங்களாகும். இவர்களுக்கு முன்னும் பின்னும் ஒரு நூறு ஆண்டுகளைக் கூட்டின் ஏகதேசம் 450-500 ஆண்டு காலப்பகுதி எனக் கருதலாம். இக் காலப்பகுதியில்தான் சங்க இலக்கியங்கள் அனைத்தும் ஆக்கப்பட்டிருக்கலாம் எனக் கருவதில் தவறு இல்லை. சங்ககாலப் பாடல்கள் குறுந்தொகை என்றோ அல்லது நற்றிணை என்றோ தனித்தனி நூல்களாகப் பாடப்படவில்லை. தனித்தனிச் செய்யுட்களாக அவ்வப்போது பாடப்பட்டனவேயன்றித் தனித்தனி நூல்களாக ஆக்கப்படவில்லை. இதனால் சங்கநூல்களில் எவை முதன் முதலில் பாடப்பட்டன எனக் கூறுவது அர்த்தமற்ற ஒன்று. இதைப்போன்றே முதன் முதலாக இயற்றப்பட்ட பாடல்கள் எவை என்றோ அல்லது

எந்நூலில் அவை உள்ளவை என்றோ திட்டவட்டமாகக் கூறுதல் முடியாது. எல்லா நூல்களிலும் உள்ள பல பாடல்கள் சம காலத்தில் தோன்றியவையாக இருக்கலாம். இன்னும் பல பிந்தியனவாகவும் பல முந்தியனவாகவும் இருக்கலாம். இவற்றையெல்லாம் பின்னர் வகுத்துத் தொகுத்துப் பலவேறு நூல்களாகத் தொகுத்தனர். தொகுக்கப்பட்ட இந்நிலையில் பலவேறு நூல்களின் கீழெல்லைக் காலத்தை ஓரளவு நிர்ணயம் செய்யமுடிகின்றதே அன்றி மேலெல் லையை நிர்ணயம் செய்ய முடியவில்லை. மேலும் குறுந்தொகை, நற்றிணை, அகம், புறம் போன்ற எட்டுத்தொகை நூல்களில் குறுந் தொகை முந்தியது அல்லது பிந்தியது என்றோ, அல்லது நற்றிணை முந்தியது அல்லது பிந்தியது என்றோ கூறுவது பொருந்தாது. இவ்வாறே பிற நூல்களையும் பிந்தியன அல்லது முந்தியன என்று கூறுவதும் ஒவ்வாது. ஒரு நூலில் காணப்படும் பாடல்களைப் பாடிய புலவர்கள் பிற நூல்களிலும் பாடியுள்ளனர். எனவே சம காலத்துப் பாடல்கள் எல்லா நூல்களிலும் காணப்படுகின்றன. எடுத்துக்காட்டாக, கபிலர் பாடிய பாடல்கள் பரிபாடல் ஒழிந்த எல்லாச் சங்க இலக்கியங்களிலும் உள்ளன. ஆனால் எந்த நூல் முன்னர் தொகுக்கப்பட்டது எனக் கூறுதல் இயலும்.

சங்க நூல்களில் எட்டுத்தொகை நூல்கள் தொகுக்கப்பட்ட முறை யை ஆராய்ந்த வையாபுரிப்பிள்ளை (1952: 70-83) பலவேறு காரணங்களைக் காட்டி

குறுந்தொகை
நற்றிணை
அகநானூறு
ஐங்குறுநூறு
பதிற்றுப்பத்து
புறநானூறு

என்ற வரிசையில் மேலே காட்டிய நூல்கள் தொகுக்கப்பட்டன எனக் கூறுவார். உ.வே, சாமிநாத இயரும் (குறுந்தொகை, மறுபதிப்பு 1962: 7-8) சங்க இலக்கியங்களில் குறுந்தொகையே முதலில் தொகுக்கப்ட்டது என்பார். இவரை அடியொற்றித்தான் வையாபுரிப் பிள்ளை குறுந்தொகையை முதலில் வைப்பார்.

குறுந்தொகை, நற்றிணை, அகநானூறு ஆகிய மூன்று நூல்களும் அடிகளின் எண்ணிக்கை அளவை அடிப்படையாக வைத்துத் தொகுக்கப்பெற்றன என்பதும் நற்றிணை, அகம் ஆகியவற்றைத் தொகுப்பித்தவர்கள் பாண்டியர்கள் என்பதும் நாம் அறிந்த செய்திகள். குறுந்தொகையைத் தொகுத்தவர் பூரிக்கோ ஆயினமையின் இவர் அகநானூற்றைத் தொகுத்த மதுரை உப்பூரிக்குடி கிழாருடன் தொடர்புடையவர் எனக் கூறிக் குறுந்தொகையும் மதுரையில் தொகுக்கப்பட்டது எனவும் பிள்ளை கருதுவார்.

4. 3. 1. 1 நற்றிணையும் குறுந்தொகையும்

வையாபுரிப்பிள்ளை நற்றிணையைத் தொகுத்த பன்னாடு தந்த பாண்டியன் மாறன்வழுதியும் குறுந்தொகையில் இருநூற்று எழுபதாம் பாடலைப் பாடிய பாண்டியன் பன்னாடு தந்தானும் ஒருவரே என்றும் இவனே நற்றிணையில் இரண்டு செய்யுட்களைப் (8, 301) பாடியவன் என்றும் கூறுவார். நற்றிணையை இவன் தொகுத்ததுடன் குறுந்தொகையிலும் செய்யுள் இயற்றியிருத்தலின் ‘இந்நூலைத் தொகுத்த காலத்துக்கு முன்பாகவேனும் அல்லது சமகாலத்திலேனும் இவன் வாழ்ந்தவனாதல் வேண்டும்’’ என்பார் (1952: 72). இவர் இந்நூல் என்பது குறுந்தொகையையே. குறுந்தொகையில் இவன் பாடியிருப்பதால் இது இவனுக்குப் பின்னரும் தொகுக்கப்பட்டிருக்கலாம். ஆனால் நற்றிணை இவன் காலத்திலேயே தொகுக்கப்பட்டுவிட்டது. எனவே நற்றிணைப் பாக்கள் அனைத்தும் இவனுக்கு முன்பாக வாழ்ந்த பல புலவர்களாலும், இவனுடன் ஒத்த காலத்தில் வாழ்ந்த புலவர்களாலும் பாடப்பட்ட பாக்களே. இவனுக்குப் பின்னர் வாழ்ந்த புலவர்களால் பாடப்பட்ட பாக்கள் நற்றிணையில் நிச்சயமாக இடம் பெற்றிருக்க முடியாது.

ஆனால் குறுந்தொகையைப் பற்றி அங்ஙனம் திட்டவட்டமாகக் கூறமுடியாது. குறுந்தொகையைத் தொகுத்தவர் பூரிக்கோ. இவர் மாறன்வழுதிக்குப் பின்னரோ அல்லது சமகாலத்திலோ தான் வாழ்ந்திருக்க வேண்டும். ஆனால் குறுந்தொகையிலும் பாண்டியன் மாறன்வழுதி பாடியுள்ளான். எனவே முன்னர்க் குறிப்பிட்டபடி குறுந்தொகை

இவனுக்கு பின்னர்த் தொகுக்கப்பட்டிருக்கலாம்;

அல்லது

(2) இவனுடைய காலத்திலேயே

(அ) இவன் நற்றிணையைத் தொகுப்பித்ததற்கு முன்னர், அல்லது

(ஆ) இவன் நற்றிணையைத் தொகுப்பித்ததற்குப் பின்னர்

தொகுக்கப்பட்டிருக்கலாம். இவன் காலத்திற்கு முன்னர் நிச்சயமாகத் தொகுக்கப்பட்டிருக்க முடியாது எனத் திட்டவட்டமாகக் கருதலாம்.

இதுபற்றிக் கூறும் பிள்ளை ''இவ்விரண்டு நூல்களும் ஏறத்தாழச் சமகாலத்தில் தொகுக்கப்பட்டன வென்று கொள்ளலாம்'' (மேற்படி, பக் 72) என்று கூறிக் குறுந்தொகை முந்தியதாக இருக்கலாம் என்பதற்கு இரு காரணங்களைக் காட்டுவார்.

(1) குறுந்தொகையில் நான்கு (9, 356,378, 396) பாக்களைப் பாடிய கயமனார் என்ற புலவர்

''பாசடை நிவந்த ....
... ...
கயமுழ்கு மகளிர் கண்ணின் மானும்'' (குறு 9)

என்ற குறுந்தொகைப் பாடலால்தான் இப்பெயர் பெற்றார் என்றும் இவர் பாடிய பாடல்கள் நற்றிணையில் கயமனார் என்னும் காரணப் பெயரில் காணப்படுவதால் காரணப்பெயர் ஏற்படுவதற்குக் காரணமாக இருந்த குறுந்தொகைப் பாடல் முந்தியது என்றும் அக்காரணப்பெயரைக் கொண்டுள்ள நற்றிணை பிந்தியது என்றும் கூறுவார். இதே காரணங்களைக் காட்டி உ.வே.சாமிநாதையர் (குறுந்தொகை, மறுபதிப்பு 1962:9) றுெந்தொகை எல்லா நூல்களுக்கும் முன்னர்த் தொகுக்கப்பட்டது எனக் கூறுவார். இதைப் பின்பற்றித்தான் பிள்ளையும் குறுந்தொகை முன்னர்த் தொகுக்கப்பட்டது என்பார். இவ்வாதம் ஏற்கக் கூடியதன்று. அப்படியே ஏற்றுக் கொண்டாலும் இவர் பாடிய பாடல்களுள் குறுந்தொகைப் பாடல்கள் முந்தியன என்றும் நற்றிணைப் பாடல்கள் பிந்தியன

என்றும் கொள்ளலாமேயன்றிக் குறுந்தொகையில் காணப்படும் பாடல்களில் இறுதியாகப் பாடப்பட்ட பாடல் நற்றிணையில் இறுதியாகப் பாடப்பட்ட பாடல்களுக்கு முந்தியன என்று கொள்ள முடியாது. கயமனாருக்குப் பின்னர் வாழ்ந்த எத்தனையோ புலவர்கள் இரு நூல்களைச் சார்ந்த பாடல்கள் பலவற்றைப் பாடியிருக்க முடியும்.

குறுந்தொகைப் பாடலின் காரணமாகக் கயமனார் போன்ற பெயர்கள் ஏற்பட்டிருந்தாலும் அவர்கள் பாடல்கள் அனைத்தையும் (முன்னர்த் தோன்றியிருப்பினும் அல்லது பின்னர்த் தோன்றியிருப் பினும்) காரணப்பெயர் கொண்டு காட்டலாம். குறுந்தொகைப் பாடலே காரணப் பெயராலேயே குறிக்கப்பட்டுள்ளது. எனவே குறுந்தொகைப் பாடல் முந்தியது என்ற வாதம் பொருந்தாது.

(2) குறுந்தொகை நான்கடிச் சிறுமையுடையது. எட்டடிப் பெருமை கொண்டது. ஆனால் நற்றிணை ஒன்பது அடிச் சிறுமை யும் பன்னிரண்டு அடிப் பெருமையும் கொண்டது. எனவே குறுந் தொகை முதன் முதலாகத் தொகுக்கப்பட்டிருக்கலாம் என்பார்.

இதுவும் பொருந்தும் வகையாக அமையவில்லை. எவ்வாறு கீழெல்லையிலிருந்து போக முடியுமோ அதுபோன்று மேலெல்லை யிலிருந்தும் வரமுடியும். இதுபற்றிப் பின்னர்க் காண்போம்.

4.3.1.2 நற்றிணையும் அகநானூறும்

நற்றிணைக்குப் பின்னர்தான் அகநானூறு தொகுக்கப்பட்டது என்பது பிள்ளையின் நிலை. நற்றிணையைத் தொகுப்பித்தவன் பாண்டியன் மாறன்வழுதி. இவனே நற்றிணையிலும், குறுந் தொகையிலும் பாடியுள்ளான்.

இதைப் போன்றே அகநானூற்றைத் தொகுப்பித்தவன் உக்கிரப்பெருவழுதி. இவன் பாடிய செய்யுட்களும் அகநானூற் றிலும் நற்றிணையிலும் உள்ளன. அகநானூறு இவன் காலத்தி லேயே தொகுக்கப்பட்டுவிட்டது. ஆனால் இவனே நற்றிணையில் பாடியிருப்பதால் நற்றிணைத் தொகுப்பில் மூன்று சாத்தியங்களே இருக்கமுடியும். நற்றிணை

(1) இவன் காலத்திற்குப் பின்னரோ அல்லது

(2) இவன் காலத்திலேயே

(அ) அகநானூறு தொகுக்கப்பட்டதற்குச் சிறிது முன்னரோ அல்லது

(ஆ) சிறிது பின்னரோ தொகுக்கப்பட்டிருக்க வேண்டும்

நிச்சயமாக இவன் காலத்திற்கு முன்னர்த் தொகுக்கப்பட்டிருக்க முடியாது. இவன் காலத்தில் தொகுக்கப்பட்டிருக்கும் என எண்ணுவதற்கு இயலாத நிலை உள்ளது. நற்றிணையைத் தொகுப்பித்தவனும் பாண்டியனே. இவனும் பாண்டியனே. இவர்கள் இருவரும் ஒரே காலத்தவர்கள் என எண்ணுவதற் குரிய சான்றுகள் எதுவுமில்லை. மேலும் இருவரும் ஒரே காலத் தில் ஒருவர் அகத்தையும் மற்றொருவர் நற்றிணையையும் தொகுப்பித்தனர் என எண்ணுவது பொருந்தாது. எனவே இவனே நற்றிணையிலும் பாடியிருப்பதால் அகநானூறு தொகுக்கப்பட்ட காலத்திற்குப் பின்னர்தான் நற்றிணை தொகுக்கப்பட்டிருக்க வேண்டும் என முடிவு கட்டலாம். அகத்தில் இவன் பாடல் அமைந்திருப்பதும் இவன் இதைத் தொகுப்பதற்கு ஒரு அடிப் படைக் காரணமாக அமையலாம்.

அகநானூறு இவன் காலத்தில் தொகுக்கப்பட்டுவிட்டதால் இவனுடைய பாடல்களும் இவன் காலத்தில் வாழ்ந்த புலவர்களின் பாடல்களுமே அகநானூற்றில் பிந்திய பாடல்களாகக் கருதப்பட வேண்டும். இவனைப்பாடியவர்கள் ஐயூர் மூலங்கிழார், ஔவையார் ஆகியோர்.

அகநானூறு நற்றிணைக்கு முன்னரே தொகுக்கப்பட்டுவிட்டது என்று கொண்டால் அடியளவை வைத்துக் கொண்டு, குறுந் தொகை, நற்றிணை, அகநானூறு என வரிசைப்படுத்துவது பொருந்தாத வாதமாகிவிடும். அகநானூறு பதின்மூன்றடிச் சிறுமையையும் முப்பத்தொரு அடிப்பெருமையையும் கொண்டது. நற்றிணையோ பன்னிரண்டடிப் பெருமையும், ஒன்பதடிச் சிறுமை யும் கொண்டது.

முன்னர்க் குறிப்பிட்டபடி நற்றிணையைத் தொகுப்பித்தவன்

பன்னாடு தந்த பாண்டியன் மாறன்வழுதி. இவன் நற்றிணையில் மட்டுமன்றிக் குறுந்தொகையிலும் பாடியுள்ளான். நற்றிணைப் பாடல்கள் இவன் காலத்தோடு முடிவு பெற்றுவிட்டன. ஆனால் குறுந்தொகையோ இவன் காலத்திற்குப் பின்னரும் சில பாடல்கள் பாடப்பட்டிருக்கலாம். இவனுடைய பாடல்களும் நற்றிணையில் இடம் பெற்றிருப்பதால் அகநானூற்றைத் தொகுத்த உக்கிரப் பெருவழுதியைப் போன்று தன்னுடைய பாடல் இடம் பெற்ற நற்றிணையை இவன் தொகுப்பித்திருக்கலாம்.

நற்றிணையைத் தொகுப்பித்த மாறன்வழுதியைச் சிறப்பித்துப் பாடியவர் கடுவன் இளமள்ளனார். இவர் நற்றிணையில் மட்டுமன்றிக் குறுந்தொகையிலும் (1) அகத்திலும் (2) பாடியுள்ளார். எனவே குறுந்தொகைத் தொகுப்பு நற்றிணைக்குப் பின்னர் என எண்ணலாம். அகம் நற்றிணைக்கு முன்னரே தொகுக்கப்பட்டது என்பதைக் கண்டோம். எனவே இரண்டும் ஒன்றையடுத்து மற்றொன்று ஒருவர் காலத்திலேயே தொகுக்கப்பட்டிருக்க வேண்டும்.

4.3.1.3 அகமும் ஐங்குறுநூறும்

உக்கிரப்பெருவழுதியின் நண்பன் இராசசூயம்வேட்ட பெருநற்கிள்ளி எனக் கூறுவர். (புறநானூறு, மறுபதிப்பு 1956:67). ஐங்குறுநூற்றைத் தொகுப்பித்த யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரலிரும்பொறையும், பெருநற்கிள்ளியும் போரிட்டதாகக் காணப்படுகிறது.எனவே உக்கிரப்பெருவழுதி, இரும்பொறை, பெருநற்கிள்ளி ஆகியவர்கள் சம காலத்தினர் என ஊகிக்கலாம். எனவே ஐங்குறுநூறும் அகநானூறும் சமகாலத்திலோ அல்லது சற்று முன் பின்னாகவோ அடுத்துத் தொகுக்கப்பட்டிருக்கலாம் எனக் கருத இடம் உண்டு.

இராசசூயம்வேட்ட பெருநற்கிள்ளியைப் பாடியவர்கள் உலோச்சனார், ஔவையார், பாண்டரங்கண்ணனார், பேரிச்சாத்தனார் ஆகிய புலவர்கள். இவர்களில் உலோச்சனார் புறத்தில் மட்டுமன்றி நற்றிணையிலும் பாடியுள்ளார். ஔவையார் அகநானூறு, நற்றிணை, குறுந்தொகை, புறநானூறு ஆகியவற்றிலும், பேரிச்சாத்தனார் அகம், நற்றிணை, குறுந்தொகை, புறம் ஆகியவற்றிலும்

பாடியுள்ளனர், இவர்களால் பாடப்பட்ட அகநானூற்றுப் பாடல்கள் இவர்கள் காலத்து வாழ்ந்த உக்கிரப்பெருவழுதியின் காலத்திலேயே தொகுக்கப்பட்ட நிலையில் நற்றிணை, குறுந்தொகை ஆகியவை பின்னர்த் தொகுக்கப்பட்டவை எனக் கருதலாம்.

யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரலிரும்பொறையும் தலையாலங் கானத்துச்செருவென்ற நெடுஞ்செழியனும் போரிட்டனர் (மேற்படி 1956:68). எனவே இருவரும் ஒரே காலத்தவர் என்பது வெளிப் படை. தலையாலங்கானத்துச்செருவென்ற நெடுஞ்செழியனைப் பாடியவர்கள் இடைக்குன்றூர்கிழார், கல்லாடனார், குறுங் கோழியூர்கிழார், நக்கீரர், பொதும்பில்கிழார், மாங்குடி மருதனார் ஆகியோர். இவர்களுள் கல்லாடனார், அகம், குறுந்தொகை, புறம் ஆகியவற்றிலும், நக்கீரர், அகம், குறுந்தொகை, நற்றிணை, புறம் ஆகியவற்றிலும் மாங்குடி மருதனார் அகம், குறுந்தொகை, நற்றிணை, புறம் ஆகியவற்றிலும் பாடியுள்ளனர்.

இவர்கள் பாடிய அகநானூற்றுப் பாடல்களும் பிறவும் சம காலத்தன. ஆயினும் அகநானூறு உக்கிரப்பெருவழுதி காலத்தி லேயே தொகுக்கப்பட்ட நிலையில் நற்றிணை, குறுந்தொகை ஆகிய வற்றிற்கு முன்னரே தொகுககப்பட்டுவிட்டது எனக் கருதலாம்.

ஐங்குறுநூற்றைத் தொகுத்த கூடலூர் கிழாரும் யானைக்கட் சேய்மாந்தரஞ்சேரலிரும்பொறை காலத்தவனான தலையாலங் கானத்துச்செருவென்ற நெடுஞ்செழியனைப் பாடிய மாங்குடி மரு தனாரும் முறையே குறுந்தொகையிலும், குறுந்தொகை, நற்றிணை, அகம் ஆகியவற்றிலும் பாடியிருப்பதால் ஐங்குறுநூறு முன்னரே தொகுக்கப்பட்டிருக்க வேண்டும் எனக் கூறும் பிள்ளை இதே வாதத் தினை நற்றிணை, குறுந்தொகைத் தொகுப்பிலோ அல்லது அக நானூறு, நற்றிணைத் தொகுப்பிலோ கடைப்பிடிக்கவில்லை. இவ் வாதத்தினை மேற்கொண்டால் அகத்தைத் தொகுப்பித்த உக்கிரப் பெருவழுதி நற்றிணையில் பாடியிருப்பதால் அகத்துக்குப் பின்னரே நற்றிணை தொகுக்கப்பட்டிருக்கவேண்டும் என்பதும் நற்றிணை யைத் தொகுப்பித்த பன்னாடு தந்த பாண்டியன் மாறன்வழுதி குறுந்தொகையில் பாடியிருப்பதால் நற்றிணைக்குப் பின்னரே குறுந்தொகை தொகுக்கப்பட்டிருக்கவேண்டும் என்பதும் பொருந்து வனாகும்.

ஐங்குறுநூற்றைத் தொகுப்பித்தவன் யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரலிரும்பொறை. தொகுத்தவர் புலத்துறை முற்றிய கூடலூர் கிழார். இவர் புறநானூற்றில்

''மைந்துடையானை கைவைத் துறங்கவும்
... ...
மேலோ ருலக மெய்தினனாகலின்...'' (229)

எனப் பாடியிருப்பதால் யானைக்கட்சேய்க்குப் பின்னரும் உயிர் வாழ்ந்தார் என்பதும் அதற்கு முன்னரே ஐங்குறுநூறு இவரால் (யானைக்கட்சேய் உயிரோடு இருக்கும் போதே) தொகுக்கப் பட்டுவிட்டது என்பதும் வெள்ளிடைமலை.

ஐங்குறுநூற்றின் தொகுப்பு அகநானூறு, நற்றிணை, குறுந் தொகை ஆகியவை தொகுக்கப்பட்ட காலங்களுக்கு முற்பட்டதா இல்லை பிற்பட்டதா என்ற கேள்வியை எழுப்பும் பிள்ளை

(1) யானைக்கட்சேய் இறந்த செய்தியைக் குறிக்கும் கிழார் குறுந்தொகையிலும் மூன்று செய்யுட்களை (166, 167, 214) இயற்றியுள்ளார் எனவும்

(2) யானைக்கட்சேய் (17 ஆம் புறப்பாட்டால்) தலையாலங் கானத்துச் செருவென்ற செழியன் காலத்தவன் என்றும் இவனைப் பற்றிப் பாடிய மாங்குடி மருதனார் அகம் (89) குறுந்தொகை 164, 173, 302) நற்றிணை (120, 123) புறம் (24, 26, 313, 335, 372, 396) ஆகிய நான்கு நூல்களிலும் செய்யுட்கள் இயற்றியுள்ளார் எனவும் காட்டி ''இச் செய்திகளை ஊன்றிநோக்கினால் இங்குக் குறித்த நூல்களனைத்திற்கும் முற்பட்டு ஐங்குறுநூறு தொகுக்கப்பட்டதாகலாமென்று கொள்ளுதல் பொருந்தும். மேலும் ஐங்குறுநூறு தொகுத்தற்கு எளிதாயுள்ளது. அடியின் சிற்றெல்லை குறுந்தொகையைக் காட்டிலும் குறைந்துள்ளது. இக்காரணங்களை நோக்கும் போது ஐங்குறுநூறு முதலில் தோன்றியது என்று கொள்ளலாம்'' (1952: 76-77) என முடிவு கட்டுவார். மேலும் திணைப்பகுப்புப் பற்றிப் பேசிக் ''குறுந்தொகை, நற்றிணை, அகநானூறு என்ற மூன்றும் ஏறத்தாழ சம காலத்துத்தொகுக்கப் பட்டிருக்க வேண்டுமென்று துணிந்தோம். இத்துணிவோடு

பொருந்த ஐங்குறுநூறு எல்லாவற்றிலும் முற்படத் தொகுக்கப் பட்டதென நாம் கொள்ளலாம்'' என்று முடிவுகட்டுவார்.

இவ்வாறு முடிவுகட்டும் பிள்ளை பின்னர் எந்தக் காரணமும் கூறாமல் ''எனவே தொகைநூல்களைக் கால முறையில் கீழ்வருமாறு அமைக்கலாம்'' (மேற்படி, பக்கம். 80) என்று கூறி

1. குறுந்தொகை
2. நற்றிணை
3. அகநானூறு
4. ஐங்குறுநூறு
5. பதிற்றுப்பத்து
6. புறநானூறு

என வைப்பார். இதன்படி ஐங்குறுநூறு, குறுந்தொகை, நற்றிணை, அகநானூறு ஆகியவற்றின் பின்னர்த் தள்ளப்பட்டுள்ளது. இதற்குக் காரணம் எதுவென அறிய முடியவில்லை. எனினும் உ. வே சாமிநாதையரின் செல்வாக்காக இருக்கலாம் என்பதைப் பின்னர் விளக்கிக் காட்டியுள்ளேன்.

ஐங்குறுநூறு, குறுந்தொகை, நற்றிணை, அகம் ஆகியவை தொகுக்கப்பட்டதற்கு முன்னமேயே தொகுக்கப்பட்டது என்பது வெள்ளிடை மலையாகும்.

ஐங்குறுநூற்றில் பாடிய ஐந்து புலவர்களும் குறுந்தொகை, நற்றிணை, அகம் ஆகிய நூல்களிலும் பாடியுள்ளனர். மருதம் பாடிய ஓரம்போகியார்அகம் (2), குறுந்தொகை (5), நற்றிணை (2), புறம் (1) ஆகிய நூல்களிலும் நெய்தல் பாடிய அம்மூவனார் அகம் (6), குறுந்தொகை (11), நற்றிணை (10), ஆகிய நூல்களிலும், குறிஞ்சி பாடிய கபிலர் அகம் (18), குறுந்தொகை (29), நற்றிணை (20), புறம் (28) ஆகிய நூல்களிலும், பாலை பாடிய ஓதலாந்தையார் குறுந்தொகையிலும் (3), முல்லை பாடிய பேயனார் அகம் (1), குறுந்தொகை (4) ஆகிய நூல்களிலும் பாடியுள்ளனர்.

எல்லாப் புலவர்களும் குறுந்தொகையில் பாடியுள்ளமையால் குறுந்தொகைக்கு ஐங்குறுநூறு எவ்வாற்றானும் பிந்தியதன்று என முடிவு கட்டலாம். அகத்திலும் நால்வர் பாடியுள்ளனர்

நற்றிணையிலும் மூவர் பாடியுள்ளனர். எனவே ஐங்குறுநூறு இவற்றிற்குப் பிந்தியது என முடிவுகட்டுதல் முடியாததொன்று.

யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரலிரும்பொறை காலத்தவனான இராசசூயம்வேட்ட பெருநற்கிள்ளியைப் பாடிய உலோச்சனார் நற்றிணையிலும் ஔவையார் அகநானூறு, நற்றிணை, குறுந்தொகை ஆகியவற்றிலும் பேரிச்சாத்தனார் அகம், நற்றிணை, குறுந்தொகை ஆகியவற்றிலும் பாடியிருப்பதால் அகம்,நற்றிணை, குறுந்தொகை ஆகியவை தொகுக்கப்பட்டதற்கு முன்பே ஐங்குறுநூறு தொகுக்கப்பட்டுவிட்டதெனக் கருதலாம். அகம், நற்றிணை குறுந்தொகை, புறம் ஆகியவை இவர்கள் பாடல்களை மட்டுமல்லாமல் பிற புலவர்கள் பாடல்களையும் கொண்டுள்ளன என்பது இங்குச் சுட்டிக்காட்டற்பாலது. எல்லாப் புலவர்களும் குறுந்தொகையில் பாடியுள்ளனர். குறுந்தொகை இப்புலவர்கள் பாடிய பாடல்களோடு எத்தனையோ புலவர்கள் பாடிய பாடல்களையும் கொண்டது. பல இவர்களுக்கு முந்தியவர்கள் பாடியனவாக இருந்தாலும் கூட இன்னும் வேறுபல நிச்சயமாக இவர்களுக்குப் பிந்தியவர்கள் பாடியனவாகவே இருக்க வேண்டும்.

இதே வாதம் நற்றிணை,அகம் ஆகியவற்றிற்கும் பொருந்தும். இவர்களில் நால்வர் அகத்திலும், மூவர் நற்றிணையிலும் பாடியுள்ளனர்.

கூடலூர் கிழாரும் குறுந்தொகையில் பாடியுள்ளமை, குறுந்தொகைத் தொகுப்பு ஐங்குறுநூறுத் தொகுப்புக்குப் பின்னரே என்பதைத் தெளிவுப்படுத்தும்.

ஐங்குறுநூறு தொகுப்பின் காரணம் பற்றிக் கூறும் பிள்ளை மேலும் ஐங்குறுநூறு தொகுத்தற்கு எளிதாயுள்ளது. அடியின் சிற்றெல்லை குறுந்தொகையில் காட்டிலும் குறைந்துள்ளது என்பார். இவைதானா ஐங்குறுநூறு தொகுப்பிற்குக் காரணம்? இவை மட்டுமே தொகுப்பிற்குக் காரணம் எனக் கருதுவது பொருந்தாததாக உள்ளது. சேரவரசன் தொகுப்பித்தற்கு முக்கிய காரணம் வேறு ஒன்றாக இருக்கலாம் என எண்ணுவதில் தவறு எதுவும் இல்லை. இதுபற்றிப் பின்னர்க் காண்போம்.

4.3.1.4 பதிற்றுப்பத்து

பதிற்றுப்பத்து பத்துச் சேரவரசர்களைப் பற்றிப் பத்துப் புலவர்கள் பாடிய பத்துப் பத்துப் பாடல்களின் தொகுப்பாகும். முதல் பத்தும் இறுதிப் பத்தும் கிடைக்கவில்லை. இவை முறையே உதியஞ்சேரலையும் யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரலிரும்பொறையையும் பற்றிப் பாடியன எனக் கருதுவர். பிற எட்டுப் பத்துக்களும் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன், பல்யானைச் செல்கெழுகுட்டுவன், களங்காய்க்கண்ணி நார்முடிச்சேரல், கடல்பிறக்கோட்டிய செங்குட்டுவன், ஆடுகோட்பாட்டுச்சேரலாதன், செல்வக் கடுங்கோ வாழியாதன், தகடூர் எறிந்த பெருஞ்சேரலிரும்பொறை, இளஞ்சேரலிரும்பொறை ஆகியோர் பற்றி முறையே குமட்டூர்க் கண்ணனார், பாலைக்கௌதமனார், காப்பியாற்றுக்காப்பியனார், பரணர், காக்கைப்பாடினியார் நச்செள்ளையார், கபிலர், அரிசில் கிழார், பெருங்குன்றூர்க் கிழார் ஆகிய புலவர்களால் பாடப்பட்டவை.

இப்புலவர் பெருமக்களிற் பலர் பதிற்றுப்பத்தில் மட்டுமன்றிப் பிற இலக்கியங்களிலும் பாடியுள்ளனர்.

	ஐங்.	அகம்.	நற்.	குறு.	புறம்	பதிற்று
குமட்டூர்க் கண்ணனார்	–	–	–	–	–	11-20
பாலைக்கௌதமனார்	–	–	–	–	–	21–30
காப்பியாற்றுக் காப்பியனார்	–	–	–	–	–	31–10
பரணர்	–	34	12	16	13	41–50
காக்கைப்பாடினியார்	–	–	–	–1	1	51–60
கபிலர்	201–300	18	20	29	28	61–70
அரிசில் கிழார்	–	–	–	1	7	71–80
பெருங்குன்றூர்கிழார்	–	1	4	1	5	81–90

இப்புலவர்களுள் பலர் பாடப்பட்ட அரசர்களுடன் உடன் உறைந்தவர்கள் என்பதும் அவர்கள் காலத்திலேயே வாழ்ந்தவர்கள் என்பதும் நாம் அறிந்த உண்மை. (பார்க்க, 4.2.1). இப்புலவர்களுள் குமட்டூர்க்கண்ணனார், காப்பியாற்றுக்காப்பியனார் ஆகிய இருவரும் வேறு சங்க நூல்கள் எதிலும் பாடினாரில்லை. கபிலர் எல்லா நூல்களிலும், பரணர் ஐங்குறுநூறு ஒழிந்த பிற எல்லா

அஞ்சாதி	84-36	கதியாதி	83-24
ஒவ்வாதி	82-21		91-7
	86-14	காயாதி	89-7
	86-18,22	கொள்ளாதி	79-7,1
ஓராதி	88-15	நில்லாதி	79-21

முல்லைக்கலி

சொல்லாதி	108-19
வருந்தாதி	107-29

இவற்றைப் பாடியவர்களாகக் கருதப்படும் புலவர்கள் பாடிய பிற பாடல்கள் எதிலும் இத்தகைய சொற்களைக் காணமுடிவதில்லை. பாலைபாடிய பெருங் கடுங்கோ பாடிய பாடல்களில் வேறு ஏவல் வினைச் சொற்கள் காணப்படினும்

ஆழல்	அகம் 223-3
அழாஅல்	குறு 135-4

செய்யாதி வாய்பாட்டு ஏவல் காணப்படுவதில்லை. இதே நிலை தான் கபிலர் பாடல்களிலும் காணப்படுகிறது. அலையல் அகம் (158-7) வாரல் (அகம் 318-9) வாரல் (ஐங் 282-4) போன்ற சொற்களே உள்ளன.

–இகா, –ஐப்பாய், –ஐக்க, –ஈத்தை, –இத்தை, –ஐகா ஈற்று ஏவல்வினைச் சொற்கள் பரிபாடல் தவிர்ந்த ஏனைய சங்க இலக்கியங்களில் காணப்படாமல் கலித்தொகையில் மட்டுமே காணப்படுகின்றன. பரிபாடலிலும் ஒரு இடத்தில் (நில்லிகா பரி 11–104) மட்டுமே இவ்வகை வினைச்சொல் வருகிறது.

பாலைக்கலி

மறந்தைக்க	27-10,14, 18
மதித்தீத்தை	14–17

குறிஞ்சிக்கலி

பாடித்தை	40–10, 43–15,23

மருதக்கலி

காண்டிகா	99-9,12, 15
காண்டைப்பாய்	87–15, 89–13
ஈத்தை	86–30
உண்டீத்தை	85–32
பருகீத்தை	85-35
நின்றீத்தை	94-4

முல்லைக்கலி

காணிகா	105–36,40
கண்டைகா	105–44

நெய்தற்கலி

பாடித்தை	131–24, 34

5.2.2.3.8 -ஆர் சிறப்புவிகுதி

பெயர்ச்சொற்கள்- ஆர் சிறப்புவிகுதி பெற்றுவரும் பண்பினைக் கலித்தொகையிலேயே முதன்முதலாகக் காண்கிறோம்.

சாமனார் கலி 94-34

5.2.2.3.9 அல்லால் என்ற சொல்லாட்சி

'அல்லால்' என்ற சொல்லாட்சி கலித்தொகையில்தான் முதன் முதலில் காணப்படுகின்றது. குறிஞ்சிக்கலி ஒழிந்த ஏனைய கலிகளில் எல்லாம் இது உள்ளது. பத்து இடங்களில் இது உள்ளது. (14-10; 15-2; 67-4; 82-34; 83-24; 88-8; 102-9; 109-21; 142-49; 148-19)

பொருளல்லால் பொருளுமுண்டோ 14-10
பகையல்லால் 67-4
பெறின் அல்லால் 88-8

பிற சங்க இலக்கியங்களில் 'அன்றி' என்ற சொல்லாட்சியே உள்ளது.

5.2.2.3.10 எழுந்தாற்போல் என்ற தொடர்

மேலே கூறியனவற்றைப் போன்றே "எழுந்தாற்போல்" என்ற தொடராட்சியும் இதன்கண் உள்ளது. (கலி 118-3) 'எழுந்தன்ன' போன்ற ஆட்சியே பிற சங்க நூல்களில் உள்ளது.

கலித்தொகையைத் தொகுத்த நல்லந்துவனாரும் பரிபாடலில் பாடியுள்ள நல்லந்துவனாரும் ஒருவரா என்பது ஆராயற்பாலது. அகம், நற்றிணை ஆகியவற்றில் பாடிய நல்லந்துவனாரும், பரிபாடலில் பாடிய நல்லந்துவனாரும் ஒருவரே என்று முன்னர்க் கூறப்பட்டது. இது பற்றிக் கூறும் இராசமாணிக்கம் பிள்ளை இந் நல்லந்துவனார் பிற நூல்களில் உள்ள பாடல்களைப் பாடிய நல்லந்துவனாரினும் வேறுபட்டவர் எனக் கொள்ளலே பொருத்தமுடையது எனக் கூறுவார்.

-ஏல் விகுதியைக் கொண்ட நிபந்தனை எச்சமோ இரட்டைப் பன்மைச் சொற்களோ, செய்யாத வாய்பாட்டுப் பெயரெச்சமோ, செய்யாதி வாய்பாட்டு எதிர்மறை ஏவல் சொற்களோ, கலித்தொகையில் மட்டும் காணப்படும் சில வாய்பாட்டு வினைச்சொற்களோ பரிபாடல் நல்லந்துவனார் பாடல்களில் காணப்படாமை இங்குக் குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் கலித்தொகை சங்க இலக்கியங்களில் மிக வும் பிந்தியது எனக் கருதலாம்.

5.2.3 திருக்குறள்

5.2.3.1 காலம்

திருக்குறள் சங்க இலக்கியங்களுக்கு முந்தியதா, அல்லது பிந்தியதா என்ற வினா அறிஞர்களிடையே உள்ளது என்பதும் இராசமாணிக்கனார் போன்றவர்கள் சங்க இலக்கியத்துக்கு முன் னரே இது தோன்றியது எனப் பலவேறு காரணங்களைக் காட்டிக் கூறுவார் என்பதும் முன்னரே சுட்டிக்காட்டப்பட்டது. இது போன் றே பாரதியாரும் (1934) சங்க இலக்கியங்களுக்கு முற்பட்டது இது என்பார்.

இராசமாணிக்கம்பிள்ளை பலவேறு சங்கநூல்களில் காணப் படும் சிலச்சில பாடல் வரிகளுக்கும் திருக்குறள் பாடல்களுக்கும் இடையே உள்ள ஒற்றுமைகளை எடுத்துக்காட்டி திருக்குறளி லிருந்தே அப்பாடல்கள் எடுத்தாளப்பட்டன எனக் கூறி அதனால் சங்க இலக்கியங்களுக்கு முன்னர் எழுந்தது திருக்குறள் என வாதாடு வார். ஆனால் இவ்வொற்றுமைகள் பல இடங்களில் வழிவழியாக வரும் தொடர்களால் ஏற்பட்டன என எண்ணலாம். எடுத்துக்காட் டாக நற்றிணையில்

> நீரின் றமையா உலகம்......

என வருவதும்

> நீரின் றமையா துலகெனின்......

என்று திருக்குறளில் வருவதும் இத்தன்மையதே. எனவே இதனை வைத்துத் திருக்குறள் முந்தியது எனக் கூறுவது பொருந்தாது.

'அறம் பாடிற்றே' எனப் புறம் கூறுவதை வைத்துப் புறத்துக்கு முந்தியது குறள் எனக் கூறுவதும் இதைப் போன்றதே. 'அறம்' எனப்படுவது திருக்குறள் என்பது சிலரின் வாத மாகும். பண்டாரத்தாரும் இக்கருத்தையே கொண்டுள்ளார். டாக்டர் இலட்சுமணசாமி தன்னுடைய ''திருக்குறளும் சங்க இலக்

கியங்களும்'' என்ற கட்டுரையில் திருக்குறளே ''அறம் கூறும்'' (183) எனக் கூறுவதை எடுத்துக் காட்டி இவ்விரு நூல்களும் அறம் என்க் கூறுவது வேறு பெயர் தெரியாத ஒரு நூலாக இருக்கலாம் என்பார் (1979). எனவே இத்தகைய எடுத்துக்காட்டுக் களை வைத்துக்கொண்டு சங்க நூல்களுக்கு முந்தியது திருக்குறள் எனக் கூறல் முடியாது.

தமிழ் இலக்கிய வரலாறு பற்றி எழுதிய பல அறிஞர்கள் சங்க நூல்களுக்கும் பிந்தியதே திருக்குறள் எனக் குறிப்பிடுவர். தெ. பொ. மீனாட்சிசுந்தரன் இது சங்க இலக்கியங்களுக்குப் பிந் தியது என்றே குறிப்பிடுவார் (1968). இதைப்போன்றே மு. அருணா சலமும் சங்க இலக்கியங்களை அடுத்துத் தோன்றியது இது என் பார்.

திருக்குறளின் மொழி நிலையை ஆராயின் நிச்சயமாக இது சங்க இலக்கியங்களுக்குப் பிந்தியது என எண்ணலாம். பரிபாடல், கலித்தொகை ஆகியவற்றோடு ஒப்ப வைத்து எண்ணற்பாலது இது.

திருக்குறளின் மொழி நிலையை ஆராய்ந்த வையாபுரிப் பிள்ளை (1949: 68) இது கி. பி. ஏழாவது நூற்றாண்டு என்பார். இதற்குக் காரணம் பிற பதினெண் கீழ்க்கணக்கு நூல்களோடு இதனை ஒப்பவைத்து ஆராய்வதுதான். சங்க இலக்கியங்களுக்குப் பிந்தியது ஆயினும் கி.பி. ஏழாம் நூற்றாண்டு எனக் கூறுவது முற்றிலும் பொருந்தாத வாதமாகும்.

5.2.3.2. மொழி நிலை

திருக்குறளின் மொழிக் கூறுகளை நோக்கின் இதுவும் பின் பழந்தமிழ் நூல்களில் ஒன்று என்பது தெரியவரும்.

5.2.3.2.1 வையாபுரிப் பிள்ளை தரும் சான்றுகள்

பிள்ளை பலவேறு மொழிக் கூறுகளை இதன் சிறப்புக்கூறு களாகக் கருதுவார். ஆனால் அவற்றுள் பல பிற பின்பழந்தமிழ் நூல்களிலும் காணக்கிடக்கின்றன.

'மல்' ஈறு கொண்ட வினையெச்சம் திருக்குறளில் (101, 313)

காணப்படுகின்றது. செய்யாமல் (101, 313), சூழாமல் (1024) போன்றவை எடுத்துக்காட்டுக்களாகும்.

'அல்லால்' என்ற சொல்லாட்சியும் திருக்குறளில் உள்ளது (7, 8, 16, 233. 235, 377, 4)6. 497, 515, 762, 1095, 1188).

தாள் சேர்ந்தார்க்கல்லால்	குறள் 7, 8
துஞிவீழின் அல்லால்	குறள் 16
புகழல்லால்	குறள் 233

இதைப்போன்றே – ஏல் இறுதி கொண்ட நிபந்தனை யெச்சமும் (386, 556, 368, 655, 1118) 'ஆனால்' (மாண்பானால் 53) என்ற சொல்லாட்சியும் 'போழ்து' என்ற சொல்லாட்சியும் (1229) - அன் விகுதியும் இரட்டைப் பன்மைச் சொற்களும் திருக் குறளில் உள்ளன என்று கூறி இதனால் திருக்குறள் பிந்தியது என்பார் பிள்ளை.

5.2.3.2.2 மேற்கூறிய மொழிக் கூறுகளின் தன்மை

மேற்கூறிய சொல்லாட்சிகள் திருக்குறளில் மட்டுமன்றி வேறு சில நூல்களிலும் உள்ளன. முன்னர்க் குறிப்பிட்டபடி இரட்டைப் பன்மைச் சொற்கள் கலித்தொகையிலும் காணப்படு கின்றன.

-அன் விகுதியும் சங்க நூல்கள் அனைத்திலும் (காண்க. இயல் 6 (அகத்தியலிங்கம், 1982, 1983b: 64) காணப்படுகின்றது.

'மல்' விகுதிச் சொற்களும் மலைபடுகடாம் (படாமல், 365)' பரிபாடல் (கொளுத்தாமல் 11, 126), கலித்தொகை (படாமல் 4, 10) ஆகிய நூல்களிலும் வந்துள்ளன.

'அல்லால்' என்ற சொல்லாட்சியும் .கலித்தொகையில் பத்து இடங்களில் காணக்கிடக்கிறது (பொருளல்லால் 14,10). இதைப் போன்றே -ஏல் இறுதி கொண்ட நிபந்தனை எச்சமும், 'ஆனால்', 'போழ்து' ஆகிய சொல்லாட்சிகளும் கலித்தொகையிலும் உள்ளன. 'போழ்து' என்ற சொல்லாட்சி அகநானூறு (175-18, 194-19, 364-14), நற்றிணை (37-11) ஆகியவற்றிலும் உள்ளமை இங்குக்

குறிப்பிடத்தக்கது. எனினும் திருக்குறள் சங்க இலக்கியங்களுக்குப் பிந்தியது என்றே தோன்றுகிறது.

பின்பழந்தமிழ்க் கூறுகள் என்று கருதப்படும் பலகூறுகள் திருக்குறளில் காணப்படுகின்றன. கலித்தொகை ஒரு பின்பழந் தமிழ் நூலே. அதில் காணப்படும் பல கூறுகள் திருக்குறளிலும் உள்ளன. முன்னர்க் காட்டியபடி –ஏல் இறுதி நிபந்தனையெச்சம் திருக்குறளில் ஏராளமாக உள்ளது. இது கலித்தொகை திருக் குறள், சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய நூல்களில் மட்டுமே உள்ளது. கலித்தொகையில் பதினொரு இடங்களில் வந்திருக்கத் திருக்குறளில் பதின்மூன்று இடங்களில் வந்துள்ளமை இங்குக் குறிப்பிடத்தக்கது.

அல்லனேல்	குறள்	386
இன்றேல்	குறள்	556
		573
		575
		976
		1014
		1144
உண்டேல்	குறள்	368
		1075
		1151
செய்வானேல்	குறள்	655
வல்லையேல்	குறள்	1118
வறக்குமேல்	குறள்	18

இதைப்போன்றே இரட்டைப் பன்மைச் சொற்களும் (பூரியர்) கள் (919), மற்றையவர்கள் (263) ஒரு பின்பழந்தமிழ்க் கூறே. இதுவும் கலித்தொகை, திருக்குறள், சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய நூல்களில் மட்டுமே காணப்படுகின்றது. (காண்க: இயல் 6.)

''அல்லால்'' என்ற சொல்லாட்சியும் கலித்தொகை (25.3) திருக்குறள் (263), சிலப்பதிகாரம் (10,227), மணிமேகலை (30.14)

15) ஆகிய நூல்களில் மட்டுமே உள்ளது.

"ஆனால்" என்பது கலித்தொகை (108-9), திருக்குறள் (53) ஆகிய இருநூல்களில் மட்டுமே உள்ளது.

5.2.3.2.3 மேலும் சில கூறுகள்

இவை மட்டுமன்றி வேறுபல கூறுகளும் திருக்குறள் சங்க இலக்கியங்களுக்குப் பிந்தியது என்பதை நன்குக் காட்டும்.

5.2.3.2.3.1 செய்யாத வாய்பாட்டுப் பெயரெச்சம்

"செய்யாத" வாய்பாட்டுப் பெயரெச்சம் சங்க இலக்கியங்களில் புறநானூறு, கலித்தொகை ஆகிய இரு இலக்கியங்களில் மட்டுமே உள்ளது. புறநானூற்றில் முன்னர்க் குறிப்பிட்டபடி இரு இடங்களில் மட்டுமே காணப்பட (27-19, 126-14), திருக்குறளில் பதினைந்து இடங்களில் காணப்படுகின்றது.

இல்லாத	குறள் 198, 412, 448, 574, 749, 945
எண்ணாத	குறள் 568
தூக்காத	குறள் 480
தோட்கப்படாத	குறள் 418
படாத	குறள் 776
நோக்காத	குறள் 148
அமையாத	குறள் 682, 825
அமைவிலாத	குறள் 740
ஆகாத	குறள் 537

5.2.3.2.3.2 - கள் உயர்திணைப் பன்மை விகுதி

உயர்திணைப் பன்மையில் வரும் "கள்" விகுதி பின்பழந்தமிழ் நூல்களான பரிபாடல், குறள், சிலம்பு, மணிமேகலை ஆகியவற்றில் மட்டுமே உள்ளது.

"அச்சமே கீழ்களது ஆசாரம் எச்சம்
அவாவுண் டேல் உண்டாம் சிறிது" குறள் 1075

5.2.3.2.3.3 பொருட்டு என்னும் உருபு

பொருட்டு என்ற பின்னுருபு குறள், சிலம்பு, மணிமேகலை ஆகிய நூல்களில் மட்டுமே உள்ளது.

செய்தற் பொருட்டு	குறள் 81, 212
தினற்பொருட்டு	குறள் 256
விலை பொருட்டு	குறள் 256
நகுதற்பொருட்டு	குறள் 784
கொடுத்தற்பொருட்டு	குறள் 725
இடித்தற் பொருட்டு	குறள் 784

போன்றவை இப்பண்பை நன்றாகக் காட்டும்.

5.2.3.2.3.4 வினையாலணையும் பெயர்கள்

வினையாலணையும் பெயர்களிலும் திருக்குறளில் சில புதிய பண்புகளைக் காணலாம். -அவ்- இடைநிலை கொண்ட வினை யாலணையும் உயர்திணைப் பெயர்கள், அதிலும் குறிப்பாகப் பன்மைப் பெயர்கள் ஏராளமாக வருதல் காணலாம். இந் நிலைமையைக் கலித்தொகையிலும் காணமுடியும். பிற இலக் கியங்கள் ஓர் ஈற்றுச் சொற்களைக் கொண்டிருக்க இந்நூல்கள் -அவ்- இடைநிலைச் சொற்களையே அதிகமாகக் கொண்டுள்ளன.

எடுத்துக்காட்டாகப் புறநானூற்றில் ஓரிற்றுச் சொற்கள் இரு நூற்றுப்பதினொன்று இருக்க -அவ்- இடைநிலைச் சொல் இரண்டே வந்துள்ளது. இதுபோன்றே அகநானூற்றில் முன்னது நூற்று ஐம்பத்து நான்கு இடங்களில் வரப் பின்னது எட்டு இடங் களிலேயே வந்துள்ளது.. ஆனால் திருக்குறளிலோ முன்னது பதினெட்டு இடங்களில் வரப் பின்னது நூற்றேழு இடங்களில் வந்துள்ளது. கலித்தொகையிலும் இதே நிலையைத்தான் காண் கிறோம் (காண்க 5.2.2.3.6)

அஞ்சுபவர்	குறள் 464, 726, 906

ஆள்பவர்	குறள் 1017, 383, 791
அமையாதவர்	குறள் 825
அல்லவர்	குறள் 751, 973
அல்லாதவர்	குறள் 1077
இல்லாதவர்	குறள் 354. 997

போன்ற சொற்கள் இப்பண்பைக் காட்டும்.

மேலும் முன்பழந்தமிழ் நூல்கள் அனைத்திலும், -ஓன், -ஓள் ஆகிய விகுதிகள் வந்திருக்கத் திருக்குறளில் மட்டும் இவ்விகுதி வினையாலணையும் பெயர்கள் வராமலிருப்பது குறிப்பிடத் தக்க தாகும். ஆனால் அவற்றிற்குப் பதில் –அவ்– இடைநிலை கொண்ட –அன், –அள் ஈற்று வினையாலணையும் பெயர்கள் வந்துள்ளன. -அன் ஈற்றுச் சொற்கள் முப்பத்து நான்கு இடங்களிலும் –அள் ஈற்றுச் சொற்கள் நான்கு இடங்களிலும் வந்துள்ளன.

அஞ்சுமவன்	குறள் 727
இழந்தவன்	குறள் 788
உடையவன்	குறள் 112
இல்லவள்	குறள் 53
வீழ்பவள்	குறள் 1111

5. 2. 3. 2. 4 சில முன்பழந்தமிழ்க் கூறுகளின் மறைவு

இவை தவிர பழந்தமிழ் நூல்களில் காணப்படும் எத்தனையோ கூறுகள் திருக்குறளில் காணப்படுவதில்லை.

(1) தொல்காப்பியம் வினையெச்ச வாய்பாடுகளாகத் தரும் 'செய்பு', 'செய்யூஉ' வாய்பாட்டுச் சொற்கள் குறளில் காணப் படுவதில்லை. பிற பின்பழந்தமிழ் நூல்களாகக் கருதப்படும் பரி பாடல் (46), கலித்தொகை (123), சிலம்பு (7), மணிமேகலை (8) ஆகிய நூல்களில் செய்பு வாய்பாட்டுச் சொற்கள் காணப்படுகின்றன. இது போன்றே 'செய்யூஉ' வாய்பாட்டுச் சொற்களும் பிற நூல் களில் (கலி 2, பரி 5, சிலம்பு 2, மணி 2) காணப்பட குறளில் காணப்படுவதில்லை.

(2) ''செய்யியர்'' வாய்பாட்டு வினையெச்சமும் திருக்குறளில் காணப்படுவதில்லை. ஆனால் கலித்தொகையில் இரு இடங்களில் வந்துள்ளது.

(3) இத்தகைய நிலையைப் பால் காட்டும் விகுதிகளிலும் காணலாம். தன்மை காட்டும்–எல், இசின் வாய்பாட்டு ஈறுகள், தம்மைப் பன்மை காட்டும்–எம் ஈற்றுச் சொற்கள்போன்றவை - திருக்குறளில் காணப்படுவதில்லை.

இந்நிலையில் திருக்குறள் ஒரு பின்பழந்தமிழ் நூல் என்றே கருதப்படுகின்றது.

5. 2. 3. 3 கலித்தொகையும் திருக்குறளும்

பின்பழந்தமிழ் நூல்களில் பரிபாடல் முந்தியது என்றும், அதற்குப் பின்னரே கலித்தொகை தோன்றியிருக்கலாம் எனவும் கருதலாம். கலித்தொகையைப் பாடியவர் ஒருவரே என்பதே பல அறிஞர்களின் எண்ணம். திருக்குறளையும் கலித்தொகையையும் வைத்து நோக்கின் கலித்தொகையில் காணப்படும் புதிய கூறுகள் அனைத்தும் திருக்குறளிலும் காணப்படுகின்றன. முன்னர் குறிப் பிட்டபடி, இரட்டைப் பன்மைச் சொற்கள், மல்லீற்று வினை யெச்சம், ஏலீற்று நிபந்தனை எச்சம், அல்லால், போழ்து போன்ற சொல்லாட்சிகள் போன்றவை இருநூல்களிலும் காணக்கிடக் கின்றன. ஆனால் கலித்தொகையில் காணப்படும் பல முன்பழந் தமிழ்க் கூறுகள் (செய்பு, செய்யூ, செய்யியர் வாய்பாட்டு வினை யெச்சங்கள், —ஓய், —ஓன், —ஓள், —ஓர் விகுதிகள் ஆகியவை) திருக்குறளில் காணப்படுவதில்லை. இந்நிலையில் இவ்விரு நூல் களும் ஒன்றையடுத்து மற்றது உருவாகியிருக்கலாம் என எண்ணலாம். கலித்தொகையை ஒட்டிப் பின்னர் எழுந்த நூலே திருக்குறள் என முடிவு கட்டலாம்.

5.2.4 சிலப்பதிகாரம்

5.2.4.1 சங்கம் மருவிய நூல்

சங்கம் மருவிய நூல்களில் சிலப்பதிகாரமும் ஒன்று என்பது முன்னரே கூறப்பட்டது. இது திருக்குறளுக்குப் பிந்தியது. திருக் குறளை இது

''தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுவாளை''
(கட்டுரைக்காதை –வெண்பா)

என எடுத்தாண்டுள்ள நிலையில் இது நன்கு விளங்கும்.

5.2.4.2 மொழிநிலை

சிலப்பதிகாரத்தின் மொழிநிலையை ஆராயின் இந்நிலை நன்கு உறுதிப்படும். பின் பழந்தமிழ்க் கூறுகள் என்று கருதப்படு கின்ற (பார்க்க, இயல் 6) பல கூறுகள் சிலப்பதிகாரத்தில் காணப் படுகின்றன. இவற்றில் காணப்படும் இக் கூறுகளில் சில இதற்கு முன்னர்த் தோன்றிய பின்பழந்தமிழ் நூல்கள் என்று கருதப்படு கின்ற பரிபாடல், திருக்குறள் ஆகியவற்றில் காணப்படுவன. இன்னும் சிலவோ அவற்றில் காணப்படாதவை. மேலும் முன்பழந் தமிழ் நூல்களில் காணப்படும் ஒரு சில கூறுகள் சிலப்பதிகாரத்தில் மறைந்துவிட்ட நிலையையும் காணுகிறோம்.

5.2.4.2.1 வையாபுரிப்பிள்ளை தரும் சான்றுகள்

சிலப்பதிகாரத்தின் மொழிநிலையை ஆராய்ந்த பல அறிஞர் கள் இதன் சிறப்புக் கூறுகள் எனப் பலவற்றைத் தந்துள்ளனர். பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை அவர்கள் தன்னுடைய 'காவிய காலம்' என்ற நூலில் (பக். 127,128) பல மொழிக்கூறுகளையும், பல புதிய சொற்களையும் சுட்டிக்காட்டுவார். இந்த (சிலம்பு 21–51), நான் (சிலம்பு 29-2-4), நீர் (சிலம்பு 27–239, 16–21), காறும் (சிலம்பு 14-22, 30–65), –அன் ஈற்றுத் தன்மை ஒருமை விகுதி (போக்குவன் 16-129, உறுவன் 19-6), தன் (கணவன்றன் (16-60), உடைய (தம்முடைய தண்ணளியும், கானல்வரி 32) ஆகிய வற்றைச் சுட்டிக்காட்டுவார். இத்தகைய கூறுகள் சிலப்பதிகாரத்தை ஒட்டி எழுந்த மணிமேகலையிலும் காணப்படுவதை எடுத்துக் காட்டிச் செல்லுவார் இவர்.

5.2.4.2.2 வ. சுப. மாணிக்கம் தரும் சான்றுகள்

இவரைப் போன்றே பேராசிரியர் வ. சுப. மாணிக்கமும் பல வேறு கூறுகளை எடுத்துக் காட்டுவார். (1976)

1. யகர மெய் கெடல்

யார் என்ற சொல் ஆர் என வழங்குவதையும் யாறு என்ற சொல் ஆறு என வழங்குவதையும் எடுத்துக் காட்டுவார் அவர்.

''ஆரிக் கொடுமை செய்தா ரென்று அன்னை அறியின்'' சிலம்பு 7–38–4

''ஆரெனக் கேட்டீங் கறிகுவம் என்றே'' '' 1–22

''ஆற்றுவழிப் பட்டோர் ஆரென வினவ'' '' 10–224

என்பவற்றை உதாரணங்களாகத் தருவார்.

2. தனிக் குறில் ரகரம்

''வர்த்தனை'' என்ற சொல்லாட்சியினை இதற்கு எடுத்துக் காட்டாகத் தருவார்.

3. ழகர, நகரப் புணர்ச்சி

''தாதையைக் கேட்கில் தன்குலவாணர்'' சிலம்பு 15-1265

''மண்ணாள் வேந்தே நின்வா ணாட்கள்'' 28-12

ஆகியவற்றை எடுத்துக்காட்டுக்களாகத் தந்து செல்வார். ழகரமும் நகரமும் புணர்ந்து ணகரமாக வருதலைச் சுட்டிச்செல்லுவார் அவர்.

4. சகர முதற் சொற்கள்

சங்க இலக்கியத்தில் சமம், சமழ்ப்பு, சவட்டி ஆகிய சில சொற்கள் வந்துள்ளன என்றும், சிலப்பதிகாரத்தில் சகரக் கிளவிகள் ஓரளவு கூடுதலாக உள்ளன என்றும் கூறி, கீழ்வரும் எடுத்துக் காட்டுக்களைத் தருவார் வ. சுப. மாணிக்கம்.

சடை	சந்து	சங்கிலி
சகடு	சங்கம்	சந்திரபாணி
சண்பகம்	சங்கு	சலம்
சமன்	சதுக்கம்	சவதி
சந்தனம்	சதங்கை	சந்தி

சரவணம்	சரிதை	சயம்பு
சக்கரம்	சமரம்	சதுமுகன்
சகடம்	சகோடம்	சங்கரி
சந்திரகுரு	சயந்தன்	சஞ்சயன்
சமைப்பேன்	சங்கரன்	சங்கமன்

5. -கள் என்ற இடைச்சொல்

அஃறிணைப் பன்மை குறிக்கும் -கள், உயர்திணைப்பெயர்க்கும் ஈறாகச் சிலம்பில் (தேவிர்காள், யாங்கள், தாங்கள், வானோர்கள், பெண்கள்) வந்துள்ளதைச் சுட்டிக் காட்டுவார்.

6. –கின்று–

–கின்று- நிகழ்கால இடைநிலை சிலம்பில் வந்துள்ளமைக்கு எடுத்துக்காட்டாக

''வேனில் வேந்தன் வேற்றுப்புலம் படர
ஓசனிக்கின்ற உறுவெயிற் கடைநாள்'' சிலம்பு 14-124,125
''உருள்கின்ற மணிவட்டைக் குணில் கெண்டு
துரந்ததுபோல்........... 29–1–11

ஆகியவற்றைத் தருவார்.

7. ஈறு நீண்ட எதிர்மறைப் பெயரெச்சம்

இவ்வகைப் பெயரெச்சங்களைச் சிலப்பதிகாரத்தில் காண முடிவதாகக் கூறி

''உண்ணாத நஞ்சுண் டிருந்தருள் செய்குவாய்''
சிலம்பு 12-22-4

சேவகன்சீர் கேளாத செவியென்ன செவியே 17–35

போன்ற பல எடுத்துக்காட்டுக்களைத் தந்து செல்வார்.

8. அன் ஈறு

அறிவன் யான் (11-195), போக்குவன் யான் (16-129) ஆகிய எடுத்துக்காட்டுகளைத் தந்து தன்மை ஒருமைக்கும் -அன் ஈறு வந்துள்ளமையைச் சுட்டிக் காட்டுவார்.

9. தன்மை எதிர்காலம் (ககரவொற்று)

"அஞ்சல் உன்றன் அருந்துயிர் களைகேன்" (15-68)
"போயெங்கு நாடுகேன் ... ..." (19-69)

ஆகியவற்றைத் தன்மை எதிர்கால எடுத்துக்காட்டுக்களாகத் தரு வார்.

10. ஐயநடைமுற்று

"கையறு துன்பம் காட்டினுங் காட்டும்" (10-71)
போன்ற ஐயநடைமுற்றுகள் சிலப்பதிகாரத்தில் புதுவதாக ஆளப் பட்டுள்ளதாகக் கூறுவார்.

11. நான் என்ற பெயர்

"தடம்பெருங் கண்ணிக்குத் தாயர் நான் கண்டீர்
தண்புகார்ப் பாவைக்குத் தாயர் நான் கண்டீர்" (29-3)

போன்ற பல இடங்களில் 'நான்' என்ற சொல் வருவதை எடுத்துக் காட்டுவார்.

12. இந்த என்ற சுட்டு

இந்த என்ற சொல்
"அகத்துறை மாக்கட் கல்லது இந்தப்
புறச்சிறை இருக்கை பொருந்தாது" (15-107)
"பாயெரி இந்தப் பதியூட்டப் பண்டேயோர்
ஏவல் உடையேனால்" (21-51)

ஆகிய வரிகளில் வருவதைச் சுட்டிக் காட்டிச் செல்வார்.

13 உன் என்ற வேற்றுமை வடிவு

"அஞ்சல் உன்றன் அருந்துயர் களைகேன்" (15-68)
"உன்கைக் குறிக்கோள் தகையது" (30-63)

போன்றவற்றில் உன் வருவதை எடுத்துக்காட்டி இது சிலப்பதிகாரக் காலத்தில் தோன்றிய புதிய வடிவம் என்று கூறுவார்.

14. உடன் என்ற சொல்லாட்சி

சிலம்பில் புதுவதாக மிகவும் பயின்று வரும் ஒரு சொல் 'உடன்' என்று கூறி சில எடுத்துக்காட்டுக்களைத் தந்து செல்வார்.

வேற்றுமைப் பொருளில் 'உடன்'

''பொலியக் கோத்த புலமையோனுடன்'' (3-4)

''உயிருடன் சென்ற ஒரு மகள் தன்னினும்'' (25-107)

வினையுடன் 'உடன்'

புரிந்துடன் வகுத்தென (3-157)

சுமந்துடன் வந்த (14-109)

பொழிந்துடன் பரப்ப (16-214)

பெயர்ச்சொல்லுக்கு முன் 'உடன்'

''உடன்வயிற்றோர்கள் ஒருங்குடன் வாழ்க்கை'' (10-227)

15. தான், தன் என்ற சொல்லாட்சிகள்

இது சிலப்பதிகாரத்தில் மண்டிக் காணப்படுகின்ற ஒரு புதுக் கூறு என்று கூறி சில எடுத்துக்காட்டுக்களைத் தந்து செல்வார்.

''கோவலன் தான் போன பின்னர்'' (7-52)

''கங்கை தன்னைப் புணர்ந்தாலும் புலவாய்'' (7-2)

16. சுட்டசைகள்

அது, அவன் போன்ற சுட்டுகள் சிலப்பதிகாரத்தில் அசையாக வருவதையும் புதிய கூறாகவே எடுத்துக்காட்டுவார்.

''புகழ் மன்னும் புகார் நகரதுதன்னில்'' (1-22)

''ஆடகப் பூம்பாவையவள் போல்வார்'' (21-34)

இவற்றுள் சில வையாபுரிப்பிள்ளை குறிப்பிட்டவை என்பது இங்கு நினைவுகூரத்தக்கது.

5.2.4.2.3 மேற்கண்ட மொழிக் கூறுகளின் தன்மை

இவர்கள் சுட்டிச் செல்லும் பல கூறுகள் பின்பழந்தமிழ் நூல்களில் சிலப்பதிகாரத்துக்கு முன்னர் எழுந்தவை எனக் கருதப்படும் பரிபாடல், கலித்தொகை, திருக்குறள் ஆகிய நூல்களில் எவையேனும் ஒன்றில் அல்லது இரண்டில் அல்லது மூன்றிலும் காணப்படுபவை. இன்னும் சிலவோ சிலப்பதிகாரத்தில் மட்டுமே வருபவை.

இன்னும் சிலவோ முன்பழந்தமிழ் நூல்கள் எனக் கருதப்படும் பதிற்றுப்பத்து போன்ற நூல்களிலும் இலைமறை காயாக வந்துள்ளவை. எனினும் எண்ணிக்கையில் சிலப்பதிகாரம் போன்ற நூல்களில் அதிகமாக வருபவை.

இன்னும் ஓரிரு கூறுகளோ புதிய கூறுகளே அல்ல. பழைய கூறுகளாகும். தவறுதலாகப் புதிய கூறுகள் எனக் கருதப்பட்டு விட்டன.

5.2.4.2.3.1 பழைய கூறுகள்

1. தன்மை ஒருமை காட்டுவதாக உள்ள ‘அன்’ ஈறு பழந்தமிழ் நூல்களிலேயே வந்துள்ளது. பரிபாடலும் பத்துப்பாட்டும் ஒழிந்த நூல்கள் அனைத்திலும் வந்துள்ளது இது.

இலன்	பதி	77-7
தொடங்கினன்	ஐங்	428-4
அமைகுவன்	அகம்	74-14
மறப்பன்	நற்	279-11
கண்டனன்	குறு	311-4
அணைத்தனன்	புறம்	255-2
நோக்குவன்	கலி	147-27

போன்ற உதாரணங்கள் இப்பண்பைக் காட்டும். இது பதிற்றுப்

பத்திலும், ஐங்குறுநூற்றிலும் ஒவ்வொரு இடத்திலும், அகத்தில் எட்டு இடங்களிலும், நற்றிணையில் பத்தொன்பது இடங்களிலும், குறுந்தொகையில் ஐந்து இடங்களிலும், புறத்தில் பதின்மூன்று இடங்களிலும், கலித்தொகையில் ஏழு இடங்களிலும் வந்துள்ளது. தொல்காப்பியர் இது பற்றிக் கூறாத நிலையிலேயே வையாபுரிப் பிள்ளை பிற்காலக்கூறு என்றார். இதனை அடியொற்றியே வேறு பலரும் இதனைப் பிற்காலக்கூறு எனக் கருதினர் போலும். ஆனாலும் இதுவோ சங்க இலக்கியங்களில் பரந்து காணப்படு கின்றது.

2. இதைப்போன்றே உடன் என்ற சொல்லாட்சியும். இது பற்றிக் கூறும் வ. சுப. "சிலப்பதிகாரத்தில் புதுவதாக மிகவும் பயின்று வரும் சொல் 'உடன்' என்பது" என்பார். இச்சொல் தொல்காப்பியத்திலேயே ஒன்பது இடங்களில் வந்துள்ளது. அது உடனிகழ்ச்சி பொருளில் காணப்படாவிடினும் உடன்பட்டோர் (பொருள் 112-43), உடன்போகிய (பொருள் 141-2, 146-)1 போக்குடன் (உடன்போக்கு) (பொருள் 113-8) உடன்சேரல் (பொருள் 144-43) என்றெல்லாம் வருதல் காணத்தக்கது. இவற்றுள் உடன்பட்டோர் போன்றவை வ. சுப. காட்டும் 'உடன் வயிற்றோர்' போன்றவற்றுடன் பொருந்துபவை. மேலும் அவர் காட்டுவது போல் செய்து என்னும் எச்சத்துடனும் (சுமந்துடன் வந்த, பொருள் 14-10), நேர்ந்துடன் வருமே பொருள், 523-2) தொல் காப்பியத்தில் வருதல் காணத்தக்கது.

மட்டுமன்றி முன்பழந்தமிழ் இலக்கியங்கள் அனைத்திலுமே உடன் வந்துள்ளது. வேற்றுமை உருபாகவும், வினையுடன் வருவ தாகவும் பல சங்க இலக்கியங்களில் இது காணப்படுகின்றது. வேற்றுமை உருபாகப் புறநானூற்றில்

அரசுடன் பொருத	புறம் 158-2
உலகுடன் பெறினும்	புறம் 182-6
கோவலர் பூவுடனுதிர	புறம் 224-15

என வருவது கவனித்தற்பாலது. இது போன்றே பிற இலக்கியங் களிலும்

ஊருட னெழுந்து	பதி	19,16
மகளிரி னிரையுடன் குழீஇப்	ஐங்	204-2
நினைவுடன்	அகம்	5-7
பூவுடன் நெறிதரு தொடலை தைஇ	நற்	138-7
பந்துடன் மேவாள்	குறு	396-1
கிளையுடன் மகிழ்ந்து	பத்து	1-196
நீருடன் கலந்து	பரி	10-124
வெருள்புடன் நோக்கி	கலி	43-12

என வந்துள்ளது. வினையுடனும் பல இடங்களில் இது வந்துள்ளது.

புக்குடன்...........மகிழ்சிறந்து	பதி	68-10
விரைந்துடன்.........	ஐங்	274.2
மொசிந்துடன்......மறைய	அகம்	181.10
தடிந்துடன் வீழ்ந்த.........	அகம்	337-11
புணர்ந்துடன் போதல்	குறு	297-6

என்றெல்லாம் வருவது கவனித்தற்பாலது. மேலும் இது வ. சுப. காட்டுவது போல் (உடன் வாழ்க்கை போன்று)

உடனிலை	அகம்	64-12, 13
உடனுறைவு	குறு	206-4
உடனிலை	புறம்	58-21
பிறப்போரன்ன உடன் வயிற்றுள்ளும்	புறம்	183-3

எனப் பிற இலக்கியங்களிலும் பெயருடன் வருதல் காணத்தக்கது. இந்நிலையில் உடன் என்பதைப் புதுவதாகப் பயின்று வரும் சொல் எனக் கருத முடியாது.

சங்க இலக்கியத்திலேயே 'ஒடு' வேற்றுமைச் சொல்லுடன் 'உடன்' வருவதும் இங்குக் குறிப்பிடத்தக்கது.

"தவாஅலிய ரோவிவ் வுலகமோ டுடனே" பதி 14-22

"... ... ... காமமொ
டுடனுயிர் போகுக" குறு 57-4

"தீநீரோ டுடன் விரா அய்" புறம் 24-15

"நின்று நிலைஇய ருலகமோ டுடனே" புறம் 58-12

"... ... ... நின்னோ
டுடனுறை ... ..." புறம் 236-12

3. இதைப்போன்றே சிலப்பதிகாரத்தில் மண்டிக் காணப்படும் ஒரு புதுக்கூறாக வ. சுப. மாணிக்கம் குறிப்பிட்டுச் செல்லும் தான், தாம், தன், தம் சொல்லாட்சிகளும் பலவேறு படர்க்கைப் பெயர்களுடன் சங்க இலக்கியங்களிலேயே பெருமளவில் பயின்று வரக் காண்கிறோம்.

வேந்தர்தம் எயிலே	பதி 52-31
என்னோ மகளிர்தம் பண்பு	நற் 339-12
புதல்வர்தம் மழலை	புறம் 92-3
கொற்றவர்தம் கோனாகுவை	பத்து 6-74
கடியார்தமக்கு யார் சொல்லத்தக்கார்	கலி 88-5
பொறாதார்தம் கண் பொடிவதெவன்	கலி 105-60
ஊரன்தன்மனை	ஐங் 3-5
அவள் தன் பண்பே	ஐங் 89-4
தந்தைதன் ஊர் இதுவே	நற் 198-11
தொண்டிதன் திறம் பெறுக	நற் 8-10
குன்ற நாடன்தன்னினும்	குறு 327-3
யானைதன் கோட்டிடை வைத்த கவளம் போல	புறம் 101-6
ஞாலம்தன்னில் தோன்றி	பத்து 1-163
வையைதன் நீர்	பரி 22-32
வையைதன் நீர் முற்றி	கலி 67-3

இந்நிலையில் இதனைப் புதுக்கூறு எனக் கருதுவது இயலாத ஒன்றாகும்.

5.2.4.2.3.2 வரவு எண்ணிக்கை கூடிய கூறுகள்

இன்னும் சிலவோ முன்பழந்தமிழ் இலக்கியங்களில் சிறு வரவில் வந்துள்ளவை.

1) வ. சுப. கூறும் "யகர மெய் கெடல்" நற்றிணையிலும், பரிபாடலிலும் வந்துள்ளது.

"ஆர்தர வந்தனன் ...." நற் 119–4

என நற்றிணையில் ஒரு இடத்திலும்.

"சிலம்பா றணிந்த ...." 15–22

"ஆற்றணி, வெள்வாள் விதிர்ப்போர்" . . . " 11-50

என்று பரிபாடலில் இரு இடங்களிலும் வந்துள்ளது. ஆனால் சிலம்பிலோ இது நான்கு இடங்களில் (ஆர் 7–38–4, 10–122, 224, ஆற்று 10-156) வந்துள்ளது.

2) ழகர நகரப் புணர்ச்சியும் சோணாடு என்ற சொல்லில் பட்டினப்பாலை (28) புறம் (337–1) ஆகிய இருநூல்களிலும் காணப்படுகின்றது.

3) சகர முதற் சொற்களும் பழந்தமிழ் இலக்கியங்களில் சிறு வரவிற்றாக உள்ளன. இதை வ. சுப. வே கூறியுள்ளார்.

4) -கள் என்ற பன்மை காட்டும் விகுதியும் சிலம்பில் மட்டுமன்றிப் பரிபாடல், கலித்தொகை, குறள் ஆகியவற்றிலும் காணலாம். (பார்க்க, 6.3.1.4.)

உயர்திணை காட்டும் சொற்களில் பரி (1), குறள் (1) சிலம்பு (15)

வாளிகள்	பரி	9-54
கீழ்கள்	குறள்	1075
பெண்கள்	சிலம்பு	30-50

போன்றவற்றிலும், இரட்டைப்பன்மைப் பதிலிடுபெயர்களில் சிலம்பில் (6) மட்டுமன்றிக் கலித்தொகையிலும் (1)

எங்கள்	கலி	22–20
யாங்கள்	சிலம்பு	25-62
தங்கள்	சிலம்பு	23-175

இரட்டைப் பன்மைச் சொற்களில் கலித்தொகை (6), குறள் (2), சிலம்பு (13)

அரசர்கள்	கலி	25–3
பூரியர்கள்	குறள்	919
சிறுமியர்கள்	சிலம்பு	17–28–2

போன்றவற்றிலும் வருதல் காணத்தக்கது.

5) நிகழ்காலம் காட்டும் ''கின்று'' என்னும் இடைநிலையும் சிலம்பில் மட்டுமன்றி வேறுபல நூல்களிலும் காணக்கிடக்கின்றன.

ஆகின்றது	அகம்	96- 18- 296- 14- 368- 19
ஆகின்றது	நற்	227- 9- 2/2- 11- 354- 11
சேர்கின்ற	பரி	22- 35
உருள்கின்ற	சிலம்பு	29- 11

இதுபோன்றே ''ஆநின்று'' என்ற இடை நிலையும் ஐங்குறு நூறு, குறள் ஆகியவற்றிலும் உள்ளது.

வாராநின்றனள்	ஐங்	397–3
இறவாநின்ற	குறள்	1157

6) செய்யாத என்னும் வாய்பாட்டு எதிர்மறைப் பெயரெச்சமும் சிலம்பில் மட்டுமன்றிப் புறநானூறு (2), கலித்தொகை (7), குறள் (14) ஆகியவற்றிலும் உள்ளது. சிலம்பில் இது பத்து இடங்களில் வந்துள்ளது.

கெடாத	புறம்	27–19
தாவாத	கலி	86-29

அகலாத குறள் 1226

வளையாத சிலம்பு 19-18

7) 'நின்' என்பது சங்க வழக்கு எனவும், சிலப்பதிகாரக் காலத்தில் 'உன்' என்ற புதிய வடிவம் தோன்றலாயிற்று எனவும் வ. சுப. மாணிக்கம் குறிப்பிட்டுள்ளார். ஆயினும் சங்க இலக்கிய மான அகநானூற்றிலேயே 'உன்' ஒரு இடத்தில் வரக் காண் கிறோம். சிலம்பில் ஆறு இடங்களில் வந்துள்ளது.

''கான நாடன் உறீஇய நோய்க்குன்
மேனி ஆய்நலந் தொலைதலின் மொழிவென்''

அகம் 222-2 (கபிலர்)

8) ''செய்கேன்'' வாய்பாட்டு வினைமுற்றும் சிலப்பதி காரத்தில் மட்டுமே வருவதன்று. கலித்தொகையிலும் (1) இது காணக் கிடக்கின்றது. சிலம்பில் நான்கு இடங்களில் இது வந் துள்ளது.

ஆற்றுகேன் கலி 140-14

மட்டுமன்றிச் ''செய்கேம்'' வாய்பாட்டு வினைமுற்று பதிற்றுப் பத்தில் (1) வந்துள்ளமை நினைவு கூரத்தக்கது.

நுகர்கேம் பதி 38--13

9) நான் என்ற தன்மை ஒருமைப் பதிலிடு பெயரும் பரிபாடலில் ஒரு இடத்தில் வந்துள்ளது. சிலம்பில் இது ஏழு இடங்களில் வந்துள்ளது.

நான் பரி 6-87

நான் சிலம்பு 29-2-4

10) -ஓம் என்னும் தன்மைப் பன்மை விகுதி ஐங்குறு நூற்றிலும், புறநானூற்றிலும் ஒவ்வோரிடத்தில் வந்துள்ளது. சிலம்பில் இது பத்து இடங்களில் வந்துள்ளது.

மறந்தோம் ஐங் 112-4

தீர்க்குவோம்	புறம் 381-16
அறிகோம்	சிலம்பு 7-5-2

மேலே காட்டிய கூறுகள் பிற இலக்கியங்களிலும் சிறுவர விற்றாக வர, சிலப்பதிகாரத்திலோ கூடுதலாக வருவதிலிருந்து பிற இலக்கியங்களுக்குப் பின்னர் சிலப்பதிகாரம் தோன்றியது எனக் கருதலாம்.

5.2.4.2.3.3 புதிய கூறுகள்

மேலும் ஒரு சில கூறுகள் சிலப்பதிகாரத்திலும், அதை ஒட்டி எழுந்த மணிமேகலையிலும் காணப்படுகின்றன.

1) முன்பழந்தமிழ் நூல்களில் யாங்கணும் (அகம் 7-9) யாங்ஙனம் (நற் 381-6) போன்ற யா முதல்சொற்கள் மட்டுமே காணப்பட சிலம்பிலும், மணிமேகலையிலும் சில புதிய எகர முதற் சொற்கள் காணப்படுகின்றன.

எங்கணும் என்ற சொல் சிலப்பதிகாரத்தில் நான்கு இடங்களில் வந்துள்ளது.

"......எங்கணும் போர்த்து"	10-145
"ஆவும் ஆரமும் ஓங்கின எங்கணும்"	12-1
"மலைபுரை மாடம் எங்கணும் கேட்ப"	23-124
"ஆடு கூத்த ராகி யெங்கணும்"	
"ஏந்துவா ளொழியத்........"	26-228

எங்கு என்ற சொல் சிலப்பதிகாரத்தில் இரு இடங்களில் காணப்படுகிறது.

"போயெங்கு நாடுகேன்"	சிலம்பு 19-69
"......எங்கொளித்தாயோ"	சிலம்பு 30-111

2) இந்த என்ற சுட்டுச் சொல் முதல்முதலாக சிலப் பதிகாரத்திலேயே காணப்படுகின்றது.

இந்த சிலம்பு 15-137
31-51

3) 'உண்டு' என்ற குறிப்புவினைமுற்று உயர்திணைப் பெயருடன் முதல்முதலாக சிலப்பதிகாரத்திலேயே நான்கு இடங்களில் காணப்படுகிறது.

''சான்றோரும் உண்டு கொல் ...'' சிலம்பு 19–54

4) வினைமுற்றில் -கள் பன்மை விகுதி இரட்டைப் பன்மையாக வருவதைச் சிலம்பில் காண்கிறோம்.

நண்ணுமின்கள் சிலம்பு 16- வெண்பா–1

5) கண்டதன் பின்னர், சென்றதன் பின்னர் போன்ற அன் சாரியை சேர்ந்த வழக்கை சிலம்பில்தான் முதல் முதலாகக் காண்கிறோம்.

போந்ததன் பின்னர் சிலம்பு 26–104
இறந்ததன் பின்னர் சிலம்பு 27–159
நடந்ததன் பின்னர் சிலம்பு 30–85
சென்றதன் பின்னும் சிலம்பு 28--130

6) தன் என்ற சொல் தேற்றங் காட்டும் இடைச் சொல் போன்று தன்மையிலும், முன்னிலையிலும் வருவதைச் சிலப்பதிகாரத்தில்தான் முதன்முதலாகக் காண்கிறோம்.

என்றன் மேல் சிலம்பு 9–48
என்றன் வஞ்சியொடு சிலம்பு 25–135
உன்றன் அருந்துயர் சிலம்பு 15–68

இத்தகைய மொழிக்கூறுகள் சிலப்பதிகாரத்தின் காலத்தை நிர்ணயிக்க உதவுகின்றன. இந்நூல் சங்க இலக்கியங்களுக்கும், திருக்குறளுக்கும் பின்னர்த் தோன்றியது என முடிவு காட்டலாம். முன்னர்க் குறிப்பிட்டபடி சில மொழிக்கூறுகள் பின்பழந்தமிழ் இலக்கியங்களில் இலைமறை காயாகக் காணப்படினும் இன்னும்

சில கூறுகளோ சிலப்பதிகாரத்திலும், மணிமேகலையிலும் மட்டுமே காணப்படுவதும் இக்கூற்றுக்கு அரண் செய்யும்.

5.2.5 மணிமேகலை

5.2.5.1 காலம்

சங்கம் மருவிய நூல்களில் மணிமேகலையும் ஒன்று. சிலப்பதி காரத்தை ஒட்டி எழுந்த காப்பியமாதலின் இவற்றை இரட்டைக் காப்பியம் எனக் கூறுவர். கூலவாணிகன் சாத்தனாரால் இயற்றப் பட்ட இக்காப்பியம் பௌத்தமதம் பற்றி எழுந்த முழுமுதல் நூலாகக் கருதப்படுகிறது.

திருக்குறளை
“தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் பெருமழை என்ற அப்
பொய்யில் புலவன் பொருளுரை தேறாய்”
(மணி 22. 59–61)

என எடுத்தாண்டமையின் இது திருக்குறளுக்குப் பிந்தியது என் பது நன்கு விளங்கும்.

5.2.5.2 மொழிநிலை

மணிமேகலையின் மொழிநிலையை ஆராயின் இவ்வுண்மை உறுதிப்படுவதைக் காணலாம். பின்பழந்தமிழ்க் கூறுகள் எனக் கருதப்படுகின்ற கூறுகள் பல இக்காப்பியத்தில் காணப்படுவது இது ஒரு பின்பழந்தமிழ் நூல் என்பதைத் தெளிவாகக் காட்டும். எனவேதான் இதனைக் கலித்தொகை, திருக்குறள், சிலப்பதி காரம் ஆகியவற்றோடு இணைத்துப் பின்பழந்தமிழ் நூல்கள் எனக் கூறுகிறோம்.

5.2.5.2.1 வையாபுரிப்பிள்ளை தரும் சான்றுகள்

சிலப்பதிகாரத்தின் மொழிநிலையை ஆராயும்போது வையா புரிப்பிள்ளை (1954, 127–128) மணிமேகலையிலிருந்தும் சிலபல

எடுத்துக்காட்டுக்களைத் தந்து இவ்விரண்டு நூல்களும் கி.பி.எட்டாம் நூற்றாண்டைச் சார்ந்தவை என வற்புறுத்துவார்.

இந்த (மணி 23-61; 26-63; 28-198), அந்த (29-30), நான் (28-92), நீர் (6-26; 26-14), உன் (23-80), காறும் (21-167), -அன் ஈறு (கேட்குவன் 20-18), உன்னை (22-71), தன் (கணவன் றன் 19-60), தனை (மணிமேகலைதனை 18-155) போன்ற மொழிக் கூறுகளைத் தந்து இவை பிற்கால வழக்கு என்று குறிப்பிடுவார். எனினும் இந்நூல் எட்டாம் நூற்றாண்டைச் சார்ந்தது என்பது பொருந்தாது.

5.2.5.2.2 சோ. ந. கந்தசாமி தரும் சான்றுகள்

பிள்ளையைப் போலவே மணிமேகலையைப் பரக்க ஆராய்ந்த டாக்டர் சோ.ந.கந்தசாமியும் பலவேறு மொழிக்கூறுகளை எடுத்துக் காட்டுகளாகத் தருவார் (1978).

1) சகர முதற் சொற்கள்

தொல்காப்பியர் சகர ஒற்று அகர, ஐகார, ஔகாரங்களுடன் இணைந்து மொழிக்கு முதலில் வராது என்று கூற மணிமேகலை யில் ஏராளமான சகர முதற் சொற்கள் காணப்படுகின்றன என்று கூறிச் சிலவற்றை எடுத்துக்காட்டுக்களாகத் தருவார்.

சமயம்	1-13, 60	சந்தம்	27-100
சம்பாபதி	6-138	சன்னு	29-362
சமணர்	5-52	சயித்தம்	28-131
சங்கதருமன்	5-70	சபக்கம்	29-73, 81-212
சக்கரவாளம்	6-24	சயனாசனவான்	29-297
சமந்தம்	11-22	சரணாகதி	30-5
சங்கமன்	26-23	சைவவாதி	27-87
சைமினி	27-87	சைதனியவான்	22-176

2) யகர ஒற்று

சங்க இலக்கியங்களில் யகரம் அகரத்தோடும், ஊகாரத் தோடும் இணைந்து வர மணிமேகலையிலோ ஓகாரத்தோடும் இணைந்து வருகிறது என்பார்.

யோகம்	3-100
யோசனை	6-211

3) ரகரத்தின் முன் இகரம் இணைதல்

ரகரம் சொல் முதலில் வரும்போது 'இ' இணைக்கும் வழக்கு மணிமேகலையில் காண்கிறோம் என்று கூறி கீழ்வரும் சொற் களைத் தருவார்.

இராமன்	27-53
இரவி	24-58
இராவணன்	24-58
இராகுலன்	9-46

4) குறில் எழுத்தின் பின்னர் ரகரம்

ரகர, ளகர ஒற்றுக்கள் குறில் எழுத்துக்குப் பின்னர் வராது என்று தொல்காப்பியர் கூற வர்த்தித்தல் (29-256) போன்ற சொற் களை மணிமேகலையில் காணமுடியும் என்று கூறுவார்.

5) -அன் ஈற்றுத் தன்மை ஒருமை

தன்மை ஒருமையில் - அன் ஈற்றுச் சொற்கள் மணிமேகலையில் வருகின்றன என்பார்.

கண்டனன்	3-22
கூறுவன்	6-34
கேட்குவன்	20-18, 22-143

தருகுவன்	6-174
அறிகுவன்	13-71

6) -ஓம் தன்மைப் பன்மை விகுதி

தன்மைப் பன்மை காட்டும் -ஓம் ஈறு மணிமேகலையில் காணப் படுகின்றது என்று கூறுவார்.

ஆரும் இலோம்	5–56

7) மகர ஈற்று முன்னிலை ஏவல்

மேலும் இவர் 'கொண்ம்' போன்ற சொற்களில் காணப்படும் மகர ஈறு ஒரு பிந்திய கூறு எனக் கருதி

கொண்ம்	3-101
உண்ம்	3-103
போம்	14-37, 6-26
கொடும்	16–77
தொழும்	10-70
உரைம்	22-154, 163

என்பவற்றைக் காட்டிச் செல்லுவார்.

8. ஆளன், ஆட்டி, ஆளர் விகுதிகள்

ஆளன், ஆட்டி, ஆளர் ஆகிய விகுதிகளும் மணிமேகலையில் அதிகமாகக் காணப்படுகின்றன எனக் கூறி சிலபல உதாரணங் களைத் தருவார்.

ஆளன்

உருவிலாளன்	5–5
உரையாளன்	5-73
கொடுந்தொழிலாளன்	6–100

ஆட்டி

விளையாட்டி	5-87

மூதாட்டி	6-157, 29-40
தவத்தாட்டி	23-64

ஆளர்

காராளர்	3-29
வடமொழியாளர்	5-40
காவலாளர்	7-111, 27-29

9) காரர் என்ற விகுதி

காரர் என்ற விகுதியும் மணிமேகலையில் உள்ளது எனக் கூறுவார்.

கஞ்சக்காரர்	28-35
மாலைக்காரர்	28-40

10) -கள் பன்மை விகுதி

-கள் விகுதி அஃறிணைப் பன்மை விகுதியாக சங்க காலத்தில் குறைவாக வர மணிமேகலையிலோ ஏராளமான சொற்கள் உள்ளன என எடுத்துக்காட்டுக்கள் தந்து செல்வார்.

பாலிகைகள்	1-44
கணங்கள்	6-179, 13-66, 21-130
உயிர்கள்	3-129, 6-199, 10-7, 24-121, 25-107, 109, 114 30-152
பிறவிகள்	25-152
கிளவிகள்	21-143
ஆண்டுகள்	22-17
பொருள்கள்	27-110, 112, 188, 190, 30-219, 223, 252

இதைப்போன்றே இவ்விகுதி சங்கமருவிய இலக்கியங்களில்

ஓரிரு இடங்களில் உயர்திணையில் வர மணிமேகலையில் ஏராள மாக உள்ளன என்பார்.

வாதிகள்	1-60	யாங்கள்	16-86
செட்டிகள்	25-16	தங்கள்	28-64
அந்தரசாரிகள்	28-69	புத்தர்கள்	30-14
முனிகள்	28-114	என்போர்கள்	21-95,
சமணீர்காள்	5-52		97, 99, 100
கணினார்கள்	21-128		
எங்கள்	25-53		

11) –ஆல் கருவி வேற்றுமை உருபு

முன்பழந்தமிழில் கருவி வேற்றுமை உருபாக -ஆன் வர மணிமேகலையில் -ஆல் உருபாக மாறியதைச் சுட்டிக் காட்டுவார் இவர்.

மயனால்	6-201
அருளால்	21-155
செவியால்	27-15
முறைமையால்	29-86
கண்ணால்	27-15
மெய்யால்	29-17
வருதலால்	29-70

12) -இன் நீக்க வேற்றுமை உருபு

இதைப் போன்றே முன்பழந்தமிழில் நீக்க வேற்றுமை உருபாக –இன் வர மணிமேகலையில் -இல் வருவதாகக் கூறுவார் (மணி 29-79).

13) சில புதிய சொல்லுருபுகள்

பொருட்டு, தொட்டு, பிற்பாடு ஆகிய சொல்லுருபுகள் மணி

மேகலையிலேயே காணப்படுவதாகக் கூறி சில எடுத்துக்காட்டுக் களைத் தருவார்.

தம் பொருட்டு	21-63
அவன் பொருட்டால்	14-53
இவள் பொருட்டால்	22-162
நின் பொருட்டால்	29-36
அதன் பிற்பாடு	12-78
அந்நாள் தொட்டு	11-12

14) தன், தம் அசைச் சொற்கள்

தன், தம் ஆகிய சாரியைகள் சங்க இலக்கியங்களில் படர்க் கையில் மட்டுமே வர மணிமேகலையில் தன்மையிலும் முன்னிலை யிலும் வருவதை எடுத்துக்காட்டுவார் இவர்.

கொய்வேன்றனை	3-32
உன்றன்	18-169

15) -கிறு-, –கின்று- நிகழ்கால இடைநிலைகள்

இதைப்போன்றே –கிறு-, -கின்று- ஆகிய நிகழ்கால இடை நிலைகள் பரிபாடலில் ஒரு இடத்தில் வர மணிமேகலையில் பல இடங்களில் வருகின்றன எனச் சுட்டிக்காட்டுவார்.

உறைகின்றேன்	17-63
விளம்புகின்ற	!7-106
என்கின்ற	29-29
சாதிக்கிற	29-299
ஆள்கின்றோர்	26-18
புலப்படுகின்ற	2 -111
ஆகின்றது	29-322

16) எல்லாம் என்ற பதிலிடுபெயர்

எல்லாம் என்ற பதிலிடுபெயர் முன்பழந்தமிழில் உயர்திணை யோடு வராமலிருக்க மணிமேகலையில் புதிதாக வருவதாகக் கூறி

மக்கட் கெல்லாம்	9-24
வாழ்வோர்க்கெல்லாம்	11-95
அந்தணர் எல்லாம்	13-40
மடந்தையர்க் கெல்லாம்	18-6
மாதவர் எல்லாம்	22-6
பெயர்வோர்க் கெல்லாம்	25-40

ஆகிய எடுத்துக்காட்டுக்களைத் தருவார்.

17) -ஆல், -இல், -ஏல் நிபந்தனை எச்ச விகுதிகள்

நிபந்தனை எச்சமாக முன்பழந்தமிழில் செயின் வாய்பாட்டுச் சொற்கள் வர மணிமேகலையிலோ செய்தால், செயில், செய்தியேல் ஆகிய வாய்பாட்டுச் சொற்களும் காணப்படுகின்றன.

செய்தால்

கண்டால்	3-24, 101	புக்கால்	6-24
போனால்	6-158, 21-84	என்றால்	29-177, 236
பூண்டால்	25-26		

செயில்

அருளில்	6-154	காட்டில்	29-445
எனில்	14-94	கழியில்	7-5

செய்தியேல்

என்றியேல்	3-73

18) துணைவினைகள்

முன்பழந்தமிழில் துணைவினைகள் மிக அரிதாகக் காணப்பட

மணிமேகலையில் அதிகமாக வருகின்றன.

செய்திடும்	1-22	ஓம்பிடும்	6-55
கேட்டருள்	6-31	நின்றிடின்	3-25
புரிந்திட்டனன்	26-28	அடைந்திட	28-145
ஆயிடின்	18-157		

19) நகர மெய் கெடல்

முன்பழந்தமிழில் நற்றிணை, பரிபாடல், கலித்தொகை ஆகியவற்றில் உம் என்ற சொல் மட்டுமே காணப்பட மணிமேகலையிலோ உன் அதிகமாக உள்ளது என்பார்.

உன் 2-17, 4- 6, 14-35, 16-37, 119, 18-171, 23-74,80, 24-62, 7-27, 10-42, 43, 38, 48, 18, 79,17-46, 10-46,4, 11-63,67, 21-18, 108, 22-71, 129, 18-169, 23-102, 16-113, 68, 25-100, 24-144, 145.

உம் 26-39

20) யகர மெய் கெடல்

யார், யாண்டு, யானை ஆகிய சொற்கள் பின்பழந்தமிழில் யகர மெய் கெட்டு வரத் துவங்கின எனக் கூறி

ஆர் 4-95, 5-56, 6-146, 17-80, 21-136, 24-33

ஆண்டு 14-55, 17-38, 39,41,45, 20-25, 22-17,129, 24-100, 25-101

ஆனை 20-35

ஆகிய எடுத்துக்காட்டுக்களைத் தருவார்.

21) யகரம் ▷ எகரம்

யாங்கு என்னும் முன்பழந்தமிழ்ச் சொல் பின்பழந்தமிழில் எங்கு என்று மாறிவருவதாகக் கூறுவார். (6-18,191; 27-10,187, 226,231; 28-17; 29-233, 251)

22) நெடில் குறிலாதல்

மேலும் இவர் ஆங்கு, ஈங்கு ஆகிய முன்பழந்தமிழ்ச் சொற்கள் மணிமேகலையில் அங்கு, இங்கு என வருவதாகக் கூறி எடுத்துக்காட்டுக்கள் தந்து செல்வார்.

அங்கு 6–26, 14–84, 18–83, 19-9, 21–8, 25–185, 26–18, 27-32, 28-116, 220.

இங்கு 4-104, 20-123, 21-107, 23–128, 25–10, 27–221.

23) அந்த, இந்த ஆகிய சுட்டுக்கள்

இவை மணிமேகலையில் மட்டுமே காணப்படுவதாகக் கூறிக் கீழ்வரும் எடுத்துக் காட்டுக்களைத் தந்து செல்வார்.

இந்த	22–155, 26-63, 285; 28-198
அந்த	17–4, 23-61, 28-85, 29-30

24) 'ன்' இறந்தகால இடைநிலை

முன் பழந்தமிழில் இறந்தகாலம் காட்டும் இடைநிலையான இன்– மணிமேகலையில் –ன்- என மாறி வருவதற்குக் கீழ்வரும் எடுத்துக்காட்டுக்களைத் தந்து செல்கிறார்.

போனது	5-89, 30-41
போனார்	16–100
போனால்	6–158, 21-84
போன	30-2
ஆன	29–56, 422, 423, 262
ஆனது	27-209, 210, 17-37
ஆனவற்றை	34-161

25) ஆக[> ஆ

மணிமேகலையில் 'ஆக' என்னும் செயவென் எச்சச் சொல் ஆ

என மாறி வருவதாகக் கூறிக் கீழ்வரும் எடுத்துக்காட்டுக்களைத் தருவார்.

வறிதா	1–41
மெழுகா	19–115
முழவா	4–12
இலையா	29–105
ஆறா	6–211, 26–1
வரைப்பா	27–137
ஏதுவா	10–49
அளித்தா	29–9
சார்வா	30-105, 106, 107

26) போழ்து, போது

முன்பழந்தமிழ் வடிவமான பொழுது, போழ்து, போது என மணிமேகலையில் வருவதாகக் குறிப்பிடுவார் (மணி 9-2, 27–148).

27) எண்ணுப் பெயர்களுடன் –ஆம் விகுதி

எண்ணுப் பெயர்களுடன் –ஆம் விகுதியை இணைத்துக் கூறும் வழக்கு மணிமேகலையில் பரவலாகக் காணப்படுகிறது என்பார் கந்தசாமி.

இரண்டாம் காண்டம்	30-137
நான்காம் காண்டம்	30-145
மூன்றாம் காண்டம்	30-141
இரண்டாம் சந்தி	30-150
மூன்றாம் சந்தி	30-152

இன்னும் இதுபோன்ற சில செய்திகளைத் தந்து மணிமேகலையின் காலத்தை நிர்ணயிப்பார். கி. பி இரண்டாம் நூற்றாண்டுக்குப் பிற்பட்டது எனக் குறிப்பிடுவார்.

5.2.5.2.3 வ. சுப. மாணிக்கம் தரும் மொழிநிலைக் கூறுகள்

வ. சுப. மாணிக்கம் 'மணிமேகலை மொழியியல்' என்ற தலைப்பில் (1979) பதினேழு மொழிக்கூறுகளைத் தந்து மணி மேகலையில் காணப்படும் புதிய மொழிக்கூறுகளை ஆராய்வார்.

1. மொழி முதல் யகர மெய் கேடு, 2. சகர முதற்சொற் கள், 3. சை முதற் சொற்கள், 4. -கள் என்ற இடைச்சொல், 5. நிகழ்காலம் காட்டும் -ஆநின்று-, –கின்று–, -கிறு- இடை நிலைகள், 6. ஈறு நீண்ட எதிர்மறைப் பெயரெச்சம், 7. தன்மை எதிர்காலம், 8. செய்யும் என்னும் முன்னிலைப் பன்மை 9. ஐயநடைமுற்று, 10. இந்த, அந்த என்னும் சுட்டுகள், 11. உன், உம் வேற்றுமை அடிகள், 12. தான். தாம், தன், தம் என்னும் அசைகள், 13. இடு என்னும் வினைச்சொல், 14. ஆங்கு, ஈங்கு ஆகிய சொற்கள் அசையாக வருதல், 15. அல்லது என்னும் வினையெச்சம், 16. சில புதுச் சொல்லாக்கள் போன்ற வற்றைத் தந்து நிற்பார்.

இவற்றுள் சில வையாபுரிப்பிள்ளையாலும் (10,11,12) பல கந்தசாமியாலும் (1, 2, 3, 4, 5, 7, 8, 10, 11, 12) முன்னரே சுட்டிக்காட்டப்பட்டவை. சில புதிதாகத் தரப்படுபவை. இவை முன்னரே குறிக்கப்பட்டுள்ளன.

தன்மை எதிர்காலம் என்ற தலைப்பில் செய்கேன், படர்கேன், உரைக்கேன் என வரும் ககர இடைநிலைகளைக் கொண்ட சொற்களைத் தந்து நிற்பார்.

எச்சநடை அல்லது ஐயநடை முற்றாக

"ஓடலும் ஓடும், ஒரு சிறை யொதுங்கி
நீடலும் நீடும்" 3-112

என்பதைத் தந்து இத்தகைய ஆட்சி சிலப்பதிகாரத்திலும் காணப் படும் என்று குறிப்பிடுவார்.

ஆனால்

"புரையோர்ப் பேணிப் போகலும் போகுவை" 21-83

"துவதிகனு ரைக்குஞ் சொல்லலுஞ் சொல்லுவேன்"
21-145

என்பன போன்று படர்க்கை வாய்பாடு முன்னிலையாகவும் தன்மையாகவும் உருப்பெற்றுள்ளது மணிமேகலையில்தான் காணப்படுகிறது என்பார்.

மணிமேகலையில் புதியதாகக் காணப்படும் இலக்கணப்பாங்கு இடு என்னும் வினையாட்சி என்று கூறி இது சில இடங்களில் துணைவினையாகவும் வரும் என்பார்.

"புடைத்துணும் பூதமும் பொருந்தா தாயிடும்" 1–24
"இலங்கிதழ் மாலையை இட்டு நீராட்ட" 9-10
"படையிட்டு நடுங்கும் காமன்" 3-23
"பேடியர் அன்றோ பெற்றியின் நின்றிடின்" 3–25
"ஆங்கவர் அடிக்கிடின் அவரடி தானுறும்
"நீங்காது யாங்கணும் நினைப்பில ராயிடின்" 3–71
"கோல்நிலை திரிந்திடின் கோள்நிலை திரியும்
"கோள்நிலை திரிந்திடின் மாரிவறங் கூரும்" 7-8
"கிராமம் எங்கணும் கடிஞையிற் கல்லிட" 13-103

ஆங்கு, ஈங்கு என்ற சொற்கள் சுட்டிடைப் பெயராக வரும் இடங்கள் மிகச் சில என்று கூறிப் பல இடங்களில் இவை அசையாக வருகின்றன என எடுத்துக்காட்டுக்கள் தருவார்.

"ஆங்கவள் ஆங்கவன் கூறியதுரைத்தலும்" 6-16
"ஈங்கிதன் காரணம் என்னையோவென
ஆங்கதன் காரணம் அறியக் கூறுவன்" 6-33
"ஆங்கது கொடுத்தாங்கு அந்தரம் எழுந்து 10-92
ஈங்கிவன் தன்னையும் ஈமத் தேற்றி" 22–213

இதைப் போன்றே அல்லது என்ற குறிப்பு வினையெச்சமும்

மணிமேகலையில் அன்றி என்ற பொருளில் வருவதை எடுத்துக் காட்டுவார்.

"ஆன்றவரல்லது பலர் தொகுபு உரைக்கும்" 2-34
"அருத்தவப் படுத்தல் அல்லது யாவதும்" 2-56
"மண்ணவர் விழையார் வானவ ரல்லது" 3-48
"வாங்குநர் கையகம் வருத்துத லல்லது" 11-71
"சிறந்தோர்க் கல்லது செவ்வனம் சுரவாது" 11-121

5.2.5.2.4 இன்னும் சில கூறுகள்

இன்னும் சில கூறுகளையும் நாம் மணிமேகலையில் காண முடியும். அப்படி, இப்படி, எப்படித்து என்ற சொல்லாட்சிகள் முதன் முதலாக மணிமேகலையில் மட்டுமே காணப்படுகின்றன.

இதைப் போன்றே இப்போது என்ற சொல்லாட்சியும் மணி மேகலையில்தான் உள்ளது.

5.2.5.2.5 மேற்கூறிய மொழிக்கூறுகளின் தன்மை

இவர்கள் சுட்டிச் செல்லும் ஒரு சில கூறுகள் பிந்திய கூறு களே அல்ல. இன்னும் சில கூறுகளோ முன்பழந்தமிழ் நூல்களில் அரிதாகக் காணப்பட, சிலம்பு, மணிமேகலை போன்றவற்றில் அதிகமாக வருபவை. இன்னும் சிலவோ சிலம்பு, மணிமேகலையில் மட்டும் காணப்படுபவை. இன்னும் ஓரிரு கூறுகளோ மணிமே கலையில் மட்டுமே வருபவை.

5.2.5.2.5.1 பழந்தமிழ்க் கூறுகள்

1) முன்னர்க் குறிப்பிட்டபடி தன்மை ஒருமை காட்டும் –அன் விகுதி முன்பழந்தமிழ் நூல்களிலேயே அதிகமாகக் காணப்படுவது இங்கு (பார்க்க, 5.2.4.2.3.1) நினைவுகூரத்தக்கது.

2) இதைப்போன்றே நீர் என்ற சொல்லும் பலவேறு முன் பழந்தமிழ் இலக்கியங்களில் வருவது முன்னரே (5.2.1.3) சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

3) இதுபோன்றே ஆளன், ஆட்டி, ஆளர் ஆகிய விகுதிகளும் ஐங்குறுநூறு, அகநானூறு, நற்றிணை, குறுந்தொகை, புறநானூறு, பத்துப்பாட்டு, பரிபாடல், கலித்தொகை ஆகிய நூல்களில் எல்லாம் காணப்படுகின்றன (பார்க்க, அகத்தியலிங்கம், 1982).

4) இவற்றைப்போன்றே 'கொண்ம்' போன்ற முன்னிலைச் சொற்களும், கந்தசாமி குறிப்பிடுவதுபோல பத்துப்பாட்டிலும் பரிபாடலிலும் மட்டுமின்றி பதிற்றுப்பத்து (1) நற்றிணை (1) புறம் (5) ஆகிய நூல்களிலும் காணப்படுகின்றன. புறநானூற்றில் மட்டுமே ஐந்து இடங்களில் வந்துள்ளது கவனிக்கத்தக்கது.

தம்	பதி	85-4
சென்ம்	நற்	71-3
கொண்ம்	புறம்	152-29
வம்	பத்து	2-101

5) துணைவினைகளும் மணிமேகலையில் மட்டுமின்றி பிற இலக்கியங்களிலும் காணக்கிடக்கின்றன (பார்க்க, அகத்திய லிங்கம், 1982).

6) 'எல்லாம்' என்ற பதிலிடு பெயரும் உயர்திணைச் சொற்களுக்குப் பின் பிற இலக்கியங்களிலும் வருதல் காணலாம். அகம் (1), குறு (1), புறம் (5), பத்து (2), கலி (6), குறள் (6), சிலம்பு (10) ஆகிய நூல்களிலும் இது உள்ளது (பார்க்க, அகத்தி லிங்கம், 1982).

7) அல்லது என்ற சொல் குறிப்புவினையெச்சமாக அன்றி என்ற பொருளில் மணிமேகலையில் பயின்று வருகின்றது என்பார் வ.சுப. மாணிக்கம். ஆனால் இப்பொருளில் இச்சொல் தொல்காப்பியம் போன்ற பழந்தமிழ் இலக்கியங்களிலேயே காணக் கிடக்கின்றது.

''ஆவோடல்லது யகர முதலாது'' எழுத்து 65
''சார்ந்துவரி னல்லது தமக்கியல்பில'' எழுத்து 101

''ஒருமைக் கல்ல தெண்ணுமுறை நில்லாது'' சொல் 44

"..............கம்பலை யல்லது
பூசலறியா......................." பதி 27-14

"செந்நீர்ப் பூச லல்லது
வெம்மை யரிதுநின் கைன்றலை நாடே பதி 28-13

"...........எண்ணுநர் அல்லது
கதிர்மருங் கறியா........" அகம் 43-6

"இரைதேர் வெண்குரு கல்லதியவதும்" குறு 113-3

9) இதுபோன்றே இடு என்ற வினையும் வைத்தல் போன்ற பொருளில் பல இலக்கியங்களிலும் காணக் கிடக்கின்றது.

"புனலாடு மகளி ரிட்ட வொள்ளிழை" ஐங் 100-1
"வள்ளத் திடும்பால்........" புறம் 328-7

போன்ற உதாரணங்கள் சங்க இலக்கியங்களில் உள்ளன. துணை வினையாகவும் இது

வளர்ந்திட்ட	நற்	334-1
பிளந்திட்ட	நற்	107-1
அணிந்திடு	நற்	395-7
கிளைத்திட்ட	புறம்	325-4

போன்ற இடங்களில் வந்துள்ளது.

5.2.5.2.5.2 வரவு எண்ணிக்கையில் கூடி வரும் கூறுகள்

இன்னும் சில கூறுகளோ சங்க இலக்கியங்களில் அரிதாக வர மணிமேகலையில் சிறிது அதிகமாக வருபவை.

1) நான் என்ற பதிலிடு பெயர் பரிபாடலில் (6-87) முதல் முதலாகக் காணப்படுகிறது. இதே நிலையைத்தான் 'உன்' என்ற சொல்லிலும் காணுகிறோம். இது அகநானூற்றில் ஒரு இடத்தில் (222-2) வருவதைக் காணலாம். சிலம்பிலும் (6) மணிமேகலை யிலும் (29) கூடுதலாகக் வரக் காண்கிறோம்.

2) -ஓம் ஈற்று தன்மைப் பன்மைச் சொல்லும் முன்னரே குறிப்பிட்டபடி ஐங்குறுநூறு (1) புறநானூறு (1) ஆகிய நூல்களில் ஒவ்வொரு இடத்தில் வந்துள்ளது. சிலம்பில் பத்து இடங்களிலும், மணிமேகலையில் ஒரு இடத்திலும் வருதல் காணலாம்.

3) செய்தால் வாய்பாட்டு வினையெச்சமும் ஐங்குறுநூறு (1) புறம் (1) பரிபாடல் (2) கலித்தொகை (5), குறள் (2) சிலம்பு (13) மணி (9) ஆகிய நூல்களில் வந்துள்ளன.

என்றால்	ஐங்	248-3
கண்டால்	புறம்	380-25
மடுத்தால்	பரி	20-42
கேட்டால்	கலி	107-13
கண்டால்	குறள்	1246
உரைத்தால்	சிலம்பு	11-22

4) 'ன்' இறந்தகால இடைநிலையும் தொல்காப்பியத்திலேயே காணப்படுகிறது. (சொன்ன தொல். 1037) சங்க இலக்கியங்களில் ஆனீர் என்ற சொல்லிலும் இது காணக்கிடக்கிறது. (ஆனீர் ஐங் 304-2, குறு 178-4) ஆனால் சிலம்பிலும், மணிமேகலையிலும் அதிக எண்ணிக்கையில் வரக் காணலாம். (காண்க, 6.3.2.6)

5) சைகாரச் சொல்லும் பரிபாடலில் ஒரு இடத்தில் காணப்படுகிறது.

சையம்	பரி 11-14

மணிமேகலையில் இவ்வகைச் சொற்கள் மூன்று இடங்களில் வருகின்றன.

6) அங்கு, இங்கு ஆகிய சொற்களும் பிற இலக்கியங்களில் ஓரிரு இடங்களிலும், சிலம்பு, மணிமேகலையில் வரவு எண்ணிக்கையில் கூடியும் வரும் சொற்கள்.

அங்கு பத்து 8-97
கலி 143-46

சிலம்பு 6-25, 24-1-10, 19-1-30, 30-39
மணி 6-26, 14-86, 18-83, 21-8, 23-37,
25-185, 26-18, 27-32, 28-116, 210

இங்கு அகம் 85-3
குறு 175-5
கலி 47-10
சிலம்பு 2-72, 9-76, 13-54, 15-110,
20-60
மணி 4-104, 20-89, 123, 21-107,
23-128, 25-10, 27-221

7) யகர மெய் கெடலும் நற்றிணையிலும் (ஆர் 119-4) பரி பாடலிலும் (ஆறு 11-50) 15-21, வருவது குறிப்பிடத்தக்கது.

8) இவற்றைப் போன்றே ஆக என்பது ஆ என வருவதையும் பிற இலக்கியங்களில் காணமுடியும்.

''கரும்பு குணிலா மாங்கனி யுதிர்க்கும்'' ஐங் 87-2
''...வரம் பணையாத் துயல்வர'' அகம் 13-20
''நம்மினும் வலிதாத் தூக்கிய பொருளே'' அகம் 265-23
''மாயச் செலவாச் செத்து...'' குறு 325-2
''தென்குமரி வடபெருங்கல்
குணகுட கட லாவெல்லை'' புறம் 17-2
பத்து 6-71
''இருநிலந் திகிரியா...'' புறம் 228-14
''... பெருமலை
மண்ணா . . .'' புறம் 228-15
''...வேர் முதலா'' புறம் 229-3

"...களி றெருதா" புறம் 342-13

"...நசை துணையா" புறம் 393-7

"... இலை சுளகா" கலி 41-2

9) 'போகலும் போகுவை' போன்ற ஆட்சி; மணிமேகலையில் மட்டுமே வருவதாக வ.சுப. மாணிக்கம் குறிப்பிடுவார். இவ்வகை முற்றை நற்றிணை, குறுந்தொகை, கலித்தொகை ஆகிய நூல் களிலும் காணமுடியும்.

"நினைதலும் நினைதிரோ..." நற் 318-1

"...நல்கலும் நல்குவர்" குறு 37-1

"உண்ணலும் உண்ணேன்..." கலி 22-6

"...வாழலும் வாழேன்" கலி 23-7

மேலே காட்டியவற்றில் தன்மை, முன்னிலை, படர்க்கை ஆகிய வற்றில் ஐயநடை வந்திருப்பதைக் காணலாம் மேலும் ஓடலும் ஓடும்' போன்ற சொல்லாட்சி சிலம்பிலும், மணிமேகலையிலும் மட்டுமே காணப்படுகின்றது என்பார். ஆனால்

அழுதலும் அழூஉம் கலி 147-10

எனக் கலித்தொகையிலும் வரக் காண்கிறோம்.

5.2.5.2.6 சிலப்பதிகார, மணிமேகலைக் கூறுகள்

இன்னும் சில கூறுகளோ சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய இரண்டிலும் மட்டும் காணப்படுபவை.

1) எங்கு என்ற சொல் சிலம்பு, மணிமேகலை இரண்டில் மட்டுமே காணப்படுகிறது.

எங்கு சிலம்பு 19-69, 30-111

மணி 6-187, 191

2) இந்த என்ற சொல்லும் சிலம்பிலும், மணிமேகலையிலும் மட்டுமே வருகிறது.

இந்த	சிலம்பு	15-107, 21-51
	மணி	6-165, 13-62, 15-107, 21-51, 22-155, 26-63, 27-285, 28-198

3) காரர் என்ற விகுதியும் சிலம்பிலும், மணிமேகலையிலும் மட்டுமே காணப்படுகிறது.

கஞ்சகாரர்	சிலம்பு 5–28, மணி 28-35
மாலைக்காரர்	மணி 28-40

4) தன்மை, முன்னிலையில் 'தன்' அசைச்சொல் இவ்விரு நூல்களில் மட்டுமே வரக் காண்கிறோம்.

என்றன் மேல்	சிலம்பு	9–48
என்றன் வஞ்சியொடு	சிலம்பு	25-135
உன்றன் அருந்துயர்	சிலம்பு	15-68
என்றன் வான்பதிதன்னுள்	மணி	1-6
என்றன் பழவினை	மணி	17-14
என்றன் உள்ளகம் புகுந்து	மணி	18-120
உன்றனுக்கு	மணி	16-113
உன்றன் கோட்டம்	மணி	18-169

5) 'செய்ததன் பின்னர்' போன்ற சொல்லாட்சி சிலப்பதிகாரத்திலும், மணிமேகலையிலும் மட்டுமே வரக் காண்கிறோம்.

போந்ததன் பின்னர்	சிலம்பு	26-104
இறந்ததன் பின்னர்	சிலம்பு	37-159
நடந்ததன் பின்னர்	சிலம்பு	30-85
கண்டதன் பின்னர்	மணி	11-32
சென்றதன் பின்னும்	சிலம்பு	28–130

5.2.5.2.7 மணிமேகலைக் கூறுகள்

மேலும் சில கூறுகளோ மணிமேகலையில் மட்டுமே காணப்படுபவை.

1) அந்த என்னும் சுட்டுச் சொல் மணிமேகலையில் மட்டுமே காணப்படுகிறது. எனினும் இந்த என்பது சிலம்பில் காணப்படுவது இங்கு நினைவு கூரத்தக்கது.

அந்த மணி 17-34, 23-61, 28-55, 29-30

2) அப்படி, இப்படி ஆகிய சொற்களும் மணிமேகலையில் தான் முதன்முதல் காணப்படுகின்றன.

அப்படி மணி 28-189, 29-399, 409

இப்படி மணி 29-468, 30-178

எப்படித்து மணி 27-88

3) இப்போது என்ற சொல்லும் மணிமேகலையில்தான் முதன் முதலில் காணப்படுகிறது (மணி 27-85).

4) கந்தசாமி சுட்டிக்காட்டுவது போல் -கிறு- நிகழ்கால இடைநிலையும் மணிமேகலையில் மட்டுமே காணப்படும் ஒன்றாகும்.

இந்நிலையில் மணிமேகலை பின்பழந்தமிழ் நூல்களில் ஒன்று என்பதும், சிலப்பதிகாரத்தை அடுத்துத் தோன்றியது என்ப தும் நன்கு புலனாகும். சிலப்பதிகாரத்தில் மட்டும் காணப்படும் கூறுகள் மணிமேகலையில் காணப்படா விட்டாலும் அது தற்செயல் விடுப்பினால் ஏற்பட்டதாகும்.

5.3 பின்பழந்தமிழ் இலக்கியங்களின் வரிசைமுறை

எனவே இதுகாறும் கூறியவற்றால் பின் பழந்தமிழ் இலக்கியங்களை

பரிபாடல்

கலித்தொகை

திருக்குறள்

சிலப்பதிகாரம்

மணிமேகலை

என வரிசைப்படுத்துவது பொருத்தமாகும்.

பரிபாடல், கலித்தொகை, குறள், சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய நூல்களில் காணப்படும் மேலே குறிப்பிட்ட கூறுகள் ஒவ்வொரு தனி நூலின் விசேடக் கூறுகள் எனக் கருதுவதைவிட பின்பழந் தமிழ்க் கூறுகள் எனக் கருதுவதே பொருத்தமாகும். ஒரு நூலில் காணப்படும் புதிய கூறுகள் பல பிற நூல்களிலும் காணப்படு கின்றன. சில கூறுகளோ பிற நூல்களில் காணப்படும் இன்னொரு கூறுடன் பொருந்த வைத்து எண்ணற்பாலன. எடுத்துக்காட்டாக மணிமேகலையில் காணப்படும் 'அந்த' என்ற சுட்டு 'இந்த' என்ற சுட்டுடன் பொருந்துவது. ஆனால் சிலம்பில் 'அந்த' வரவில்லை. இந்நிலையில் இவற்றையெல்லாம் பின்பழந்தமிழ்க் கூறுகள் எனக் கருதுவது பொருத்தமாகும்.

6

முன் பழந்தமிழ்க் கூறுகளும் பின் பழந்தமிழ்க் கூறுகளும்

6.1 முன்பழந்தமிழ் நூல்களும் பின்பழந்தமிழ் நூல்களும்

இதுகாறும் கூறியவற்றால் பழந்தமிழ் நூல்களை முன்பழந்தமிழ் நூல்கள் என்றும், பின்பழந்தமிழ் நூல்கள் என்றும் பிரிக்கலாம் என்பதும், முன்பழந்தமிழ் நூல்களில் பதிற்றுப்பத்து, ஐங்குறுநூறு, அகநானூறு, நற்றிணை, குறுந்தொகை, புறநானூறு, பத்துப்பாட்டு ஆகிய நூல்கள் அடங்கும் என்பதும் பின்பழந்தமிழ் நூல்களில் பரி பாடல், கலித்தொகை, திருக்குறள், சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகியவை அடங்கும் என்பதும் தெரியவரும். முன்பழந்தமிழ் நூல் களுக்கும், பின்பழந்தமிழ் நூல்களுக்கும் இடையே உள்ள வேறு பாடுகள் பலவாகும். பின்பழந்தமிழ் நூல்களின் வரிசைமுறையை ஆராய்ந்தபோது அவற்றின் சிறப்புக்கூறுகள் பலவும் சுட்டிக் காட்டப்பட்டன. இந்நிலையில் இவ்விரு கால நூல்களுக்கும் இடை யே உள்ள வேறுபாடான கூறுகள் பலவற்றை வகுத்தும் தொகுத் தும் குறிப்பிடுவது ஒரு தெளிவையும் முடிவையும் தந்து நிற்கும்.

பின்பழந்தமிழ் நூல்களைப் பற்றி ஆராய்ந்த வையாபுரிப் பிள்ளை (1952, 1954), இராசமாணிக்கம் (1963), சாரங்கபாணி (1977), வ.சுப. மாணிக்கம் (1976, 1979) போன்றவர்கள் இந்நூல் களின் தனித்தன்மை பற்றிப் பலவேறு கோணங்களில் நின்று இவற்றின் காலத்தை நிர்ணயிக்க முயன்றுள்ளனர். பல்வேறு காரணங்களைக் காட்டும் இவர்கள் பலவேறு மொழிக்கூறுகளையும் தந்து நிற்பது முன்னரே கூறப்பட்டது. இவர்கள் காட்டும் மொழிக்கூறுகளில் பல முன்னரே முன்பழந்தமிழ் நூல்களில் வந் துள்ளன என்றாலும் இந்நூல்கள் பிற நூல்களுக்குப் பிந்தியன

என்பது வெள்ளிடைமலையாகும். தனித்தனி நூல்களின் காலத்தை ஆராயும் இவர்கள் காட்டும் மொழிக்கூறுகள் பலவும் பொதுவாகப் பின்பழந்தமிழ் நூல்களின் பண்புகளாகவே கருதப்படவேண்டும் (அகத்தியலிங்கம், 1982). தனிப்பட்ட நூல்களில் மட்டும் காணப்படு பவையாக ஒருசில கூறுகளே உள்ளன. இவற்றுள்ளும் சில கூறுகள் பிற நூல்களில் தற்செயலாக விடுபட்டவையாகவே கருதத்தக்கன.

முன்பழந்தமிழ் நூல்களுக்கும் பின்பழந்தமிழ் நூல்களுக்கும் இடையே பலவேறு வேறுபாடுகள் உள்ளன என்பது முன்னரே குறிப்பிடப்பட்டது. இவ்வேறுபாடுகள் ஒலியன் இயல், உருபன் இயல் அல்லது சொல்லியல், தொடரியல், சொற்களஞ்சியம் (lexicon) ஆகிய பல பிரிவுகளில் காணப்படுகின்றன. உருபன் இயலிலும் பெயர்ச் சொல், வினைச்சொல், இடைச்சொல் ஆகிய பிரிவுகளில் எல்லாம் வேறுபாடுகள் பலவற்றைக் காணமுடியும்.

கீழே தரப்படும் பலவேறு மொழிக்கூறுகள் மேலே குறிப்பிட்ட அறிஞர்களாலும், பிறராலும் குறிப்பிடப்பட்டுள்ளவையாகும். அவற்றோடு வேறுபல புதிய கூறுகளும் தரப்படுகின்றன.

6.2 ஒலியன் இயல்

6.2.1 சைகாரச் சொற்கள்

சகர ஒற்று அ, ஐ, ஔ என்னும் மூன்று உயிர்களுடனும் வருதல் இல்லை என்பது தொல்காப்பியம். ஆனால் சகரச் சொற்கள் முன்பழந்தமிழ் நூல்களிலும், பின்பழந்தமிழ் நூல்களிலும் வரும் என்பது முன்னரே குறிப்பிடப்பட்டது (3.2).

ஆனால் சைகாரச் சொற்கள் பரிபாடல், மணிமேகலை ஆகிய இருநூல்களில் மட்டும் காணப்படுகின்றன.

சையம்	பரி	11-14
சைதனியவான்	மணி	29-176
சைவவாதி	மணி	27-87

இந்நிலையில் இதனைப் பின்பழந்தமிழ்க் கூறாகக் கருதலாம்.

6.2. 2 யகர மெய் கெடல்

யார், யாறு, யாண்டு, யானை ஆகிய சொற்கள் பின்பழந் தமிழ் நூல்களில் யகர மெய் கெட்டு ஆர், ஆறு, ஆண்டு, ஆனை என வரக் காணலாம். இவற்றுள் ஆர் என்ற சொல் நற்றிணையில் ஒரு இடத்தில் (119-4) காணப்பட்டாலும் இதனையும் பின்பழந் தமிழ்க் கூறகவே கருத வேண்டும்.

ஆறு	பரி	11-50, 15-22
ஆறு	சிலம்பு	10-156
ஆர்	சிலம்பு	7-38-4, 10-122, 224
	மணி	4-95, 5-56, 6-146, 17-80, 21-136, 24-33
ஆண்டு	சிலம்பு	1-24, 34, 3-10, 10, 13-90, 182, 26-63, 21-54, 30-85
	மணி	114-5, 17-38, 39,41, 45, 20-25, 22-17, 129, 24-100, 25-101
ஆனை	சிலம்பு	12-8-1
	மணி	20-32

6.2.3 யோகாரச் சொற்கள்

சங்க இலக்கியங்களில் யகர யூகாரச் சொற்கள் மட்டுமே காணப்பட மணிமேகலையில் யோகாரச் சொற்களும் வந்துள்ளன. இவ்வகைச் சொற்கள் இடைக்காலத் தமிழில் மிகுதியாக வரக் காணலாம்.

யோகம்	மணி 3-100
யோசனை	மணி 6-211

6.2.4 யாகாரம் எகரம் ஆதல்

பலவேறு யாகார முதல் வினாச் சொற்கள் எகர முதல் வினாச் சொற்களாக மாறியிருத்தல் கண்கூடு. யாங்கு என்பது எங்கு

எனவும், யாங்ஙனம் என்பது எங்ஙனம் எனவும், யாவள் என்பது எவள் எனவும் மாறி வந்துள்ளன. இது பற்றி இடைச்சொல் என்ற பிரிவில் விரிவாக ஆராயப்படுகிறது.

6.2.5 நெடில் குறிலாதல்

இதுபோன்றே முன்பழந்தமிழ் நூல்களில் ஆங்கு, ஈங்கு என வரும் இடைச்சொற்கள் பின்பழந்தமிழ் நூல்களில் நெடில் குறிலாகி அங்கு, இங்கு என மாறி வருவதும் குறிப்பிடத்தக்கது. இவையும் இடைச்சொல் என்ற பிரிவில் விளக்கப்படுகின்றன.

6.3 சொல்லியல்

முன்பழந்தமிழுக்கும், பின்பழந்தமிழுக்கும் இடையே உள்ள வேறுபாடுகள் சொல்லியலிலும் வரக் காண்கிறோம். பெயர்ச்சொல், வினைச்சொல், இடைச்சொல் ஆகியவற்றில் எல்லாம் பலவேறு வேறுபாடுகள் காணக்கிடக்கின்றன.

6.3.1 பெயர்ச்சொல்

பல்வேறு பெயர்கள், பதிலிடுபெயர்கள், அவற்றின் வேற்றுமை அடிகள், பன்மை காட்டும் விகுதிகள், உயர்திணைப் பன்மைச் சொற்கள், உயர்வு ஒருமைப் பெயர்கள் போன்றவற்றில் இவ்விரு காலத் தமிழுக்கும் இடையே வேற்றுமைகள் பல உள்ளன.

6.3.1.1 நான்

முன்பழந்தமிழில் தன்மை ஒருமைப் பதிலீடு பெயராக 'யான்' என்ற சொல்லே ஆட்சிபெற்றுள்ளது. இச்சொல்லிலிருந்தே நான் என்ற சொல் ஒப்புமை ஆக்கத்தினால் உருவாயிற்று என்பது மொழியியல் அறிஞர்களின் எண்ணம். இச்சொல் பரிபாடல் (2), சிலம்பு (7), மணிமேகலை (4) ஆகிய நூல்களில் மட்டுமே காணப் படுகிறது.

நான்	பரி	6-87, 20-82
நான்	சிலம்பு	29-2-4,5, 29-3-4,5, 29-4-4,5, 29-10-2

நான் மணி 17-45, 23-95, 27-278, 28-92

6.3.1.2 நின்-உன்

முன்பழந்தமிழ் நூல்களில் முன்னிலை ஒருமை வேற்றுமை அடிச்சொல்லாக நின் பெருவாரியாகக் காணப்பட, உன் என்ற சொல் அகநானூற்றில் ஒரு இடத்திலும் சிலப்பதிகாரம் (6) மணிமேகலை (29) ஆகிய நூல்களில் பல இடங்களிலும் காணப் படுகிறது. நகரம் கெட்டுவருதல், பழந்தமிழ் இலக்கியங்களில் (நீர்: ஈரம்) காணப்படுகின்ற போதிலும் முன்னிலைப் பதிலிடு பெயர்களில் காணப்படுவதில்லை. ஆனால் பின்பழந்தமிழ் நூல்கள் என்று கூறப்படுகின்ற சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய நூல் களிலும் இடைக்கால நூல்களிலும் காணப்படுகிறது. அகநானூற்றுக் காலத்திலேயே உன் இலக்கியத்தில் ஏறிவிட்ட போதிலும் சிலப்பதிகாரம், மணிமேகலை காலத்திற்குப் பின்னரே தொடர்ச்சி யாக இலக்கியங்களில் இது வருகிறது. சம்பந்தர் தேவாரம் (11) அப்பர் தேவாரம் (128) சுந்தரர் தேவாரம் (113) போன்ற நூல் களிலெல்லாம் இதன் ஆட்சியைக் காணலாம். இந்நிலையில் இதனைப் பின்பழந்தமிழ்க் கூறாகவே கருதவேண்டும்.

''கான நாடன் உறீஇய நோய்க்குன்
மேனி ஆய்நலந் தொலைதலின் மொழிவென்''

அகம் 222-2 (கபிலர்)

''உன்பெருந் தானத் துறுதி யொழியாது''

சிலம்பு 15-34

''ஒருதனி நின்றாய் உன்றிற மறிந்தேன்'' மணி 4-96

1. சிலம்பு 15-34, 68, 23-29, 25-148, 30-62, 30-64
2. மணி 2-17, 4-96, 7-27, 9-63, 69, 10-18, 38, 42, 43, 48,79, 14-35, 16-37, 113, 119, 17-46, 18-169, 171, 21-18, 108, 22-71, 129,23-74, 80, 102, 24-62 144, 25-100, 26-68

போன்ற இடங்களில் 'உன்' வருதல் காணத்தக்கது.

6.3.1.3 நும்-உம்

முன்னிலை ஒருமையைப் போலவே முன்னிலைப் பன்மைப் பதிலிடு வேற்றுமை அடிச்சொல்லும் நகர ஒற்று இழந்து காணப் படுகிறது. உம் என்னும் வேற்றுமை அடிச்சொல்லும் பின்பழந்தமிழ் நூல்களாகிய பரிபாடல் (1), கலித்தொகை (1), மணிமேகலை (1), ஆகிய நூல்களிலும் முன்பழந்தமிழ் நூல்களாகிய அகநானூறு (1), நற்றிணை (1), புறம் (1), ஆகிய நூல்களிலும் உள்ளது. தேவார நூல்களில் இது அதிகமாகக் காணப்படுகிறது. முன்பழந்தமிழ் காலத்திலேயே இது இலக்கியத்தில் ஏறிவிட்ட போதிலும் பின்பழந் தமிழ்க் கூறாகவே இது கருதப்படவேண்டும். இவற்றுள் இரு இடங்கள் உயர்வுஒருமையாகவும் உள்ளன.

"………உம்மோடு (உயர்வு ஒருமை)
ஆடினம் ………" (நற் 368-3-4) (கபிலர்)

"இம்மனை அன்றஃ தும்மனை" (உயர்வு ஒருமை)
(அகம் 56-14) (மதுரை அறுவை வாணிகன் இளவேட்டனார்)

"ஒருவீர் தோற்பினுந் தோற்பதுங் குடியே"
(புறம் 45-5) (கோவூர் கிழார்)

"வச்சிய மானே மறவினை மாற்றுமக்கு"
(பரி 20-84) (நல்லந்துவனார்)

"சான்றீர் உமக்கொன் றறிவுறுப்பேன் ………"
(கலி 139-4)

"செறிதொடி நல்லீர் உம்பிறப் பீங்கு ………"
(மணி 11-141)

6.3.1.4 —கள் பன்மை விகுதி

6.3.1.4.1 அஃறிணைப் பன்மை

பழந்தமிழ் இலக்கியங்களில் -கள் விகுதி பொதுவாக

அஃறிணை காட்டும் சொற்களிலேயே வரும். அதுவும் மிகமிக அருகியே காணப்படும். பதிற்றுப்பத்து (2), ஐங்குறுநூறு (2), அகம் (2), நற்றிணை (1), குறுந்தொகை (0) புறம் (2), பத்துப் பாட்டு (3), பரிபாடல் (3), கலித்தொகை (10), குறள் (5), சிலம்பு (56), மணிமேகலை (74) ஆகிய நூல்களில் காணப்படு கின்றன.

இது பற்றித் தொல்காப்பியம் கூறுவது (சூத். 654) இங்கு நினைவு கூரத்தக்கது.

நிரைகள்	பதி	27-10	களங்கள்	பத்து	10-464
அரண்கள்	பதி	44-13	முடிகள்	பரி	2-39
மயில்கள்	ஐங்.	291-1	கண்கள்	பரி	7-52
		292-1	இழைகள்	பரி	10-92
வழிகள்	அகம்	18-11	கைகள்	குறள்	1238
பார்ப்பினங்கள்			இடும்பைகள்	,,	347
	அகம்	31-6	துன்பங்கள்	,,	1045
பலிகள்	நற்	293-2	பூதங்கள்	,,	271
யாண்டுகள்			சொற்கள்	,,	1100
	புறம்	357-4	கருவிகள்	சிலம்பு	3-139
அழிகள்	புறம்	399-10	உயிர்கள்	,,	10-175
பொருள்கள்			கண்கள்	,,	4-5
	பத்து	1-97	இடங்கள்	மணி	6-199
இயங்கள்	பத்து	10-277	அணுக்கள்	மணி	27-126

இதனால்தான் அஃறிணைப் பெயர்களைப் "பால்பகா அஃறிணைப் பெயர்கள்" என இலக்கண நூலோர் (நன். சூத். 281) குறிப்பிட்டுள்ள னர். ஆனால் காலம் செல்லச்செல்ல அஃறிணைச் சொற்களுடன் –கள் விகுதியை இணைத்துப் பன்மை கூறும் வழக்கம் பெருகிற்று. பின்னர் இது உயர்திணைப் பன்மைப் பெயர்களிலும், உயர் திணைப் பெயர்களிலும் பரவ ஆரம்பித்தது. உயர்வு ஒருமை

யிலிருந்து பிரித்தறியவே இவை பன்மைப் பெயர்களில் வந்தன. எனவேதான் இவற்றை இரட்டைப் பன்மை என அழைக்கிறோம்.

6.3.1.4.2 இரட்டைப்பன்மை

''ஐவரென் றுலகேத்தும் அரசர்கள்......'' கலி 25-3
''தீதுதீர் சிறப்பின் ஐவர்கள் நிலைபோல'' கலி 26-6
''கேளிர்கள் நெஞ்சமுழுங்கக் கெழுவுற்ற செல்வங்கள்''
கலி 149-8

''வரைவிலா மாணிழையார் மென்தோள்
புரையிலாப் பூரியர்கள் ஆழும் அளறு'' குறள் 916

''கோவலர்தஞ் சிறுமியர்கள் குழற்கோதை
புறஞ்சோர'' சிலம்பு 17-28-2
''வெடிபட வருபவ ரெயினர்கள்......'' சிலம்பு 12-20-2
''இறந்த காலத் தெண்ணில் புத் தர்களுஞ்
சிறந்தருள் கூர்ந்து திருவாய் மொழிந்தது''
மணி 30-15-15
''தேவிர்கா ளெம்முறுநோய் தீர்மென்று மேவியோர்''
சிலம்பு 9-13-14
''நிறையுடைப் பத்தினிப் பெண்டிர்கா ளீதொன்று''
சிலம்பு 19-4
''சமணீர் காள்நுஞ் சரணென் றோனை''
மணி 5-52

சிலம்பு 12-15-2 12-16-2, 12-17-2, 16-20, 25-38, 27-33, ...
மணி 3-129, 6-199, 10-7, 12-90, 13-66, 24-121, 25-107, 109, 114, 29-290, 30-62............

போன்றவற்றில் அரசர்கள், ஐவர்கள், கேளிர்கள், பூரியர்கள், சிறுமியர்கள், எயினர்கள், புத்தர்கள், சமணீர்காள், பெண்டிர் காள், தேவிர்காள் ஆகிய சொற்கள் உயர்திணை இரட்டைப் பன்மைச் சொற்களாக வந்துள்ளன. இவை -கள் விகுதி உயர் திணைப் பன்மை காட்டும் விகுதிக்குப் பின் வருவதை உணர்த்தும். இத்தகைய நிலையை முன் பழந்தமிழ் நூல்களில் காணமுடிவ தில்லை.

6.3.1.4.3 பதிலிடுபெயர்களில் இரட்டைப் பன்மை

இவ்வாறு இரட்டைப்பன்மை விகுதியாக உயர்திணையில் வந்த -கள் பின்னர்ப் பதிலிடு பெயர்களிலும் ஆண்பால், பெண் பால் பெயர்களிலும் வரத் தொடங்கின. கலித்தொகை, சிலம்பு, மணிமேகலை ஆகிய நூல்களில் இப்பண்பைக் காணலாம்.

1) எங்கள்

"... ... ... எங்கட்
படர்கூற நின்றது முண்டோ . . ." கலி 22-22
"வெவ்வுரை யெங்கட்கு விளம்பினி ராதலின்" மணி 25-53

2) யாங்கள்

"... ... யாங்கள் நினைப்பினும் அறியேம்" சிலம்பு 25-6[illegible]
"......யாங்களும் நீள்நெறிப் படர்குதும்" சிலம்பு 11-1[illegible]
"காண்குவம் யாங்களும்........" மணி 16-8[illegible]

3) நுங்கள்

"முதிர்வினை நுங்கட்கு முடிந்த தாகலின்"
சிலம்பு, பதிகம் 45

4) தங்கள்

"வானோர் தங்கள் வடிவின் அல்லதை

ஈனோர் வடிவிற் காண்ட லில்லெனக்''

சிலம்பு, பதிகம் 52, 23–175

''......கொங்கிளங் கோசர் தங்கணாட்டகத்து

நங்கைக்கு..............'' சிலம்பு, உரைபெறு கட்டுரை 2–1

''விண்ணவர் தங்கள் விசும்பிட மறந்து

நண்ணுதற் கொத்த நன்னீ ரிடங்களும்'' மணி 28–64

மேலே காட்டிய பதிலிடுபெயர் பன்மைச் சொற்கள் கலித்தொகை, சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய நூல்களில் மட்டுமே காணப் படுவது குறிப்பிடத்தக்கது.

6.3.1.4.4 உயர்திணைப் பன்மை

மேலும் -கள் விகுதி உயர்திணைச் சொற்களுடனும் வருதல் காணலாம். உயர்வு ஒருமைச் சொற்களிலிருந்து பன்மைச் சொற் களைப் பிரித்து அறிவதற்காக உயர்திணைச் சொற்களில் இணைந்த -கள் விகுதி பின்னர் சாதாரண உயர்திணைச் சொற் களுடனும் இணைந்துவிட்டது. இத்தகைய சொற்கள் பரிபாடல், திருக்குறள், சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய நூல்களில் வந்துள்ளன.

''......வாளிகள் நிலைபெற மறலுவார்'' பரி 9-54

''அச்சமே கீழ்களது ஆசாரம் எச்சம்

அவாவுண்டேல் உண்டாம் சிறிது'' குறள் 1075

''அரட்டன் செட்டிதன் ஆயிழை ஈன்ற

இரட்டையம் பெண்கள் இருவரு மன்றியும்''

சிலம்பு 30 49

''ஒன்பது செட்டிக ளுடலென் பிவைகாண்'' மணி 25–165

சிலப்பதிகாரத்தில் நோன்பிகள் (10-24,15-153,164,16-18) சமரிகள் (10-13,27–93) அடிகள் (பதி 2-62, 88, 10-62, 11-166.

13-87, 14–24, 16-18, 43) ஆகிய சொற்களிலும், மணிமேகலையில் அடிகள் (2–5, 3-92, 93, 24-50, 29-45) அறவண அடிகள் (பதி 57, 2-61, 11-140, 12–1, 28-81, 236) அந்தரசாரிகள் (28-69) முனிகள் (28-114) இருங்கோவேட்கள் (28-34) சமயிகள் (28-86). நோன்பிகள் (3–75, 6–86) வாதிகள் (1–160) ஆகிய சொற்களிலும் -கள் விகுதி இணைந்துள்ளது. அடிகள் என்பது உயர்திணை ஒருமை என்பது குறிப்பிடத்தக்கது.

6.3.1.4.5 வினையில் இரட்டைப் பன்மை

பெயர்களிலும் பதிலிடு பெயர்களிலும் மட்டுமின்றி வினைச் சொற்களிலும் -கள் விகுதி இரட்டைப்பன்மை விகுதியாக வருவதைப் பின்பழந்தமிழ் இலக்கியங்களில் காணலாம். -அர்கள் குறிப்பு வினையாலணையும் பெயராகக் குறளில் ஒரு இடத்திலும் –ஆர்கள் வினையாலணையும் பெயராகக் கலித்தொகையில் ஒரு இடத்திலும், குறிப்பு வினையாலணையும் பெயராக மணிமேகலையில் ஒரு இடத்திலும் –ஓர்கள் குறிப்பு வினையாலணையும் பெயராகக் கலித் தொகையில் ஒரு இடத்திலும், சிலம்பில் இரு இடங்களிலும், வினையாலணையும் பெயராக மணிமேகலையில் நான்கு இடங் களிலும் -மின்கள் ஏவல்வினைமுற்றாக சிலம்பில் ஒரு இடத்திலும் வரக் கண்கிறோம் (அகத்தியலிங்கம், ச, 1983c).

-அர்கள்

மற்றையவர்கள்	குறள் 263

–ஆர்கள்

வாழ்வார்கள்	கலி 145-17
ஊன்கணினார்கள்	மணி 21-128

-ஓர்கள்

என்னோர்கள்	கலி 106–23
வயிற்றோர்கள்	சிலம்பு 10-227
வானோர்கள்	சிலம்பு 24--23-4
என்போர்கள்	மணி 21-95, 97, 99, 100

-மின்கள்

நண்ணுமின்கள் சிலம்பு 16- வெண்பா-1

பழந்தமிழ் இலக்கியங்களில் பலவேறு இலக்கணக் கூறுகளிலும் -கள் விகுதியின் வரவினை 189–ஆம் பக்கப் பட்டியல் தெளிவாகக் காட்டும்.

6.3.1.5 உயர்வு ஒருமைப் பெயர்கள்

பெயர்ச் சொற்கள் -ஆர் சிறப்பு விகுதி பெற்று வரும் பண்பினைப் பின்பழந்தமிழ் நூல்களிலேயே காண்கிறோம்.

சாமனார்	கலி	94-34
அசோதையார்	சிலம்பு	17-28-3
		17-32-3
கஞ்சனார்	சிலம்பு	17-37-1
நாரதனார்	சிலம்பு	17-26-4
		17-27-4
வேலனார்	சிலம்பு	24-14-1
மகளார்	சிலம்பு	24-15-2
		24-16-2
மகனார்	சிலம்பு	16-17

-ஆர் விகுதி முன் பழந்தமிழ் நூல்களில் வரவில்லை ஆயினும் வேறு பல விகுதிகள் சிறப்பு குறித்து வந்துள்ளமை காணலாம். காதலர் (குறு 4–3), காதலோர் (குறு 118-5), ஒருவர் (புறம் 45–5) மலைக் கிழவோர் (குறு 392-8) சான்றோர் (குறு 102–4) போன்ற சொற்கள் ஏராளமாக முன் பழந்தமிழ் இலக்கியங்களில் காணக் கிடக்கின்றன. காதலர் என்ற சொல் குறுந்தொகையில் மட்டுமே இருபத்து மூன்று இடங்களில் வந்துள்ளது. இதுபோன்றே இச் சொல் ஐங்குறுநூறு (18), அகம் (32), நற்றிணை (21) ஆகிய முன் பழந்தமிழ் நூல்களிலும் உள்ளது. இதனால் உயர்வு குறிப்பது பண்டைத் தமிழ் நூல்கள் அனைத்திலும் காணக் கிடக்கும் ஒரு

–கள்

	உயர்திணை		அஃறிணை	இரட்டைப் பன்மை			
	ஒருமை	பன்மை	பன்மை	பெயர்	பதிலிடு பெயர்	வினையாலணையும் பெயர்	ஏவல்
பதி	–	–	2	–	–	–	–
ஐங்	–	–	2	–	–	–	–
அகம்	–	–	2	–	–	–	–
நற்	–	–	1	–	–	–	–
குறு	–	–	–	–	–	–	–
புறம்	–	–	2	–	–	–	–
பத்து	–	–	3	–	–	–	–
பரி	–	1	3	–	–	–	–
கலி	–	–	10	3	1	2	–
குறள்	–	1	5	1	–	1	–
சிலம்பு	8	7	56	4	6	2	1
மணி	11	8	74	3	3	5	–

பண்பாகும். எனினும் -ஆர் ஈற்றுச் சொற்கள் முன்பழந்தமிழ் நூல்களில் காணப்படாதது வியப்பாகவே உள்ளது. ஆனால் தொல்காப்பியம்

> ''இயற் பெயர் முன்னர் ஆரைக் கிளவி
> பலர்க்குரி எழுத்தின் வினையொடு முடிமே'' (சூத்.755)

என்ற சூத்திரத்தில் இயற்பெயர் முன்னர் ஆர் வரும் என்றும் அது பலர்பாலுக்குரிய விகுதியுடன் முடியும் என்றும் கூறியுள்ளார். இந்நிலையில் தொல்காப்பியர் காலத்திலேயே இயற்பெயர் -ஆர் விகுதி ஏற்று வரும் என்றாகிறது. ஆனால் தொல்காப்பியத்திற்குப் பின்னர்த் தோன்றியதாகக் கருதப்படும் முன் பழந்தமிழ் இலக்கியங்களில் இவை வரவில்லை.

இந்நிலையில் தொல்காப்பியர் காலத்திலேயே இது வழக்கில் வந்துவிட்டது என்றும் ஆனால் செய்யுள் நடையில் அல்லது இலக்கிய வழக்கில் ஏறவில்லை என்றும் எண்ணலாம். இக்கருத்து வலுப்பெறுதற்குச் சங்கப் பாடல்கள் தொகுப்பும் அவற்றில் காணப்படும் பெயர்களுமே சான்றாக உள்ளன.

ஐங்குறுநூறு சங்ககாலச் சேரவரசனாகிய யானைக்கட்சேய் மாந்தரஞ் சேரலிரும்பொறை காலத்திலேயே தொகுக்கப்பட்டு விட்டது என்பது நாம் அறிந்த செய்தியாகும். இதுபற்றி ஐங்குறு நூற்றின் இறுதியில்

''இத்தொகை தொகுத்தார் புலத்துறை முற்றிய கூடலூர் கிழார்: இத்தொகை தொகுப்பித்தார் யானைக்கட்சேய் மாந்தரஞ் சேரலிரும் பொறையார்'' என ஆர் விகுதி கொடுத்துக் கூறியிருப்பது காண்க. இது பற்றிய விளக்கங்களை வேறு இடத்தில் (அகத்தியலிங்கம் 1983 b: 145-153) காணலாம்.

இதுபோன்றே சங்கப் புலவர்களும் பலவேறு தொகுப்புகளில் பேயனார், ஓதலாந்தையார், காக்கைப்பாடினியார் நச்செள்ளையார் போன்ற ஆர் விகுதி பெற்றிருப்பதும் உணரத்தக்கது. எனவே முன் பழந்தமிழ் இலக்கியங்களில் ஆர் விகுதி பெற்ற சொற்கள் இல்லையாயினும் அக்காலத்திலேயே இவ்வழக்கு வந்துவிட்ட

தாகக் கருதலாம். எனவேதான் தொல்காப்பியரும் "வழக்கும் செய்யுளும்" நாடி ஆர் விகுதி பற்றிப் பேசுகிறார் என எண்ணலாம்.

6.3.1.6 காரர் என்ற விகுதி

பெயர்ச்சொல்லுடன் காரர் என்ற விகுதி சேர்த்து கருத்தா (agentive noun) உருவாக்கும் வழக்கு சிலம்பிலும், மணி மேகலையிலும் வரக் காண்கிறோம். காலம் செல்லச் செல்ல இவ்வகைச் சொற்கள் தமிழ்மொழியில் பெருகி வரத் தொடங் கியமை கண்கூடு. பால்காரன், வண்டிக்காரன் போன்ற நூற்றுக் கணக்கான சொற்கள் இன்று வழக்கில் உள்ளன.

கஞ்சக்காரர்	சிலம்பு 5-28
	மணி 28-35
மாலைக்காரர்	மணி 28-40

6.3.2 வினைச் சொல்

பெயர்ச்சொற்களைப் போலவே வினைச்சொற்களிலும் வேறு பாடுகள் பல உள்ளன. பல்வேறு புதிய வினைச்சொற்கள் பின் பழந்தமிழ் நூல்களில் காணப்படுகின்றன. மட்டுமன்றித் தொழிற் பெயர், குறையெச்சம் (infinitive) வினை எச்சம் (verbal participle) பெயரெச்சம் (relative participle), நிபந்தனை எச்சம் (conditional) கால இடைநிலைகள், எதிர்மறை (negative), வினை யாலணையும் பெயர், பலவேறு விகுதிகள், துணைவினைகள் (auxiliary) ஏவல் (imperative) போன்ற பல்வேறு இலக்கணக் கூறுகளில் இவ்வேறுபாடுகளைக் காணலாம்.

6.3.2.1 ஏவல் வினை

ஏவல் வினையிலும் முன் பழந்தமிழ் நூல்களுக்கும் பின் பழந் தமிழ் நூல்களுக்கும் இடையில் பலவேறு வேறுபாடுகளைக் காண லாம்.

செய்யாய் என்னும் வாய்பாட்டு வினைமுற்றுக்கள் முன்பழந் தமிழ் நூல்களிலும் பின்பழந்தமிழ் நூல்களிலும் உடன்பாட்டு ஏவல்வினையாக அதிகமாகக் காணப்படுகின்றன.

செல்லாய்	செல்வாயாக	பதி	40-21
வாராய்	வருவாயாக	அகம்	219-3
நினையாய்	நினைத்துக் காண்பாயாக	குறு	298-4
வந்தீயாய்	வாராய்	கலி	114-5

அதனால்தான் தொல்காப்பியர்

''செய்யாய் என்னும் முன்னிலை வினைச்சொல்
செய்யென் கிளவி ஆகிடன் உடைத்தே'' (சூத். 393)

எனக் கூறிச் செல்லுவார்.

ஆனால் செய்வாய் வாய்பாட்டு வினைமுற்றுக்களோ பின் பழந்தமிழ் நூல்களிலும், இடைக்காலத்தமிழ் நூல்களிலும் மட்டுமே ஏவல் வினைகளாக வருகின்றன. (கலி 2, சிலம்பு 5, மணி 18)

உழுவாய்	உழுவாயாக	கலி	64-18
காண்பாய்	காண்பாயாக	கலி	100-23
அறிவிப்பாய்	சொல்லுதி	சிலம்பு	20-29, 29
உண்குவாய்	ஏற்றுக்கொள்வாயாக	சிலம்பு	12-21-2,
தருவாய்	தந்தருள்வாயாக	சிலம்பு	9-39
அயர்ப்பாய்	மறந்தொழிக	மணி	18-83, 19-9 12-22-2
உணர்வாய்	உணர்ந்து கொள்வாயாக	மணி	12-34

முன்பழந்தமிழ் நூல்களில் இவ்வாய்பாட்டுச் சொற்கள் ஏவல் வினையாக வருவதில்லை.

இதைப் போன்றே செய்யேல் வாய்ப்பாட்டு வினையும் காணப் படுகிறது. முன்பழந்தமிழ் நூல்களாகிய அகநானூற்றிலும், நற்றிணையிலும் ஒவ்வொரு இடங்களில் காணப்பட்டாலும் பரிபாடலில் இரு இடங்களிலும், மணிமேகலையில் நான்கு இடங்களிலும் வருவதோடு மட்டுமின்றித் தேவாரத் திருவாசகப் பாசுரங்களிலும் வேறு இடைக்காலத் தமிழ் நூல்களிலும் இது உள்ளது,

மணி 17-16, 10-87, 14-94, 25-27, 9-64, 18-87........

ஆட்டேல்	அகம்	97-15
சிதையேல்	நற்	37-1
சூளேல்	பரி	8-68
கூறேல்	பரி	7-69
கொள்ளேல்	மணி	20-121, 21-34, 26-20
மறவேல்	மணி	24-69

முன்பழந்தமிழ் நூல்களில் -அல் ஈற்றுச் சொற்களே அதிகமாக உள்ளன.

இனையல்	ஐங்	461-3
செல்லல்	அகம்	376-1
கொள்ளல்	புறம்	253-1

செய்யாஅல் வாய்பாட்டு ஏவல்வினைமுற்றையும் முன்பழந் தமிழ்க்கூறாகக் கருதலாம். இது அகத்தில் இரு இடங்களிலும், குறுந்தொகையில் மூன்று இடங்களிலும், நற்றிணையில் ஒரு இடத்திலும், கலித்தொகையில் இரு இடங்களிலும் வந்துள்ளது. இந் நிலையில் இதனை ஒரு முன்பழந்தமிழ்க் கூறாகவே கருதலாம்.

அழாஅல்	அகம்	233-2
விடாஅல்	அகம்	26-9
தொழாஅல்	நற்	380-8
தொடாஅல்	குறு	191-7
விடாஅல்	கலி	112-7

செய்யாதி வாய்பாட்டு ஏவல்வினையும் ஒரு பின்பழந்தமிழ்க் கூறே. இவ்வினைமுற்று கலித்தொகையில் மட்டுமே இருபது இடங்களில் வரக் காண்கிறோம்.

அழியாதி	கலி	13-2
உரையாதி	கலி	28-2

முன்பழந்தமிழில் இசின் ஈற்றுச் சொற்கள் ஏவல் ஒருமையில் வருதல் காணலாம். இச்சொற்கள் பதிற்றுப்பத்து ஒழிந்த எல்லா முன்பழந்தமிழ் நூல்களிலும் வருதல் உண்டு.

கண்டிசின்	ஐங் 105–4
ஆன்றிசின்	அகம் 69–4
கண்டிசின்	நற் 202–8
கண்டிசின்	குறு 112-5
நோற்றிசின்	புறம் 202–16
கேட்டிசின்	பத்து 6-208

ஆனால் பின்பழந்தமிழ் நூல்கள் எதிலும் இச்சொற்கள் வருவதில்லை.

இதுபோன்றே "சென்மதி" வாய்பாட்டுச் சொற்களும். இச்சொற்கள் முன்பழந்தமிழ் நூல்களிலேயே அதிகமாகக் (பதி 1, ஐங் 22, அகம் 19, நற் 16, குறு 10, புறம் 32, பத்து 4) காணப்படுகின்றன.

சென்மதி	பதி 53-14
நல்குமதி	ஐங் 179-1
கடவுமதி	அகம் 114–7
ஏகுமதி	நற் 9-9
கடவுமதி	குறு 250-4
நோக்குமதி	புறம் 270-7
ஓம்புமதி	பத்து 1-291

ஆனால் இவ் வாய்பாட்டுச் சொற்கள் பின்பழந்தமிழ் நூல்களில் மிகக் குறைவாகவே (பரி 0, கலி 5, குறள் 0, சிலம்பு 0, மணி 2) உள்ளன.

கடவுமதி	கலி 135–20
ஆகுமதி	மணி 6–29

செய்ம் வாய்பாட்டு ஏவல்வினைகள் முன்பழந்தமிழ் நூல் களிலும் காணப்பட செய்யும் வாய்பாட்டு ஏவல்வினை பின்பழந் தமிழ் நூல்களில் மட்டுமே வரக் காண்கிறோம், (பரி 1, சிலம்பு 2, மணி 4) இந்நிலையில் இதனைப் பின்பழந்தமிழ்க் கூறாகவே கருதவேண்டும்.

வாரும்	பரி	14-1
வாங்கும்	சிலம்பு	7-28-2
காட்டும்	சிலம்பு	16-200
கொடும்	மணி	16-77
தொழும்	மணி	10-70
இரும்	மணி	10-70

செய்மோ, செய்மே வாய்பாட்டு ஏவல்வினைகள் முன்பழந் தமிழ் நூல்களிலேயே மிகுதியான எண்ணிக்கையில் வரக் காண் கிறோம். (சென்மோ - பதி 1, ஐங் 13, அகம் 13, நற் 12, குறு 6 புறம் 20, பத்து 1; சென்மே - பதி 0, ஐங் 5, அகம் 2, நற் 4, பத்து 0).

சென்மோ	பதி	87-1
உரைமோ	ஐங்	80-1
சென்மோ	அகம்	132-8
எழுமோ	நற்	93-6
சென்மோ	குறு	236-2
வனைமோ	புறம்	256-6
சென்மோ	பத்து	4-45
பிரிமே	ஐங்	308-4
சென்மே	அகம்	376-18
ஈமே	நற்	323-11

பின் பழந்தமிழ் நூல்களில் இவை மிகக் குறைவான எண்ணிக்கை

யிலேயே வரக் காண்கிறோம். (செய்மோ - பரி 1, கலி 2, சிலம்பு 1, மணி 2; செய்மே - கலி 1)

-ஈம், -ஈமோ, -ஈமே ஈற்று ஏவல்வினைகளும் முன்பழந்தமிழ் நூல்களிலேயே வரக் காண்கிறோம்.

செல்லாதீம்	நற்	229-3
இருந்தீமோ	புறம்	319–9
விரையாதீமே	ஐங்	364–4

பின்பழந்தமிழ் நூல்களில் கலித்தொகையில் மட்டுமே ஒரு சில இடங்களில் (-ஈம் 1, -ஈமோ 8) இவ் விகுதிகள் வரக் காணலாம்,

செப்பீம்	கலி	93-10
காட்டீமோ	கலி	144-42

6.3.2.2 குறை எச்சம்

குறை எச்சத்திலும் முன்பழந்தமிழ் நூல்களுக்கும், பின்பழந் தமிழ் நூல்களுக்கும் இடையில் ஒரு சில வேற்றுமைகளைக் காண லாம்.

செயவென் வாய்பாட்டுக் குறை எச்சங்களில் வல்வினைகள் (strong verbs) பகர ஒற்று எடுத்து வருதலே முன்பழந்தமிழ் நூல் களில் பெரும்பான்மையாகக் காணப்படுகிறது (சிறப்ப அகம் 29–4). ஆனால் பின்பழந்தமிழ் நூல்களில் ககர ஒற்று தலைதூக்கு தல் கண்கூடு (சிறக்க பரி 9–85).

செயவென் எச்சம்

	-∅-	-ப்ப்-	-க்க்-
பதி	138	32	0
ஐங்	114	23	1
அகம்	1641	83	2

நற்	110	31	1
குறு	295	35	1
புறம்	675	145	5
பத்து	569	153	2
பரி	259	37	6
குறள்	130	17	3
சிலம்பு	736	111	10
மணி	472	43	15

இதுபோன்றே செய்யியர், செய்யிய, செய்வான், காண்பான், செய்மார் வாய்பாட்டு (-பாக்கு வினையெச்சம் எதிலும் காணப் படவில்லை) வினையெச்சங்களிலும் வேறுபாடுகளைக் காணலாம். செய்யியர் வாய்பாட்டு வினையெச்சம் முன்பழந்தமிழ் நூல்களில் பத்துப்பாட்டு தவிர்ந்த ஏனைய நூல்களில் எல்லாம் காணப்பட பின்பழந்தமிழ் நூல்களில் கலித்தொகை ஒழிந்த (கலி 2) பிற நூல்களில் காணப்படுவதில்லை. ஆனால் -பான், -வான் ஈற்றுக் குறையெச்சங்கள் பின்பழந்தமிழ் நூல்களில் தலைதூக்குகின்றன. நற்றிணையில் ஒரு இடத்தில் மட்டும் -வான் ஈற்றுக் குறை யெச்சம் வருதல் இங்குக் குறிப்பிடத்தக்கது.

குழைவான்	நற்	229–9
நீக்குவான்	பரி	7–57
கொள்வான்	பரி	16–51
காண்பான்	கலி	97–7
வருவான்	கலி	113–13
மாய்வான்	சிலம்பு	7–8–1

செய்மார் ஈற்றுக் குறையெச்சமும் முன்பழந்தமிழ் நூல்களில் மிகுதியாக வர பின்பழந்தமிழ் நூல்களில் பரிபாடல் (2), கலித் தொகை (12), சிலம்பு (1) ஆகியவற்றில் மட்டுமே குறைந்த எண்ணிக்கையில் வரக் காண்கிறோம். குறள், மணிமேகலை ஆகிய நூல்களில் இவ்வினையெச்சம் காணப்படாமை குறிப்பிடத்தக்கது.

புணர்மார்	பரி	21-67
கொண்மார்	பரி	19-10
காண்மார்	கலி	13-27
காண்மார்	சிலம்பு	28-29

இவ்வாறு செய்யியர், செய்யிய, செய்வான், காண்பான், செய்மார் வாய்பாட்டு வினையெச்சங்களில் தோன்றிய மாற்றங்களைக் கீழ்வரும் பட்டியல் நன்கு உணர்த்தும்.

	-இயர்	-இய	-பான்	-வான்	-மார்
பதி	12	4	-		3
ஐங்	3	17	-	-	
அகம்	15	37	-		25
நற்	13	17	-	1	6
குறு	7	15	-	-	6
புறம்	2	7	-	-	10
பத்து		3	-		14
பரி	-	1	-	2	2
கலி	2	32	1	1	12
குறள்	-	1	-	1	-
சிலம்பு	-	7	-	1	1
மணி	-	7	-		-

6.3.2.3 எதிர்மறை

6.3.2.3.1 இறந்தகால எதிர்மறை

எதிர்மறைப் பொருளைக் காட்டும் -இல்- இடைநிலையை இறந்தகால வினையெச்சத்தின் பின்னர் இணைத்து எதிர்மறை காட்டும் நிலை முன்பழந்தமிழ் நூல்களில் ஓரிரு இடங்களில் காணப்பட்டாலும் பின்பழந்தமிழ் நூல்களில் சற்றுக் கூடுதலாகவும், மணிமேகலை காலத்திற்குப் பின்னர் மிக அதிகமாகவும் வரக்

காணலாம். தேவார, திருவாசகப் பாசுரங்களிலும், திவ்வியப்பிரபந்தத்திலும் இத்தகைய சொற்களை அதிகமாகக் காணமுடியும்.

-இறந்தகாலம் + இல்-

பதி	-
ஐங்	
அகம்	-
நற்	1
குறு	1
புறம்	1
பத்து	-
பரி	2
கலி	1
குறள்	1
சிலம்பு	6
மணி	13

நினைத்திலை	நற் 27-5
மெலிந்திலள்	குறு 182-7
போர்ப்பித்திலது	புறம் 286-5
அறிந்திலேன்	பரி 8-60
ஆய்வந்திலிர்	பரி 9-25
இழந்திலேன்	கலி 146-19
கற்றிலன்	குறள் 414
கண்டிலேன்	சிலம்பு 16-209
கொண்டிலேன்	மணி 23-91

சிலம்பு 5-232, 7-36-4, 15-144, 19-2, 30-125

மணி 6-18, 22-95, 127, 155, 23-145, 24-17, 52, 25-23, 24, 27-40, 29-44, 81

6.3.2.4 வினையெச்சம்

வினை எச்சங்களில் செய்யூஉ வாய்பாட்டு உடன்பாட்டு வினையெச்சத்திலும், செய்யாமல் வாய்பாட்டு எதிர்மறை வினை யெச்சத்திலும் ஒரு சில மாற்றங்களைக் காண்கிறோம்.

6.3.2.4.1 செய்யூஉ வாய்பாட்டு வினையெச்சம்

செய்யூஉ வாய்பாட்டு வினையெச்சம் முன்பழந்தமிழ் நூல் களைக் காட்டிலும் பின்பழந்தமிழ் நூல்களில் வரவு எண்ணிக்கை யில் குறைந்து வரக் காண்கிறோம். (பதி 7, ஐங் 3, அகம் 13, நற் 4, குறு 0, புறம் 7, பத்து 13, பரி 5, கலி 1, குறள் 0, சிலம்பு 2, மணி 2). திருக்குறளில் இவ்வினையெச்சம் காணப்படாமையும், இடைக்காலத்தமிழ் நூல்களில் வில்லிபாரதத்தில் ஒரு இடம் (தொழூஉ 1. 2: 42-3) தவிர ஏனைய நூல்களில் இல்லாமையும் இங்குக் குறிப்பிடத்தக்கது.

காணூஉ	பதி 30-20
படூஉ	ஐங் 246-2
அடூஉ	அகம் 378-16
தேடூஉ	நற் 242-10
தழூஉ	புறம் 359-4
தின்னூஉ	பத்து 6-62
சிதறூஉ	பரி 22-6
காணூஉ	கலி 55-18
விடூஉ	சிலம்பு 27-102
புகூஉ	மணி 18-77

இந்நிலையில் செய்யூஉ வாய்பாட்டு வினையெச்சத்தின் நலி வைப் பின்பழந்தமிழ்க் கூறாகவே கருதலாம்.

6.3:2.4.2 செய்யாமல் வாய்பாட்டு வினையெச்சம்

முன்பழந்தமிழ் நூல்களில் செய்யாது, செய்யாமை, செய்யா

ஆகிய வாய்பாட்டு எதிர்மறை வினையெச்சங்கள் காணப்பட பரி பாடல், கலித்தொகை, குறள், சிலம்பு, மணிமேகலை ஆகிய நூல் களில் இவற்றுடன் செய்யாமல் வாய்பாட்டு விகுதியும் வந்துள்ளது. இது பரிபாடலில் இரு இடங்களிலும், கலித்தொகையில் பத்து இடங்களிலும், குறளில் மூன்று இடங்களிலும், சிலப்பதிகாரத்தில் ஆறு இடங்களிலும், மணிமேகலையில் நான்கு இடங்களிலும் காணப்படுகிறது. ↓ பத்துப்பாட்டில் மலைபடுகடாத்தில் ஒரு இடத் தில் காணப்படுவது இங்குக் குறிப்பிடத்தக்கது.

படாமல்	பத்து	10-365
கொளுத்தாமல்	பரி	11-126
காணாமல்	கலி	39-41
செய்யாமல்	குறள்	101
பிரியாமல்	சிலம்பு	1-61
அறியாமல்	மணி	26-21

போன்றவை இப்பண்பினைக் காட்டும். பத்துப்பாட்டில் இது வரினும் இதனையும் பின்பழந்தமிழ்க் கூறாகவே கருதலாம்.

6.3.2.5 நிபந்தனை எச்சம்

நிபந்தனை எச்சங்களிலும் முன்பழந்தமிழுக்கும் பின்பழந் தமிழுக்கும் இடையே ஒரு சில வேறுபாடுகளைக் காணலாம்.

6.3.2.5.1 செயில் வாய்பாட்டு எச்சம்

முன்பழந்தமிழ் நூல்களில் செயின் வாய்பாட்டு வினையெச்சமே

↓ பரி 20-74
கலி 4-10, 19-12, 38-13, 17, 65-18, 77-15, 109-25, 121-21, 145-19
குறள் 303, 1024
சிலம்பு 1-61, 3-9, 146, 18-26, 27
மணி 3-159, 24-68, 28-15

நிபந்தனை எச்சமாக உள்ளது. செயில் வாய்பாட்டு எச்சம் அகம் (5), நற்றிணை (1) ஆகிய இரு நூல்களிலும் காணப்படினும் இதனைப் பின்பழந்தமிழ்க் கூறாகவே கருதவேண்டும். பரிபாடல் (1), கலித்தொகை (4), திருக்குறள் (1), சிலப்பதிகாரம் (9), மணிமேகலை (21) ஆகிய நூல்களில் எல்லாம் இது வந்துள்ளது.[1]

காணில்	அகம்	352-11
ஆகில்	நற்	350-9
கன்றிடில்	பரி	6-98
எண்ணில்	கலி	95-12
உணில்	குறள்	922
எய்தில்	சிலம்பு	25-101
அருளில்	மணி	6-154

6 3.2.5.2 -ஆல் ஈற்று எச்சம்

-ஆல் ஈற்றைக் கொண்ட நிபந்தனை எச்சமும் ஐங்குறுநூறு (1), புறம் (1), பரிபாடல் (2), கலித்தொகை (4), குறள் (3), சிலம்பு (13), மணிமேகலை (30)[2] ஆகிய நூல்களில் எல்லாம் வரக்

---

1. அகம் 149-2, 160-9, 230-9, 280-10
கலி 140-13, 14, 22
சிலம்பு 5-115, 6-200, 7-49-3, 16-152, 21-27, 36, 26-15 28-179
மணி 6-154, 7-5, 14-94, 29-344, 369, 445.........

2. பரி 20-42
கலி 6-6, 62-18, 118-3
குறள் 333, 732
சிலம்பு 7-2-2,3, 7-3-2,3, 7-37-4, 11-71, 79, 107, 143, 19-11, 21-26, 24-15-3
மணி 3-24, 101, 6-24, 9-49, 21-84, 25-25, 42, 226, 27-46, 142, 29-170, 177, 184, 219, 236, 30-238, 246, 284, 293, 309, 354, 392, 406, 416, 418, 435, 453, 463, 467.

காண்கிறோம். இது பின்பழந்தமிழ் நூல்கள் எல்லாவற்றிலும் வந்துள்ளமை இங்குக் குறிப்பிடத்தக்கது. ஐங்குறுநூறு, புறம் ஆகியவற்றில் ஒவ்வொரு இடத்தில் வரினும் வரவு எண்ணிக்கை, இன்றைய தமிழில் இதுவே நிலைபெற்றிருக்கும் தன்மை ஆகியவற்றின் அடிப்படையில் இதனைப் பின்பழந்தமிழ்க் கூறாகவே கருதலாம்.

என்றால்	ஐங்	248-3
கண்டால்	புறம்	390-25
உற்றால்	பரி	12-53
கேட்டால்	கலி	107-13
கண்டால்	குறள்	1246
உரைத்தால்	சிலம்பு	11-122
போனால்	மணி	6-158

6.3.2.5.3 -ஏல் ஈற்று எச்சம்

செய்யாயேல் வாய்பாட்டு நிபந்தனை எச்சம் (வினைமுற்று + ஏல்) கலித்தொகை (11), குறள் (13), சிலம்பு (8), மணிமேகலை (3) ஆகிய பின்பழந்தமிழ் நூல்களில் மட்டுமே காணப்படுகிறது.[1]

துறப்பாயேல்	கலி	3-10
செய்வானேல்	குறள்	655
வருமேல்	சிலம்பு	17-19-2
என்றியேல்	மணி	3-73

1. கலி 38-13, 17, 21, 60-21, 91-18, 93-33, 142-19 144-43, 147-28, 50
குறள் 18, 368, 386, 556, 573, 575, 976, 1014, 1075 1118, 1144, 1151,
சிலம்பு 7-9-4, 7-10-4, 7-48-3, 14-57, 17-20-2, 17-21-2, 19-13
மணி 23-74, 76

இவ்வாறு நிபந்தனை எச்சங்களில் தோன்றிய வளர்ச்சியை யும், மாற்றங்களையும் கீழ்வரும் பட்டியல் தெளிவாகக் காட்டும்.

நிபந்தனை எச்சம்

	-இன்	-இல்	-ஆல்	-ஏல்
பதி	41	–	–	–
ஐங்	97	–	1	–
அகம்	268	5	–	–
நற்	90	1	–	–
குறு	145	–	–	–
புறம்	310	–	1	–
பத்து	58	–	–	–
பரி	15	1	2	–
கலி	136	4	4	11
குறள்	217	1	3	13
சிலம்பு	111	9	13	8
மணி	80	21	30	3

6.3.2.6 னகர இறந்தகால இடைநிலை

ஆ, சொல், போ ஆகிய மூன்று வினைச்சொற்களிலும் இறந்தகால இடைநிலையாக -இன்- ஒற்று வருதலே பழந்தமிழில் பெரும்பான்மையாகக் காணப்படும் பண்பு.

ஆயினும்	குறு 164-6
ஆயினர்	அகம் 47-2
	புறம் 240-14

ஆயினள்	ஐங்	72-5
	அகம்	35-11
	நற்	102-9
	குறு	98-1, 110-8
சொல்லினம்	குறு	350-3
போயினம்	மணி	24-43, 70
போயினர்	கலி	36-16
	மணி	25-162
போயினன்	சிலம்பு	30-91
	மணி	16-18, 20-129, 25-204
போயினார்	சிலம்பு	25-1-9
போயினாள்	கலி	115-12
	சிலம்பு	18-5

ஆ வினையடி னகர ஒற்றை எடுத்து வருதல் முன்பழந்தமிழ் நூல்களிலும் காணப்படும். ஆனீர் (ஐங் 304-2, குறு 178-4) போன்ற சொற்களும் உள்ளன. ஆனால் போ, சொல் ஆகிய வினையடிகளுடன் னகரம் வருதல் பின்பழந்தமிழில் மட்டுமே காணப்படுகிறது. தொல்காப்பியத்தில் ஒரு இடத்தில் இது சொல் என்ற வினையுடன் வருதல் இங்குக் குறிப்பிடத்தக்கது (சொன்ன தொல் சூத். 1037) ஆயினும் இதனைப் பின்பழந்தமிழ்க் கூறாகவே கருதலாம்.

போன	பரி	22-11
	சிலம்பு	7-31-3, 7-34-1, 7-52-7, 15-73, 21-21, 22-193
	மணி	30-2
போனது	சிலம்பு	30-106
	மணி	5-89

போனபின்	சிலம்பு	26-161
போனார்	சிலம்பு	7-41-3, 7-43-2
போனால்	மணி	6-158, 9-49, 21-84
போனான்	சிலம்பு	19-67
சொன்ன	தொல்	1037-6
	சிலம்பு	12-15-4
	மணி	27-17, 29-282,
சொன்னது	சிலம்பு	18-15, 19, 23, 24
சொன்னாய்	மணி	16-112

6.3.2.7 ககர ஒற்று

படர்கேம், உரைக்கேன் போன்ற ககரவொற்றுச் சொற்களும் கலித்தொகை, சிலம்பு, மணிமேகலை ஆகிய நூல்களில் மட்டுமின்றிப் பதிற்றுப்பத்திலும் காணப்படுகிறது. எனினும் இதனைப் பின்பழந்தமிழ்க் கூறாகவே கருதலாம். (பதி 1, கலி 1, சிலம்பு 5, மணி 11). [1]

நுகர்கேம்	பதி	38-13
ஆற்றுகேன்	கலி	140-14
களைகேன்	சிலம்பு	15-68
பாடுகேம்	சிலம்பு	17-22-2
உணர்கேன்	மணி	18-155
கொணர்கேம்	மணி	19-37

6.3.2.8 பெயரெச்சம்

பெயரெச்சத்திலும் சில புதிய பண்புகளைக் கலித்தொகை,

---

1. சிலம்பு 9-44, 19-69, 27-104
   மணி 10-39, 11-145, 12-34, 117, 16-113, 118, 17-74, 18-171, 25-233

குறள், சிலம்பு, மணிமேகலை ஆகிய நூல்களில் காணலாம்.

6.3.2.8.1 "செய்யாத" வாய்பாட்டுப் பெயரெச்சம்

'செய்யாத' வாய்பாட்டுப் பெயரெச்சம் கலித்தொகை (7), குறள் (14), சிலம்பு (12), மணிமேகலை (1) ஆகியவற்றில் வந்துள்ளது.[1] முன்பழந்தமிழ் நூலாகிய புறநானூற்றில் இரு இடங்களில் வந்துள்ளது எனினும் இதனைப் பின்பழந்தமிழ்க் கூறாகவே கருதவேண்டும்.

கெடாத	புறம்	27-19
தாவாத	கலி	86-29
அகலாத	குறள்	1226
வளையாத	சிலம்பு	19-13
இல்லாத	மணி	27-70

முன்பழந்தமிழ் நூல்களில் செய்யா வாய்பாட்டுப் பெயரெச்சம் வர, பின்பழந்தமிழ் நூல்களில் செய்யாத வாய்பாட்டுப் பெயரெச்சம் வருவது குறிப்பிடத்தக்கது.

	செய்யா	செய்யாத
பதி	93	0
ஐங்	27	0
அகம்	168	0

1. புறம் 126-16
கலி 20-21, 42-14, 84-28, 29, 70-8, 83-23
குறள் 148, 198, 412, 418, 448, 480, 537, 568, 682, 740, 776, 825, 945
சிலம்பு 2-வெ-3, 7-17-3, 7-39-3, 12-22-4, 16-வெ-3, 17-35-4, 5, 17-36-4, 17-37-4, 19-5, 17

நற்	142	0
குறு	59	0
புறம்	265	2
பத்து	150	0
பரி	60	0
கலி	168	7
குறள்	125	14
சிலம்பு	170	12
மணி	123	1

இவ்விகுதி புறநானூற்றில் இரு இடங்களில் (கெடாத 27-19, செல்கலாத 126-16) வந்துள்ளமை காணத்தக்கது. எனினும் பின் பழந்தமிழ் நூல்களில் இது அதிகமாக வருகிறது. இந்நிலையில் இதனையும் பின்பழந்தமிழ்க் கூறாகக் கருதலாம்.

6.3.2.8.2 நிகழ்காலப் பெயரெச்சம்

-கின்று, -ஆநின்று-, -கிறு- ஆகிய நிகழ்கால இடைநிலைகள் கொண்ட பெயரெச்சங்கள் பின்பழந்தமிழ் நூல்களில் காணப்படு கின்றன (பரி1, குறள், 1, சிலம்பு 3, மணி 4)[1].

சேர்கின்ற	பரி	22-35
உருள்கின்ற	சிலம்பு	29-1-11
என்கின்ற	மணி	29-293
இறவாநின்ற	குறள்	1157
சாதிக்கிற	மணி	29-298

6.3.2.9 வினையாலணையும் பெயர்கள்

பின்பழந்தமிழில் வினையாலணையும் பெயரில் சில வளர்ச்சி

1. சிலம்பு 7-35-2, 14-125
மணி 17-106, 111

களைக் காணலாம்.

6.3.2.9.1 செய்யாதார் போன்றவை

முன்பழந்தமிழில் -ஆத்- எதிர்மறை (புறநானூறில் ஒரு இடம் தவிர்த்து) –ஓன், –ஓள், -ஓர் விகுதிகளுடனேயே வர பின்பழந் தமிழில் இவ் எதிர்மறை -ஆன், -ஆள், -ஆர் விகுதிகளுடன் பெருகிவரக் காணலாம்.

நள்ளாதார்	புறம்	125-5
உதவாதான்	கலி	13-40
வாழாதான்	குறள்	479
நல்காதான்	சிலம்பு	24-3-2
வாழாதாள்	கலி	2-13
நல்காதார்	கலி	148-14
சேராதார்	குறள்	10

6.3.2.9.2 –அவ்- இடைநிலை கொண்டவை

வினையாலணையும் பெயர் விகுதியாக -அவ்- கொண்ட உயர் திணைச் சொற்கள் முன்பழந்தமிழில் ஒரு சில இடங்களில் மட்டுமே காணப்பட [1], பின்பழந்தமிழில் இவ்வகைச் சொற்கள் மிக அதிக

---

1. ஐங் கானவன் 283–1, சென்றவர் 474-4, இனியவர் 415-4
அகம் தின்றவர் 94-15, துறந்தவர் 298-20, ஆயவர் 129-2, இருப்பவர் 389-10, கொள்பவர் 100-7, 114-10, 296-8
நற் காணாதவன் 307–7, ஆர்ந்தவர் 156-8, கொல்பவர் 304–8 கொள்பவர் 132-9, 207-3, 292-3, வாழ்பவர் 217-1, பிரிக்றபவர் 391-8
குறு விறலவன் 359-5
புறம் வந்தவன் 217-8, மேவந்தவள் புறம் 344-9, உடன்றவர் 97-2, ஆன்றவர் 213-23, சேர்ந்தவர் 22-27 கொள்பவர் 5–6, 7, 37-9, நல்லவர் 14-16, 187-3,

மாக வரக் காண்கிறோம். (பதி 0, ஐங் 3, அகம் 8, நற் 8, குறு 1, புறம் 10, பத்து 0, கலி 157, பரி 26, குறள் 166, சிலம்பு 21, மணி 10)

காணாதவன்	நற் 307-9
வந்தவன்	புறம் 217-8
நட்டவன்	பரி 4-17
அளித்தவன்	கலி 146-4
இழந்தவன்	குறள் 788
பெற்றவன்	சிலம்பு 30-122
ஈத்தவன்	மணி 24-19
மேவந்தவள்	புறம் 344-9
நின்றவள்	பரி 12-67
ஈன்றவள்	கலி 29-12
உற்றவள்	மணி பதிகம் 85
சென்றவர்	ஐங் 474-4
துறந்தவர்	அகம் 298-20
ஆர்ந்தவர்	நற் 156-8
உடன்றவர்	புறம் 97-2
அணிந்தவர்	பரி 20-22
அளந்தவர்	கலி 133-6
இரந்தவர்	குறள் 224
இறந்தவர்	சிலம்பு 30-139
பிறந்தவர்	மணி 16-86

6.3.2.10 தொழிற் பெயர்

முன்னர்க் குறிப்பிட்டதுபோல (5. 2. 2. 3. 5) முன்பழந்தமிழ் நூல்களில் செய்தல், செயல், செய்தமை, செய்யாமை வாய்பாட்டுத் தொழிற்பெயர்களே (verbal noun) மிகுதியாக வர (பாய்தல்

அகம் 267-9 எழல், குறு 325-1 பிழைத்தமை அகம் 366-15, காவாமை 356-8) பின்பழந்தமிழ் நூல்களில் அவற்றோடு செய்தது, செய்வது, செய்யாதது வாய்பாட்டுத் தொழிற்பெயர் களும் மிகுதியாக வரக் காண்கிறோம்.

''மதிநிறை வழிவதின் வரவு சுருங்க'' பரி 11-36

''........... அவளொடு
மாறுகொள் வது போலும்...... பரி 19-7

''வசைதீர்ந்த என்னலம் வாடுவ தருளுவார்''
கலி 26-14

''மின்னுகு தளிரன்ன மெலிவுவந் துரைப்பதால்''
கலி 48-19

''வறியார்க்கொன் றீவதே ஈகை'' குறள் 221

''உறங்கு வதுபோலுஞ் சாக்கா டுறங்கி
விழிப்பது போலும் பிறப்பு'' குறள் 339

''சாவதுதான் வாழ்வென்று தானம் பலசெய்து''
சிலம்பு 29-6-

''இறைவளைகள் தூற்றுவதை ஏழையம் எங்ஙனம்
யாங் கறிகோ மைய''
சிலம்பு 7-29-2

''வீற்றுவீற் றாக வேதனை கொள்வது
வேற்றுமை நயமென வேண்டல் வேண்டும்''
மணி 30-221

''கடாஅ யானைமுன் கட்கா முற்றோர்
விடாஅது சென்றதன் வெண்கோட்டு வீழ்வது''
மணி 23-120

செய்தது வாய்பாட்டுத் தொழிற்பெயர் முன்பழந்தமிழ் நூல் களில் மிக அருகியே காணப்பட, பின்பழந்தமிழ் நூல்களான பரி பாடல் (8), கலித்தொகை (8), குறள் (7), சிலம்பு (21), மணி மேகலை (70) ஆகியவற்றில் கூடுதலாக வரக் காண்கிறோம்.

இது போன்றே இறப்பில் காலத்திற்குப் பின்னரும் -அது ஈற்றுத் தொழிற்பெயர் முன்பழந்தமிழ் நூல்களில் கூடுதலாக உள்ளமை (பரி 5, கலி 43, குறள் 57, சிலம்பு 16, மணி 19) இங்குக் குறிப்பிடத்தக்கது.

செய்யாமை வாய்பாட்டுத் தொழிற்பெயர்கள் முன்பழந்தமிழ் நூல்களிலும், பின்பழந்தமிழ் நூல்களிலும் காணப்படுகிறது. ஆனால் பின்பழந்தமிழ் நூல்களில் இவற்றுடன் செய்யாதது வாய்பாட்டுத் தொழிற்பெயரும் புதிதாகத் தோன்றி வரக் காண்கிறோம் (கலி 1, குறள் 1, மணி 1).

''.................... என் கொலோ
என்னுயிர் காவா தது'' கலி 143-55

''அவர் நெஞ்சு அவர்க்காதல் கண்டும் எவன்நெஞ்சே
நீ எமக்கு ஆகா தது'' குறள் 1291

''செவ்வி தன்மையிற் சிந்தைவை யாததும்''
மணி 28-88

இன்றையத் தமிழில் செய்தது, செய்வது, செய்யாதது வாய்பாட்டுத் தொழிற்பெயர்களே ஆட்சி பெற்றுள்ளமை இங்குக் குறிப்பிடத்தக்கது.

அவன் வராதது நல்லது

போன்றவை இப்பண்பினைக்காட்டும்.

6.3.2.11 உண்டு என்னும் குறிப்பு வினைமுற்று

உண்டு என்னும் குறிப்பு வினைமுற்று முன்பழந்தமிழில் அஃறிணை ஒருமையிலும், பன்மையிலும் (மிக அருகி) வரச் சிலப்பதிகாரத்தில் உயர்திணைப் பன்மையில் வருதல் காணத்தக்கது.

''நனந்தலை யுலகஞ் செய்தநன் றுண்டெனின்''
பதி 63-18

''கனவாண்டு மருட்டலும் உண்டே........ அகம் 158-11

என்பன போன்று அஃறிணை ஒருமையில் பிற பழந்தமிழ் நூல்களிலும் உள்ளன (பதி-1, ஐங்-0, அகம்–16, நற்-8, குறு–3, புறம் (18), பத்து-2, பரி–2, கலி-27, குறள்–17, சிலம்பு 41, மணி 29).

உண்டு என்பது அஃறிணைப் பன்மையிலும் முன்பழந்தமிழில் ஒரு இடத்திலும் பின்பழந்தமிழில் மற்றொரு இடத்திலும் வந்துள்ளது.

''குருகும் உண்டுதான் மணந்த ஞான்றே'' குறு 25-5

இதற்கு உரை எழுதும் உரையாசிரியர் 'நாரைகளும் ஆண்டுள வாயின' என எழுதிச் செல்லுவதும், மணிமேகலையில்

''போக புவன முண்டெனா......'' மணி 27–44

என வருவதும் அதற்குரையெழுதும் ஆசிரியர் ''வேறு உலகங் களும் உண்டு' எனப் பன்மையில் எழுதுவதும் குறிப்பிடத்தக்கவை

மட்டுமின்றி இச்சொல் உயர்திணையிலும் வருதல் காணலாம். அதிலும் குறிப்பாகச் சிலம்பில், உயர்திணைப் பன்மையில் மட்டுமே காணப்படுகிறது,

''பெண்டிரும் உண்டுசொல் பெண்டிரும் உண்டுகொல்
கொண்ட கொழுந ருறுகுறை தாங்குறா உம்
பெண்டிரும் உண்டுகொல் பெண்டிரும் உண்டுகொல்
சான்றோரும் உண்டுகொல் சான்றோரும் உண்டுகொல்
ஈன்ற குழவி எடுத்து வளர்க்குறா உம்
சான்றோரும் உண்டுகொல் சான்றோரும் உண்டுகொல்''

எனவும் சிலம்பு 14–54

''..............................ஈங்கிவர்க்
குண்டோ வுலகத் தொப்போ ரென்ற'' சிலம்பு 16-200

எனவும் வருதல் காண்க. பண்டைத் தமிழ் நூல்களில் ''உண்டு'' என்பது ஆண்பாலுடனோ அல்லது பெண்பாலுடனோ வருதலைக்

காண முடியவில்லை. பின்னர் இது ஐம்பால் இருதிணைச் சொற்களுடனும் வந்த நிலையில்தான் நன்னூலார்,

"வேறில்லை யுண்டைம் பான்மூ விடத்தன" சூத் 339

எனக் கூறிப்போந்தார் எனக் கருதலாம். இதற்கு உரை எழுதுவோரும்

யான், யாம்	
நீ, நீர், நீவிர்	
	உண்டு
அவன், அவள், அவர்	
அது, அவை	

என எடுத்துக்காட்டுக்கள் தந்து நின்றனர்.

6.3.2.12 செயவென் எச்சத்துடன் துணைவினைகள்

துணைவினைகள் பழந்தமிழில் காணப்படினும் வேண்டும், வேண்டா, கூடும் போன்ற துணைவினைகள் 'செயல்' வாய்பாட்டுத் தொழிற்பெயருடனும், பிறவற்றுடனும் வருவது இயற்கை. (காண்க: அகத்தியலிங்கம், 1972)

செலீஇயர் வேண்டும்	நற் 396-6
உள்ளல் வேண்டும்	குறு 81-4

போன்ற எடுத்துக்காட்டுக்கள் இத்துணைவினைகள் இவற்றுடன் வருதலைக் காட்டும். ஆனால் 'செயவென்' எச்சத்தோடு இத்துணைவினைகள் வருவது மிக அருகியே காணப்படுகிறது. முன் பழந்தமிழ் நூல்களில் புறநானூற்றில் நான்கு இடங்களில் இது செயவென் வாய்ப்பாட்டு வினையெச்சத்தோடு வரினும் இதனையும் பின்பழந்தமிழ்க் கூறாகவே கருதலாம். காலப்போக்கில் இது பெருகி இன்றையத் தமிழில் இதுவே ஆட்சிபெற்று நிற்கிறது.

வளரவேண்டும் புறம் 339-11

(பேரெயில் முறுவனார்)

நினைக்கவேண்டா	புறம்	7-19 (கோவூர் கிழார்)
வருந்தவேண்டா	புறம்	101-10 (ஔவையார்)
சொல்ல வேண்டா	புறம்	361-21 (பெயர் தெரியாப் புலவர்)
செய்ய வேண்டா	கலி	107-13
என வேண்டா	குறள்	37
உள்ள வேண்டா	குறள்	357
புகவேண்டும்	சிலம்பு	11-153
உரைக்கவேண்டா	சிலம்பு	28-156
சாதிக்கவேண்டா	மணி	29-95
அனுமிக்கவேண்டும்	மணி	29–101
என வேண்டா	மணி	23-127
நொண்டுகொள்ளவும் கூடும்	சிலம்பு	10–85

6.3.2.13 விகுதிகள்

விகுதிகள் முன்பழந்தமிழ் நூல்களில் எவ்வாறு உள்ளன பின்பழந்தமிழ் நூல்களில் எவ்வாறு காணப்படுகின்றன என்று இப்பிரிவில் ஆராயப்படுகிறது.

பின்பழந்தமிழ் நூல்களில் காணப்படும் பலவேறு கூறுகளே பின்னர் நிலைபெற்று இடைக்காலத் தமிழ்க் கூறுகளாகப் பரிண மித்தன எனக் கருதலாம். ஆங்காங்கே காணப்பட்ட கூறுகள் நிலை பெற்றுப் பெரும்பான்மையாக மாறிய நிலையில் இடைக்காலத் தமிழுக்கு வித்திட்டன. மேலும் பல புதிய கூறுகளும் இடைக் காலத் தமிழில் உண்டாயின. இந்நிலைதான் பழந்தமிழ், இடைக் காலத் தமிழ் என்ற பிரிவை அரண் செய்து நிற்கின்றது.

முற்றுவினைகளிலும் தன்மை, முன்னிலை, படர்க்கை என மூன்றிட வினைகள் உள்ளன. இவை ஒவ்வொன்றிலும் பழங் காலத்தமிழிலேயே வேறுபாடுகள் உள்ளன. இதனால்தான் முன் பழந்தமிழ், பின்பழந்தமிழ் எனப் பிரிவு செய்யப்படுகின்றது.

6.3.2.13.1 தன்மை ஒருமை விகுதிகள்

பழந்தமிழில் -ஏன், -என், -அன், -அல், -கு, -Ø (இசின்) ஆகிய விகுதிகள் தன்மை ஒருமையைக் காட்டுவனாக உள்ளன. இவ்விகுதிகளின் எண்ணிக்கை, இவற்றின் பகிர்வு (distribution) ஆகியவற்றைக் கவனித்து நோக்கின் முன்பழந்தமிழுக்கும், பின் பழந்தமிழுக்குமிடையே உள்ள வேறுபாடுகள் நன்குத் தோன்றும்.

(1) -என், -ஏன்

-என், (வந்தனென் பதி 76-9) -ஏன் (நயந்தேன் அகம் 260-15) ஆகிய இரு விகுதிகளும் பழந்தமிழ் நூல்களில் காணப்படினும் முன்பழந்தமிழிலும், பின்பழந்தமிழிலும் இவற்றிடையே காணப் படும் விகிதாசாரத்தில் வேறுபாடு உண்டு. புறநானூற்றில் -என் முப்பத்தாறு இடங்களில் வர -ஏன் ஐம்பத்தொன்பது இடங் களில் (9:15) வருகின்றது, இதே நிலையைத்தான் பிற முன் பழந்தமிழ் நூல்களிலும் காண்கிறோம். பதிற்றுப்பத்தில் -என் அதிகமாகவே உள்ளது. ஆனால் பரிபாடல், கலித்தொகை, குறள், சிலம்பு, மணிமேகலை ஆகிய நூல்களில் -என் மிகமிகக் குறை வாகவே உள்ளது. கலித்தொகையில் இருபத்தேழு இடங்களில் மட்டும் -என் வர -ஏன் நூற்றுத்தொண்ணூற்றுமூன்று இடங்களில் 1: 7 என்ற விகிதாசாரத்தில் வரக் காண்கிறோம். -என் விகுதி எண்ணிக்கை குறைந்து சில நூல்களில் வராத நிலையையே காணமுடிகிறது. இடைக்கால நூல்கள் பலவற்றில் -என் வருவ தில்லை. இதனால் -என் விகுதியை முன்பழந்தமிழ் விகுதியாகக் கருதலாம்.

	-என்	-ஏன்
பதி	8	3
ஐங்	19	16
அகம்	38	37
நற்	17	61
குறு	28	32
புறம்	36	59

பத்து	2	4
பரி	-	8
கலி	27	193
குறள்	–	43
சிலம்பு	4	99
மணி	1	144

-ஏன் விகுதியின் பகிர்விலும் கூட முன்பழந்தமிழ்க் காலத்திற்கும் பின்பழந்தமிழ்க் காலத்திற்குமிடையே வேற்றுமையுண்டு. முன் பழந்தமிழ் நூல்களில் -ஏன் பெரும்பான்மையாக எதிர்மறையில் (வாரேன் பதி 61–11) வருவதும் பின்பழந்தமிழ் நூல்களில் பெரும்பான்மையாகக் கால இடைநிலைகளுக்குப் பின்னர் (மறந் தேன், பரி 19–60) வருவதும் கண்கூடு. புறநானூற்றில் இவ் விகுதி எதிர்மறையில் இருபத்தேழு இடங்களிலும் காலஇடை நிலைகளுக்கு பின்னர் பதினான்கு இடங்களிலும் வருகின்றது. ஆனால் கலித்தொகையில் இந்நிலை மாறி கால இடைநிலை களுக்கு பின்னர் நூற்றுப்பதினாறு இடங்களிலும் எதிர்மறையில் இருபத்தொன்பது இடங்களிலும் வருதல் காணலாம். பிற நூல் களிலும் இதே நிலையைத்தான் காண்கிறோம். இப்பண்பே இடைக்காலத் தமிழிலும் தொடர்கின்றது.

–ஏன்

	எதிர்மறை	காலம்
பதி	1	1
ஐங்	6	6
அகம்	23	6
நற்	28	14
குறு	13	12
புறம்	27	14
பத்து	1	1

பரி	1	4
கலி	29	116
குறள்	11	25
சிலம்பு	21	61
மணி	17	100

(2) ககரவொற்று

சிலப்பதிகாரத்தில் நான்கு இடங்களில் -ஏன் விகுதி ககரத்துடன் வருதல் குறிப்பிடத்தக்கதாகும். களைகேன் (சிலம்பு 15-68), நாடுகேன் (சிலம்பு 19-69), படர்கேன் (சிலம்பு 27-104), பெறுகேன் (சிலம்பு 9-43). சிலம்பில் காணப்படுவது போன்றே மணிமேகலையில் ஒன்பது இடங்களிலும் கலித்தொகையில் ஒரு இடத்திலும் ஏன் விகுதி ககரத்துடன் வருவதைக் காணலாம். (உண்கேன் மணி 10-39, உணர்கேன் மணி 18-156, உரைக்கேன் மணி 12-36, 117, 16-113, செய்கேன் மணி 16-36, 25-233, படர்கேன் மணி 17-74, போகேன் 18-171, ஆற்றுகேன் கலி, 140-14). இவற்றுள் போகேன் என்ற சொல் எதிர்மறை காட்டுவது பதிற்றுப்பத்தில் -ஏம் விகுதி ககர ஒற்று பெற்று ஒரு இடத்தில் வருதல் (நுகர்கேம் பதி 38-13) இங்குக்குறிப்பிடத்தக்கது. எனினும் இதனைப் பின்பழந்தமிழின் ஒருகூறாகவே கருதலாம்.

(3) -அல் விகுதி

-அல் விகுதி பழந்தமிழ் நூல்களில் காணப்படும் விகுதிகளில் (தருகுவல் ஐங் 474-4) ஒன்றாகும். இவ்விகுதியும் கூட முன்பழந்தமிழ் நூல்களில் அதிகமாக உள்ளது. கலித்தொகையில் அதிகமாகக் காணப்பட்டாலும் பத்துப்பாட்டு, பரிபாடல், குறள், சிலம்பு, மணிமேகலை ஆகிய நூல்களில் மிகமிகக் குறைவாகவே உள்ளது. இதே நிலையைத்தான் இடைக்கால நூல்களிலும் காணமுடிகின்றது.

	–அல்
பதி	3
ஐங்	10

அகம்	12
நற்	18
குறு	9
புறம்	19
பத்து	3
பரி	–
கலி	23
குறள்	5
சிலம்பு	5
மணி	6

4) -கு விகுதி

இதே நிலையைத்தான் -கு விகுதியிலும் (காண்கு பதி 90-55) காண்கிறோம். கலித்தொகை ஒழிந்த ஏனைய பின்பழந்தமிழ் நூல்களில் இது அதிகமாகக் காணப்படுவதில்லை.

இவ்விகுதி குறுந்தொகையில் மட்டுமே ஒரு இடத்தில் -ஆஅல்- எதிர்மறை இடைநிலைக்குப் பின்னர் காணப்படுகிறது (அழாற்கு குறு 192-2).

	வினை அடிகள்	-ஆஅல்-
பதி	10	-
ஐங்	6	-
அகம்	13	-
நற்	13	-
குறு	9	1
புறம்	28	-
பத்து	–	-

பரி	4	–
கலி	12	–
குறள்	1	–
சிலம்பு	7	–
மணி	5	–

(5) -∅ (-இசின்)

-∅ (-இசின்) ஈற்றுச் சொற்களும் தன்மை ஒருமை காட்டும் (வந்திசின் பதி 15-15). இச்சொற்களும் பின்பழந்தமிழ் நூல்களில் காணப்படுவதில்லை.

பதி	8
ஐங்	1
அகம்	6
நற்	9
குறு	5
புறம்	9
பத்து	1
பரி	0
கலி	0
குறள்	0
சிலம்பு	0
மணி	0

6.3.2.13.2 தன்மைப்பன்மை

முன்பழந்தமிழ், பின்பழந்தமிழ் வேறுபாட்டைத் தன்மைப் பன்மை விகுதிகளிலும் காணலாம்.

(1) -எம், -ஏம்

-என், -ஏன் விகுதிகளைப் போலவே -எம் (கண்டனெம்

ஐங் 390-4), –ஏம் (வேட்டேம் ஐங் 1–6) விகுதிகளின் விகிதா சாரங்களும் உள்ளன. முன்பழந்தமிழிலும் பின்பழந்தமிழிலும் -எம், –ஏம் ஆகியவற்றின் விகிதாசாரங்கள் வேறுபட்டுள்ளன. பரிபாடல் தவிர ஏனைய பின்பழந்தமிழ் நூல்களில் -எம் விகுதியே காணப்படவில்லை. பரிபாடலில் 1:8 என்ற விகிதத்தில் இருக்கப் புறநானூறு போன்ற நூல்களில் 1:6 என்ற விகிதத்தில் உள்ளது. இந்நிலையில் -எம் விகுதியை முன்பழந்தமிழ் விகுதியாகவே கருதலாம். இடைக்காலத் தமிழில் இது வழக்கிழந்த நிலையில் உள்ளது.

	–எம்	-ஏம்
பதி	–	4
ஐங்	8	21
அகம்	3	17
நற்	1	18
குறு	3	16
புறம்	7	41
பத்து	–	7
பரி	2	16
கலி	–	49
குறள்	–	18
சிலம்பு	–	14
மணி	–	9

-ஏம் விகுதியின் பகிர்விலும் வேற்றுமை உண்டு. முன்பழந் தமிழில் எதிர்மறையில் இது அதிகமாக வர, (அறியேம் ஐங் 240-1) பின் பழந்தமிழில் கால இடைநிலைகளுக்குப் பின்னர் (கண்டேம் கலி 81-26) அதிக எண்ணிக்கையில் வரக் காண்கிறோம்.

	எதிர்மறை (-∅-)	காலஇடைநிலை
பதி	0	2

ஐங்	6	10
அகம்	6	8
நற்	1	3
குறு	6	3
புறம்	8	6
பத்து	4	1
பரி	0	14
கலி	10	23
குறள்	3	12
சிலம்பு	6	8
மணி	0	6

(2) -கும், -இகும், -றும், -ஓம்

-கும், -இகும் ஆகிய விகுதிகளும் முன்பழந்தமிழ் நூல்களிலேயே அதிகமாக உள்ளன. (உண்கும் புறம் 125-4, கண்டிகும் பதி 24-17) கலித்தொகை, சிலம்பு ஒழிந்த பிற பின்பழந்தமிழ் நூல்களில் இவை காணப்படவில்லை. குறுந்தொகை, பத்துப்பாட்டு ஆகிய நூல்களிலும் இவ்விகுதிகள் இல்லை.

இதைப் போன்றே -றும் விகுதியும் (என்றும் ஐங் 110-3) கலித்தொகை தவிர்ந்த பிற பின்பழந்தமிழ் நூல்களில் வருவதில்லை. -ஓம் விகுதி முன்பழந்தமிழ் நூல்களில் மிகமிக அருகியே காணப்படுகின்றது. (தீர்க்குவோம் புறம் 581-16) பழந்தமிழ் இலக்கியங்கள் அனைத்தையும் ஆராயின் பதினான்கு இடங்களே உள்ளன. இவ்விகுதி சிலப்பதிகாரத்தில் பத்து இடங்களிலும், மணிமேகலையில் இரண்டு இடங்களிலும், ஐங்குறு நூற்றிலும் புறநானூற்றிலும் ஒவ்வொரு இடத்திலும் வருதல் காண்கிறோம். இந்நிலையில் இதனையும் பின்பழந்தமிழின் ஒரு கூறாகவே கருதவேண்டும்.

	-கும்	-இகும்	-றும்	-ஓம்
பதி	0	6	0	0
ஐங்	0	9	2	1

அகம்	2	1	2	0
நற்	0	1	6	0
குறு	0	0	6	0
புறம்	1	1	1	1
பத்து	0	0	0	0
பரி	0	0	0	0
கலி	2	0	1	0
குறள்	0	0	0	0
சிலம்பு	1	0	0	10
மணி	0	0	0	2

6.3.2.13.3 முன்னிலை ஒருமை

(1) -ஐ, -ஆய்

பழந்தமிழ் நூல்களில் -ஐ (இழைத்தனை ஐங் 445-5) -ஆய் (பிழைத்தாய் புறம் 43-17) ஆகிய விகுதிகள் முன்னிலை ஒருமை காட்டி நிற்கும். எனினும் -ஐ விகுதி முன்பழந்தமிழ் நூல்களில் அதிகமாகவும் -ஆய் குறைவாகவும் வருகின்றன. ஆனால் பின் பழந்தமிழ் நூல்களில் (திருக்குறள், மணிமேகலை ஒழிந்த) - ஆய் அதிகமாகவும் -ஐ குறைவாகவும் வருகின்றன. புறநானூற்றில் நூற்று முப்பத்து நான்கு இடங்களில் -ஐ வர இருபத்து மூன்று இடங்களில் மட்டுமே -ஆய் வருகின்றது. குறுந்தொகையில் இவற்றின் விகிதாசாரம் 33:1 ஆக உள்ளது. பதிற்றுப்பத்தில் அறுபத்தாறு இடங்களில் -ஐ வர மூன்று இடங்களில் மட்டுமே -ஆய் வந்துள்ளது. ஆனால் கலித்தொகையிலோ -ஆய் நூற்று அறுபது இடங்களில் வர -ஐ தொண்ணூற்று ஏழு இடங்களில் மாத்திரமே (3:2) உள்ளது. இப்பண்பே இடைக்காலத் தமிழிலும் தொடர்ந்து பின்னர் -ஐ விகுதி வழக்கற்று விடக் காணலாம்.

	-ஐ	-ஆய்
பதி	66	3
ஐங்	42	13

அகம்	96	32
நற்	61	32
குறு	33	1
புறம்	134	23
பத்து	11	2
பரி	9	10
கலி	97	160
குறள்	7	6
சிலம்பு	15	68
மணி	66	35

-ஏன், -ஏம் ஆகிய விகுதிகளின் பகிர்வைப் போன்றே -ஆய் விகுதியின் பகிர்விலும் முன்பழந்தமிழுக்கும் பின்பழந்தமிழுக்கும் இடையே வேற்றுமை உணடு. -ஆய் விகுதி முன்பழந்தமிழ் நூல்களில் புறத்தில் மூன்று இடங்கள் தவிர்த்து -∅- எதிர்மறைக்குப் பின்னரே வந்துள்ளது (அருளாய் பதி 71-26). ஆனால் பின்பழந் தமிழ் நூல்களில் கால இடைநிலைகளுக்குப் பின்னரே மிகுதியாக வரக் காண்கிறோம். (கொண்டாய் கலி 99-8)

	எதிர்மறை	கால இடைநிலை
பதி	3	0
ஐங்	12	0
அகம்	32	0
நற்	32	0
குறு	1	0
புறம்	20	3
பத்து	1	0
பரி	1	4
கலி	44	104

குறள்	3	2
சிலம்பு	13	44
மணி	13	19

6.3.2.13.4 முன்னிலைப் பன்மை

(1) -இர், -ஈர்

முன்னிலைப் பன்மை விகுதிகளாகிய -இர் (என்றனிர் பதி 77-2), -ஈர் (காணீர் அகம் 236–16), ஆகிய இரு விகுதிகளும் பழந்தமிழ் நூல்களில் காணப்படுகின்றன. இவற்றுள் -இர் விகுதி முன்பழந்தமிழ் நூல்களில் அதிகமாக வர -ஈர் பின்பழந்தமிழ் நூல்களில் கூடுதலாக வருதல் காண்கிறோம். புறநானூற்றில் -இர் பதினாறு இடங்களில் வர -ஈர் எட்டு இடங்களில் மட்டுமே வருகின்றது. இதை நிலையைத்தான் பிற முன்பழந்தமிழ் நூல் களிலும் காண்கிறோம்.

ஆனால் கலித்தொகையில் -இர் இருபத்திரண்டு இடங்களி லும் -ஈர் முப்பத்தாறு இடங்களிலும் வருதல் காணத்தக்கது. இதே நிலையைத்தான் பிற இலக்கியங்களிலும் (சிலம்பு தவிர காண்கிறோம்.

	-இர்	-ஈர்
பதி	2	0
ஐங்	1	0
அகம்	23	5
நற்	12	8
குறு	8	3
புறம்	16	8
பத்து	54	4
பரி	1	2
கலி	22	36

குறள்	2	4
சிலம்பு	15	9
மணி	4	14

6.3 2.13.5 ஆண்பால்

1. -அன், -ஆன்

சங்க இலக்கியங்கள் அனைத்தையும் வைத்து ஆராயும்போது முன்பழந்தமிழ் நூல்களில் -அன் விகுதியும் (எதிர்ந்தனன் ஐங் 448-2) பின்பழந்தமிழ் நூல்களில் (மணிமேகலை நீங்கலாக) -ஆன் விகுதியும் (வருத்தினான் ஐங் 102-277) பெருவரவிற்றாக வருவது குறிப்பிடத்தக்கது. எடுத்துக்காட்டாகப் புறத்தில் -அன் நூற்று எழுபத்தொன்பது இடங்களில் வர -ஆன் ஐம்பத்திரண்டு இடங் களில் மட்டுமே வருகின்றது. குறுந்தொகையில் -அன் எண்பத்து நான்கு இடங்களிலும் -ஆன் பன்னிரண்டு இடங்களிலும் வரு கின்றது. அகத்தில் இவை முறையே நூற்று ஐம்பது, இருபத்து ஐந்து என உள்ளது.

ஆனால் பின்பழந்தமிழ் நூல்களில் இந்நிலை மாறிக் காணப் படுகின்றது. கலித்தொகையில் -அன் நூற்று நாற்பத்து மூன்று இடங்களிலும் -ஆன் இருநூற்று எட்டு இடங்களிலும் வருதல் இப்பண்பை உணர்த்தும். இந்நிலை முன்பழந்தமிழ், பின்பழந் தமிழ்ப்பண்பைக் காட்டி நிற்கும்.

	-அன்	-ஆன்
பதி	12	6
ஐங்	110	13
அகம்	150	25
நற்	53	11
குறு	84	12
புறம்	179	52
பத்து	44	8
பரி	22	21

கலி	143	208
குறள்	71	178
சிலம்பு	185	86
மணி	106	32

பிற நீட்டுயிர் விகுதிகளைப் போன்றே -ஆன் விகுதி முன் பழந்தமிழ் நூல்களில் எதிர்மறையில் அதிகமாக வருகிறது (கொள்ளான் அகம் 84-15). ஆனால் பின்பழந்தமிழில் கால ஒட்டுக் களுக்குப் பின்னர் (பார்த்தான் பரி 12-55) அதிகமாக வருவது இவ்விரு காலப்பகுதிகளுக்கிடையே உள்ள வேறுபாட்டைச் சுட்டிக் காட்டும். புறநானூற்றில் -∅- எதிர்மறைக்குப்பின் நாற்பத்து மூன்று இடங்களில் வர கால இடைநிலைகளுக்குப் பின் ஆறு இடத்தில் மட்டும் வருகின்றது. ஆனால் கலித்தொகையிலோ -∅- எதிர்மறைக்குப் பின் முப்பத்து நான்கு இடங்களிலும் காலத்தில் நூற்று இருபத்தைந்து இடங்களிலும் வந்துள்ளது.

	-∅- எதிர்மறை	காலஇடைநிலை
பதி	3	3
ஐங்	10	3
அகம்	20	0
நற்	10	1
குறு	10	1
புறம்	43	6
பத்து	8	0
பரி	3	17
கலி	34	125
குறள்	17	76
சிலம்பு	12	65
மணி	15	8

(2) -ஓன்

பழந்தமிழ் நூல்களில் காணக்கிடக்கும் ஆண்பால் விகுதிகளில்

